தமிழரசு

1.4.1996 ரூ.3



ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
13 மே 1996
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[illegible]

[illegible]

1996

தமிழரசு

ஏப் - ஜூன்

1996

[illegible]

இந்த இதழில்...

★ 1996 பொதுத் தேர்தல்:
அனைத்து மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் கூட்டம் 2

★ வயதிலே அறிவிலே பெரியார் 4

★ பெரியார் மாவட்டத்தில்
வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள் 11

★ 3000 ஆண்டுகட்கு முற்பட்ட
பாறை ஓவியங்கள் கண்டுபிடிப்பு 15

★ ப(ா)ட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.. 17

★ எளிமை (கவிதை) 24

★ கண்தானம் செய்திடுவீர்! (கவிதை)..... 27

★ செய்திகள் - செய்திகள் - செய்திகள் 33



★ நூல்நயம்...................... 47

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல (39).

★ அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை.

DOCUMENTATION Completed

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
பங்குனித் திங்கள் : 19

மலர்: 26 இதழ்: 19

1.4.1996

விலை: ரூபாய் 3

1996 பொதுத் தேர்தல்: அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்

1996 பொதுத்தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுத் தலைமைச் செயலாளர் திரு என் அரிபாஸ்கர், இ.ஆ.ப., முதன்மைத் தேர்தல் அதிகாரி திரு கே. சந்திரசூடன், இ.ஆ.ப., அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தமிழக உயர் அலுவலர்கள், மற்றும் காவல்துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். (25.3.96)

214389.



ஆயிரம் ஆண்டுகள் ஆனபின்னாலும்
அன்னைத் தமிழகத்தின் நலங்காக்க
ஒளி வீசும் பகுத்தறிவுப் பகலவன்
தந்தை பெரியார்!

வயதிலே அறிவிலே பெரியார்! வாய்மைப் போருக்கு என்றும் இளையார்!

தந்தை பெரியார் அவர்கள் சராசரி மனிதன் என்கிற எல்லையைத் தாண்டியவர். சமுதாய நலனுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் ஆவார்.

தந்தை பெரியாரின் அறிவாற்றல் வியப்பைத் தருவது; அது கடலை விட ஆழமானது! அவரது செயல்திறனோ விந்தையானது; அது வானத்தைவிடப் பரந்தது! அவரது மனித நேயமோ இதயத்தைத் தொடுவது; அது இமயத்தை விட உயர்ந்தது!

ஐயா அவர்கள் ஒரு தலைவராக இருப்பதற்கு என்னென்ன இலக்கணங்கள் உண்டோ அத்தனையும் நிறைவாகப் பெற்றவர் என்பது மட்டுமல்ல, ஒரு தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய உயர் குண நலன்களையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்தார்.

ஐயா அவர்கள் பெற்றிருந்த தனிமனித குணநலன்களை, நிகழ்ச்சிகளின் வெளிப்பாடாக அவரது சிறப்பினை வெளிக் காட்டிய அன்றாடச் சம்பவங்

[illegible] 'விடுதலை' ஏட்டில் 1940-ஆம் ஆண்டு தொடங்கி 1960-ஆம் ஆண்டு வரையில் செய்தியாளராக 20 ஆண்டுகாலம் [illegible] பணியாற்றியவர். அதனால் ஈரோடு குடியரசு அலுவலகத்தில், தந்தை பெரியார் அவர்களின் [illegible] தந்தை பெரியார் [illegible]

களாக அருகிருந்து காணுகின்ற பேற்றை 'விடுதலை' ஏட்டின் நிருபர் என்கிற வகையில் பெற்றிருந்தேன். அதனை தமிழரசு இதழுக்கெனப் பகிர்ந்து கொள்வது என்னுடைய [illegible]மை ஆகும.

பண்பு

பொய் சொல்லாமல் நேர்மையாக இருப்பதே பண்பு என்று நினைப்பவர் ஐயா அவர்கள். அதில் தவறினால் அருகில் சேர்க்க மாட்டார். ஒருமுறை ஐயா அவர்களின் பிரச்சாரத்திற்கு ஒரு அமைப்பினர் எல்லா வசதிகளோடு ஒரு வேன் கொடுத்தார்கள். ஆனால் அதை எங்கே யாரிடமிருந்து பெற்றது என்பதை அவர்கள் ஐயாவிடம் கூறவில்லை. ஐயா கேட்டபோதும் அவர்கள் அதனைக் கூறவில்லை. ஆனால் ஒரு சில நாட்கள் கழித்து 'குமுதம்' ஏடு அதைப் பற்றி எழுதியது. 'தந்தை பெரியார் 'பயன்படுத்துகிற வேன் அருள்நெறி திருப்பணி மன்றத்தால் பயன்படுத்தப்பட்ட வேன்' என்று எழுதிவிட்டது. அது தெரிந்ததும் ஐயா அவர்கள் அந்த வேனைக் கடைசி வரையில் பயன்படுத்தவில்லை.

மரியாதை

பிறரிடத்து மரியாதை செலுத்துவதற்குப் பெரியவர் சிறியவர் என்று பிரித்துப் பார்க்கும் அளவுகோல் அவரிடம் கிடையாது. சின்னப் பையனாக இருந்தாலும் கும்பிட்டு வரவேற்பார். அருகில் அமர வைத்துக் கொள்வார். 'வா போ' என்று ஒருமையில் பேச மாட்டார். வாங்க போங்க என்று மரியாதையுடன் அழைத்துப் பேசுவார். மின்விளக்கு ஸ்விட்ச் போட வேண்டும் என்றால், தானே எழுந்து போய்ப் போடுவாரே தவிர, அடுத்தவரை ஏவ மாட்டார்.

அன்பு

தன்னுடன் இருப்பவர் ஏதும் தவறு செய்துவிட்டால், தண்டிப்பு அவருக்குத்தானே ஒழிய அவரது குடும்பத்தினரை அல்லல்படாது காக்கின்ற மனித நேயம் ஐயாவுக்கே உரித்தான தனிக்குணம்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த ஒருவர், அவரது பெயரைச் சொல்வது நாகரிகமில்லை என்பதால் விட்டுவிடுகிறேன். இயக்கத்தில் மிகவும் பற்றுக் கொண்டு செயல்பட்டவர். கெட்டிக்காரர், ஆனால் கொஞ்சம் முரடு. கலப்புமணம் செய்து கொண்டவர். இயக்கத்தின் சார்பில் ஓட்டல் மறியல் செய்தபோது தீவிரமாக மறியலில் ஈடுபட்டவர். அவரது தீவிரமான பற்றைக் கண்ட தந்தை பெரியார் அவர்கள், அதே நோக்கில் அன்புடன் அவரை வரவேற்று அழைத்து வந்தார். ஆனால், அவரை ஒருமுறை ரூ.2,000 கொடுத்து காய்கறி வாங்கி வர அனுப்பியபோது, பணத்துடன் போனவர் திரும்ப வரவில்லை. சில நாட்கள் கழித்து, அவரது மனைவி ஐயாவிடம் வந்து தன் கணவரைப் பற்றிக் கேட்டார். அதற்கு ஐயா 'அவர் இங்கே இல்லையே' என்று மனம் வெறுத்துப் பதில் உரைத்தார்கள். ஆனால், அந்த அம்மாவை அப்படியே அனாதரவாக விட்டுவிடாமல், கொஞ்ச நாள் சமையல் பணிக்கு வைத்திருந்து, பின்னர், திருச்சி புத்தூர் பள்ளியில் பணிக்குச் சேர்த்துவிட்டார்.

ஆற்றல்

மனித மனங்களை அளந்து பார்க்கின்ற அற்புத ஆற்றலைப் பெற்றவர் தந்தை பெரியார் அவர்கள். விஞ்ஞானி ஜி.டி. நாயுடுவுக்கே அந்த அடிப்படையை ஒரு முறை உணர்த்திக் காட்டினார் ஐயா அவர்கள்.

தொழில் அதிபர் பிர்லா பற்றி 'தீப ஜோதி பர்மன்' என்பவர் ஆங்கிலத்தில் பிர்லா மாளிகை மர்மம் என்றொரு நூல் எழுதியிருந்தார். இந்த நூலைப் படித்த ஜி.டி. நாயுடு அவர்கள். அதைத் தமிழ்ப்படுத்தி நூலாக வெளியிட வேண்டும் என்று விரும்பி தந்தை பெரியாரிடம் வந்தார். பேப்பர், அச்சு, பைண்டிங் அனைத்து செலவுகளையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறி ஜி.டி. நாயுடு அவர்கள், "மொத்தம் 50,000 பிரதிகள் போட்டு அதில் 20,000 தனக்குக் கொடுத்துவிட்டு, மீதி இருப்பதை மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

'என்ன, செய்யலாமா?' என்று ஐயா கேட்டார். அதற்கு நான் செய்யலாம் என்று சொன்னேன். சாமி சிதம்பரனாரும், பி.வி. ரங்கசாமி ஆகியோரும் செய்வோம் என்று கூறினார்கள். சர்க்கார் தடை செய்யக்கூடும் என்று எதிர் நோக்கி, சுப்பையா என்பவர் பெயரால் அந்த நூல் வெளியிடப்பட்டது.

நூலை வெளியிட்டாலும் ஐயா அவர்கள் அதை இலவசமாக வழங்கவில்லை. கும்பகோணத்தில் ஒரு கூட்டத்திற்குப் போன ஐயா, அங்கே தானே புத்தக விற்பனையை ஆரம்பித்து வைத்தார். ஒரு புத்தகம் 2 அணா. அங்கேயே, ஒரே கூட்டத்திலேயே 5,000 புத்தகங்கள் விற்றுவிட்டன. ஆனால், இப்படி விலைக்கு விற்பது ஜி.டி. நாயுடு அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஓட்டல் கன்னிமாராவில் வந்து தங்கிய ஜி.டி. நாயுடு, அங்கிருந்து ஐயாவுக்கு போன் செய்து, 'உங்களைப் பார்க்க வருகிறேன்' என்று சொன்னார். அதற்குத் தந்தை பெரியார், 'நீங்க அங்கேயே இருங்க, நான்

துடன் தனது பூட்ஸ் காலால் உதைத்து உதைத்துப் பேசுவார். மேடையே ஆட்டம் காணும் வகையில் பேசுவார். கூட்டம் முடிந்ததும் சாதாரணமாக ஆகிவிடுவார். அவருக்குக்குடல் இறக்க நோய் ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம் என்றே நான் எண்ணுகிறேன்.

ஆசை

உண்ணுகிற உணவில் தந்தை பெரியாரின் தனிப்பட்ட ஆசை என்றால், எள் உருண்டையை மிகவும் பிரியமுடன் சாப்பிடுவார். மூன்று வேளையும் அவருக்கு மாமிசம் இருக்க வேண்டும். கறி உணவு கட்டாயம் வேண்டும் அவருக்கு.

மகிழ்ச்சி

தந்தை பெரியார் நான் அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்த நேரம் அறிஞர் அண்ணா ஆட்சியில் அமர்ந்து சுயமரியாதைத் திருமணம் சட்டமாக்கப்பட்ட நேரம், தமிழ்நாடு என்று பெயர் மாற்றப் பட்ட நேரம். இவை இரண்டும் தான் அவருக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியை அளித்தது.

வேகம்

வேகம் என்றால் சிந்தனையிலும் செயலிலும் அவருக்கு வேகம் வேகம்தான். மாயவரம் வந்தால் அவர் செட்டித் தெருவில் நடராசன் என்பவர் வீட்டில் தங்குவார். காலையில் எழுந்து வாக்கிங் போகும்போது நாங்களும் அவருடன் போவோம். அவர் நடப்பார், அவருக்கு இணையாக செல்ல வேண்டும் என்று நாங்கள் ஓடுவோம்.

இதே வேகத்தை இயக்கம் நடத்துவதில் மட்டுமல்ல, மக்கள் இதயங்களை இயக்குவதிலும் அவர் காட்டினார். அறிவின் சிகரமாக அவர் இருந்தபோதும், மற்றவரின் அறிவுத் திறனை வயது வித்தியாசமின்றி ஏற்று மதித்தார். சமுதாயக் கேடுகளைக் கண்டு பொங்கினார். என் மக்களுக்குத் தீங்கிழைப்பதா என்று கொதித்து எழுந்தார். அவர் இட்ட விதை தான் இன்று ஆல விருட்சமாய் வளர்ந்து தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் காத்து வருகின்றது. அன்னைத் தமிழகம் இருக்கும் வரை அந்த பகுத்தறிவுப் பகலவனின் ஒளி இந்த மண்ணில் வீசிக் கொண்டே இருக்கும்.

சந்திப்பு:
எஸ்ஸார். ஸாரதி

பெரியார் மாவட்டத்தில் இன்றுள்ள சில பழக்கவழக்கங்கள்

பெரியார் மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் இன்றும் சில பழக்க வழக்கங்கள் கொங்கு வேளாளர் பிரிவினரில் காணப் படுகின்றன. குறிப்பாக இப் பிரிவைச் சார்ந்த பெண்மணிகளுக்கு மூக்குத்தி அணியும் வழக்கம் அறவே இல்லை என்பது நம்மை ஆச்சரியப்பட வைத்தது. இவர்கள் கல் முகப்பு வைத்த நான்குவடம் சங்கிலி அணிவதில் அதிக விருப்பம் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்தப் பெண்கள் குளிக்கும் போது கட்டித் தயிரை, சோப்பைப் போலப் பயன்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது.

பெட்டிப் பணம்

இந்தப் பிரிவினரிடையே நடைபெறும் திருமணத்தில் பெட்டிப் பணம் என்ற ஒரு வழக்கம் இருக்கிறது. அதாவது, மணப்பெண்ணின் பெற்றோர் மாப்பிள்ளையின் பெட்டியில் திருமணத்தின்போது பணம் வைக்க வேண்டும். பணம் இவ்வளவுதான் வைக்க வேண்டும் என்கிற ஒரு கட்டுப்பாடு இல்லையென்றாலும், பணத்தின் அளவு மணமகளின் வீட்டாரின் பொருள் வளத்தைப் பொருத்து அமைகிறது. இந்தத் தொகைக்குப் பெட்டிப் பணம் என்று பெயர்.

ஆரோக்கியத்தின் ஆதாரம் !
SKM மாடு, கோழித் தீவனங்கள்.

கால்நடைகளின் பால்வளம் பெருக,
கோழிகளின் முட்டை உற்பத்தி பெருக,
கறிக்கோழிகளின் எடை அதிகரிக்க,
SKM தீவனங்களை உபயோகியுங்கள்.

TIPS / CBE / 95

தயாரிப்பாளர்கள்
SKM அனிமல் ஃபீட்ஸ் அண்டு புட்ஸ் (இந்தியா) லிமிடெட்
180, காந்திஜி ரோடு, ஈரோடு - 638 002.
போன் : 217212, 217216. தந்தி : "பவுல்ட்ரி", ஈரோடு.
டெலக்ஸ் : (0856 - 226) SKM IN, ஃபேக்ஸ் : (0424) - 216427



எஸ்.ஜி. இராமானுஜன்,

வருகிறேன்' என்று சொல்லி விட்டு, புறப்படத் தயாராகும் வேலையில் ஜி.டி. நாயுடுவே வந்துவிட்டார். வந்ததும் தந்தை பெரியாரிடம், 'நமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன? நீங்கள் செய்வது என்ன?' என்று கேட்டார். அதற்கு ஐயா அவர்கள் ஜி.டி. நாயுடுவைப் பார்த்து, "ஒரு மனிதனுக்கு இருப்பது இரண்டு கைகள். இனாமாக புத்தகம் கொடுத்தால் கைக்கு இரண்டாக நான்கு புத்தகங்கள் கேட்கிறார்கள். ஆனால் விலைக்கு என்றால், காசு கொடுத்துத்தான் வாங்க வேண்டும் என்றால் ஒரு புத்த கம்தான் வாங்குவார்கள். ஆனால் அதை ஒழுங்காகப் படிப்பார்கள். உங்களுக்கு எது வேண்டும்" என்று கேட்டார். இதைக் கேட்டதும் பதில் எதுவுமே பேசவில்லை ஜி.டி. நாயுடு. வியப்பின் விளிம்புக்குச் சென்றுவிட்டதால் அவரால் பேச முடியவில்லை.

கணக்கு

ஒரு முறை பி.டி. இராஜன், ஜி.டி. நாயுடு இருவரும் ஐயாவைப் பார்க்க வந்தனர். பல விஷயங்களைப் பேசிய பின், பேச்சு ஐயாவின் டிரைவர் பக்கம் திரும்பியது. ஆறுமுகம் என்பவர் ஐயாவுக்கு வண்டி ஓட்டிக் கொண்டிருந்தார். ஜி.டி. நாயுடு, 'உங்கள் டிரைவருக்கு எவ்வளவு சம்பளம் தருகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு ஐயா அவர்கள் ரூ.630 தருகிறேன் என்று பதில் சொன்னார். ஜி.டி. நாயுடு பஸ் கம்பெனி வைத் திருந்தார். அவரே டிரைவருக்கு அந்த அளவு சம்பளம் தருவ தில்லை. எனவே திகைத்துப் போன ஜி.டி. நாயுடு எப்படித் தருகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ஐயா சொன்னார் "நம்ம டிரைவருக்கு அப்பா அம்மா கிடையாது. ஒரே ஒரு அக்கா ஈரோட்டில் இருக்கிறார். அவருக்கு ரூ.25. இவர் (டிரைவர்) பீடி குடிப்பதற்காக ரூ.5 கொடுத்து வருகிறேன். மற்றபடி காலையில் டிபன் சாப்பிடுவது ரூ.5. மதியம் சாப்பாடு ரூ.10. இரவு சாப்பிடுவது ரூ.5. என்று தினமும் கணக்கிட்டு, மேலே சொன்னதையும் சேர்த்துப் பாருங்கள். ரூ.630 வந்து விடும் என்று சொன்னார். ஐயாவின் கணக்கிடும் திறனைக் கண்டு ஜி.டி. நாயுடு, பி.டி. ராஜன் இருவரும் வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள்.

தெளிவு

சாதாரணமாக புரிந்து கொள்ள முடியாத ஒன்றைக் கூட ஐயாவிடம் சென்று கேட்டால், கேட்பவர் திருப்தி படுகிற அளவுக்கு விளக்கம் அளிப்பார். அதைக் கேட்கும் போது அறிந்ததைப் பற்றித் தெளிவும், மேலும் அறிய வேண்டும் என்ற ஆவலும் பிறக்கும்.

சென்னை இராபின்சன் பூங்காவிலிருந்து ஊர்வலம் ஒன்று புறப்பட்டு வருகின்றது. என்ன ஊர்வலம் என்று நினைவில்லை; இந்தி எதிர்ப்பு ஊர்வலம் என்றே எண்ணு கின்றேன். ஊர்வலத்திற்குத் தலைமை வகித்து முத்தையா செட்டியார் நடந்து வருகின்றார். அந்த நிகழ்ச்சிக்கு ரிப் போர்ட்டிங் நான்தான். ஆர்வத் துடன் எழுதிக் கொடுத்ததில், தந்தை பெரியாரைப் பற்றி, 'பௌமன்' போலவே காட்சி அளிக்கிறார் என்று எழுதி யிருந்தேன். 'சிறப்பானவர், மேலானவர்...' என்ற பொருளில் எங்கோ எப்பொழுதோ படித்த நினைவில், நேரடியான பொருள் தெரியாமலேயே அந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருந் தேன். தந்தை பெரியார் அந்தச் செய்தித் தொகுப்பைப் படித்துவிட்டு, நன்றாக இருந்தது என்று பாராட்டினார். நான் அவரிடம், பௌமன் என்று சொல்லைப் புரியாமலேயே கையாண்ட உண்மையை ஒப்புக் கொண்டு, அவரிடம் அதுபற்றிய விளக்கம் கேட்டேன். சற்றும் கோபமடையாமல் அந்தச் சொல்லுக்கு 'ஏகச் சக்கரவர்த்தி' என்று பொருள் சொல்லி எனது மனம் நிறைவடைய வைத்தார் தந்தை பெரியார்.

சிக்கனம்

ஐயா வெளியிட்ட குடியரசு இதழ் பச்சை அட்டையைத் தாங்கி வந்தது. இப்படிப் பச்சை அட்டையை ஐயா தேர்ந் தெடுக்கக் காரணம் என்ன என்று யோசித்து யோசித்து, கடைசியாக ஒரு காரணத்தைக் கண்டுபிடித்தேன்! ரஷ்யாவில் லெனின் நடத்திய பத்திரி கையின் நிறம் பச்சை! லெனின் வெளியிட்ட முதல் அறிக்கை, பச்சைத் தாளில்! காந்தியடிகளின் முதல் அறிக்கை பச்சை அறிக்கை! என்றெல்லாம் பல வாறாக யோசித்து அதை யெல்லாம் பின்பற்றித்தானே பச்சை அட்டையைப் பயன் படுத்துகிறீர்கள் என்று ஐயா விடம் கேட்டேன். அதற்கு அவர் "நாசமாப் போச்சு" என்று தலையில் அடித்துக்கொண்டு சிரித்தார். காரணம். அப்போ தெல்லாம் சென்னையில் பெருமாள் செட்டிதான் பேப்பர் வாங்கித் தருபவர். பி.ஆர்.

ஒழுக்கம் என்பது நம் இதயங்களின் தூய்மையில் தான் வேரூன்றியிருக்கிறது.

—காந்தியடிகள்

அண்டு சன்ஸிலும் எல்லாப் பொருட்களும் விற்பார்கள். ஒருமுறை தந்தை பெரியார் அங்கு சென்றிருந்தபோது, ஒரு ஓரமாக பெரிய பேப்பர் கட்டு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து விசாரித்திருக்கிறார். ஏன் விலை போகாமல் வைக்கப்பட்டிருக் கிறது என்று கேட்டதற்கு, பேப்பர் கட்டுகளை ஏற்றி இறக்கும்போது எப்படியோ ஒரு ஓட்டை விழுந்துவிட்டது. அதனால் யாருமே வாங்க வில்லை என்று கூறியிருக் கிறார்கள். தந்தை பெரியார், "அதை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்க, "எடை போட்டு விற்கப் போகிறோம்' என்று பதில் சொன்னதும் உடனே அவ் வளவையும் எடை போட்டு வாங்கி வந்துவிட்டார். பிறகு ஓட்டை இருக்கும் இடத்தை மடித்து பத்திரிக்கை அட்டை அடிக்க பயன்படுத்திக் கொண் டார்.

தந்தை பெரியார் அவர்களே இந்தப் பச்சை அட்டைப் பின்னணியைப் பற்றிக் கூறிய பிறகுதான் ஐயாவின் சிக்கனத் தைப் பற்றி சிந்திக்காமல் போய்விட்டோம் என்பதே எனக்குப் புரிந்தது.

பொறுமை

பொறுமை என்னும் குண நலனைப் பற்றிப் பேசினால், தந்தை பெரியாரை விடப் பொறுமைசாலி எவருமில்லை என்று துணிந்து கூறலாம்.

அன்னை நாகம்மையார் அவர்கள் இருந்தபொழுது ஒரு நாள் வாணியம்பாடிக்குச் சென்று பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு வந்தார். அந்தக் கூட்டத்தில், சில பாவிகள்... நாவினால் சொல்லக்கூட கூசுகின்ற..............தை எடுத்து வீசி இருக்கிறார்கள். பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு நேரடி யாக ஈரோடு வந்துவிட்டார். நாகம்மையார் அவர்கள் முகம் சுளித்தபடியே கோட்டைக் கழற்ற, "நான் நல்லாப் பேசி னேனா? ஒருத்தனுக்கு ரொம்ப ஆனந்தம். அதனால கீழே கிடந்த எதையோ எடுத்து வீசிட்டான்" என்று கூறி சிரித்தாராம். அந்த அளவுக்குப் பொறுமைசாலி தந்தை பெரியார்.

ஆத்திரம்

பொறுமையானவர் என் றாலும், ஆத்திரம் என்றால் அவ்வளவு ஆத்திரம் வரும். ஆனால் அத்தனை ஆத்திரமும் சமுதாயத்திற்குத் தீங்கு செய்யும் கொடுமைகளுக்கு எதிராகத் தான். பொதுக்கூட்டங்களில் அவர் பேசும்போது அந்த ஆத்திரம் ஆவேசம் கொள்ளு வதைக் காணலாம். ஆங்காரத்

With Best Compliments From

Telex: COMMANDER

Office: 211837
211838
211768
Res : 75839
73455

Bharath Refineries & Oil Mills

Manufacturers of **COMMANDER** Brand Refined Oil

72, Park Road, ERODE - 638 003

TNGST RC No. 6/02/01/687074 CST No.431040/Dt. 1-4-65 TNETA No.184

With best compliments fro:

Raji Chit Funds,
Annanmar Chit Funds (P) Ltd.,
Raji Finance
Raji Medicals
Raji Feeds,
Raji Poultry and Agri. Farm
Raji Feeds (P) Ltd.

32, Patel Road, ERODE-1

பெரியார் மாவட்டத்தில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள்

பெரியார் மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்களிடையே இன்றும் ஏட்டில் எழுதப் படாத பாடல்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் தாலாட்டுப் பாடல்கள், வேலையின் பளு தெரியாமல் இருக்கப் பாடப்படும் தொழில் பாடல்கள், கும்மிப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், திருமணப் பாடல் கள் பக்திப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என பல வகைப்படும். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் பாமர மக்களின் கற்பனையும், உணர்ச்சியும், எளிமையான இனிமையான பாடல் போக்கும் கலந்து, கேட்பவரைத் தன்வயமாக்கும் தரத்தின. இன்றைய நாகரிக சூழ்நிலையில், பெண்களிடையே தாலாட்டுப் பாடல்கள் என்பது அருகி விட்டது என்றே கூறலாம். குறிப்பாக நகர்ப்புறங்களில் தாலாட்டுப் பாடல்கள் கேட்காமல் தூங்கும் குழந்தைகளே அதிகம் என்கிற சூழ்நிலை உருவாகி வருகிறது. நவீன தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களும், திரைப்படப் பாடல்களும் அயல்நாட்டு இசை மோகமும், நாட்டுப்புறப் பாடல்களுக்குத் தடையாக இருந்தாலும், கிராமப் பகுதிகளில் விஞ்ஞான வீச்சின் தாக்கம் அதிகமாக இல்லாத இடங்களில் தாலாட்டுப் பாடல்களும், நாட்டுப்புற இசையும், இன்றும் நிலவி வருவது தமிழ்நாட்டில் நாட்டுப்புறப் பாடல்கள் இன்றும் உள்ளன என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன. கிராமப் பகுதிகளிலும் கூட வசதி படைத்த குடும்பத்தில், தாலாட்டுப் பாடல்கள் தவிர்க்கப்பட்டே வருகின்றன. ஆனால் வசதி குறைந்த குடிசைகளிலும், குடியிருப்புகளிலும், தங்கள் செல்லக் குழந்தைகளை மெல்ல மெல்லத் தூங்க வைக்க தாலாட்டுப் பாடல்கள் இன்றும் ஏழ்மையான தாய்மார்களால் பாடப்பட்டு வருகின்றன. அவற்றுள் பெரியார் மாவட்டத்தில் இன்றும் பாடப்பட்டு வரும் சில நாட்டுப்புறப் பாடல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

தாலாட்டு

"வாசலிலே வன்னிமரம்



உங்கள் வம்சமோ ராசர்குலம்
என் ராசகுலம் பெற்றெடுத்த
ரத்தினமே நித்திரை போ!
கண்ணான தம்பிக்கு நாங்கள்
காதுகுத்தப் போறோமென்னு
உன்
பொன்னான மாமனுக்கு
நாங்கள் போட்டோம் கடுதாசி!
அரும்பான மாலைகட்டி என்
கண்ணே அவசரமாய்
வந்தார்கள்
முன்னூறு வெற்றிலையும் என்
கண்ணே உனக்கு
முதல்மாமன் சீரும் வரும்!
நானூறு வெற்றிலையும் என்
கண்ணே உனக்கு நடுமாமன்
சீரும் வரும்!
கற்கண்டுத் தட்டுவரும் என்
கண்ணே உனக்குக் கடைசி
மாமன் சீரும் வரும்!
பூவாய் உதித்தவனோ நாங்கள்
செய்த புண்ணியத்தால்
வந்தவனோ!
அரும்பாய் உதித்தவனோ
நாங்கள் செய்த

அருந்தவத்தால் வந்தவனோ!"

கல்யாணம்

"பாக்குமரம் பொளந்து
பாதெலெ பந்தலிட்டு
தேக்குமரம் பொளந்து
தெருவெல்லாம் பந்தலிட்டு
என்ன என்ன சீதனங்க
எங்களொட இளங்கொடிக்கு
பட்டி நெரஞ்சு வர
பசுமாடு சீதனங்க
உக்காந்து பால்கறக்க
முக்காலி சீதனங்க"

சோம்பேறிப் பெண்

"சோறாக்கத் தெரியாத
சோம்பேறிப் பெண்ணுக்கு
வீராப்பு ஏதுக்கடி கள்ளி
தாவாரம் பெருக்கத்
தெரியாத பெண்ணுக்குப்
பூமாலெ ஏதுக்கடி"

மாரியம்மன் பாட்டு

"அம்மா வாரா அம்மா வாரா
கம்பங் காட்டுக் குள்ளே
அவ என்ன கொண்டு வாரா
அவ ஏது கொண்டு வாரா
சிங்கம்புலி ரதம் ஏறி
சீமை பாக்க வாரா".

கும்மிப் பாட்டு

"நாலுமூரெ வயலக்குள்ளே
லேலே லோக்கும்மி லேலேலே
நாத்து நெடக் கூழெப்
பொண்ணு லேலே
லோக்கும்மி லேலேலோ
கூழெப் பொண்ணு நெட்ட
நாத்து லேலேலோக்கும்மி
லேலேலோ
குலுங்குதம்மா வையெ
நெல்லு லேலே லோக்கும்மி
லேலேலோ."



அய்யம்புதூர் சொல்லும் அறிவுரை

பெரியார் மாவட்டம் கோபிக்கு அருகில் அய்யம்புதூர் என்ற ஒரு வளம் நிறைந்த சிற்றூர் உள்ளது. ஈரோட்டிலிருந்து வடமேற்கே சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவில் சிறுவலூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலைய எல்லைக் குட்பட்ட எழிலார்ந்த இயற்கை வளம் செறிந்த ஊராக விளங்கி வருகின்றது.

இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்

இன்றைய நிலையில் இவ்வூரின் மொத்த குடும்பங்கள் 107. மொத்த மக்கள் எண்ணிக்கை 377 பேர் மட்டுமே. தங்கள் குடும்பத்தில் வாரிசுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்துவிட்டதெனில் அத்துடன் நிறுத்திக் கொண்டு விடுகின்றனர். முதலில் பெண் குழந்தை பிறந்தாலோ அடுத்தாற்போல் ஆணோ அல்லது பெண்ணோ இரண்டுக்குமேல் வேண்டாம் என்று உறுதியாக இருக்கின்றனர்.

குடும்ப நலத் திட்டத்திற்கு அனைத்து ஊர்களுக்கும் ஒரு முன்னோடியாக இவ்வூர் விளங்குவதால் இவ்வூர் குடும்ப நலத் திட்டத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

உள்ள நிலம் முழுவதையும் தக்க முறையில் பயன்படுத்தி, அது தன்னால் முடிந்த அளவுக்குப் பயன் கொடுக்கும் படிச் செய்தால், அது மக்கள் தொகை முழுவதையுமே காப்பாற்றும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

YOUR PROBLEM AND SEARCH FOR THE RIGHT SCHOOL ENDS HERE

ERODE HINDU KALVI NILAYAM

Matriculation Higher Secondary School

Mamarathupalaym, Erode-638 004

Phone: 70222, 75856

PIONEERS IN EDUCATION

* English Medium with Tamil, Hindi and Sanskrit.
* Admission: Nursery to Std.XII (Co-Education)
* Hostel Facilities with Homely, Tasty Food, Love and Care.
* Beautiful Buildings blended in Natural Atmosphere.
* Sports: Outdoor and Indoor Games, Karate, Band Set, N.C.C., Scouts, Guides and Music.
* Centum Results in Matriculation and Higher Secondary Public Examinations.
* Run by experienced Educationists, who have established Schools, Colleges and Technical Institutions for over a decade.
* For further details contact School Office.

Rana K.V. Laxmanan
Secretary & Correspondent

K.K. Balusamy
President

தொடக்கம் 1928

தொலைபேசி: கோபி - 23491, 22017
ஈரோடு கிளை - 214483

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்.
நெ.கே.544

கிளைகள் — கோபிசெட்டிபாளையம்
1. நேதாஜி ரோடு, ஈரோடு, 2, கொண்ணமடை, நம்பியூர்.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோபி மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, கீழ்க்காணும் விவரப்படி தேங்காய், பருத்தி மற்றும் மஞ்சள் ஏல விற்பனையைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

இடம்	விளைபொருள்	நாள்
கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத் தலைமையிடம், கோபி.	தேங்காய்	பிரதி வாரம் சனிக்கிழமை
"	" பருத்தி	பிரதி வாரம் வியாழக்கிழமை
எ.செட்டிபாயைம்	பருத்தி	பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமை
ஈரோடு கிளை	மஞ்சள்	மஞ்சள் மார்க்கெட் உள்ள எல்லா நாட்களிலும்

விற்பனை முடிந்தவுடன் விற்பனைத் தொகை வழங்கப்படுகிறது.

சங்கத்தில் தரமான விதை நெல் வகைகள் 'கோவை விதைகள்' என்ற பெயரில் உற்பத்தி செய்யப்பட்டு கோபி மற்றும் தமிழ்நாடெங்கும் தேவையானவர்களுக்கு அவ்வப்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாய விளைபொருட்களை எடுத்துவர லாரி இரண்டு சங்கத்தில் உள்ளன.

விதை சுத்திகரிப்புக்கென்று பெரிய அளவில் இயந்திரங்கள் பொறுத்தப்பட்டு செயல்பட்டு விவசாயிகளுக்கு அரும்பெரும் பயன் ஈட்டிக் கொடுத்து வருகிறது.

இத்துடன் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சிமருந்துகள், விவசாய உபகரணங்கள் முதலியவைகளை விற்பனை செய்து வருகிறது.

பவானிசாகர் மார்க் கலப்புரம் இச்சங்கத்தால் தயாரிக்கப்படும் மிகச் சிறந்த கலப்புரமாகும். இது மட்டுமா!

கோபி வாழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கியும் அரும்பணியாற்றி வருகிறது.

மேலும் மாணவ மாணவிகளுக்குத் தேவையான புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபொருட்கள் ஆகியவற்றை மலிவான விலையில் விற்பனை செய்து வருகிறது. சங்கம் பெறும் நிரந்தர வைப்புகளுக்கு வருடத்திற்கு 15 சதவிகித வட்டி வழங்கி வருகிறது. எனவே பொது மக்கள் அனைவரும் இச்சங்கத்திற்கு நல்லாதரவு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

எம். பொன்னுசாமி, பி.ஏ.,
துணைப்பதிவாளர்/தனி அலுவல

ப(ா)ட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

'மக்கள் கவிஞர்' என்கிற சிறப்புக்கு உரியவரான பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த 'செங்கம்படுத்தான்காடு' என்கிற கிராமத்தில் 13.4.1930-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர் பெயர் திரு அருணாசலம் பிள்ளை-திருமதி விசாலாட்சி அம்மையார். இளைய மகனான கல்யாணசுந்தரத்திற்குக் கணபதி சுந்தரம் என்கிற சகோதரரும், வேதாம்பாள் என்ற சகோதரியும் உண்டு.

கவுரவாம்பாள் என்கிற தம் உறவுமுறைப் பெண்ணையே, 1957-ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இவர்களுடைய திருமணம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் தலைமையில் நடைபெற்றது. அதற்கடுத்த ஆண்டே ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானார் அவர்.

கைவந்த கலை

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பெண்ணடிமைத் தனம் நீங்கப் பாடியவர். முதலாளி தொழிலாளி பேதம் ஒழியப் பாடியவர். ஒற்றுமை ஓங்கப் பாடியவர். காதலைப் பாடும்போது கூட-

'உழவனும் ஓயாத உழைப்பும்
போல் நாமே
ஒன்றுபட்டு வாழ்க்கையில்
என்றுமிருப்போமே'

—என்று பாடும் அளவிற்கு உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தவர். பாடல் அடிகளில் கருத்துக்களை ஏற்றிக்கூறும் 'தற்குறிப்பேற்ற அணி' இலக்கணத்தோடு, எண்ணற்ற பாடல்களை ஏட்டுலகிலும், திரையுலகிலும் வழங்கியவர் பட்டுக்கோட்டையார்.

ஏன், சிறுவர்களுக்காகப் பாடல் எழுதும்போது கூட, வெல்லத்தில் மருந்தைக் கலப்பது போல் சீர்திருத்தக் கருத்துகளை இதமாக, இனிமையாகக் கையாள்வது அவருக்குக் கைவந்த கலையாக இருந்தது.

இதோ, உதாரணத்திற்கு ஒரு பாடலின் சில வரிகள்-

'வேப்பமர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லிவைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளிவைப்பாங்க - அந்த
வேலையற்ற வீணர்களின்
மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட
நம்பிவிடாதே - நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பிவிடாதே!'

—இப்படியெல்லாம் அவரைப் பற்றிய செய்திகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஏட்டிலும், திரையிலும்

ஆனால்- ஜனசக்தி, தாமரை போன்ற இதழ்களில் பாடல் எழுதத் தொடங்கி, பிறகு திரையுலகில் நுழைந்து ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கி நிகரற்று விளங்கிய நேர்த்திமிகு கவிஞரான பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பற்றி, அவர் வளர்ந்தவிதம் பற்றி விரிவாக எழுதுவதே என்னுடைய நோக்கம்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ, நாள்தோறும் ஏதாவது திரைப்படப் பாடலை வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் அல்லது ஏதேனும் விழாக்களில் கேட்டுத்தான் தீரவேண்டியிருக்கிறது.

'செந்தமிழ் நாடென்னும்
போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'

—என்று மகாகவி பாரதியார் சொன்னதுபோல, இந்தக் காலத்தில் நம் காதில் விழும் அப்பாடல் தேனாகவோ பாய்கிறது? இப்படியொரு கேள்வி எழுப்பப்படுமானால் அதற்குப் பெரும்பாலோர் தரும் பதில் 'இல்லை' என்பதாகவே இருக்கும்.

தமிழுக்கு மரியாதை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கேடி சந்தானம், எஸ்டி சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, பாபநாசம் சிவன், உடுமலை நாராயணகவி, மருதகாசி, கவிஞர் சுரதா, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் போன்ற கவிஞர்களெல்லாம் திரையுலகில் ஆட்சி செலுத்திய காலத்தில் அங்கும் தமிழுக்கு மரியாதை இருந்தது. கவிஞர் பெருமக்கள் இசைவாணர்

With best compliments

from

GOBI TALUK

BUS OWNERS ASSOCIATION

K.S.R. Complex, Opp. R.T.O. Office

Erode Main Road, Gobichettipalayam - 638 476

President	Secretary	Treasurer
A.S. Ramamoorthy	V.S. Rathinasamy	P.R. Viswanathan

With Best

Compliments From

DRIVING SCHOOL OWNERS

GOBI ❄ *BHAVANI* ❄ *SATHY* ❄ *ANDHIYUR*

PERIYAR DISTRICT

3000 ஆண்டுகட்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியான்மலைப் பாறைகளில் வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்களையும், பண்டைய தமிழ் எழுத்தில் தமிழ் பிராமி எழுதப்பட்ட ஒரு கல்வெட்டையும் புதிதாகக் கண்டறிந்திருக்கிறது.

குடுமியான்மலை, அங்குள்ள கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறப்புமிக்க இசைக் கல்வெட்டால் வரலாற்றறிஞர்களுக்கு நன்கு அறிமுகமான ஓர் ஊராகும். இவ்விசைக் கல்வெட்டுள்ள மலையின் மேற்குப் புறத்தில் ஓர் இயற்கையான குகைத்தளம் உள்ளது. இங்கு கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து படுக்கைகள் காணப்படுகின்றன. இவை சமண முனிவர்கள் வாழ்ந்ததை நினைவூட்டுபவை.

இந்தக் குகைத் தளத்தில் முகப்புப் பாறைச் சரிவில் பாறை ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இவை இதுவரை தொல்லியலாரின் பார்வையிலிருந்து எப்படியோ தப்பிவிட்ட, கருப்பு வண்ணத்தில் பெரிய அளவில் வரையப்பட்டுள்ள இவ்வோவியங்களில், இரண்டு வீரர்கள் போரிடுவது போன்று வரையப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.மு. 1000 - 500க்கு இடைப்பட்டதாக இருக்கலாம். இவ்வோவியங்கள் மேலும் விரிவாக ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். கருப்பு வண்ணத்தில் தீட்டப்பெற்ற பாறை ஓவியங்கள் தமிழகத்தில் மிக அரிதாகவே காணப்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டு ஒன்றும் இம்மலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். கல்வெட்டின் வாசகம் "நாழள் கொ(ற்)றி தந்த பளீய்" என்றுள்ளது. நாழள் கொற்றி என்ற பெண், சமண முனிவருக்குக் கற்படுக்கை அமைத்துக் கொடுத்தாள் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும்.

புதிதாக அறியப்பட்டுள்ள கல்வெட்டும் ஓவியமும் குடுமியான்மலைப் பகுதியின் சமூக வரலாற்றை அறிந்து கொள்ளக் கிடைத்த சான்றுகளாகும். இக்கல்வெட்டும் ஓவியமும் இத்துறைக் கல்வெட்டாய்வாளர்கள் திரு சு. இராஜகோபால் மற்றும் திரு வெ. வேதாசலம் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டன. சிந்துவெளி எழுத்து மற்றும் தமிழ் பிராமி எழுத்தில் ஆழமான ஆய்வு செய்து வரும் அறிஞரான 'தமிழ்ச்செம்மல்', திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் இக்கல்வெட்டினைப் படிக்க மிகவும் உறுதுணையாக இருந்தார் – எனத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு நடன. காசிநாதன் தெரிவித்துள்ளார்,

களினால் பாராட்டப்பட்டார்கள். ரசிகப் பெருமக்களால் மதிக்கப் பட்டார்கள். தமிழிசைக்குத் துறை தோறும் தக்க மரியாதை கிடைத்தது.

ஆனால் இன்றைக்கு?

சில ஆண்டுகளுக்கு முன்புவரை வெளிவந்த திரைப்படப் பாடல்கள், கேட்போர் நெஞ்சில் அழுத்தமாகக் காலூன்றிவிடக் கூடியவைகளாக இருந்தன. இன்றைக்கும் பாட்டுக்கு முன், பின்னணி இசை ஒலிக்கத் தொடங்கியதுமே பாட்டு இன்ன தெனச் சொல்லிவிடத்தக்க சொற் கட்டோடு அவை திகழ்ந்து வருகின்றன.

ஆனால், இப்போதைய பாடல்கள்? திரையரங்கில் கேட்கிறபோது, சிலருக்கு 'ஜிலுஜிலு' வென்று இருக்கக்கூடுமே தவிர, அரங்கைவிட்டு வெளியே வருகிற வரைகூட அவை நினைவில் நிற்பதில்லை. சில பாடல்களின் இசை மட்டுமே, அதுவும் சில நாட்களுக்கு நம் செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக் கின்றன.

இதற்குக் காரணம், தவறான இசை முறை அல்லது தமிழிசை யைக் கடந்த பாடும் முறை தான். அது நம் காதில் ஏதோ புதிதாகப் பாடுவது போன்றதாக இருக்கலாம்!

முதல் படம்

திறமைமிக்க கதை வசன கர்த்தாவாகத் திகழ்ந்த திரு ஏ.எல் நாராயணன் மூலமே முதன்முதல் திரையுலகில் புகுந்தார் இந்தக் கட்டுரை நாயகர் திரு பட்டுக் கோட்டை அ. கல்யாணசுந்தரம் அவர்கள். 'படித்த பெண்' என்பது தான், 1951-இல் இவர் பாட்டெழுதிய முதலாவது திரைப்படமாகும்.

தாள்களைத் தொகுத்து வைத்துக் கொண்டு, பரீட்சை எழுதும் 'கிளிப் பேடு' அட்டை, அல்லது தடித்த 'பைல்' அட்டையில் தாளம் போட்டுக்கொண்டே இசை முணுமுணுப்போடு எழுதுவது இவருடைய வழக்கம். பெரும் பாலான இவருடைய பாடல்கள் இவர் போடும் மெட்டிலேயே அங்கீகாரம் பெற்றிருக்கின்றன என்பது குறிப்பித்தக்கது.

முதன்முதலில் இவர் மெட்டுக்கு என்று எழுதியது 'புதையல்' என்ற படத்தில் வந்த பாடல்

"சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச்
சேலையடி....."

—என்பதுதான்.

இன்றைக்கும் மெட்டுக்கு எழுதப்படும் பாடல்களைப் பார்க் கிறோம். கேட்கிறோம். அதைப் போல் இனிப்பதுண்டா? பொருட் செறிவோடு இருப்பதுண்டோ?

திரைப்படத் துறையில் ஒரு எட்டாண்டுக் காலம் பாடல் எழுதி இணையற்றுத் திகழ்ந்த பட்டுக் கோட்டையார் பெற்றிருக்கும் புகழ் பல ஆண்டுக் காலத்திற்கும் மங்காது, மறையாது.

அவரெழுதி, ஏடுகளில் வெளி யான பாடல்கள் சிலகூட, திரைப் படங்களிலே இடம்பெற்றதுண்டு. அவற்றையும் சேர்த்தால்கூட 300-ஐத் தாண்டாது! இவ்வளவு குறைவான பாடல்களுக்குள்ளே எவ்வளவு நிறைவான புகழ் பாருங்கள்!

'எத்தனையோ இன்பம் இந்த
நாட்டிலே உண்டு,
அத்தனைக்கும் பெரிய இன்பம்
பாட்டிலே உண்டு!

—என்றெழுதிய பெருமையாளர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

புரட்சிக் கவிஞர் தொடர்பு

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிடம் சில காலம் குருகுல வாசம் இருந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். நேரில் அவரைப் பார்ப்பதற்கு முன்னாலேயே, அவருடைய எழுச்சிமிகு பாடல் களால் பெரிதும் ஈர்க்கப்பட்டி ருந்தது இவர் இதயம்.

அதனாலேயே ஆத்திகப் பெரு மக்கள் எதையும் எழுதுவதற்கு முன்னால் பிள்ளையார் சுழி போடுவதைப் போல 'பாரதிதாசன் வாழ்க' என்று தாளின் தலைப்பில் எழுதிவிட்டுத்தான், பாட்டை ராகத் தோடு எழுதவே தொடங்குவார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

அப்படியோர் குருபக்தியை இன்றைய திரைப்படப் பாடலா சிரியர் எவரிடமாவது நம்மால் காணமுடிகிறதா?

இப்படிச் சொல்லுவதால் 'கடவுள் பக்தியே இல்லையா அவருக்கு?' என்று கேட்க வேண்டாம். இளம் வயதில் அவர் சுய மரியாதைக்காரர்தான். சென்னைக்கு வந்துவிட்ட பிறகு வேறு வகை மன பாதிப்புகளுக்கும் அவர் ஆளானது உண்டு; தந்தையாருக்கு எழுதிய கடிதத்தில்கூட 'முருகப்பெருமானைத் தவறாமல் வழிபட்டு வரவும்' என்றெல்லாம் எழுதி யிருக்கிறார்.

தன் மகனுக்கு 'குமாரவேல்' என்றுதான் அவர் பெயரிட்டார்.

பாடல் கற்ற விதம்

தன்னுடைய பாடலை அவரே பாடிக் காட்டுவார் என்றால் 'பட்டுக்கோட்டையார், முறைப்படி இசை பயின்றவரா?' என்று கேட்காதீர்கள். அவருடைய தந்தையாரே ஒரு கவிராயர்; 'வழிநடைக் கும்மி' எழுதியவர். மாலைவேளைகளில் விவசாய வேலைகள் முடிந்து ஓய்வா யிருக்கும்போது உரத்த குரலில் கிராமிய மணங்கமழப் பாடிக் களிப்பது அவர் வழக்கம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்த ரத்தின் அண்ணன் கணபதி சுந்த ரமும் அப்படிப் பாடல் எழுதவும், பாடிக்காட்டவும் கூடியவராக இருந்தார்.

தென்னை மரத்தில் மாங்காயா காய்க்கும்? அதேபோல் அவர்களைப் பின்பற்றித்தான் நம் கல்யாணசுந்த ரமும் பாடல் எழுதப் பழகினார்; பாடவும் கற்றார்- தம் பத்தொன்பதாம் வயதில்!

எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து வயற்காட்டில் உழைக்கவே நேரம் சரியாக இருந்ததால் சிறுவயதில் பள்ளியில் படிக்கும் நாட்டம் அவருக்கு இல்லாதிருந்தது. எனினும் குடும்பத்தார் பிடிவாதத் தால், சின்னவயதில் இரண்டாம் வகுப்புவரைதான் படித்தார். அதற்குமேல் பள்ளிப் படிப்பிற்குப் புள்ளி விழுந்தது.

நடைக்கு அஞ்சாதவர்

இளமைக் காலத்தில், தமது ஊரான செங்கம்படுத்தான் காட்டிலிருந்து, பக்கத்து நகரமான பட்டுக்கோட்டைக்கு நடந்து போய் அடிக்கடி சினிமா பார்ப்பதும், பார்த்த படத்தில் கேட்ட பாடலை உரத்த குரலில் பாடிக்கொண்டே இரவில் நடந்தே கிராமத்திற்கு வருவதும் வாடிக்கையாகியது அவருக்கு. இப்போது போல அப்போதெல்லாம் 'மேட்னி ஷோ', 'டவுன் பஸ்' எல்லாம் கிடையாது.



நாட்டின் பெருமையை வளர்க்கக் கல்வி அத்யாவசியம் அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாகவும் வாழத் தொழில் வளர்ச்சி அவசியம்.

—தந்தை பெரியார்

எப்போதுமே நடைக்கு- பொதுவாக உழைப்பிற்கு அஞ்சிய வரல்ல நமது பட்டுக்கோட்டையார்.

நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவரான அவர், தகுந்த வேலையைத்தேடி, இளமைக் காலத்தில் ஊர் ஊராக அலைந்த துண்டு. 1947-48-இல் தான், மதுரைக்குப் போய் சக்தி நாடக சபாவில் நடிகராகச் சேர்ந்தார்.

அதுவரை அவர் பட்டபாடு, தாங்கிய துன்பங்கள் சொல்லி முடியாது. சேலத்திலிருந்து திருச்சிக்கு நடந்தே வந்து, திருச்சியிலிருந்து தஞ்சைக்கு நடந்தே வந்து, தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை வழியாகத் தம் சொந்த ஊரான செங்கம்படுத்தான் காட்டுக்கும் அவர் நடந்தே வந்த காலமெல்லாம் உண்டு.

சோம்பிக் கிடப்பதோ, நம் முடைய அதிர்ஷ்டம் அவ்வளவு தான் என்று அலுத்துப் போவதோ அவரால் முடியாததாக இருந்தது. அதன் பிரதிபலிப்பாக 'எழுந் ததுதான் பிற்காலத்தில் 'நாடோடி மன்னன்' திரைப்படத்திற்காக அவர் எழுதிய பாடல்-

'தூங்காதே தம்பி தூங்காதே
சோம்பேறி என்றபெயர்
வாங்காதே!
....
நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங் கெட்டார் சிலர்
அல்லும் பகலும் தெருக்
கல்லா இருந்துகிட்டு
அதிர்ஷ்டம் இல்லையென்று
அலட்டிக் கொண்டார்!...'

—படவுலகில் பாடல் தொடர்ச்சியாக எழுதத் தொடங்கிச் சம்பாதிக்கலான பிறகும்கூட, ஒரு பக்கம் வேட்டியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, இன்னொரு பக்கம் ஃபைலைப் பிடித்துக் கொண்டு 'நடந்தேபோகும்' கிராமவாசி நிலைதான் அவருக்குப் பிடித்திருந்தது.

பதினேழாவது தொழில்

திரு. முருகு இராசாங்கம் எம்.ஏ., என்பவர் ஒரு கட்டுரையில் நம் கவிஞரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

'மக்கள் கவி பட்டுக்கோட்டை யின் வாழ்க்கை மக்களோடுதான்.. மாடு மேய்த்து மாம்பழம், இட்லி, முறுக்கு, தேங்காய், கீற்று ஆகியவற்றை வியாபாரம் செய்து, மீன் பிடித்து, உப்பெடுத்து, பாடி, ஆடி, நடித்து இப்படிப் பதினாறு தொழில்கள் செய்து, கடைசியாக மேற்கொண்ட கவிதைத் தொழில் அவரது பதினேழாவது தொழிலாகும்'.

இவ்வாறெல்லாம் பாடுபட்ட தனாலே தான் ஏழைப் பாட்டாளி வர்க்கத்தின் மீதான தாக்கம் கல்யாணசுந்தரத்தின் பாடல்களி லெல்லாம் உணர்வுப்பூர்வமாகப் பிரதிபலிப்பதாக இருந்தது.

தனியுடைமையைச் சாடுதல்

இலட்சம் இலட்சமாக, கோடி கோடியாகச் செலவிட்டுப் பட



காலம் முறைக்ளை மாற்றுமே தவிர மனப்போக் கையும் உணர்ச்சியையும் மாற்றி விடாது!

–அறிஞர் அண்ணா

மெடுக்கும் படமுதலாளிகள் வர்க்கம், இவ்வாறாகப் பட்டுக் கோட்டையார் துணிவோடு எழுதிய தொழிலாளி வர்க்கப் பாடல் களையும் ஏற்றுக் கொண்டது. இப்படிச் சொல்லுவதைவிட அப்படிப்பட்ட வட்டத்தில் இப்படிப் பட்ட பாடல்களை எழுதிப் புகழ் பெறப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தால் மட்டும்தான் முடிந்தது! வேறு யாரும் அதுவரை அப்படி எழுத முன்வந்ததாகத் தெரிய வில்லை - யாருக்கும் துணிவில்லை!

பாபநாசம் சிவன், பக்திப் பாடல்களை நெருடல் இல்லாமல் எழுதித் திரையுலகில் வெற்றி கண்டார்.

உடுமலை நாராயணகவி சீர் திருத்தப் பாடல்களைத் திரையுல கில் புகுத்திச் சிறப்படைந்தார்.

கவிஞர் கண்ணதாசன் தத்துவப் பாடல்களையும், காதல் பாடல் களையும் பண்பட எழுதிப் பாராட்டுப் பெற்றார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமோ கிராமிய மணங்கமழும் எளிய சொற்களால் தனிவுடைமைக் கொள்கையைச் சாடி, அது காதல் பாட்டானாலும் சரி, பொது வுடைமை மணத்தோடு எழுதிப் படவுலகில் மங்காப் பெருமை பெற்றார்.

இதனாலும், இளமைக் காலத்தில் விவசாயச் சங்கக் கொள்கைகளில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த தாலும், கொள்கைக்காக உயிர்நீத்த பக்கத்து ஊர் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் இரணியன், சிவராமன் ஆகியோரோடு பெரும் நட்புக் கொண்டிருந்ததாலும் இவரையும் - கம்யூனிசவாதி, மார்க்சீயக் கொள்கைகளில் மனம் லயித்தவர் என்றெல்லாம் சொல்லுவதுண்டு.

சுயமரியாதைக் கொள்கை

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரான அவர், உழவர் பெருமக்களிடம், தொழிலாளர் களிடம், பாட்டாளி வர்க்கத்திடம், சமுதாயத்தின் கீழ்த்தட்டில் உள்ள வறிய வர்க்கத்தாரிடம் பெரிதும் தோழமை கொண்டிருந்தார் என்பது உண்மைதான். அதே நேரத்தில் அவர் மனம் சீர்திருத்தக் கொள்கைகளில் பெரும் பிடிப்புக் கொண்டிருந்ததை, அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவார்கள்.

இவரும், பாவலர் வரதராசனும் அந்தநாளில் சுயமரியாதைக் கொள்கையை விளக்கி, சீர்திருத்த இயக்க மேடைகளிலெல்லாம் தானே பாடலியற்றிப் பாடியது உண்டு. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றோர் பேசிய மேடைகளில் கூட கல்யாணசுந்தரம் எழுச்சிமயமாகப் பாடிப் பெருமை பெற்றிருக்கிறார். பெரியாரைப் பற்றித் தனிப்பாடல்களும் பாடி யிருக்கிறார்.

இவர்கள் இருவர் மட்டுமல்ல; பேராவூரணி குழந்தையும் அப்படிப் பாடியிருக்கிறார் என்பார்கள், விவரம் அறிந்தவர்கள். அவ்வாறு கல்யாணம் எழுதிய பாடல்களிலே- 'நல்லதைச் சொல்பவன் நாத்திகனா?' என்ற பாடல் அப்போதே மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அக்காலத்தில் தஞ்சை மாவட்டத் திராவிடர் கழகப் பெரும் புள்ளிகளாக விளங்கிய தஞ்சை ராஜகோபால், திரு நா. விசுவநாதன், அணைக்காடு டேவிட், பட்டுக் கோட்டை இளவரி போன்றோரிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

பாரதிதாசனார் சந்திப்பு

அணைக்காடு டேவிட் உடனும், பாலையா என்கிற தோழரோடும்தான் அவ்வூர் ரங்கசாமிப்பிள்ளை தூண்டுதலோடு- புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பார்க்கப் புதுவைக்குச் சென்றார் அவர். இதற்குப் பிறகுதான் அவரிடம் சிலகாலம் குருகுல வாசம்.

முதல் சந்திப்பின்போதே, புரட்சிக் கவிஞரைப் பற்றித் தான் எழுதி வைத்திருந்த பாடலொன்றை இசையோடு அவரிடம் பாடிக் காட்டிப் பாராட்டுப் பெற்றிருக்கிறார், பட்டுக்கோட்டையார்.

நல்லதோர் நடிகர்

சக்தி நாடக சபாவில் இருந்த போது எம்.என். நம்பியார், சிவாஜி கணேசன் போன்றோர் அந்தக் கம்பெனியில் நடித்த வேடங் களிலெலாம்கூட நடித்த அனுபவம் கல்யாணசுந்தரத்திற்கு உண்டு. என் தங்கை, கவியின் கனவு, டி.எஸ்.பி., போன்ற நாடகங்களில் அவர் பங்கேற்று நடித்திருக்கிறார். கவியின் கனவு நாடகத்தில் ராஜ குருவாக நம்பியார் நடித்துப் புகழ்பெற்ற கதாபாத்திரத்தில் அவரும் நடித்ததுண்டு.

அப்பேரதெல்லாம் நகைச்சுவை நடிகர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுக்கு மக்களிடம் இருந்த மதிப்பும் மரியாதையும் இவரைப் பெரிதும் கவர்ந்தது. ஆகவே, நகைச்சுவை நடிகராக வேண்டும்

என்று ஆசைப்பட்டு சில நாடகங் களில் அப்படியும் நடித்தார்.

அந்தக் காலத்திலெல்லாம் இவர் பெயர் ஏ.கே. சுந்தரம் என்றிருந்தது. பிறகு எதனாலோ, இந்தி கற்பதில் இவர் ஆர்வம் கொண்டார். ஓய்ந்த நேரத்தில் அதைப் படிக்கவும் தொடங்கினார் கல்யாணசுந்தரம். நாடகக் குழு வினரெல்லாம் இதனால் அவரை 'படாஜி' என்று கிண்டல் பண்ணத் தொடங்கவே, பாதியிலேயே இந்தி படிப்பதைக் கைவிட்டார்.

சக்தி நாடக சபையினர், இவர் வந்து சேருமுன் கைவசம் இருந்த நாடகப் பாடல்கள் சிலவற்றை, இவருடைய பாட்டுத்திறன் கண்டு அங்கங்கே மாற்றி எழுதித் தரச் சொன்னார்கள். அதைச் சரியாகச் செய்து தந்தார் இவர்.

நண்டும் தொண்டும்

இவ்வாறாகக் கவிதை எழுதும் திறனை வளர்த்துக் கொண்ட பட்டுக்கோட்டையார், புதுவைக்கு வந்தபின், அவ்வப்போது புரட்சிக் கவிஞரின் பாடல்களை அவரிடமே போய் இசையோடு பாடிக் காட்டுவார். தானெழுதியவற்றையும் பாடிக் காட்டுவார். அவரெழுதும் பாடல்களில் உரிய திருத்தங்களைச் சொல்லுவார் பாவேந்தர்.

ஒருசமயம் 'ஜனசக்தி' ஏட்டில் 'நண்டு செய்த தொண்டு' என்றோர் பாடல் வெளியாகியிருந்தது. 'அகல்யா' என்பவர் எழுதியிருந்தார். அதைப் பணிவோடு பாவேந்தரிடம் காட்டிப் படித்துப் பார்க்கச் சொன்னார் பட்டுக்கோட்டையார். பாவேந்தரும் பொறுமையோடு அதை வரிக்குவரி விரல் வைத்து நிதானமாகப் படித்தார்.

ஜனசக்திப் பாடலைப் படித்து முடித்த புரட்சிக் கவிஞர், "அடடா, என்ன அருமையான கருத்தைச் சொல்லியிருக்கான் பார்த்தியா? பாட்டுன்னா இப்படித்தான்பா இருக்கணும்!" என்று முகமலர்ச்சி யோடு சொன்னார்.

கூச்ச சுபாவம் கொண்டவரான நம் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், ஒடிசலான தன் உடம்பை மேலும் வளைத்து நெளிந்து "ஐயா மன்னிக்கணும்; இது நான் எழுதின பாட்டுதானுங்கையா!" என்றாரே பார்க்கலாம். வியப்போடு அவரைப் பார்த்த புரட்சிக் கவிஞர் "அகல்யானில்லேப்பா மேலே போட்டிருக்கு?" என்று கேட்க- "நான்... அ. கல்யாணசுந்தரம் தானுங்களே!" என்றாராம்.

பாவேந்தரின் பாராட்டுத் தொடர்ந்தது. இதுதான், பட்டுக் கோட்டையார் எழுதி, முதலில் அச்சில் வெளியான பாடல் என்பார்கள். பிறகு இதே பாடல் 'புரட்சி நண்டு' என்ற தலைப்பிலும் கூட சில ஏடுகளில் வெளியிடப் பட்டது உண்டு.

"இது ஒன்றுபோதுமே அவரைப் பொதுவுடைமைவாதி என்று முடிவுகட்ட!" எனச் சிலர் எண்ணலாம்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் சீர்திருத்தவாதி, சுயமரியாதை மீது மிகுந்த பற்றுடையவர் என்பதற்கும் பல உதாரணங்களைக் காட்டமுடியும்.

குணாதிசயங்கள்

சென்னைக்கு வந்து சேர்ந்து வாழத் தொடங்கிவிட்டபோதும் கூட, அவர் ஒரு கிராமவாசி போலத்தான் காட்சி தந்தார், நடத்து கொண்டார்.

படக் கம்பெனி கார் வருமென்று பொறுத்திருக்க மாட்டார். பஸ் ஸ்டாப்பில் போய் நிற்பார்- அல்லது நடக்கத் தொடங்கி விடுவார்.

சாப்பிடும்போது, திடுமெனக்

எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்.

–டாக்டர் எம்.ஜி.ஆர்.

கறி காய்களையெல்லாம் சாதத் தோடு சேர்த்தே பிசைந்து சாப் பிடுவது அவருக்குப் பிடிக்கும்.

படுக்கும்போது, சோபாவோ, சொகுசு மெத்தையோ அவருக்குப் பிடிக்காது. தரையில் வெறும் பாயைப் போட்டுக் கையைத் தலைக்கு மடித்து வைத்துப் படுக்கவே பிடிக்கும்.

சில கவிஞர்கள் போலப் பாடல் எழுத ஆடம்பரமான ஓட்டல்களிலே 'ரூம்' போட்டுத் தரச் சொல்லும் வழக்கம் அவரிடம் இல்லை. தியாகராய நகரில் உள்ள பனகல் பூங்காவில், புல் தரையில் உட்கார்ந்து அடிக்கடி அவர் பாடல் எழுதிக் கொண்டிருப்பதை ஏராள மானோர் கண்டிருக்கிறார்கள்.

நாட்டுப்புற வாடை எழுத்தில் வீசினாலும்கூட, புதுமைக் கருத் துக்கள் அதில் மிளிர்ந்திடலாயின.

பட்டுக்கோட்டையார் திரைப் படக் கவிஞர்களில் கொடிகட்டி ஆண்டாரே, தவிர, சொந்தமாக ஒரு வீடு வாங்கி வாழக்கூட கொடுத்து வைக்கவில்லை. கோடம்பாக்கத்தில் உள்ள 'டைரக்டர்ஸ் காலனி'யில் (அப்போது அண்ணாநகர்) சிறுகச் சிறுகசேர்த்து ஒரு கிரவுண்ட் நிலம்

மட்டும் வாங்கியிருந்தார். அதில் ஒரு வீட்டை உருவாக்கிப் பார்த்தாரில்லை. 'வீடுகட்ட வேண்டும்' கார் வாங்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் இருந்தும் எல்லாம் கனவாகி விட்டது.

தன்னுடைய தாயைத் தெய்வம் போல் கொண்டாடிய பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், தந்தை யாரின் வரலாறை ஒரு தனி நூலாக வெளியிடக் கருதியிருந்தார். தன் சொந்த ஊரிலேயே தந்தையாருக்குச் சிலையெடுக்கும் எண்ணமும் அவருக்கு இருந்தது.

என்னதான் திரையுலகில் பெரும்புகழ் பெற்றாலும்கூட, தன்னுடைய தந்தையாருக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தமது உறவினர்களை, நண்பர்களை யெல்லாம் ஒருவர் விடாமல் விசாரித்து எழுதுவது அவர் வழக்கம். 'சகதொழிலாளர்கள் முகம் கோணாமல் நடந்து கொள்ளுங்கள்' என்றும் தவறாமல் எழுதுவார். ஊர் விவகாரங்கள் அக்கடிதங்களில் விசாரிக்கப் பட்டிருக்கும்.

அத்தகைய தூய தொண்டுள்ளக் கவிஞரான பட்டுக்கோட்டையார் 30 வயதுகூட நிறைவடையாத நிலையில், திரையுலகில் எட்டாண்டுக் காலம்கூட முழுமையாகப் புகழ் நிறுவாத வகையில், திருமணம் முடிந்து ஓராண்டுக்கூட நிறைவு பெறாமல், மனைவி திருமதி கவுரவாம்பாள் கைக்குழந்தையோடு கதறிப் புலம்பும்படி மாண்டு போவார் என்று யார் கண்டார்கள்?

கடைசிக் காலம்

1959-ஆம் ஆண்டு வாக்கில், அவ்வப்போது அவருக்குத் தலை வலி ஏற்படலாயிற்று. சாதாரணத் தலைவலிதான் என்றாலும்கூட, அதற்கு ஏதாவது நிவாரணம் கண்டால்தான் நிம்மதி என்கிற முடிவுக்கு வந்தார் கல்யாணசுந்தரம். அவர்கள் குடும்ப டாக்டரான பத்மநாபன், "மூக்கில் ஒரு மைனர் ஆபரேஷன் செய்தால் சரியாகி விடும்" என்றார். அதற்கு எல்லோருடைய சம்மதமும் கிடைத்தது. திருவனந்தபுரத்துக் காரரான அந்த டாக்டர் கவனமாகத்தான் அறுவைச் சிகிச்சை செய்தார். என்ன காரணத்தினாலோ, 'மூக்கிலிருந்து இரத்தம் வருவது நிற்கவே இல்லை. வீட்டுக்கு வந்த பிறகும், பஞ்சில் இரத்தத்தைத் துடைத்துப் போட்டுக் கொண்டிருந்த அந்த மாபெரும் கவிஞர், அதற்கடுத்த நாளே தமிழகத்தை தேம்பியழச் செய்து விட்டுக் காலமானார் 8.10.1989 இல்

அவர் மாண்டுபோன பிறகு- 1.5.1981-இல் பட்டுக் கோட்டை யாருக்குப் 'பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டது. பத்தாயிரம் ரூபாய் பணமுடிப்பும் அளிக்கப்பட்டது.

இந்நாளில் உருப்படியாக, ஒவ்வொருவர் உள்ளத்தையும் தொடும் விதத்தில் அல்லது ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைபெறும் விதத்தில் பாட்டாளி மக்களின் துயரம் மேட்டுக்குடியினருக்கும் எட்டும் விதத்தில், தொழிலாளத் தோழர்களெல்லாம் துன்பம் மறந்து இன்புறும் விதத்தில் திரைப்படப் பாடல்களை எழுதி, கரை காணாக் கடல் அளவு புகழ்பெற்றவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அவர் புகழ் வாழ்க!

– பி.எல். ராஜேந்திரன்

பெரியார் மாவட்டம்-சில தகவல்கள்

மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 8,24,215 எக்டேர்.

மொத்தச் சாகுபடிப் பரப்பளவு 3,17,181 எக்டேர்

இதில் நீர்ப்பாசனப் பரப்பு 1,72,664 எக்டேர்

மானாவாரிப் பரப்பு 1,45,151 எக்டேர் 46 சதவிகிதம்

சராசரி ஆண்டு மழையளவு 717.0 மி.மீ.

இதில் தென்மேற்குப் பருவமழை காலத்தில் கிடைப்பது 30 சதவிகிதம்

வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் கிடைப்பது 47 சதவிகிதம்

குளிர் காலத்தில் கிடைக்கும் மழை 6 சதவிகிதம்

கோடைகாலத்தில் கிடைக்கும் மழை 22 சதவிகிதம்

வேளாண்மைத் துறையில் 7 வேளாண் கோட்டங்களும், வட்டார அளவில் 20 வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலக மையங்களும் உள்ளன.

BRINDHAVAN

பெருமை மிக்க வாழ்க்கைக்கு...
பிருந்தாவனில் சேமியுங்கள்!

25 வருட சேவை



கடந்த 25 ஆண்டுகளாகத் தொழில்களுக்கும், வாகனங்களுக்கும் நிதி உதவி அளித்து வந்த நாங்கள் இப்பொழுது டெபாசிட்டுகளையும் ஏற்றுக் கொள்வதோடு, அவற்றிற்கு சிறப்பான வட்டி விகிதத்தை வழங்கிடவும் முன் வந்துள்ளோம்.

சிறப்பம்சங்கள்

☆ 18 சதவிகித வட்டி மாதா மாதம் வழங்கப்படுகிறது!
☆ தேவையான பொழுது பகுதியாகவோ, அல்லது முழுமையாகவோ திரும்பப் பெற்றுக் கொள்ளும் வசதி!
☆ உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ற வகையில், சிறப்புமிக்க சேமிப்புத் திட்டங்கள்!

பிருந்தாவன் பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்,
ஈஸ்வரமூர்த்தி பில்டிங், 63, அகில் மேடு வீதி, ஈரோடு-1.
போன்: 78635, 216802.

"முறையான வழியில் முன்னேற்றம் காண்போம்"

India's Mileage Champion

87* KMPL
* Under Standard Test Conditions

With Free Maintenance for 1 full year

bajaj 4S CHAMPION

சுலபத் தவணை முறையிலும் பெறலாம்

மூர்த்தி & மூர்த்தி
27, காந்திஜி ரோடு,
ஈரோடு - 1

போன்: 79326, 73926, 216700

சப் டீலர்கள்
கற்பக சக்தி ஏஜென்சீஸ் கோபி
ஆனந்தா ஆட்டோ சென்டர் தாராபுரம்
ஸ்ரீபகவதி ஆட்டோ சென்டர் நாமக்கல்
தனலட்சுமி ஆட்டோ ஏஜென்சீஸ் திருச்செங்கோடு
அபிராமி ஆட்டோ ஏஜென்சீஸ் சங்ககிரி
P.A.S., ஆட்டோ ஏஜென்சீஸ் நம்பியூர்

எளிமை

கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

எளிமையினைப் பாடவந்தேன். இப்போ தெல்லாம்
இமயமலை முனிவர்களும் ஏற்ப தில்லை!
எளிமைக்கு முகவரியே காண வில்லை.
ஏனென்றால் துறவிகளே மூக்க றுத்தார்!
எளிமையினை அறிமுகம்நான் செய்வ தற்கே
இரண்டாவது நட்சத்திர ஓட்டல் தேவை!
எளிமையின்று வறுமைக்கோட் டிற்குக் கீழே
எழுந்திருக்க முடியாமல் மெலிந்தி ருக்கும்!

எளிமையின்று படுக்கையிலே கிடக்கும்! சற்றும்
என்னவென்று கேட்பதற்கோர் ஆளே இல்லை!
எளிமைக்கு வாய்ப்பேச்சு நின்று கண்கள்
இரண்டையுமே திறக்கமுடியவில்லை! மேலும்
எளிமைக்குக் காதடைத்து, நடப்ப தென்ன
என்றறிய முடியாமல் மூச்சு வாங்கும்!
எளிமைக்கு நேருகின்ற முடிவைப் பார்க்க
ஏமாற்றும் எத்தரெல்லாம் காத்தி ருப்பார்!

நாய்களுக்குப் போடுகின்ற பிஸ்கட் துண்டில்
நான்கிலொரு பங்கேனும் ஏழைப் பிள்ளை
வாய்களுக்குப் போடுங்கள்! எளிமை உங்கள்
வாசலுக்கே வணங்கிவந்து நிற்கும்! அன்புத்
தாய்களைப்போல் , ஆகிவிட்டால் செல்வம் கொண்டோர்
தரைமீது நடக்கின்ற வானம் ஆவார்!
பேய்களைப்போல் இருப்போரே! உம்மை எல்லாம்
பேசாமல் விடுகின்றேன்! திருந்திக் கொள்வீர்!

பசிப்பவர்க்கு விழா எடுத்தே சோற ளித்தோம்.
பக்கத்துத் தெருவுக்குப் போனா லும்நாம்
இசைப்பதற்கு மேளங்கள் வைத்தோம்! வானம்
இறங்கிவர எதிர்பார்த்தோம்! ஊரில் ஏழை
வசிப்பதற்கோர் இடமளித்தால் கூட இந்த
வையமெலாம் பறையடித்தோம்! வேட்டு வைத்தோம்!
அசைக்கின்ற தொட்டிலுக்கும் ஊரைக் கூட்டி
ஆட்டிடவே தாய்கூட ஆசைப்பட்டாள்!

விமானத்தின் இறக்கைகளில் எளிமைக் காக
விளம்பரங்கள் எழுதிவைத்துக் காத்தி ருந்தோம்!
அமாவாசை நேரத்தில் நிலவைப் பார்க்க
அடம்பிடிக்கும் குழந்தையென ஆகி விட்டோம்!
சமாதானம் செய்துகொள்ள நினைத்தோம்! ஆனால்
சண்டைக்கே தயார்செய்து செலவ ழித்தோம்!
நமக்குள்ள ஆடம்பரத்தால் வேற்று
நாடெல்லாம் செழிப்பதற்கே உழைத்து வந்தோம்!

எளிமையைத்தான் பாடுகின்றேன்! ஆனால் வாடும்
எளியவன்தான் எளிமையினைக் காட்டு கின்றான்!
எளிமையினை ஏற்பதுபோல் நடக்கின் றோம் நாம்.
எதையும்நாம் பேச்சில்தான் காட்டு கின்றோம்!
வலியவன்தன் அடையாளம் தெரிவ தற்கே
வையத்தில் எளியவனை விட்டு வைத்தான்!
எளியவனை வலியவனின் தேவைக் காக
இருட்டினிலே வாடவைத்தல் எளிமை இல்லை!

புத்தரன்று காட்டுக்குப் போன போது
புவியிலுள்ளோர் எளிமையினைப் பார்த்தி ருந்தார்!
சத்தமின்றி ஏசுபிரான் பிறந்த போது
தரணிமுற்றும் எளிமையினைப் பார்த்தி ருந்தார்!
சித்தமெல்லாம் தடுமாறிப் போன தாலே
சிறப்பளிக்கும் எளிமையினை நழுவ விட்டோம்!
எத்தனையோ பேர்களிடம் கடனை வாங்கி
இந்நாட்டைக் கடனாளி ஆக்கி விட்டோம்!

சித்திரையில் நாளைக்குப் பிறப்போ ருக்கும்
இன்றைக்கே கடன்சுமைகள் காத்தி ருக்கும்!
சத்தியமாய் எளிமையினை வளர்த்தி ருந்தால்
தாழ்ந்தநிலை நமக்கெல்லாம் வருவ துண்டா?
சித்திரத்தில் இருக்கும் பூ நம்மைப் பார்த்துச்
சிரித்தாலும் மணப்பதில்லை! எளிமை இன்னும்
புத்தகத்தில் இருந்துவந்தால் மெலிந்தி ருக்கும்
புல்கூட நம்மையினி மதித்தி டாது!

எளியஉடை என்றால் நாம் மதிக்கின் றோமா?
எளிமையுடன் இருப்பவனை அழைக்கின் றோமா?
எளியமுறை திருமணத்தை ஏற்கின் றோமா?
எளிமையுடன் இல்லத்தை அமைக்கின் றோமா?
எளியசெயல் செய்பவரை நினைக்கின் றோமா?
எளிமையிலே மகிழ்ச்சியுடன் இருக்கின் றோமா?
எளிமையிலே நம்பிக்கை வைத்து நாட்டில்
எளியமக்கள் முகம்பார்க்கும் நாளே பொன்னாள்!

எளிமையுடன் வள்ளுவரின் குறட்பா இந்த
வையமெலாம் ஆளுவதைக் கண்டோம்! பாரில்
எளிமைக்கோர் இலக்கணத்தை வடலூர் வள்ளல்
இராமலிங்கம் வகுத்துவைத்தார்! காந்தி அண்ணல்
எளிமைக்கோர் வாழ்க்கையினை வாழ்ந்து சென்றார்.
எளிமைக்குப் பேரறிஞர் அண்ணா வந்தார்!
எளிமைக்கும் எளிமைதந்தார்! நாட்டு மக்கள்
எல்லோர்க்கும் இனிமைதந்தார்! மறக்க லாமா?

ஏமாற்ற எண்ணாத வரைக்கும் இந்த
எளிமைநிலை வாழ்க்கைக்கு மேன்மை காட்டும்!
ஏமாற்ற எண்ணுகின்ற மனிதன் நல்ல
எளிமையினைத் தன்காலில் போட்டுத் தேய்ப்பான்!
பூமாலை ஜிகினாக்கள் சிரிப்பை நம்பிப்
பொன்வண்டு போய்விட்டால் பரிதா பந்தான்!
ஏமாற்ற எண்ணாத மனிதர் ஆவோம்
எளிமைக்குப் பெருமையினை நாட்டில் சேர்ப்போம்!

★ எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் பாடியது.

With best compliments from

SRI KANDHAN EXPORTS

Exporters of Floor Coverings and Made Ups

60, Srinivasapuram

Bhavani - 638 301

Phones: 30352, 30373, 21373,

Fact: 61854 Res: 30480

Telex: 8502 208 DARI IN

Fax: 91-4256 30233

With Best Compliments from

SRI SARADHA TEXTILE PROCESSORS (P) LTD.,

707/1, Urachikottai, BHAVANI - 638 302

A Leading Textiles Processor in...

- COTTON FABRICS
- MAN-MADE FABRICS
- VISCOSE
- HOSIERY
- EXPORT-GARMENTS
- TERRY - TOWELS
- SPECIALIST IN CREPE/CRINKLING

Phone: 20219, 20900 Fax: 04256, 20900

Telex: 08502 - 218 SARA IN

கண்தானம் செய்திடுவீர் !

புலவர் செ. வரதராசன்

அன்பின் பெரியீர் ! அன்னையரே !
அறிவார் செய்தி கேளுங்கள் !
கண்ணே யார்க்கும் வழிகாட்டி
கருவிழி கண்ணின் முதலாகும்

கண்ணில் கண்புரை வளர்ந்துவரின்,
காணும் பார்வை மறைந்துவரும்
கண்புரை அதனை நீக்கிவிட்டுக்
கண்ணுள் 'லென்சு'ம் பொருத்திடலாம்.

வண்ணம் வடிவம் கூடிடவே
வாய்க்கும் சட்டம் எழில்கூட்டும்
கண்ணா டியையும் அணிந்திடலாம்
கவினுறு காட்சி பெற்றிடலாம்.

கண்ணுள் கருவிழி நோயுற்றோ,
கடுமை யாக அடிபட்டோ,
கண்ணின் தன்மை இழந்துவிடின்,
காணும் ஆற்றல் மறைந்துவிடும்.

கண்ணை இழந்து யாவருமே
காலம் முடிந்தே இறந்தோரின்
கண்ணின் கருவிழி பொருத்துவதால்
காணும் கண்ணொளி பெற்றிடலாம் !

கண்ணை மூடி இறந்தபின்னே
கண்ணை உடலோ டெரித்திடுவீர் !
மண்ணில் போட்டுப் புதைத்திடுவீர் !
கண்ணை அழிப்பதால் என்னபயன் ?

என்றும் மரணம் இல்லாத
ஏற்ற கண்ணை மற்றவர்க்கு
நன்றே கொடுத்து உதவிடுங்கள் !
நல்லொளி பெறவே செய்திடுங்கள் !

கண்ணைக் கொடுத்து மற்றவரின்
கண்ணாய் இருந்து வாழுங்கள் !
கண்கொடை செய்து மகிழுங்கள் !
கடமை யாற்றிச் சிறந்திடுங்கள் !

அருகிவரும் காங்கேயம் காளை இனம்

காங்கேயம் என்றவுடன் யாவருக்கும் காங்கேயக் காளையின் உருவம் தான் மனக்கண் முன் வரும். அந்த அளவுக்கு வலுவான உருவமும், திடமான நீண்ட கொம்புகளும், பொதுவாக கரிய மற்றும் சாம்பல் நிறமும் கொண்டு, வீரத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் காங்கேயக் காளைகளின் இனம் தற்போது அருகிவருவது எல்லோருக்கும் ஒரு கசப்பான செய்தியாகும். என்று காங்கேயத்திலுள்ள கிராமவாசிகள் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது, அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களின் மூலம் கலப்பினக் கன்று உற்பத்தி கால்நடை மருத்துவ நிபுணர்களால் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக நாட்டுப்புறத்திலுள்ள சாதாரண பசு இனங்களில் உயர்ரக பால் உற்பத்தி தரும் கலப்பினச் சேர்க்கையின் மூலம் புதிய இனங்களை உற்பத்தி செய்து வருகிறார்கள். இவ்வகை அறிவியல் செயலாக்கம் பெரியார் மாவட்டத்தில் பெரிதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக காங்கேயம் பகுதியிலுள்ள காங்கேயம் இனப் பசுக்களிலும், வெளி நாட்டிலிருந்து தருவிக்கப் பட்ட உயர்ரக இனத்தின் கலப்பின உற்பத்தி மூலம் புதிய இனப் பசுகன்றுகள் தோற்றுவிக்கப் படுகின்றன. இவைகள் காங்கேய இனத்திற்கே உரிய சிறப்புக் கூறுகளை அவ்வளவாகப் பெற்றிருப்பதில்லை. இதனால் நாளடைவில் காங்கேய இனச் சிறப்புகள் அருகி, கலப்பினக் கன்றுகளே பெருகி வருகின்ற சூழ்நிலையைக் கண்டு, விவசாயிகள் அச்சம் தெரிவித்தார்கள். அவர்களின் ஐயத்தை கால்நடை நிபுணர்களிடம் சுட்டிக்காட்டியபோது, அவர்களும் விவசாயி களின் நியாயமான ஐயப்பாட்டை ஒத்துக் கொண்டார்கள். காங்கேயம் இனத்தின் தனிப் பண்புகளைப் பாதுகாக்க ரூ.10 இலட்சம் செலவில் தனிப் பண்ணைகள் அமைத்து, காக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்கள்.

AFP AMUDHAM
FOOD PRODUCTS (P) LTD

Factory:

266/1, to 7, Coimbatore Main Road,

OLAPALAYAM (P.O.)

PERUNDURAI - 638 052

Phone: Off: 20474, Factory: 20401, 20643

Resi:

51-A, Hospital Road

PERUNDURAI-638 052

GANGA
FOOD PRODUCTS (P) LTD

Factory:

101/3, Muthukkalimadai Perivu,

P. Vellapalayam P.O.

GOBICHETTIPALAYAM - 638 476

Phone: Off: 20474, Factory: 23484

Office:

Bhavani Main Road

PERUNDURAI-638 052

நமது நகரில் நவீன வசதிகளுடன் சிறந்த ஒலி ஒளி அமைப்புகளுடன் தரமான திரைப்படங்களைத் திரையிடும் திரையரங்கங்கள்.

மக்களின் மனதில் ஓர் மகத்தான நிறைவைக் கொடுக்கும் உங்கள் திரையரங்கங்கள்

போன் 7070

☆ ஸ்ரீதேவி தியேட்டர்ஸ் ☆

(வெஸ்ட்ரக்ஸ் 4 - டிராக் ஸ்டீரியோ சவுண்ட் சிஸ்டம்)

புஞ்சைப் புளியம்பட்டி, சத்தி வட்டம்

போன்: 7053

☆ ஸ்ரீராம் தியேட்டர் ☆

G.K. 19, டொஸானிக் சவுண்ட் சிஸ்டம்

புஞ்சைப் புளியம்பட்டி, சத்தி வட்டம்

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்

குழந்தைத் தொழிலாளர் மீட்பு: யுனிசெப் குழுவினர் பார்வையிட்டனர்

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பீடித் தொழிலிலிருந்து குழந்தைத் தொழிலாளர்களை விடுவித்து பள்ளிக்கு அனுப்பி கல்வியளிக்கும் பணியினை மாவட்ட நிர்வாகம் மிகவும் தீவிரமாக நடத்தி கண்காணித்து வருகிறது. இதன்படி, இம்மாவட்டத்தில் பீடித் தொழிலில் அடகு வைக்கப்பட்ட குழந்தைகளில் 1,453 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு இவர்களுக்காகவே அமைக்கப்பட்டுள்ள 48 சிறப்பு மையங்களில் கல்வி கற்கச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களது நிலையினை அவ்வப்போது மாவட்ட நிர்வாகம் கண்காணிக்க தகுந்த தொடர் நடவடிக்கையினை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்கு யுனிசெப் நிறுவனமும் தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது.

யுனிசெப் நிதியுதவியுடன் இந்தியாவில் அமல் செய்யப்படும் திட்டங்களில் ஒன்றான மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மறு வாழ்வுத் திட்டப்பணிகளைப் பார்வையிட இங்கிலாந்திலுள்ள கென்ட் மாநிலத்தின் இளவரசி கேதரின் மேரிலூசிவின்சர் தலைமையில் 21 பேர் அடங்கிய வெளிநாட்டுக் குழுவினர் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் காட்பாடிக்கு அருகில் உள்ள ஜாப்ராபேட்டைப் பகுதிக்கு வந்திருந்தனர்.

தமிழ்நாடு அரசின் சமூகநலத் துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு எச்.எம். பாண்டே, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் திரு நா. முருகானந்தம், இ.ஆ.ப., திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப., ஆகியோர் உடன் சென்றார்கள்.

ஜாப்ராப்பேட்டையிலுள்ள பீடித் தொழிலிலிருந்து இளம் சிறார் மீட்கப்பட்டு கல்வி கற்றுவரும் குழந்தைகள் மையத்தினை இக்குழுவினர் பார்வையிட்டு அங்கு பயின்றுவரும் குழந்தைகளின் கல்வித் தரத்தைச் சில கணக்குகள் கொடுத்து சோதித்து அறிந்தார்கள். இப்பணியினைக் கண்காணித்து நல்லமுறையில் வழிநடத்திச் செல்லும் மாவட்ட நிர்வாகத்தினைப் பாராட்டினார்கள்.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டத்தினை வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்திகரமான முறையில் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்கள். இந்தியாவில் குழந்தை நலம் தொடர்பான திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியினை வழங்க யுனிசெப் நிறுவனம் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்கள். இத்திட்டம் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திற்குத் தேவையான உதவிகளை 'யுனிசெப்' நிறுவனம் மாவட்ட ஆட்சியருடன் கலந்து ஆலோசித்து வழங்கும் என்றும் தெரிவித்தார்கள்.

பீடித் தொழிலிலிருந்து மீட்கப்பட்டு முறைசாரா கல்வி மையத்தில் கல்வி கற்றுவரும் தேவகுமார், பழனி, பாக்கிய லட்சுமி, சித்ரா மற்றும் இம்மையத்தில் கல்வி கற்றுவரும் சிறுவர், சிறுமிகளைச் சந்தித்து அவர்களது குடும்ப நிலையையும், தற்போது கல்வி பயிலுவதால் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் கேட்டறிந்தார்கள். குழந்தைத் தொழிலாளர்களை அடமானத்திலிருந்து மீட்டதோடு அவர்களின் பெற்றோர்களுக்கு நிரந்தர வருவாய் அளிக்க மாவட்ட நிர்வாகம் மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடனுதவி வழங்கியிருந்த கறவை மாடுகள்,

வண்டி மாடுகள் போன்றவற்றைப் பார்வையிட்டு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுமாறும், மீண்டும் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் இருக்க அறிவுரையும் கூறினார்கள்.

பின்னர் திருவலம் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு இக்குழுவினர் சென்று 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் குழந்தை மற்றும் தாய்மார்கள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுவதைப் பார்வையிட்டு சுகாதாரம் குறித்து தாய்மார்களுக்குத் தெரிவிப்பதைக் குறித்துக் கேட்டறிந்தார்கள். பின்னர், வாலாஜா மருத்துவமனையில் 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் செயல்படும் குழந்தைகள் பிரிவையும், கர்ப்பிணிப் பெண்களுக்கு வழிகாட்டும் பிரிவையும் சென்று பார்வையிட்டனர்.

> **மேலோகத்தில் ஒரு காலும், பூலோகத்தில் ஒரு காலும் வைத்துக்கொண்டு மோட்ச லோகத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் பெரியோர்களிடத்தில் எனக்கு வேலையில்லை. அவர்களிடத்தில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. பரிசுத்த உள்ளமுடைய வாலிபர்களைத்தான் நம்பியிருக்கிறேன். அவர்கள்தான் என் மனதைக் கொள்ளை கொண்டவர்கள்.**
>
> \- தந்தை பெரியார்

இம்மாவட்டத்தில் குழந்தைத் தொழிலிலிருந்து விடுபட்டு முறைசாராக் கல்வி மையத்தில் கல்வி பயிலும், சிறுவர், சிறுமிகளின் நல்வாழ்விற்கு அரசு எடுக்கும் முயற்சிகளை வெளிநாட்டுக் குழுவினர் பாராட்டிச் சென்றது. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு மட்டுமல்லாது நமது மாநிலத்திற்கும் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் பெருமை சேர்ப்பதாகும்.

With best compliments from

TVS XL
TVS XL ELECTRONIC
TVS CHAMP ELECTRONIC
TVS SUPER CHAMP
TVS SCOOTY

SUZUKI MAX 100
SUZUKI MAX 100 R
SUZUKI SAMURAI
SUZUKI SHOGUN

SALES * SERVICE * SPARES

LOTUS AGENCY

16, SATHY ROAD, ERODE-3 Phone: 223331, 223332

104A, PARK ROAD, ERODE-3 Phone: 213713, 217733

Dealer: TVS SUZUKI MOPEDS & MOTOR CYCLES

'தமிழரசு' வெளியிடும்
பெரியார் மாவட்டச் சிறப்பிதழ் சிறக்க
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

செங்குந்தர் கல்விக் கழகம்

செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி

செங்குந்தர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி

இரத்னா கல்வி நிலையம்

ஈரோடு

கூட்டுறவே நாட்டுயர்வு

தொடக்கம்: 24.8.1958

தொலைபேசி எண்: 3042

அஞ்சல் பெட்டி எண்: 71

தந்தி "ECOBANK"

எலவமலை தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கி லிட்., நெ.கெ.1161.,

காளிங்கராயன்பாளையம் புதூர், பவானி - 638 301

ஈரோடு தாலுக்கா, பெரியார் மாவட்டம்

★ மாநிலத்தில் சிறந்த தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கிக்கான முதல் பரிசைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பெற்றுள்ளது இவ்வங்கி.

30.9.95 ல்

பங்குத் தொகை ரூ.47.69 இலட்சம்

பெற்றுள்ள வைப்புகள் ரூ.1380.46 இலட்சம்

வழங்கியுள்ள கடன்கள் ரூ.1342.12 இலட்சம்

பயிர்க் கடன்கள், மத்திய, நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகிறது.

குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு ரூ.2 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

நகைக் கடன் நபருக்கு ரூ.40,000 வரை, நுகர்பொருள் கடன் ரூ.10,000 வரை வழங்கப்படுகிறது.

வாகனக் கடன்கள் (லாரி, பஸ், வேன்) ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

வைப்புகளுக்குக் கூடுதலான வட்டி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதும் டிராப்ட்கள் வழங்கப்படுகிறது.

பாதுகாப்புப் பெட்டக வசதி நிறைந்த சேவை.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம்.

குறைந்த விலையில் உரம், பூச்சி மருந்துகள் விற்பனை.

கே. கருப்பண்ணன் (மணி)
செயலாளர்

மு. குமாரசாமி
தனி அலுவலர்



... செய்திகள் ... செய்திகள் ... செய்திகள் ...

❖ என்றுமில்லாத இலாபம்! ❖

திருச்சியில் உள்ள பாரத மிகுமின் நிறுவனத்தின் (BHEL) இலாபம் 1995-96-ஆம் நிதியாண்டில், முன் எப்போதும் இல்லாத வகையில் ரூ.120 கோடியாக உயர்ந்திருக்கிறது.

❖ பிள்ளையால் தண்டனை! ❖

தமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்களுக்குத் தண்டனை விதிப்பது என்று இமாசலப்பிரதேச அரசு முடிவு செய்திருக்கிறது!

பைசாக்கள் செல்லாதா?

5 பைசா நாணயம் தயாரிப்பைக் கைவிடப் போவதாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்தாலும் அறிவித்தது, மக்களும் குறிப்பாக வியாபாரிகளும் அதை இப்போதே வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், 5 பைசா, 10 பைசா, 20 பைசா ஆகிய சில்லறை நாணயங்கள் செல்லுபடியாகும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது.

❖ துறைமுகத்தின் சாதனை! ❖

1995-96-ஆம் நிதியாண்டில், சென்னைத் துறைமுகம் சரக்குகளைக் கையாண்டதில் ரூ.325.22 கோடி வருமானம் பெற்றிருக்கிறது. சுமார் 3.07 கோடி டன் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்து சாதனை புரிந்திருக்கிறது.

❖ மாணவனுக்கு விருது! ❖

குடியரசு நாளையொட்டி டில்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை (என்.சி.சி.)யினருக்கான போட்டிகளில் பள்ளிகளுக்கான பிரிவில் சென்னை மாணவன் சித்தார்த் இராமலிங்கம் (13) தங்கப்பதக்கம் வென்றான். 9வது படிக்கும் டி.ஏ.வி. பள்ளி மாணவனான இவனுக்கு பிரதமர் பேடன் (Baton) விருதும், சிறந்த சீருடை அணிந்ததற்கான செரிபிளாசம் விருதும் கூட கிடைத்திருக்கிறது.

❖ தலைகீழ் நடை! ❖

பழனி மலைப்படிகளில், கைகளை ஊன்றித் தலை கீழாக நடந்து வந்து, திரு என். கருணாகரன் (22) என்ற இளைஞர் சாதனை புரிந்திருக்கிறார். மதுரையில் உள்ள பசும்பொன் நகரைச் சேர்ந்தவர் இவர்.

❖ புகை உயிருக்குப் பகை! ❖

இந்தியாவில் உள்ள ஆண்களில் 60 சதவிகிதம் பேரும், பெண்களில் 3 சதவிகிதம் பேரும் புகைப்பிடிக்கும்

சிரிக்கத் தெரியாதவர்கள் இணை விலங்குகளுக்கு யாவார்கள்.

—கலைவாணர் என்.எஸ்.கே.

வழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். இந்திய இதய நோய்ச் சிகிச்சை மையம் என்ற அமைப்பு இதைத் தெரிவித்திருக்கிறது.

❖ விமான நிலையத் தடை ! ❖

சென்னையில் உள்ள அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் இனி திங்கள், புதன், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையாளர்கள் இரவு நேரத்தில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

❖ வெளிநாடு போகாதீர் ! ❖

வேலை தேடி ஆசியா மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் செல்வோர், இனி தயங்கக் கூடும். ஏனென்றால், அங்கே அளிக்கப்படும் சம்பளத் தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது இப்போது.

❖ அஞ்சல் பிரிப்பில் சாதனை ! ❖

சென்னை விமான அஞ்சல் பிரிப்பகப் பிரிவு ஊழியர்கள் ஜெ. உஷா, எஸ்.என். லட்சுமி, எம்.எஸ். கிரிஜா ஆகியோருக்கு 1995 ஆம் ஆண்டுக்கான சிறந்த 'அஞ்சல் பிரிப்பக உதவியாளர் விருது' வழங்கப்பட்டிருக்கிறது.

❖ மிகப் பெரிய எலி ! ❖

சீனாவில், சுமார் 6 கிலோ எடையுள்ள மிகப் பெரிய எலி ஒன்றைப் பிடித்திருக்கிறார்கள்; 50 செ.மீ. நீளமுள்ள அந்த எலியின் வால் மட்டும் 30 செ.மீ. இருக்கிறதாம்.

❖ தங்கத் தாமரை ! ❖

ஆண்டுதோறும் சிறந்த திரைப்படக் கலைஞர்களாகத் தேர்வு பெறுவோருக்கு வழங்கப்படும் தங்கத் தாமரை விருதில் உள்ள தங்கத்தின் எடை 48 கிராம். 6 காரட் தங்கத்தில் தயாரிக்கப்பட்ட இதில் தங்கத்தின் பங்கு 24.5 பங்கும், தாமிரத்தின் பங்கு 75.5 பங்கும் இருக்கும். அதற்கு முலாம் பூச 0.02 தங்கம் பயன்படுகிறது. ஆக, விருதின் மொத்த எடை 195 கிராம்.

❖ கம்ப்யூட்டர் மோசடிகள் ❖

1991 ஆம் ஆண்டில், கம்ப்யூட்டர் மற்றும் நெட்வொர்க்குகளைத் தவறாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட



இழப்பு 25,000 பிரிட்டிஷ் பவுண்டுகள் (ஒரு பவுண்டு சுமார் 52 ரூபாய்) என்று ஒரு புள்ளி விவரக்கணக்கு தெரிவிக்கிறது. இண்டர்நெட் போன்ற தொழில்நுட்ப விந்தைகள் ஒருபுறம் நிகழ்ந்தாலும், அதன்மூலம் சில மோசடிகளும் நடக்கின்றன என்றால் வேதனைக்குரிய செய்திதானே ?

❖ கல்வி நிலைய நூற்றாண்டு ❖

எல்.எஸ்.இ. எனப்படும் இலண்டன் பொருளாதார அரசியல் விஞ்ஞான மையம் உலகப் புகழ்பெற்ற கல்வி ஆராய்ச்சி நிலையமாகும். இப்போது அந்நிலையம் தமது நூற்றாண்டு விழாவை (1895-1995) கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

❖ புதுமைக்கு விருது ❖

மதுரை வானொலி நிலையம் ஒலிபரப்பிய கிராம விளையாட்டுகளில் தமிழ்ப் பெண்டிர் என்கிற நிகழ்ச்சிக்குப் புதுமை நிகழ்ச்சிகளுக்கான 'ஆகாஷ்வாணி விருது' புதுடெல்லியில் வழங்கப்பட்டது.

❖ சாஃப்ட்வேர் ஏற்றுமதி ❖

நடப்பு நிதியாண்டில் மின்னணு சாதனங்கள் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர், அவை தொடர்பான மற்ற சேவைகள் மூலம் அந்நியச் செலாவணியாக இந்தியா ரூ.5,000 கோடி பெறக்கூடும் என்று மின்னணு கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் கவுன்சில் கூறுகிறது.

> ✯ *ஏதோ ஒரு வழியில் நாம் மக்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கி விட்டோமானால், பிறகு அவர்கள் எல்லாவற்றையும் ஒரே கண்ணாடி கொண்டு பார்த்து, உண்மையை உணரக் கூடியவர்கள் ஆகி விடுகிறார்கள்.*
>
> **—தந்தை பெரியார்**

❖ இலங்கையின் சாதனை ❖

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இலங்கை அணி புதிய உலக சாதனை நிகழ்த்தியது; கென்யா அணிக்கெதிராகக் கண்டியில் நடந்த ஆட்டத்தில் இலங்கை 397 ரன் குவித்து முந்தைய சாதனையை முறியடித்தது. 1987 இல் இலங்கை அணிக்கெதிரான ஆட்டத்தில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 359 ரன் எடுத்ததுதான் இதுவரை சாதனை எனப்பட்டு வந்தது.

❖ அமெரிக்கப் புதிய மையம் ❖

சென்னை விமான நிலையத்தினருகே, அமெரிக்க நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்ப மையம் அமையவிருக்கிறது. 'டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ்' என்கிற அமெரிக்க நிறுவனம் மூலம் இம் மையம் அமைக்கப்படும்.

❖ இராணுவத்தில் பெண்கள் ❖

தொடர்ந்து இராணுவத்திலேயே பணியாற்ற விரும்பிச் சேர்ந்திருக்கிறார்கள் தமிழ்நாட்டு மகளிர் இருவர். ஒருவர், மினி ஜான்- ஆவடியைச் சேர்ந்தவர்; இன்னொருவர், அருள்மொழி- புதுவையைச் சேர்ந்தவர். இருவரும் சென்னை பரங்கிமலையில் உள்ள இராணுவப் பயிற்சி அகாடமியில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

❖ அதிக ரன் எடுத்தவர்கள் ❖

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு எதிராக ராவல்பிண்டியில் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவின் காரிகிரிஸ்டன் அடித்த 188 ரன்கள்தான் இந்த உலகக் கோப்பை கிரிக்கெட்டில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் ஒருவரே அடித்த அதிகபட்ச ரன்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் சச்சின் டெண்டுல்கர், ஆஸ்திரேலியாவின் மார்க் வாக் ஆகிய இருவரும் இரட்டைச் சதம் அடித்த சாதனையாளர்களாவர்.

❖ நேதாஜி மனைவி மறைவு ❖

எப்படி இறந்தார் என்று இதுவரை சரியாகக் கண்டுபிடிக்கப்படாத இந்திய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜியின் மனைவி ஃப்ராவ் எமிலி ஷெங்கால் போஸ், ஜெர்மனியில் 12.3.96இல் மறைந்தார். விடுதலைப் போரில் இவரும் கணவருக்கு ஆதரவாக இருந்து போராடியிருக்கிறார்.

❖ இந்திய இளம் விஞ்ஞானி ❖

அமெரிக்காவில் உள்ள மிக்சிகன் நகரில் படிக்கும் இந்திய மாணவர் சந்தன் கோபால் ரெட்டி, சென்ற ஆண்டின் இளம் விஞ்ஞானியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாஷிங்டனில் இவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

—தொகுப்பு பீஎல்.ஆர்.

அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை:

வண்ண ஓவியம்:
ஏ. சுரேஷ்
அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரி மாமல்லபுரம்.

இரண்டாம் அட்டை:

விந்தை நிகழ்த்தும் கம்ப்யூட்டர்

நான்காம் அட்டை:



1 - காஞ்சி கைலாயநாதர் திருக்கோயில் சிற்பம்
2, 3 - உதகைப் பூங்கா
4 - குற்றாலப் பேரருவி
5 - மாமல்லபுரக் கலைக்கோயில்
6 - சுசீந்திரம் திருக்கோயில்

படங்கள் உதவி: சுற்றுலாத் துறை

With Best Compliments From

HERO HONDA

SRI SENTHIL AUTOS

Authorised Dealer for Hero Honda

63, Perundurai Road,

ERODE - 638 011

Phone: 22 00 80 & 22 00 90

With Best Compliments From

ROYAL AGENCY

Dealers in
TVS MOPEDS & SUZUKI MOTOR CYCLES

E-855, BROUGH ROAD

ERODE-1

Phone: 220266, 222466

இது ஒரு கம்ப்யூட்டர் காலம்!

● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:



உலகமே எதிர்பார்க்கும் ஒரு வரலாற்று நிகழ்ச்சி இன்னும் சில நொடிகளில் நடந்தேறப் போகிறது. அமெரிக்க நாட்டின் தலைவர் நிக்சன் முதல், பூமி உருண்டைப் புள்ளியாகத் தெரியும் கிராமங்களில் வாழும் சாதாரணப் பாமர மக்கள் வரை அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திட்டமிட்டபடி பூச்சிக்கூடு அப்போலோ 11 ராக்கெட்டிலிருந்து பிரிந்து, வரலாற்று நிகழ்ச்சியை இன்னும் சில நொடிகளில் நிகழ்த்த சந்திரனை நோக்கி மெல்ல இறங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தோ! அந்தப் பூச்சிக்கூடு இறங்குமிடம் நினைத்தே பார்க்க முடியாத மிகப் பெரிய பாதாளத்தின் விளிம்போ என்று பார்ப்பவரைக் கதறச் செய்யும் அந்த நிகழ்ச்சி. ஐயோ! தொலைந்தார்களே, கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்து நிகழ்த்தும் இந்தச் சாதனை வேதனையில் முடியப்போகிறதோ, என்று டெக்ஸாஸ் மற்றும் ஹவுஸ்டன் விஞ்ஞானிகள் ஐயமுறுகிறார்கள். அப்போது, ஆபத்தாண்டவனாய், அனாதை இரட்சகனாய் சூப்பர் கம்பூட்டர் எனப்படும் ஓர் ஆற்றல் மிக்க கணிப்பொறியின் நுண்ணிய செயலாக்கத்தை விஞ்ஞானிகள் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருடையநம்பிக்கையையும்,வீணடிக்காமல், அந்த வரலாற்றுச் சாதனையை அதாவது நிலவில் முதல் முதல் மனிதன் தனது காலடியை வைத்த அந்தச் சம்பவத்தை எந்தக் குளறுபடியும் இல்லாமல் கோளாறுமில்லாமல் சரியாகச் செய்து முடித்து, அதல பாதாளத்தில் இறங்க எத்தனித்த அந்தப் பூச்சிக்கூட்டினை நிலவில் தரையிரங்கச் செய்த சாதன்ன அந்தக் கணிப்பொறிக்கு உண்டு. அந்தக் கணிப்பொறியின் அளப்பரிய ஆற்றலால்தான் இந்த மிகப்பெரிய சாதனை செய்யப்பட்டது என்றால், அது இம்மியளவும் ஐயமில்லை.

இன்றைக்கு, கணிப்பொறி இல்லையென்றால் அமெரிக்காவிலுள்ள அனைத்து வங்கிகளும் தங்களின் வர்த்தகத்தை நடத்த முடியாமல் முடங்கிவிடும் என்கிற சூழ்நிலை. அமெரிக்காவில் மட்டுமல்ல, ஏன் இந்தியாவில் கூட அப்படியொரு சூழ்நிலை வருகிற நேரம் தொலைவிலில்லை என்று கூறும் அளவுக்கு கணிப்பொறிகளின் ஆட்சி எல்லாத் துறைகளிலும் நீக்கமற நிலைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையல்ல.

வளர்ந்து வரும் அறிவியலும், தொழில்நுட்பமும் மனிதனுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதோடு மானுடத்துக்குப் பல வசதிகளையும் செய்து தருகிறது கணிப்பொறி. வானவியல் ஆகட்டும், அணுசக்தித் துறையாகட்டும், அல்லது அன்றாடக் குடும்பப் பணிகளாகட்டும், இப்படி எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அதில் கணிப்பொறியின் பங்கு தவிர்க்க முடியாததாகும். கணிப்பொறி இல்லையேல் உலகமே தனித்து இயங்காதோ என்கிற ஒரு விஞ்ஞான வீச்சு மாட்சிமை பொருந்தி, ஆட்சி செலுத்துகிற சூழலை நாம் காண்கிறோம். இப்படி உலகத்தையே தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வருகிற வல்லாண்மைமிக்க கணிப்பொறி தோன்றி வளர்ந்து செங்கோலோச்சுகின்ற பரிணாமத்தை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

கம்ப்யூட்டர் என்ற இலத்தீன் சொல்லுக்குக் கணக்கிடுதல் என்று பொருள். முதன் முதலில் கணக்குப் போடுவதற்கு மக்கள் தங்களுடைய கை விரல்களைப் பயன்படுத்தினார்கள். டிஜிட் என்ற இலத்தீன் சொல்லுக்கு எண்கள் என்று ஒரு பொருளும், விரல் என்று ஒரு பொருளும் உண்டு.

மனிதர்கள் மீது வைக்கின்ற ஆழமான அன்பே கடவுளின் மீது காட்டுகின்ற உண்மையான அன்பாகும்.

- பேரறிஞர் அண்ணா

முதன் முதலில் கணக்கு போடுவதற்கும், கணக்கை எளிதாக்குவதற்கும், பல்வேறு விதமான கருவிகளைத் தத்தம் அறிவு நிலைக்கேற்ப மக்கள் வடிவமைத்துச் செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். இன்றைய கணிப்பொறியின் அடிப்படையாக விளங்கும் எண்களை (Numerals) கண்டுபிடித்தது அரேபியர்கள் என்று சொன்னாலும் உண்மையில் அவை இந்திய நாட்டிற்குக் குதிரை வணிகம் செய்ய வந்த அரேபிய மக்கள் இந்தியாவில் வழக்கத்திலிருந்த எண்களைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றார்கள் என்று சொல்லப்படுகின்ற யூகங்களையும் நாம் ஏற்றுக்கொண்டோமேயானால் இன்றைய கணிப்பொறியின் முன்னோடிகள் நம் நாட்டவர்தான் என்று சொல்ல முடியும். இதுதவிர எண்களின் அடிப்படையாக விளங்கும் பூஜ்ஜியத்தைக் கண்டுபிடித்தீவர்கள் இந்தியர்கள் என்பதால் கணிப்பொறியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இந்தியர்களே என்றால் அதுவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமே. இப்படி உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் இது தொடர்பான கண்டுபிடிப்புகளைச் செய்து வந்திருக்கிறார்கள்.

மணிச்சட்டம் (ABACUS)

கி.மு. 450-இல் சீனாவில் எண்களைக் கூட்டுவதற்கு வசதியாக மணிச்சட்டம் என்கிற ஒரு கருவியைக் கண்டுபிடித்தார்கள் அந்த மணிச்சட்டம் 20க்கும் மேற்பட்ட எண்களை விரல் விட்டு எண்ண முடியாதபோது அவர்களுக்கு ஒரு தோன்றாத் துணையாக வந்து உதவியது. இதுவே கணிப்பொறியின் அடிப்படையென்றால் அது மிகையல்ல. அடுத்தபடியாக ஜப்பானியர்கள், சீனர்கள் கண்டுபிடித்த மணிச்சட்டத்தில் சில புதுமையை ஏற்படுத்தி, சாரபான் என்ற ஓர் கருவியை வடிவமைத்தார்கள். கிட்டத்தட்ட கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை மணிச்சட்டம் போன்ற கருவிகளே அன்றைய கணிப்பொறிகளாகப் பயன்பட்டு வந்தன. பின்னர் ஜான் நேப்பியர் (1614) என்பார் ஓர் புது முறையைக் கண்டுபிடித்தார். அதற்கு லாகரிதம் (Logarithm) என்று பெயர் வைத்தார். எண்களை நீண்ட சதுரங்களில் எழுதி, கூட்டல் பெருக்கல், வகுத்தல்களை எளிமையாக்கினார்.

பாஸ்கல் கணக்கு எந்திரம்

பிளைஸ் பாஸ்கல் (1642) என்பவர் பற்சக்கரங்களைப் பயன்படுத்தி புதிய கருவி ஒன்றை, கூட்டவும் கழிக்கவும் கண்டுபிடித்தார். இது முந்தைய கருவியிலிருந்து வேறுபட்டதோடு, விரைவுத் தன்மை பெற்று அனைவராலும் விரும்பப்பட்டது. ஆனால் பாஸ்கலின் கணக்கு எந்திரம் மிகப்பெரிய இடத்தை அடைத்துக்கொண்டதோடு, இயக்குவதற்குத் தனி அனுபவம் பெறவேண்டிய சூழ்நிலையும் இருந்தது. அதன் பின்னர் லிபின்ட்ஸ் (1671) என்ற ஜெர்மானியர் பாஸ்கலின் கணக்கு எந்திரத்தில் சில மாற்றங்களைச் செய்து, நேரான பெருக்கலுக்கு உதவி செய்தார். இதனால் நேரம் மிச்சமானதோடு, இயக்குவதற்கு எளிமையும் ஏற்பட்டது.

ஜக்கார்டு முறை

கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெசவுத் தொழில் ஐரோப்பிய நாடுகளில் சிறப்புப் பெற்று விளங்கியது. நெசவுத் தொழிலில் புத்தம் புது கலை நயத்தோடு கூடிய வேலைப்பாடுகளைச் செய்வதற்காக (Designs) தறிகளில் துளையிடப்பட்ட காகிதங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். பின்னர் காகிதத்திற்குப் பதில் துளையிடப்பட்ட அட்டைகள் பயன்படுத்தப்பட்டன. இந்த வகைத் தொழில் நுட்பத்தை ஜோசப்மரீ ஜக்கார்டு (1801) என்பார். கண்டுபிடித்து, செயல்படுத்திக்காட்டினார். அந்தத் தொழில் நுட்பமே மனிதனால் முதன் முதலில் எந்திரத்திற்குக் கொடுக்கப்பட்ட முதல் மொழியாகும். அதாவது எந்திரத்திற்குப் புரியும் வண்ணம் மனிதன் அதற்கு முதன் முறையாகக் கொடுத்த கட்டளையாகும். இதுவே இன்றைய கணிப்பொறியின் மொழி வளர்ச்சிக்கு இடப்பட்ட (Soft ware) முதல் வித்தாகும். இன்றும் நெசவுத் தொழிலில் ஜக்கார்டு முறை என்கிற ஒரு தொழில் நுட்பம் வழக்கிலுள்ளது.

அதன் பின்னர் சார்லஸ் பாபேஜ் 1792 என்பவர் நெசவுத் தொழிலில் பயன்பட்ட ஜக்கார்டு முறையைப் பின்பற்றி, துளையிடப்பட்ட அட்டைகள் மூலமாக மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் இடையே செய்தி பரிமாறிக் கொள்ள முடியும் என்பதைக் கண்டுபிடித்தார். இதைக்கொண்டு மிகக் கடினமான கணக்குகளைக் கூட இயந்திரங்களைப் பயன்படுத்தி எளிமைப்படுத்தலாம் என்று முதன்முதல் கண்டுபிடித்துச் சொன்னார். இவரே கணிப்பொறியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். பாபேஜ் கண்டுபிடித்த கருவிக்குப் பெயர் வேறுபாட்டு எந்திரம் (Difference Engine) என்று பெயர். இதில் மிகப் பெரிதான 50,000 பற்சக்கரங்கள், அச்சு உருளைகள், நெம்புகோல்கள் போன்றவை பிரம்மாண்டமாக இருந்தன. இது இயங்குவது இன்றுள்ள மிகப் பெரிய தொழிற்சாலையின் பகுதியைப் போல் மிகவும் சுறு



சுறுப்பு நிறைந்து இருக்கும். இருப்பினும் அந்த எந்திரத்தில் செய்திகளைச் சேகரிக்கும் பகுதி, கணக்கிடும் பகுதி என்று இரண்டு பிரிவுகள் இருந்தன. அவ்வெந்திரத்துக்குத் துளையிடப்பட்ட அட்டைகள் மூலமே செய்திகள் தரப்பட்டன. அதன் பிறகு பாபேஜின் எந்திரத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்படுத்தியும், லிபின்ட்ஸ் என்பாரின் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தியும் 1820-ஆம் ஆண்டு கால்குலேட்டர் என்ற கருவியை ஹர்மன் ஹாலரித் என்பார் கண்டுபிடித்தார்.

மார்க் 1

தானாக இயங்குகிற கணிப்பொறியை உலகிலேயே முதன் முதலில் கண்டுபிடித்த பெருமை டாக்டர் ஹோவார்டு அய்க்கண் 1925) என்பாரைச் சாரும். அவர் கண்டுபிடித்த கணிப்பொறிக்கு மார்க்-1 என்று பெயர். கூட்டல் கழித்தல் வகுத்தல் போன்றவைகளை விரைவாகவும், எளிமையாகவும் செய்கின்ற திறமை மார்க்-1 கணிப்பொறிக்கு உண்டு ஆனால், அதற்கு நினைவாற்றல் இல்லை. முன்னரே வழக்கத்திலிருந்த துளையிட்ட அட்டை முறையே அவ்வெந்திரத்திலும், பயன்படுத்தப்பட்டது. எனினும், முதல் கம்ப்யூட்டர் என்கிற பெருமை மார்க்-1-க்கு உண்டு என்றே சொல்லலாம்.

நினைவாற்றல் (Memory)

இயற்கையால் கண்டெடுக்கப்பட்ட நடமாடும் கம்ப்யூட்டரான மனிதனின் மூளைக்குச் சவால் விடும் இன்றைய அறிவியல் தொழிலநுட்பத்தின் விந்தையாக விளங்குகிற செயற்கை அறிவு (Artificial Intelligence) என்கிற புதிய தொழில்நுட்பத்திற்கு மூலாதாரமாக விளங்குகிற நினைவாற்றல் (Memory)என்னும் சிறப்புக்கூறினை எந்திரத்தில் இணைத்து, தனித்தன்மை வாய்ந்த கணிப்பொறி கண்டவர் டாக்டர் ஜான் பான் நாய்மன் (1945) என்பவராவார். இவரது கண்டுபிடிப்புக்குப் பின்னரே கணிப்பொறி வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று கூறலாம்.

ஈனியாக்

டாக்டர் நாய்மன் கண்டுபிடித்த கணிப்பொறியில் சில மாற்றங்களை ஏற்படுத்தி 1946-ஆம் ஆண்டு ஈனியாக் (Electronic Numerical Integraged and Calculator) என்ற கணிப்பொறியே முதன் முதலில் பொது வாழ்க்கைக்குப் பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஜான் மாக்லே என்பவரும், அவரது மாணவரான பிரெஸ்பர் எக்கார்டு என்பவரும் இணைந்து இந்தக் கணிப்பொறியை உருவாக்கினார்கள். இரண்டாம் உலகப் போர் நேரமாதலின் இவ்வகைக் கணிப்பொறிகள் இராணுவப் பீரங்கிக் குண்டுகளின் பாதையை கணக்கிடுவதற்காகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இதுவும் ஒரு இராட்சதக் கணிப்பொறி எனலாம். ஏனெனில் இது 80 டன் எடையும் 19 ஆயிரம் வால்வுகளும் 10 இலட்சம் இணைப்புகளும் கொண்டது.

கிட்டத்தட்ட 1,500 சதுர அடி பரப்பளவை இது ஆக்கிரமித்துக் கொள்ளும். துளையிடப்பட்ட அட்டைகளே இதில் பயன்படுத்தப்பட்டன. இது வினாடிக்கு 5,000 கூட்டல்கள் போடும். அதே போல் வினாடிக்கு 300 பெருக்கல்களும் செய்யும் வல்லமை கொண்டது.

யூனிவாக்

அமெரிக்காவிலுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மிகவும் உறுதுணையாக இருந்த யூனிவாக் என்ற கணிப்பொறி 1951-ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. அந்தக் கருவி முன்னிலும் மேம்படுத்தப்பட்டத் தொழில்நுட்பத்தைக் கொண்டது. அதிலும் துளையிட்ட அட்டைகளே பயன்படுத்தப்பட்டாலும், அது தானாகவே எண்களைப் படிக்கும், கூட்டிக் கழிக்கும் திறன் கொண்டது. விடைகளை அச்சிடும் திறமையும் கொண்டது. ஒரு நொடிக்கு 250 வகுத்தல் கணக்குகளைச் செய்யும் ஆற்றலும் கொண்டது. முதன் முதலில் கணிப்பொறிச் சந்தையில் விற்கப்பட்ட கணிப்பொறியை அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பீரோ. விலைக்கு வாங்கி பயன்படுத்தியது.

1955-க்குள் இது போன்ற 15 கம்ப்யூட்டர்கள் விற்றுத் தந்தன. அதுவரை கால்குலேட்டர்களைச் செய்து வந்த ஐ.பி.எம். (I.B.M.) நிறுவனம் அவ்வகைக் கணிப்பொறிகளைத் தயாரிக்கத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முதல் கம்ப்யூட்டர் ஐ.பி.எம். 701 என்ற பெயரில் வெளிவந்தது.

வேலை செய்யும் திறனைக் கணக்கிட்டு, கணிப்பொறிகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை மைக்ரோ கம்ப்யூட்டர், மினி கம்ப்யூட்டர் மற்றும் மெயின் ஃப்ரேம் கம்பூட்டர். நாம் கொடுக்கக் கூடிய ஆணைகளை வாங்கிக் கொண்டு அதை அலசி ஏற்கெனவே கொடுத்துள்ள தகவல்களோடு ஒப்பிட்டு, தகுந்த விடை அல்லது சரியானத் தகவலைத் தருவது கணிப்பொறியின் பணியாகும். மைக்ரோ கம்ப்யூட்டர் என்பது மிகச் சிறிய கைக்குள் அடங்கும் அளவுக்கு உருவம் கொண்டது இது 1971-ஆம் ஆண்டு முதல் சந்தைக்கு வந்தது. இது உருவத்தில் சிறியதாக இருந்தாலும் ஆற்றலில் மற்ற கம்ப்யூட்டர்களைவிடச் சிறப்புப் பெற்றது.

மினி கம்ப்யூட்டர்

இது ஒரு சிறிய பெட்டியளவே இருக்கும் இதில் வால்வு பயன்படுத்தாமல் டிராஸ்சிஸ்டர்களைப் பயன்படுத்துவதால் ஒரு சூட்கேசுக்குள் அடைத்துவிடக் கூடிய உருவம் கொண்டது 1960-களில் சந்தைக்கு வந்தது. மெயின் ஃப்ரேம் கம்ப்யூட்டர் என்பது மிகப்பெரிய உருவத்தைக் கொண்டது. இது நூற்றுக் கணக்கான டெர்மினல்களும், யூனிட்டுகளும் கொண்டது. இதன் விலை ரூ.25 இலட்சத்திலிருந்து 10 கோடி ரூபாய் அளவில் உள்ளது.

மனிதனுக்குள்ள இழிவு சமுதாயத்திற்குள்ள இழிவாகும் சமுதாயத்திற்குள்ள இழிவு நாட்டுக்குள்ள இழிவாகும்.

—தந்தை பெரியார்

சூப்பர் கம்ப்யூட்டர்

கணிப்பொறிகளிலேயே மிக அதிக சக்தி வாய்ந்தது சூப்பர் கம்ப்யூட்டர் ஆகும். சக்தி என்பது கணக்கிடும் வேகம், பைனறி வார்த்தைகளின் நீளம், நினைவாற்றல் போன்றவற்றை உள்ளடக்கியது. இன்றைய உலகில் கிரே III (Cray III) என்ற கம்ப்யூட்டரே முதலாவதாகத் தயாரிக்கப்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை பரம் என்ற பெயரில் சி டாக் (C DAC) நிறுவனம் சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிப்பில் இறங்கியுள்ளது. இதே போல் ஜப்பானிய உலகப் புகழ் பெற்ற ஃபுஜிட்ஸு (Fujitsu) என்ற நிறுவனம் சூப்பர் கம்ப்யூட்டர் தயாரித்து வருகிறது. அணு ஆராய்ச்சி, வானிலை ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவற்றில் சூப்பர் கம்ப்யூட்டரின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். கோடிக்கணக்கில் விலையுள்ள இவை உலக மெங்கும் கிட்டத்தட்ட நூறு எண்ணிக்கையில் மட்டுமே இருக்கின்றன.

கம்ப்யூட்டரின் வேகத்தை ஒரு வினாடியில் எத்தனை மில்லியன் கட்டளைகளை அது நிறைவேற்றும் என்பதைப் பொறுத்து, அதன் திறமையை, பெயரை மதிப்பிடுகிறார்கள். அதாவது மிப்ஸ் (Millions of Instructions per second) என்ற அளவுகோலால் கணக்கிடப்படுகிறது. ஒரு சாதாரண கணிப்பொறி ஒரு வினாடியில் ஒன்று அல்லது சில மில்லியன் கட்டளைகளை நிறைவேற்றும் ஆற்றல் உள்ளது என்றால் சூப்பர் கம்ப்யூட்டரோ அதே நேரத்தில் பல்லாயிரம் மில்லியன் கட்டளைகளை நிறைவேற்றக்கூடியது.

1964-இல் அமெரிக்க நாட்டிலுள்ள டர்பா (Defence Advanced Research Projects Agency) நிறுவனம் முதலாவது சூப்பர் கம்ப்யூட்டரை வடிவமைத்து இன்று கம்ப்யூட்டர் தயாரிப்பில் ஜப்பான் அமெரிக்க நாட்டிற்குக் கடும் போட்டியாக இருந்து வருகிறது.

இது ஒரு கம்ப்யூட்டர் காலம். என்றால், எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். ஏனென்றால், இன்று மனித மூளையால் கண்டுபிடிக்கப்பட்ட கம்ப்யூட்டர் மனிதனையே ஆளுகின்ற ஓர் சூழ்நிலை உருவாகிவருவதை நாம் காண முடிகிறது. சான்றாக, உலக செஸ் சாம்பியனான கார்போவ் என்பவர் கம்ப்யூட்டருடன் செஸ் ஆடியபோது, அவருக்கு இணையாக ஒருமுறை சவாலை ஏற்றுக்கொண்ட கம்ப்யூட்டர் பின்னர் இரண்டாம் முறை தோற்றுப் போனது, அனைவருக்கும் நினைவிருக்கலாம். இந்தியாவைப் பொறுத்த வரை கம்ப்யூட்டரின் ஆட்சி அனைத்துத் துறையிலும் வெகுவாகப் பரவி வருகிறது.

இண்டர்நெட் (Internet)



உலகம் ஒரு கிராமம்(Global Village) என்கிற கோட்பாடு அண்மைக் காலங்களில் உலகத் தலைவர்களால் பேசப்படுகிறது. கம்ப்யூட்டர் வளர்ச்சியைப் பார்க்கும்போது, இந்தக் கோட்பாடு செயலுக்கு வந்துவிட்டது என்றே கூறலாம். 1969-ஆம் ஆண்டு, இண்டர்நெட் என்று அழைக்கப்படும் புதிய உத்தி அமெரிக்கப் பாதுகாப்புத் துறையில் பிறந்தது. ரஷ்ய நாடு அமெரிக்க கம்ப்யூட்டர் தகவல் மையங்களை அழித்துவிடப் போகிறது என்ற ஒரு செய்தியின் அடிப்படையில்ஆர்பா(Advanced Research Project Agency) அடிப்படையில் ஒரு புதிய கம்ப்யூட்டர் இணைப்பை அறிமுகப்படுத்தியது. பின்னர் இவ்விணைப்பு, பெரும்பாலான அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பயன்படுத்தப்பட்டது. இண்டர்நெட் இணைப்பின் மூலம் உலகிலுள்ள நாடுகளில் பலவற்றையும் இணைப்பதோடு, அவைகளுக்குள்ளே செய்தி பறிமாறவும் முடியும். அதாவது தற்போது வழக்கிலுள்ள டெலிபிரிண்டரைப் போல் செயல்பாடு கொண்டது. ஆனால், இந்த இண்டர்நெட் தயாரிப்பின் மூலம் இருவழிப் பாதையில் செய்திகளைக் கொடுக்கவும், வாங்கிக் கொள்ளவும் இயலும. இந்தத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியே ஈமெயில் (Electronic Mail) என்றழைக்கப்படும் புதிய தொழில் நுட்பம். இது செயற்கைக்கோள் மூலம் இயக்கப்படுவதால் போர்க்காலங்களில் கூட இது இடையூறின்றிச் செயல்படும் என்று நம்பப்படுகிறது. இந்தியாவில் விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் அண்மையில் இந்த ஈமெயில் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது கல்வி மற்றும் ஆராய்ச்சி துறையினருக்கு ஒரு வரப்பிரசாதமாக திகழ்கிறது. குறிப்பாக, இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரிகள் (ஐ.ஐ.டி) மற்றும் இந்திய மேலாண்மைக் கல்லூரிகள் (I.I.M.) போன்றவைகளில் இந்த வசதி தற்போது பயன்படுகிறது.

இண்டர்நெட் வசதி பல்வேறு நன்மைகளைத் தந்தாலும், இதனால் சில இடையூறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஒருசில மாதங்களுக்கு முன்னால் இண்டர்நெட் மூலம் இணைக்கப்பட்ட அமெரிக்க வெள்ளை மாளிகையில் அதிபர் கிளிண்டனுக்கு சிங்கப்பூரிலிருந்து ஒரு பள்ளி மாணவன் கொலை மிரட்டல் இந்த இண்டர்நெட் மூலம் செய்ததையும் பின்னர் அது கண்டுபிடிக்கப்பட்டதையும் அனைவரும் அறிவர். அகஇண்டர்நெட் நன்மைகளையும் அதே நேரத்தில் தீமைகளையும் கொண்டிருக்கிறது.

அண்மைக்காலக் கண்டுபிடிப்பு

இன்றைய கணிப்பொறியின் வளர்ச்சி முதலில் பாஸ்கல் என்பாரிடமிருந்து தொடங்கி லிபின்ட்ஸ், ஜக்கார்டு, பாபேஜ், லவ்லேஸ், ஹாலரித், ஐக்கன், மாச்லே, எக்கர்ட், நாய்மன் என்பவர்கள் மூலம் முன்னேறியது. இன்று கம்ப்யூட்டர் மானிட்டரின் முன் அமர்ந்து பேசினால் அப்பேச்சு அப்படியே திரையில் எழுத்து வடிவில் மாறக்கூடிய புதிய தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. அதற்கு SSVR (Speech Synthesis Voice Recognition) என்று பெயர். இது அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளில் செயல்பாட்டில் இருக்கிறது. இது தவிர கதவின் முன் நின்று பேசினால் அந்தக் குரலைக் கண்டுபிடித்து, தானே திறக்கும் அல்லது பூட்டிக்கொள்ளும் தனித்திறன், வாகன ஓட்டுநர் மதுபானம் அருந்தியிருந்தால் அந்த வாகனம் நகராமல் அடம் பிடிக்கும் திறன், இப்படி எவ்வளவோ தனித் திறன்கள் துறைதோறும் கம்ப்யூட்டர் நிகழ்த்திக் காட்டப் போகின்றது.

இன்றைய நவீன கம்ப்யூட்டர்களில் வழக்கமாகப் பயன்படுத்தும், சிலிக்கான் சில்லுகளுக்குப் பதிலாக வேகமாகச் செயலாற்றக் கூடிய கல்லியம் ஆர்சனிக் என்ற கூட்டுப் பொருள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது எலக்ட்ரான்களை (சிலிக்கானைவிட) ஆறு மடங்கு வேகமாகச் சுழலச் செய்யும். இந்த வேதிப் பொருளால் ஒளியைக் கிரகிக்கவும், வெளியிடவும் செய்யும். இதன் செயல்பாட்டைப்பார்க்கும்போது இனி வருங்கால உலகம் கம்ப்யூட்டரின் காலடியில் செயல்படப்போகிறது என்று நாம் அறுதியிட்டுக் கூறமுடியும்.

கணிப்பொறிகளின் மூலம் உலகத்தில் பல விந்தைகளையும் செய்ய முடியும். பல விபரீதங்களையும் ரோபாட் போன்றவைகளால் உருவாக்க முடியும். ஆகவே, ஆக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும் கம்ப்யூட்டருக்கு இருந்தாலும், அதனை இயக்கும் சக்தி மனிதனுக்கு இருப்பதால் நாளைய உலகம் மானுடத்தின் கையில் தான் இருக்கிறது என்று நாம் நம்பலாம். ஏனெனில் இது ஒரு கம்ப்யூட்டர் காலம்!

எம்.வி.எம். அசோகன்

பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்

பவானிசாகர் ஊராட்சி ஒன்றியப் பொதுப்பணித் தொழிலகம் துவக்கப்பட்ட நாள் - 1.10.1960 பவானிசாகர் ஊராட்சி ஒன்றியப் பொதுப்பணித் தொழிலகத்தில் தயாரிக்கப்படும் பொருள் விபரம் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியப் பஞ்சைபுளியம்பட்டி பொதுப்பணித் தொழிலகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய வேலைகள் பின்வருமாறு:

1. பு. புளியம்பட்டியைச் சுற்றியுள்ள நூற்பு ஆலைகள்
2. பவானிசாகர் ஊரக விரிவாக்கப் பயிற்சி மையக் கம்ப்யூட்டர் அறை
3. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (மகளிர்) ஈரோடு
4. இப்பகுதியில் உருவாகும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்கும், தனியார் கட்டடங்களுக்கும் தேவையான பொருட்கள். இந்தத் தொழிற்கூடத்திற்குத் தேவையான மூலப்பொருள்களை ஸ்டீல் அத்தாரட்டி ஆப் இந்தியா, டாடா, அரக்கோணம் ஸ்டீல்ஸ் மற்றும் சிட்கோ போன்ற அரசு நிறுவனங்களிலிருந்து நல்ல உயர்ரகமான, தரமான, நயமான பொருள்களை பெற்று விவசாய உபயோகத்திற்குத் தேவையான எல்லாவிதமான சிறிய பொருள்கள் முதற்கொண்டு புதிய வீடுகளுக்குத் தேவையான கதவு, ஜன்னல், படிகட்டு கிரில்கள், டிசைன் கிரில்கள், கல்யாண மண்டபங்களுக்குத் தேவையான டைனிங் டேபிள், சேர்கள் மற்றும் அலுவலக உபயோகத்திற்குத் தேவையான எல்லா அளவுகளிலும் பீரோ, டேபிள், சேர், ஸ்டூல், ரேக் போன்றவைகளும் திருமண மண்டபம், தியேட்டர், கடைகள் பெரியமில்கள் தறிக்கொட்டகைகளுக்குத் தேவையான ரோலிங் சட்டர்கள், காம்பவுண்டு கேட்டுகள், தகடு கதவுகள், ஜன்னல்கள், டிசைன் கிரில்கள், ஸ்டீல் டிரஸ்கள், பார்லின் தூண்கள், பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான பெஞ்சுகள், டெஸ்குகள், நாற்காலிகள், சாயப்பட்டறைக்கும், இரும்பு காய்ச்சும் தொழில்களுக்கும் தேவையான அனைத்துப் பொருள்களும் நகராட்சி பேரூராட்சிகளுக்குத் தேவையான சுகாதாரக் கருவிகள் அனைத்தும் மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து பர்னிசர்களும் மற்றும் இரும்பு பெட்டிக்கடை, கால் அணிக்கடை, டயர் இரும்பு வண்டிகள் இன்னும் பலதரப்பட்ட புதிய இரும்பு மற்றும் மரம் பொருட்கள், சோக்கேஸ்கள், பழைய இரும்பு மற்றும் மரத்தளவாடங்கள் புதுப்பித்து பழுதுபார்த்துக்கொடுக்கும் பணிகளையும், குறைந்த விலையில் சிறந்த தொழில்நுட்பப் பணியாளர்களை கொண்டு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவில் தயாரித்து கொடுக்கப்படும்.

இந்த அரசு தொழிற்கூடம் கடந்த 30 வருடங்களாக நல்ல முறையில் லாபகரமாக இயங்கி வருவதுடன் மாவட்டம் மற்றும் மாநில அளவில் புகழுடனும் சிறந்து விளங்குகிறது. தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது எக்காலத்திலும் பொருளின் தரம் உயர்ந்தும், விலை குறைந்தும் இருக்கும். இந்த தொழிற்கூடம் முழுமையாக ஊராட்சி ஒன்றிய பொதுநிதி மூலம் ஆணையாளரது கண்காணிப்பின் கீழ் இயங்க வருகிறது. ஆகவே பொதுமக்கள் விவசாயிகள், அனைத்து அரசுத்துறை நிறுவனங்களும் தங்களது மேலான ஆதரவை கொடுத்து முழு ஒத்துழைப்புத்தர வேண்டுமாய் அன்புடனும் கனிவுடனும், கேட்டுக் கொள்கிறோம்.

பணம் உங்களுடையது ! நல்ல தரம் எங்களுடையது !! மேலும் விபரங்களுக்கு அணுகவும்

S. அமிர்தலிங்கம், டி.சி.ஆர்.இ.
தனி அலுவலர், ஊராட்சி ஒன்றியக்குழு, பவானிசாகர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர், கோபிசெட்டிபாளையம்

K. குருசாமி
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர், பவானிசாகர்

பெ. பீலன்,
ஆணையாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியம். பவானிசாகர்

Phone: 79954

N. J. K. SUPER TRAVELS

HOTEL BRINDHAVAN BUILDING

Mettur Road

(Near Bus Stand)

ERODE

பதிவு எண்: 7/59

போன் பங்க்: 211066
கிளை: 212438

லாரி சொந்தக்காரர்கள் சங்கம்

டீலர்: ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்

272, சத்தி ரோடு, ஈரோடு - 638 003

கிளை
41, புது பஸ் ஸ்டாண்ட் ரோடு
(E.V.K. செல்வம் கல்யாண மண்டபம் எதிரில்)
ஈரோடு - 638 003

எங்களிடம் தரமான பெட்ரோல், டீசல், மில்ஸி ஆயில், கயிறுகள், கிரீஸ், பிளாப், டியூப் பவுடர், டிஸ்டில் வாட்டர், ஆசிட் வாட்டர் ஆகியவைகள் நியாயமான விலையில் கிடைக்கும்.

மேலும் எங்களது கிளை விற்பனை நிலையத்தில் கேஸ்ட்ரால், சர்வோ பிரைட், மோட்டூல், வீடால் ஆயில்கள், மற்றும் ஆயில் பில்டர்கள், வாசர்கள், கிரீஸ் ஆகியவைகள் நியாயமான விலையில் கிடைக்கும்.

"தரமான சுத்தமான பொருள்களின் விற்பனையே எங்களது உத்திரவாதம்"



யாவரும் விரும்பும் மூலனூர் முருங்கை

இயற்கையின் கருணையை ஏற்றபடி பயன்படுத்தினால் எதிலும் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது பெரியார் மாவட்டத்தின் மூலனூர் பகுதி.

மூலனூர், ஈரோட்டிலேயே வறட்சியான பகுதியாகும். ஆண்டு மழைவளம் 500 மி.மீட்டருக்கும் குறைவு. வட கிழக்குப் பருவ மழையோ அக்டோபர் நவம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் தலை காட்டும். அதுவும் 250 மி.மீட்டருக்கும் மிகாது. ஆயக்கட்டுகள் ஏதும் இல்லாத பகுதி. அதனால் வேறு பயிர் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏதும் இல்லாத சூழ்நிலை. அதுமட்டுமின்றி மிகக் குறைவான சத்துள்ள மண். ஓடக்கல் மண்வாகு. கால்கேரியஸ் என்று சொல்லப்படும் சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ளது. மேலே கூறிய காரணங்களால், இயற்கை மூலனூர் பகுதியை வஞ்சித்தது போலத் தோன்றினாலும், உண்மை அதுவல்ல என்பதை அப்பகுதி மக்கள் நிருபித்து வருகிறார்கள். எந்த பயிர்வகையும், வளர வாய்ப்பில்லை என்று எண்ணிய இடத்தில் முருங்கை மிகவாகப் பூத்து வெகுவாகக் காய்ப்பதை அறிந்து, முருங்கையைப் பெருமளவில் சாகுபடி செய்யத் தொடங்கிவிட்டார்கள். இன்று, முருங்கை என்றாலே மூலனூர் என்று பெயர் பெறுமளவுக்கு பெரியார் மாவட்டம் புகழடைந்து இருக்கிறது என்றால் அது மிகையல்ல.

மூலனூரில் முருங்கை அறுவடை ஆண்டுக்கு இருபருவம் நடக்கிறது. ஜூன் மாதம் பூத்து ஆகஸ்டில் காய் காப்பது ஒரு பருவம். அடுத்து ஜனவரியில் பூத்து மார்ச்சில் காய்பிடித்து அறுவடைக்கு வருவது இன்னொரு பருவம்.

ஒருமுறை காய் அறுத்தால் ஒரு மரத்திற்கு 200 லிருந்து 300 காய்கள் வரை அறுக்கலாம். ஒரு பருவத்திற்கு 6 தடவை இப்படிக் முருங்கக்காய்களை அறுவடை செய்கிறார்கள். இப்படி அறுவடை செய்யப்படும் காய்களின் அளவு பருவத்திற்கு 40 இலட்சம் இருக்கும் என்று தெரிவித்தார், வேளாண்மை உதவி இயக்குநர் திரு டி.பி. இராமசாமி.

மூலனூர் முருங்கைக்காய் ஒண்ணேகால் அடியிலிருந்து ஒண்ணரை அடி நீளம் வளருகின்றது. ஜாப்னா வெரைட்டி என்று சொல்லும் நீள முருங்கையை ஒரு போதும் மூலனூர் முருங்கைக்குப் போட்டியாகக் கருதமுடியாது என்று மூல்னூர் முருங்கை விவசாயிகள் அடித்துக் கூறுகின்றார்கள். காரணம் மூலனூர் முருங்கையின் சுவை மற்றும் அதன் சதைப்பற்று, இதனால்தான் சென்னைக்கு தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், கர்நாடகாவின் பல பகுதிகளுக்கும் தொடர்ந்து மூலனூர் முருங்கை ஈரோட்டிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது!

ஊரும் பேரும்!

உபயோகப் பொருளை ஊர்ப் பெயரால் அறிந்து கொள்ளும் அளவுக்கு ஒன்றோடு ஒன்றிவிட்ட சிறப்பு...எடுத்துக்காட்டாக காளை என்றதும் காங்கேயம் என்பது நினைவுக்கு வருமே, அப்படி!...வேறு மாவட்டங்களைவிட பெரியார் மாவட்டத்திற்கே அதிகம் எனலாம். அந்த வகையில் ஒரு சில:

காங்கேயம் காளை
மூலனூர் முருங்கை
ஊத்துக்குளி வெண்ணெய்
ஈரோடு மஞ்சள்
பவானி ஜமக்காளம்
சித்தோடு நாட்டுச் சக்கரை

With Best Compliments From:

S.P. Periasamy & Co.,

P and C Construction (Pvt) Ltd.,

Engineering Contractors & Promoters

Head Office:
H-108, Periyar Nagar,
ERODE - 1
Phone: 220334, 220 444

R. O.:
188-D, Middle Block
P.H. Road,
Kilpauk,
Madras-600 010
Phone: 6412168, 6421043

MAXWELL APPAREL INDUSTRIES LTD.,

SPINNING DIVISION
KOLAPPALUR - 638 456
GOBICHETTIPALAYAM (TK)
PERIYAR DISTRICT
PHONE: (04285) 22890, 23548, 23549, 23530 FAX: (04285) 22890

Having Latest Generation of Spinning Machinery and

Producing very high quality combed Cotton Hosiery Auto Coned Yarn

for Knitting
COUNT RANGE NE 30s-40s

Head Office:

MAXWELL APPAREL INDUSTRIES LTD.,
C-6, Road No.22, M.I.D.C.,
ANDHERI (E)
BOMBAY - 400 093.
Phone: (022) 8324293, 8221550, 82[illegible]05
Fax: 0091-22-8371023

நூல் நயம்

தமிழர் தாய் மருத்துவம்

ஆசிரியர் : டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை

வெளியீடு : சித்த மருத்துவ
இலக்கிய ஆராய்ச்சி மையம்,
E-32, அண்ணாநகர் கிழக்கு
சென்னை 102

பக்கம்: 373 விலை: ரூ.200

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். நோய் நொடியின்றி வாழ்வதற்கு நமது முன்னோர்கள், பல அரிய மூலிகைகளைக் கண்டுபிடித்தார்கள். அதைக் கொண்டு மருந்தும் செய்து மக்களுக்கு வழங்கினார்கள். இயற்கை அன்னையின் இனிய வரமாக சித்த மருத்துவம் விளங்கியது. அந்த மருத்துவத்தின் மகிமையை எடுத்துச் சொல்கிறது இந்த நூல்.

அன்றாடம் நாம் பல நோய்களால் பிடிக்கப்பட்டுத் துன்புறுகின்றோம். கண்வலி, தலைவலி, காதுவலி, தொண்டை நோய், மார்பு மற்றும் வயிற்று நோய் என்று அல்லலுறுவோருக்குக் கைகண்ட மருந்தாக விளங்குவது சித்த மருத்துவ முறையேயாகும்.

உதாரணமாக, வயிற்றுக் கோளாறுக்கு என்ன மருத்துவம் செய்யலாம் என்று கூறி, மருந்து செய்முறையும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதேபோல, ஏராளமான நோய்களுக்கு (நூலில் ஒரு பட்டியலே இருக்கிறது). மருந்து செய்முறை கூறப்பட்டுள்ளது. எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில், எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

—மறைமலை

பெரியாரும் அரசியலும்

ஆசிரியர் :
டாக்டர் அ. முத்துசாமி

வெளியிட்டோர்:
வடமலையான் நிலையம்
153, என்.எஸ்.சி போஸ் ரோடு
சென்னை 600 079

பக்கம்: 128 விலை ரூ.25

இந்த நாடு நலம்பெறவும், நாட்டுமக்கள் வளம் பெறவும் தன்னை முழுமையான சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டு மங்காப் புகழ் பெற்றவர் தந்தை பெரியார். நலிவுற்றுக் கிடந்த தமிழ்ச் சமுதாயம் இந்த இருபதாம் நூற்றாண்டில ஏற்றம் பெற்ற தென்றால், அவருடைய அரசியல் ஈடுபாடே அதற்கு முழுமுதல் காரணமாகும். இத்தனைக்கும் அவர் பட்டம் பதவிகள் மீது மோகம் கொண்டவரல்ல. உலக அரசியல்வாதிகளெல்லாம் பின்பற்றத் தக்க முற்போக்கு எண்ணம் கொண்டவர், அந்த வெண்தாடி வேந்தர். சிறை பல கண்டபோதும் சீற்றம் தணியாத சிங்கம்போல் வாழ்ந்தார்.

இதுவரை நாம் சொன்ன இந்தக் கருத்துகளின் விளக்கம் போல அமைந்திருக்கும் ஆய்வு நூலாகும் இது. திரு கி. வீரமணி அவர்களின் அணிந்துரை, இந்நூலுக்கு மகுடம் போலத் திகழ்கிறது.

இப்புத்தகம் பகுத்தறிவு விரும்பிகளெல்லாம் படித்துப் பயன்பெறத்தக்க ஒன்று.

—ராஜு

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

ஆசிரியர்: பி.எல். ராஜேந்திரன்

வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம், மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004

பக்கம்: 154 விலை: ரூ.30

சென்ற ஆண்டு தொடக்கத்தில், தஞ்சாவூரில் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது அல்லவா? அந்த ஒருவார காலமும் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்த நூல் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

தமிழ் மொழியின் சிறப்பு, இலக்கியத்தின் பெருமை, அதன் தொன்மை வளத்தை உலக அளவில் வாழும் தமிழர்கள் அறிந்து கொளளவும், முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தொடங்கி, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் நடைபெற்ற சிலைகள் திறப்பு, பிரம்மாண்டமான நுழைவு வாயில்கள், ஊர்வலச் சிறப்பு, மாநாட்டுத் தொடக்க விழா, மாநாட்டு மலர்கள் வெளியீடு, தொடக்கவிழாப் பேருரை, 'இலக்கியச் சோலை' திரைப்பட வெளியீட்டு விழா, கலைநிகழ்ச்சிகள், தமிழாய்வு அமர்வுகள், அறிவிப்புகள் போன்ற நிகழ்ச்சிகள் இதில் அழகுபடச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

உலகத் தமிழர்கள் அனைவரும் இந்நூலை போற்றிப் பாதுகாப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

—அ. மதிமாறன்

சிந்தாமணி கூட்டுறவுச்சிறப்பங்காடி

ஈரோடு

வாடிக்கையாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும்

சிந்தாமணி

அன்பு வணக்கத்தினைத்தெரிவித்துக் கொள்கிறது

சிந்தாமணியில்

- ✶ தாங்களே பொருட்களைத்தேர்வு செய்ய சுயசேவைப் பிரிவு
- ✶ மருந்து வகைகளுக்கு 5% கழிவு
- ✶ 100% தர ஆய்வுக்குப் பின்னர் உணவுப் பொருட்கள் விற்பனை.
- ✶ திண்டல் பகுதியில் **சிந்தாமணி** பெட்ரோல் பங்க்
- ✶ தலைமை அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆயில் பிரிவு
- ✶ திருமணம் மற்றும் இதர விசேஷசங்களுக்கு மளிகைப்பொருட்கள் இலவச டெலிவரி

கிளைகள்

- ✶ ஈரோடு கடைவீதி கிளை
- ✶ ஈரோடு பேருந்து நிலைய கிளை
- ✶ ஈரோடு கொல்லம்பாளையம்
- ✶ ஈரோடு சூரம்பட்டி மகளிர் கிளை
- ✶ ஈரோடு சம்பத் நகர்
- ✶ ஈரோடு தினசரி மார்க்கட் கிளை
- ✶ பவானி, கோபி, சத்தி, காங்கயம், தாராபுரம்

இருகரம் கூப்பி அழைக்கிறது **சிந்தாமணி**

இரா. நல்லதம்பி

எம.ஏ., எம்.பி.ஏ., எச்.டி.சி.

இப/தனி அலுவலர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



தமிழரசு

16.4.1996 ரூ.3

இந்த இதழில்...

★ உலகம் போற்றும்
உத்தமத் தலைவன் 2

★ தமிழ்ச் சுவடி மீட்ட
இராஜராஜன் 9

★ பூஜைப் பொருள் கண்காட்சி 15

★ இயற்கையோடு இயைந்த
இருளர்களின் இனிய வாழ்வு 17

★ மனவளர்ச்சி குன்றிய
குழந்தைகளின் வாழ்வில் ஒளி
விளக்கேற்றிடுவோம் 21

★ பாரதி கனவு நனவாகும்
—முனைவர் இராதா தியாகராசன் 25

★ வருங்காலச் சந்ததியினருக்கு
ஒரு வரலாற்றுப் பெட்டகம் 33

★ செந்தமிழுக்குச் சீர்செய்த
சேதுப்பிள்ளை
—அன்புப்பழம் நீ 41

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

★ ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத் தக்கது அறமே; செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
சித்திரைத் திங்கள் : 4

மலர்: 26 இதழ்: 20

16.4.1996

விலை: ரூபாய் 3

உலகம் போற்றும் உத்தமத் தலைவன்!

ஏப்ரல் 14 டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள்

'தீண்டாமை' என்னும் கொடுமையைக் களைய மராட்டிய மண்ணிலிருந்து தோன்றினார் ஒரு மாபெரும் மேதை. அனைத்து நாடுகளும் கண்டு வியந்த அற்புதத் தலைவன். மனித சமுதாயத்தை மாண்புறச் செய்த கோமான். அவரே அம்பேத்கர் என்றழைக்கப்படும் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர்.

உலகம் போற்றும் உத்தமத் தலைவனாம் அண்ணல் அம்பேத்கர் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினான்காம் தேதி ராம்ஜி பீமாபாய் ஆகிய தம்பதியருக்குப் பதினான்காவது திருமகனாகப் பிறந்தார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இழைக்கப்பட்ட கொடுமையைத் தடுத்து நிறுத்தி, பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்ற கருத்தை எடுத்துரைத்து, தீண்டாமையை அகற்றப் பாடுபட்டவர்தான் அம்பேத்கர். சாதிகள் இல்லையடி பாப்பா! குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாடிய பாரதியின் கனவை நனவாக்க அல்லும் பகலும் பாடுபட்டார் அண்ணல் அம்பேத்கர்.

பள்ளியிலே பசுந்தளிர்கள் பட்ட கொடுமை

அண்ணல் அம்பேத்கர் ஆரம்பக் கல்வி முடிந்ததும் 'சதாராவில்' இருந்த ஓர் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப் பட்டார். இப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் என்று கருதப்பட்ட மாணவர்களுக்கு வகுப்பறையில் ஒரு மூலையில்தான் இடம் கிடைத்தது. மற்ற மாணவர்களுடன் மரப்பலகையில் உட்கார அவர்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தால், உயர்சாதி மாணவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் வாயில் தண்ணீரை ஊற்றுவார்கள்.

பள்ளிக்கூடத்தில் உயர்சாதி ஆசிரியர்களும், மாணவர்களும், தம்மையும், தம்மைப் போன்ற பிற மாணவர்களையும் நடத்திய கீழ்த்தரமான முறையைக் கண்டு அம்பேத்கரின் மனம் வேதனைக்குள்ளானது. இக் கொடுமைகளுக்கெல்லாம் விடிவு கிடைக்காதா என்று அன்றைக்கு ஏங்கியது அந்தப் பிஞ்சு நெஞ்சு. ஆனால் அந்த விடிவை அவரே பின்னாளில் கொண்டு வந்தார் என்பதுதான் சிறப்புக்குரியது.

பார் உயரப் பாடுபடவே படித்தார்! பட்டம் பெற்றார்!

அண்ணல் அம்பேத்கர், பின்பு பம்பாயில் உள்ள மராத்தா உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பள்ளிப் பாடங்களைப் படிப்பது மட்டும் அல்லாமல் மற்ற வகையான அனைத்து நூல்களையும் படித்தார். புத்தரின்பால் அன்பு கொண்டு கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துணர்ந்தார். பள்ளியில் வடமொழி கற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும் பின்னாளில் சில பண்டிதர்கள் உதவியுடன் கற்றுக் கொண்டார். பின்பு கடுமையாக உழைத்து மெட்ரிகுலேசன் தேர்வில் தேர்ச்சி அடைந்தார். அந்நாளில் தான் 1905-ஆம் ஆண்டு தனது 14-வது வயதில் அம்பேத்கர், இராம் என்கிற இராமாபாய் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். பின்பு மேற்கல்விக்காக பரோடா மகாராஜா சயாஜி ராவ் உதவியுடன் 1912-ஆம் ஆண்டில் பி.ஏ., பட்டம் பெற்றார். 1913-ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் வாரம் அம்பேத்கர் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

கொலம்பியா பல்கலைக் கழகம், 1915-ஆம் ஆண்டில் அம்பேத்கருக்கு எம்.ஏ., பட்டம் அளித்தது. இந்தப் பட்டம் 'பண்டைக்கால இந்தியாவின் வாணிபம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆராய்ச்சிக்காகக் கிடைத்தது. மீண்டும் 1916-ஆம் ஆண்டு 'இந்தியாவின் தேசியப் பங்கு வீதம்' என்ற மற்றொரு கட்டுரை எழுதி 'தத்துவப் பேரறிஞர்' என்ற பட்டத்தைப் பெற்றார். கோல்காபூர் என்ற சிற்றரச மன்னரின் உதவி பெற்று 'ஊமைகளின் தலைவன்' என்னும் ஓர் இதழைத் தொடங்கி, தீண்டாமைக் கொடுமைகளை எழுதினார். இதனால் தாழ்த்தப் பட்டவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகுத்தது.

மேல்சாதி கொடுமையிலிருந்து வேண்டும் வேண்டும் விடுதலை!

அமெரிக்காவில் படித்து முடித்த பிறகு அம்பேத்கர் தாயகம் திரும்பி, பரோடா மன்னரின் உதவியுடன் படைச் செயலாளர் பதவியில் அமர்ந்தார். அங்கு தங்க இடவசதி அளிக்க எவரும் முன்வரவில்லை. அதனால் தம் பெயரை மாற்றி சத்திரம் ஒன்றில் இடம் பெற்றுவிட்டார். இதற்கிடையில் பம்பாயில் இருந்த சிடேன்காம் கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியர் பதவி ஒன்று கிடைத்தது. இப்பதவியில் இருந்த போது மேல்சாதி மக்களின் கொடுமைகளிலிருந்து சுதந்திரம் வேண்டும், சமத்துவம் வேண்டும், மக்களிடையே சகோதரத்துவம் வேண்டும் எனக் கூறினார். தாழ்த்தப்பட்டோர் மாநாடுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். மீண்டும் மேற்படிப்பிற்காக இலண்டன் மாநகர் சென்று எம்.எஸ்சி., பட்டமும் பெற்றார்.

எளிய மக்கள் துயர் நீக்க இலவசமாய் வாதாடினார்

1923-ஆம் ஆண்டு பம்பாயில் இருந்தபடியே 'ரூபாய் பற்றிய பிரச்சினை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி டி.எஸ்சி., பட்டம் பெற்று சட்டத் தேர்வும் எழுதி அனைவரும் போற்றும் 'பாரிஸ்டர்' பட்டமும் பெற்றார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு இலவசமாக வழக்காடினார்.

அம்பேத்கரின் அரிய சேவைகளுக்காக பம்பாய் மாகாண ஆளுநர், பம்பாய் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியை அளித்துக் கௌரவித்தார்.

சைமனிடம் முறையீடு இலண்டனிலே மாநாடு

அம்பேத்கர் பம்பாய் சட்டக்

அண்ணல் அம்பேத்கர் தனது அருந்துணைவி இராமாபாய் அம்மையாருடன்

கல்லூரியில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பம் செய்து கொண்ட உடனே அந்தப் பதவி அவருக்குத் தரப்பட்டது. இச்சமயத்தில்தான் சைமன் குழு இந்தியாவிற்கு வந்தது. இக்குழுவிற்கு அனைத்து வகைகளிலும் ஒத்துழைக்க அரசு ஏற்படுத்திய குழுவில் அம்பேத்கரும் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் இழி நிலைகள், அவர்களது உடனடித் தேவைகள் குறித்து ஓர் அறிக்கையை சைமன் குழுவிடம் கொடுத்தார் அம்பேத்கர்.

இந்தியாவில் சுதந்திர தாகம் மேலோங்கி வருவதை ஆங்கிலேயர் அலட்சியப்படுத்த முடியவில்லை. இதற்காக ஒரு வட்ட மேசை மாநாட்டை இலண்டனில் நடத்த முடிவு செய்தனர். இம்மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரமுகர்களுள் டாக்டர் அம்பேத்கரும் ஒருவர். இம்மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் கலந்துகொண்டு இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் படும் இன்னல்களை எடுத்துரைத்தார்.

முதல் வட்டமேசை மாநாட்டுக்குப் பின் அண்ணல் காந்தியடிகளும், டாக்டர் அம்பேத்கரும் ஒருவரையொருவர் சந்தித்து, தாழ்த்தப்பட்டோர்களின் முன்னேற்றத்திற்கு இருவரும் பாடுபட்டனர்.

1931-ஆம் ஆண்டில் இரண்டாவது வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் பண்டித மதன்மோகன் மாளவியா, கவிக்குயில் சரோஜினி நாயுடு ஆகிய தலைவர்களுடன் மகாத்மா காந்தியடிகளும் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது.

1935-இல் அம்பேத்கரின் மனைவி உயிரிழந்தார். இதனால் மனமுடைந்த அம்பேத்கர் மஞ்சள் நிறத்தினாலான அங்கியைத் தரித்துக்கொண்டு அசல் துறவியைப் போல் காட்சியளித்தார்.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்குத் தனி இயக்கம் கண்டார்!

1937-ஆம் ஆண்டு 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி' என்ற பெயருடன் கட்சி ஆரம்பித்து தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் அக்கட்சியின் குறிக்கோளாகக் கொண்டு தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காகப் பாடுபடத் தொடங்கியது. பின்பு அம்பேத்கர் வைசிராய் நிர்வாக சபை உறுப்பினராகவும், தொழிலாளர் அமைச்சராகவும் அம்பேத்கர் நியமனம் பெற்றார்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி நலம் பெற 'மக்கள் கல்விக் கழகம்' என்ற அமைப்பைத் தொடங்கி சிறப்புடன் நடத்தினார். இதன் அடிப்படையில் பம்பாயில் 'சித்தார்த்தா கல்லூரி' ஒன்று உருவாக்கப்பட்டது.

மகத் பகுதியின் சௌதார் குளத்தில் சத்தியாக்கிரகப் போர் நடத்துகிறார் டாக்டர் அம்பேத்கர்



வங்காளத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூக சட்டமன்ற உறுப்பினர்களும், முஸ்லீம் லீக் உறுப்பினர்களும் அம்பேத்கரின் திறமையைப் பாராட்டி அவரை, அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தங்கள் வாக்குகளை அளித்தனர்.

சுதந்திர இந்தியாவின் சட்ட அமைச்சர்

ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கத் தேதியை நிர்ணயித்து அதன்படி இங்கிலாந்து நாடாளுமன்றம் ஜூலை 15-ஆம் நாள் இந்தியச் சுதந்திரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. பிரதமர் நேரு, சுதந்திர இந்தியாவின் மந்திரி சபையில் சட்ட அமைச்சராக இருந்து பணிபுரியுமாறு அம்பேத்கரைக் கேட்டுக் கொண்டார்.

அரசியல் சட்ட வரைவில் அருமைமிக்க தலைவர்

இந்தியா சுதந்திரம் பெற்ற சில நாட்களில் மீண்டும் அரசியல் நிர்ணய சபை, அரசியல் சட்டத்தை அமைப்பதற்கு ஒரு வரைவுக் குழுவை நியமித்தது. இக்குழுவின் தலைவராக அம்பேத்கர் முழுமனதாக நியமிக்கப்பட்டார்.

இவருக்கு உதவியாக ஏழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியல் சட்டம் தயாரிக்கும் பணி செம்மையாகச் செயல்பட உதவினார்கள். அம்பேத்கர் தமக்கிட்ட பணியை திறம்படச் செய்தார். ஒற்றுமை இல்லாத காரணத்தினால்தான் இந்தியா அடிமைப்பட நேரிட்டது என்று வாதிட்டார். சாதி வேறுபாடுகளை ஒழித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்று வற்புறுத்தினார்.

சட்ட அமைச்சராக பதவிப் பொறுப்பேற்கிறார் டாக்டர் அம்பேத்கர்

முதன்முதல் இந்திய சட்ட வரைவைத் தயாரித்தமையால் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்றும் இவர் பாராட்டப்பட்டார்.

புனிதராம் புத்தரின் மதத்திலே இணைந்தார்

டாக்டர் அம்பேத்கருக்கு ஓய்வு தேவைப்பட்டதால் மருத்துவமனையில் சேர்ந்தார். அங்கு டாக்டர் சாரதா என்னும் அம்மையாரை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார். பின்பு புத்த மத மாநாடுகளில் கலந்துகொண்டார். புத்த மதத்தின்பால் பற்று இருந்ததினால் 1956-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தம் துணைவியாருடன் புத்த சமயத்தில் சேர்ந்தார். இவருடன் பலரும் புத்த சமயத்தில் சேர்ந்தனர்.

அப்போது, "நீங்கள் ஒரு புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்திருக்கிறீர்கள் பாராட்டுகிறேன்" என்று தந்தை பெரியார் ஒரு வாழ்த்துத் தந்தி அனுப்பினார்.

கொலம்பியா பல்கலைக் கழகம் டாக்டர் அம்பேத்கரை அழைத்துச் 'சட்டப் பேரறிஞர்' என்னும் பட்டத்தையும், உஸ்மானியப் பல்கலைக் கழகம்

**1944-ஆம் ஆண்டு சென்னையில்
தந்தை பெரியாருடன் டாக்டர் அம்பேத்கர்**

அம்பேத்கரை வரவேற்று 'இலக்கியப் பேரறிஞர்' என்னும் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

தலைசிறந்த நூலாசிரியர்

அம்பேத்கர் மிகச் சிறந்த பேச்சாளர். புகழ்பெற்ற எழுத்தாளர். 'இந்துக்கள் நமக்கு என்ன செய்திருக்கிறார்கள்?' 'தீண்டத் தகாதவர்கள்' போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

'ஊமைகளின் தலைவன்', 'ஒதுக்கப்பட்ட இந்தியா', 'மக்கள்' 'சமத்துவம்' போன்ற பத்திரிகைகளைத் திறம்பட நடத்தினார். அவற்றின்மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர எழுதினார்.

மறைந்தும் மறையாதவர்!

அம்பேத்கரின் அயராத உழைப்பாலும், சிந்தனையாலும், அவரின் உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. அதைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த உத்தமத் தலைவர் உழைத்துக்கொண்டே இருந்தார். திடீரென 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி டெல்லியில் காலமானார்.

தீண்டாமையை அகற்ற தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட இந்தப் புனித தலைவரின் உடல் மறைந்தாலும் அவரது புகழ் என்றும் மறையாது. 'கற்பி, ஒன்றுசேர், புரட்சிசெய்' என்ற கோட்பாட்டினை வகுத்த அந்த அருமைத் தலைவரின் வழி நடந்து புதுயுகம் படைப்போமாக!

–அ. மதிமாறன்

அண்ணல் அம்பேத்கர்

☆ சமூக சீர்திருத்தத்திற்கு உள்ள வழி இந்தியாவைப் பொறுத்தவரையில் சுவர்க்கத்திற்கு உள்ள வழிபோலக் கரடுமுரடானது; சங்கடமானது ஆபத்துகள் நிறைந்தது!

☆ இந்தியாவில் சமூக சீர்திருத்தத்திற்கு நண்பர்கள் சிலரே, எதிரிகளே அதிகம்! எதிரிகள் இருவகை: ஒரு கூட்டத்தார், அரசியல் சீர்திருத்தக்காரர்; மற்றவர்கள் அபேதவாதிகள்.

☆ இந்திய சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டுமானால் அரசியல் சீர்திருத்தத்திற்கு முன் சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்னும் எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது.

☆ "ஜனநாயகம்" எங்கு வேண்டுமாயினும் வளரும் செடியன்று. சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளே ஜனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.

☆ தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத் தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.

...பொன்மொழிகள்

"நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாக வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால் நாம் உயர்வது உறுதி

★ ஒரு நாடு, மற்றொரு நாட்டை அடிமைப்படுத்தி வைக்க எவ்வித உரிமையும் கிடையாது.

★ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்.

★ அறிவானது மனிதனுடைய வாழ்வின் அடித்தளம் ஆகும். ஆதலால், மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் ஆற்றலைக் கொண்டு நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே என்னுடைய இலட்சியம், சமூகத்தில் அங்கம் பெற்றிருக்கும் உறுப்பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும் அது தான் உண்மையான சகோதரத்துவமாகும்".

தூய்மை தொடர வேண்டும்!

தூய்மை வாழும் இடமே, காக்கும்
தெய்வம் வாழும் இடமாம்!
தூய்மை வாழும் இடமே, நோயும்,
துன்பமும் தோன்றா இடமாம்!

வீட்டின் உள்ளும் புறமும், தூய்மை
விளங்கச் செய்தல் நன்று! - அது,
வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது; நாளும்
செய்வோம் அப்பணி விரைந்து!

மனிதன் கண்ட அறிவி யலாலே,
வளரும் தொழில்களி னாலே...
இனிய நிலம், நீர், காற்று, வானம்
மாசுற்ற தே, இந் நாளே!

நீரும் நிலமும் காற்றும் வானமும்
தூய்மை கெடக் கூடாது! கெட்டால்,
ஊரும் உலகும் மக்களும் பிறவும்
ஒன்றுமே நிலைபெ றாது!

உற்ற உடலும் உயிரும் உலகும்
பிறவும் வாழ வேண்டும்! என்றால்,
சுற்றுப் புறத்தைச் சூழலைத் தூய்மை
செய்தல் தொடர்ந்திட வேண்டும்.

–கவிஞர் முருகுவண்ணன்

Phone: 60218 (Anthiyur Ex.)

சின்னபருவாச்சி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்., நெ. E.H. 110

சின்னபருவாச்சி செம்புலிச்சாம்பாளையம்
பவானி Tk - 638 302
பெரியார் மாவட்டம்

பவானி கிளை: 74, பழனியாண்டவர் கோவில் வீதி, பவானி

எங்களிடம் அனைத்து சைஸ் ஜமுக்காளங்கள் ஹால் கார்பெட்டுகள், பந்திசுருள் எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

ரகங்களில் புதுமை — குறைந்த விலை
நெசவில் நேர்த்தி — உத்திரவாதமுள்ளது
உழைப்பில் உறுதி — கெட்டிசாய ஜமக்காளங்கள்

R. சிவக்குமார், மேலாளர்
M. ரங்கசாமி, விற்பனையாளர்
A. எல்லப்பன், அப்ரைசர்
K. நாராயணன், ஆபீஸ் பாய்
கோ. கருணாநிதி B.Sc., H.D.c., கைத்தறி அலுவலர்/ தனி அலுவலர்

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ வெங்கடேஸ்வரா நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., E.H. 109

பருவாச்சிக்காட்டூர், பருவாச்சி - 638 302

விற்பனை நிலையம்:
245, காமாட்சியம்மன் கோவில் வீதி,
பவானி - 638 301
பெரியார் மாவட்டம்

எங்களிடம் அறை விரிப்புகள் (Hall Carpets) பந்தி ஜமக்காளம், அக்ரலிக் ஜமக்காளங்கள் மற்றும் 28 x 72, 34 x 72, 40 x 78, 46 x 84, 52 x 90, 60 x 90, சைஸ்களில், புதுமையான ரகங்களில் பவானி கெட்டிச்சாய ஜமக்காளங்கள் கிடைக்கும்.

ஈ. மோகனவேலு, பி.எஸ்ஸி.,டி.கோப்., மேலாளர்
க.வி. பாபுஜி, பி.காம்., கைத்தறி ஆய்வாளர்/ தனி அலுவலர்
ஒ.கு. ராமசாமி, இரா. வெங்கடாஜலபதி — பணியாளர்கள்

With best compliments from:

Phone: *67031*
67162
Grams: VEERATEE

V.R. TEXTILES LIMITED

Registered Office & Mills

Nallur-punjai Puliampatti - 638 459

Sathy Taluk

PERIYAR DISTRICT

Manufacturers of:

Deluxe Special Warp Cotton Yarn - Hanks & Cones

20ˢ, 40ˢ CARDED and *100s* COMBED

தமிழ்ச் சுவடி மீட்ட இராஜராஜன்

பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டிடும் பைந்தமிழ் மக்கள் வாழ்க்கை நெறிமுறைகளையும் பண்பாட்டுப் பெருமைகளையும் விளக்கும்வண்ணம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தமிழ்நாடு அரசால் படைக்கப்பட்ட 'இலக்கியச் சோலை' திரைக் காவியத்தில் ஒரு பகுதி **"தமிழ்ச் சுவடி மீட்ட இராஜராஜன்"**.

பங்கு பெற்ற கலைஞர்கள்

நடிகர்கள் : அர்ஜுன்
எம்.என். நம்பியார்
மலேசியா வாசுதேவன்
கலைஞானம்

நடிகை : ஜே.ஜி. சியாமளா
ஒப்பனை : முத்தப்பா
உடைகள் : ஆசிர்வாதம்
கலை : தோட்டா தரணி

படத் தொகுப்பு : பி.எஸ். நாகராஜ்
வசனம்
பாடல்கள் : புலவர் புலமைப்பித்தன்
ஒளிப்பதிவு : அப்துல் ரஹ்மான்
இசை : விஸ்வநாதன்-இராமமூர்த்தி

தயாரிப்பு ஒருங்கிணைப்புக் குழு:
எஸ்.பி. முத்துராமன், ரமேஷ் பிரசாத்

தயாரிப்புப் பொறுப்பு:
எம். சரவணன்,
எம். பாலசுப்பிரமணியம்,
எம்.எஸ். குகன்

தயாரிப்பு: இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

திரைக்கதை - இயக்கம்:
ஆர்.வி. உதயகுமார்

காட்சி - 1

(தஞ்சைப் பெரிய கோவில் கோபுரம் கம்பீரமாகப் பின்னணியில் தோற்றமளிக்க மாமன்னன் இராஜராஜன் புடைசூழ நடந்து வந்து கொண்டிருக்கிறான்.)

ஒருவன்: மாமன்னர் இராஜராஜ சோழர்!

மக்கள்: வாழ்க! வாழ்க!

(மாமன்னன் இராஜராஜன் வீரமிகு நடை பயில பின்னணியில் குரல் ஒலிக்கிறது.)

இந்த இராசராசன்-

பொங்கு கடல் கடந்த பூமி எல்லாம் தன் காலில் விழ வைத்திட்டவன், தஞ்சை

மண்ணின் மங்காத புகழுக்கு விஞ்ஞான வித்திட்டவன், கோபுரத்தின் நிழல் மண்ணில் விழாதபடி கோயிலைக் கட்டினான். எட்டுத் திக்கும் தன் புகழ் நிலைக்க வெற்றிமுரசு கொட்டினான். மறைக்கதவு திறந்த தேவாரத் திருமுறைகள் பூட்டி வைக்கப்பட்டிருந்த தில்லை நடராசர் கோவிலின் அறைக் கதவு திறந்து தமிழுக்கு விடுதலை கொடுத்தான்.

(மாமன்னன் இராஜராஜனின் வீரத்திற்கும் தீரத்திற்கும் ஈடுசெய்யும் கம்பீரம் இதுதானோ என்னும் வகையில் தஞ்சை பெரிய கோயில் கோபுரம் நம் கண் முன்னே எழுகிறது.)

(காட்சி முடிவு)

காட்சி - 2

(**இடம்:** மன்னன் அரசவை

பாத்திரங்கள்: மாமன்னன் இராஜராஜன், கருவூர்த் தேவன், அமைச்சர் மற்றும் அரசவைப் பெருமக்கள்.)

இராஜ: ம்... கருவூர்த் தேவரவர்களே

கருவூர்த் தேவன்: அரசே

இராஜ: பெரிய கோயில் கட்டுமானப் பணிகளை நாம் பார்த்துக் கொண்டிருந்த போது ஒருவர் பாடினாரே அந்தப் பாடல் தங்கள் கவனத்தில் இருக்கிறதா?

கரு: இருக்கிறது அரசே

இராஜ: அந்தப் பாடலை ஒரு முறைப் பாடமுடியுமா?

கரு: மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

இராஜ: ஆகா... ஆகா... மிக்க மகிழ்ச்சி. இந்தப் பாடலை இயற்றியது யாரென்று தங்களுக்குத் தெரியுமா?

கரு: அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் தேவாரத்தில் உள்ள பாடல் அரசே இது.

இராஜ: அடடா! கருத்துத் தேனூறும் பாடல். ஆமாம் இந்தப் பாடல்கள் முழுவதுமாகத் தங்களுக்குத் தெரியுமா?

கரு: வேந்தே ஒரு சில பாடல்கள்தான் எனக்குக் கிடைத்தன.

இராஜ: அனைத்தும் அறிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?

கரு: மன்னா! திருநாறையூரில் நம்பியாண்டார் நம்பி என்று ஒருவர் இருக்கிறார். அவர் ஒருவருக்குத்தான் எஞ்சிய பாடல்களைப் பற்றித் தெரியும்.

இராஜ: மகிழ்ச்சி... மிக்க மகிழ்ச்சி... அப்படியானால் திருநாறையூருக்கு ஆள் அனுப்பி அவரை அழைத்து வரச் சொல்வோம் அமைச்சரே!

அமைச்சர்: அரசே

இராஜ: ம்... வேண்டாம்... வேண்டாம்...

தில்லை நடராசர் கோயிலில் பூட்டி வைக்கப்பட்டிருந்த . மூவர் அருளிய தேவாரப் பாடல்களைத் தன் மதி நுட்பத்தால் மீட்டு உலகெங்கும் ஒலிக்கச் செய்த இராசராசனின் தமிழ்ப்பற்று

நாளைக் காலை நாமே திருநாறையூருக்குச் செல்வோம். அவரை நேரில் காண்போம்.

அமை: அரசே! தாங்களோ மாமன்னர்! எட்டுத்திசை வெற்றிக் கொடி நாட்டிய வேந்தர். கடல் கடந்து நாடுகளில் உள்ள மன்னர்களெல்லாம் தங்கள் காலடியில் வந்து கப்பம் செலுத்துகிறார்கள்.

இராஜ: அதனால்...

அமை: அப்படிப்பட்ட தாங்கள் அங்கே சென்று அவரைக் காண வேண்டுமா என்றுதான்...

மன்னன்: சிரித்தவாறு

இராஜ: அமைச்சரே! கடல் கடந்து சென்றதும் வென்றதும், மாற்றார் கப்பம் செலுத்த இங்கு வந்ததும், இந்தத் தமிழ்ச் சோழன் இராசராசனின் வீரத்திற்கான அடையாளம். ஆனால், ஒரு தமிழாய்ந்த சான்றோரை இந்த இராசராசன் நேரில் சென்று காண்பதுதான் தமிழை மதிக்கக் கற்றுக்கொண்ட அறிவுக்கும் பண்புக்கும் அடையாளம்.

என்னைத் தேடி வந்து காண்பது பலருக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனால், நம்பியாண்டார் நம்பியை நாம் தேடிச் சென்று பார்ப்பதுதான் நமக்குப் பெருமை. நம் தமிழுக்குப் பெருமை!

(காட்சி முடிவு)

காட்சி - 3

(**இடம்:** நம்பியாண்டார் நம்பிகளின் குடில்

பாத்திரங்கள்: மாமன்னர் இராஜராஜ சோழன், குந்தவைப் பிராட்டி, நம்பியாண்டார் நம்பிகள், கருவூர்த்தேவர்.)

நம்பி: சோழப் பேரரசே! மன்னர் மன்னா!

இராஜ: வணங்குகிறேன் நம்பியாண்டாரே.

நம்பி: அடியேன் மிகவும் எளியேன். இந்த எளியேனைத் தேடித் தாங்கள் வருவதா?

இராஜ: நான் தங்களைத் தேடி வந்ததில் வியப்பென்ன இருக்கிறது? கொற்றவனின் செங்கோலும், தமிழ் கற்றவர்- புலமை பெற்றவர் எழுதுகோலுக்கு இணையாவதில்லை! தங்களுக்கு முன்னே நான்தான் எளியவன்.

நம்பி: தாங்கள் இங்கு வந்தது யான் பெற்ற பேறு

இராஜ: ஆம்... எனக்கும் அப்படித்தான். மூவர் பாடிய தேவாரத்திலிருந்து ஒரு பாடலை நான் கேட்கும் பேறு கிடைத்தது. பாடியவருக்கு ஓரிரு பாடல்கள்தான் கிடைத்தனவாம். எஞ்சிய பாடல்களைத் தாங்கள்தான் அறிவீர்கள் என்று கருவூராரும் என் தமக்கையாரும் சொன்னார்கள்.

நம்பி: எஞ்சிய பாடல்கள் அனைத்தும்



எனக்குத் தெரியாது அரசே! ஆனால் அவை எங்கிருக்கிறது என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

இராஜ: சொல்லுங்கள். எங்கேயிருக்கின்றன?

நம்பி: தில்லையில்

இராஜ: தில்லையிலா?

நம்பி: ஆம். மன்னவா! அனாதிகாரம் போல் ஆடிக் கொண்டிருக்கிற எம்பெருமானின் திருக்கோவிலில், பொற்சிலைக்கு அருகிலுள்ள ஒர் அறையில் இந்த அரிய ஏடுகளைப் பூட்டி வைத்திருக்கிறார்கள்.

குந்தவை: தில்லைவாழ் அந்தணரிடம் அனுமதி பெற்றுத் தாங்கள் அவற்றை வாங்கியிருக்கலாமே!

நம்பி: குந்தவை பிராட்டியாரே... யானும் அவர்களிடம் பலமுறை பணிந்து

சீராரும் திருமுறைகள்
கண்டதிரு பார்த்திபனாம்
ஏராரும் இறைவன்

- திருமுறை கண்ட புராணம்

விண்ணப்பித்தேன். அப்படி விண்ணப்பித்தும்...

இராஜ: விண்ணப்பித்தும்...

நம்பி: பாடிய மூவரும் வந்து கேட்டால் தான் ஏடுகளைத் தருவோம் என்கிறார்கள்.

இராஜ: அப்படியா சொன்னார்கள்?

நம்பி: ஆம். ஆண்டவன் திருவடிகளைச் சேர்ந்து விட்ட அவர்களை அடியேன் எப்படி அழைத்துச் செல்ல முடியும்?

இராஜ: சரி. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். என்றும் இறக்காத தேவாரத் திருப் பாடல்களைப்பூட்டிவைத்துள்ள அந்தத் திறக்காத கதவுகளை நான் திறக்க வைக்கிறேன்.

(காட்சி முடிவு)

காட்சி - 4

(**இடம்:** தில்லை திருக்கோயில்

பாத்திரங்கள்: இராஜராஜ சோழன், நம்பியாண்டார் நம்பிகள், அமைச்சர், தில்லை திருக்கோயில் குருக்கள்)

(திருக்கோயிலில் குருக்கள் நடராஜருக்கு தீபாராதனை காட்டுகின்றார். தெய்வ சன்னதிக்கு மாமன்னன் இராஜராஜன் வருகின்றான். அவருடன் தெய்வ சன்னதிக்கு நம்பியாண்டார் நம்பிகளும் வருகின்றார். தீபாராதனைத் தட்டை குருக்கள் காட்ட மன்னவரும் மற்றவரும் ஆண்டவனைத் தரிசிக்கின்றனர். பின்னர்... ...)

குரு: சோழச் சக்கரவர்த்தி தில்லைக்கு விஜயம் செய்தது நாங்கள் செய்த பாக்கியம். அரசர் வருவதாக முன்னமேயே தூது வந்தது...

இராஜ: மூவர் அருளிச் செய்த தேவாரத் திருப்பாடல்களின் ஏட்டுச் சுவடிகள் இங்கே பூட்டி வைக்கப்பட்டிருப்பதாக அறிந்தோம். அதை வாங்கிச் செல்லவே நாம் இங்கு வந்தோம்.

குரு: மன்னர் என்னை மன்னிக்க வேண்டும். அவற்றை...

இராஜ: தேவாரம் பாடிய மூவரும் நேரில் வந்தால்தான் சுவடிகளைத் தருவீர்கள் என்பதையும் அறிந்தோம்.

குரு: ஆம்! மன்னவா!

இராஜ: அவர்கள் வந்திருக்கிறார்கள்.

குரு: ம்... அரசே!

இராஜ: அமைச்சரே... முக்கண் முதல்வரின் திருத்தொண்டர்களாம் அந்த மூவரையும் அழைத்து வாருங்கள்.

(எழிலுடன் அமைந்த மூன்று பல்லக்கு களைப் பல்லக்குத் தூக்கிகள் தோளில் சுமந்து வருகின்றனர்.)

இராஜ: வாருங்கள் குருக்களே. இதோ பாருங்கள்...

(அழகுடன் நிற்கும் அப்பர் சிலையைக் காட்டி)

கண்ணுதற் பெருங்கடவுள், கல்லைச் சிற்பமாக்கி அருளியது இந்த அப்பருக் காகத்தான்!

(சிங்காரக் கோலமுடன் நிற்கும் சுந்தரர் சிலையைக் காட்டி)

பாரும் சொற்றமிழ் பாடும் சுந்தரர். தொண்டர் நாதனான நீலகண்டன், காதலுக்குத் தூது போனது இந்த சுந்தரருக்காகத்தான்.

(ஞானத் திருவிளக்காம் சம்பந்தர் சிலையைக் காட்டி)

அந்தப் பார்வதி தேவியே தாயாகி ஞானப்பால் கொடுத்தது இந்த ஞான சம்பந்தருக்குத்தான்!

இப்போது தாங்கள் அந்த திறவுகோலைத் தரலாமல்லவா?

குரு: அரசே... பொன்னாலான இந்த விக்கிரகங்களை ஜீவனுள்ள மூவரென்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இராஜ: என்ன சொன்னீர்? இவை வெறும் சிலைகள்தானா? அப்படியென்றால் அனாதிகாலந்தொட்டு இந்த அம்பலத்தில் ஆடிக் கொண்டிருக்கிறானே ஆண்டவன் அவனும் சிலைதான்! அவனுக்கு உயிர் இருக்கிறதென்றால், இந்தச் சிலைகளுக்கும் உயிர் இருக்கிறது. அவனை, சிலை வடிவில் நிற்கும் அந்தச் சிவனை, நீங்கள் தெய்வமென்று ஏற்றுக் கொள்வது உண்மையென்றால் இந்தத் திருத்தொண்டர்களும் உயிருடன் இருக்கிறார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!

குரு: அரசே, என்னை மன்னித்து விடுங்கள்.

(தேவாரச் சுவடிகள் வைக்கப்பட்டிருக்கும் அறையின் சாவியைக் குருக்கள் தனது இடுப்பிலிருந்து எடுத்து மன்னனிடம் கொடுக்கிறார்.)

(காட்சி முடிவு)

காட்சி - 5

(**இடம்:** திருக்கோயிலின் ஒரு அறை. தும்பும் தூசும் எங்கும் நிறைந்திருக்கிறது. ஒருபுறம் ஓலைச் சுவடிகள் தாறுமாறாகக் குவிந்து கிடக்கின்றன. அறை முழுவதும் சிலந்தி வலை அடை அடையாய்ப் பின்னிக் கிடக்கின்றது.

பாத்திரங்கள்: இராஜராஜ சோழன், நம்பியாண்டார் நம்பிகள்)

இராஜ: அடடா... எத்தனை ஓலைச் சுவடிகளைக் கரையான் அழித்திருக்குமோ தெரியவில்லையே! நம்பியாண்டாரே! பிடியுங்கள்

நம்பி: அரசே, தேவாரம் ஒலிக்கும் இடமெல்லாம் தங்கள் திருநாமம் எதிரொலிக்கும்!

இராஜ: எந்நாட்டவருக்கும் இறைவனான தென்னாடுடைய சிவனின் திருக்கோயில்கள் தோறும் இனித் தேவாரம் முழங்கட்டும்.

(பின்னணியில் பாடல் ஒலிக்கின்றது)

தீந்தமிழ்ப் பாட்டும்
பூந்தென்றல் காற்றும்
என்றென்றும் இவன்புகழ்
பாடிக் கொண்டே இருக்கும்.

(திரை)



Phone: Off: 30482

Res: 61069

With best compliments from

OBLI SPINNING MILLS (P) LTD.,

METTUR MAIN ROAD,
KURUPPANAICKEN PALAYAM

BHAVANI - 638 302

With best compliments from:

INTIME TEXTILE LIMITED

A LEADING TEXTILES ROTARY SCREEN PRINTING IN

- HOSIERY
- COTTON FABRICS
- MAN-MADE FABRICS
- VISCOSE
- EXPORT GARMENTS
- SPECIALIST IN TUBLAR FORM
- HOSIERY PRINTING

Contact:

394, Dharapuram Road,
TIRUPUR - 641 604
Phone: 0421-713114
713116
713117

Factory:

S.F. No.19/2, K.N. Palayam,
Urachikottai - 638 302
BHAVANI Tk
Phone: 04256 - 21770, 30319

Telex: 0858-9393 TUBE IN
Fax: 0421-30596



பூஜைப் பொருள் கண்காட்சி

தெய்வீக மணம் கமழும்!
ஒருமைப்பாட்டு உணர்வு மிகும்!

அந்தப் பஞ்சலோகத் திரு உருவச் சிலைகளைப் பார்க்கும் போது, திருக்கோயிலுக்குள் வந்துவிட்டோமோ என்கிற பிரமையே ஏற்படுகிறது.

அந்தப் பூஜை மணிகளைப் பார்க்கிற போது, கோயில் மணியோசை காதில் விழுகிற மாதிரி ஒரு உணர்வு ஏற்படுகிறது.

சென்னை அண்ணாசாலையில் உள்ள, காதி கிராமோத்யோக் பவன் சார்பில் நடைபெறும் தெய்வீகப் பூஜைப் பொருள்கள் கண்காட்சியில்தான், இந்தக் கண்கொள்ளாக் காட்சி!

பஞ்சலோகச் சிலைகள் தவிர, பஞ்சலோகத்தில் வெள்ளி முலாம் பூசப்பட்ட 'ராமர் செட்' கண்ணைக் கவர்கிறது. இது பெங்களூரில் தயாரானது. இதன் விலை எவ்வளவு தெரியுமா? ரூ.14,000.

ஜெய்ப்பூரில் உருவான செப்புத் தம்ளர்கள், பம்பாயிலிருந்து வரவழைக்கப்பட்ட வலம்புரிச் சங்குகள் ஆகியவை நம் மனத்தை வெகுவாகக் கவர்கின்றன.

"ஒவ்வொரு வீட்டிலும் வலம்புரிச் சங்கு இருக்க வேண்டியது அவசியமாகும். வலம்புரிச் சங்கும், துளசியும் இருக்கும் இடமெல்லாம், லட்சுமி வாசம் செய்வாள் என்று பாகவதம் கூறுகிறது" என்கிற வாசகங்கள், வலம்புரிச் சங்கின் மகிமையினை நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

நேபாள நாட்டின் உருத்திராட்சங்கள், நம் உள்ளத்தைத் தொடுகின்றன. 'கௌரிசங்கர்' என்னும் ஒருவகை உருத்திராட்ச மணிகள், மற்றும் உருத்திராட்ச வெள்ளித் துளசி மணிமாலைகள் குஜராத்தில் தயாரிக்கப்பட்ட ஸ்படிகத்தினாலான விநாயகர், லிங்கம், மேரு, மற்றும் மாலைகள் ஆகியவை நம் கண்ணைப் பறிக்கின்றன.

வருகின்றனர். முன்பு மலைச் சரிவுகளில் வாழ்ந்துவந்த இவர்கள், வனச் செடிகள் அங்கு வைக்கப்பட்டதால் நிலப்பரப்புக்கு வந்து குடிசை போட்டு வாழ்கின்றனர். இருளர்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்றனர். பலதார மணம் இல்லை. மணமகன் இறந்துவிட்டால் மறுமணம் செய்துகொள்ளும் வழக்கமுண்டு.

இருளர் தங்களுக்கென ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இவர் ஊர்க் கவுண்டர் என அழைக்கப்படுகிறார். இவர் கணவன் மனைவியரின் தகராறைத் தீர்த்து வைக்கிறார். திருமணம் நடக்கும்பொழுது ஊர்க் கவுண்டர் முக்கியப் பொறுப் பேற்று நடத்திவைக்கிறார். பஞ்சாயத்து அந்தக் கிராமத்திலுள்ள பெரும் பாறையிலேயே நடக்கின்றது. அனைவரும் கலந்துகொள்கிறார்கள். இருளர் பெரும்பாலும் தேன் சேகரித்தல், இருளக்கிழங்கு தோண்டுதல், வேட்டையாடுதல் என்பனவற்றை மலைமேல் இருக்கும் பொழுதே தொழிலாகக் கொண்டிருந்தனர்.

கீரியும் முயலும் முள்ளம் பன்றியும் அணிலும் உணவாகும்

வேட்டையாடும்பொழுது கீரிப்பிள்ளை, முயல், காட்டெலி, முள்ளம்பன்றி, அணில் ஆகியவற்றைப் பிடித்து உணவாகவும் சாப்பிடுகின்றனர். பிற நேரங்களில் அவற்றை விற்றும் வாழ்ந்து வருகின்றனர். எலி பிடிக்கும்பொழுது குழி தோண்டி அதில் சட்டி ஒன்றை வைத்து புகைமூட்டிப் பிடிக்கின்றனர். சில சமயங்களில் அணில், கீரிப்பிள்ளை, முயல், முள்ளம்பன்றி ஆகியவற்றைப் பிடிக்க கம்பி வலை மற்றும் நூல் வலைகளைக் கட்டிவைத்துப் பிடிக்கின்றனர். பாம்புகளையும் முன்பு பிடித்துவந்தனர்.

தற்சமயம் இவர்கள் மலையிலிருந்து கீழே வந்து நிலப் பரப்பில் வாழ்வதால் பயிர்த் தொழில் செய்தும், விறகுவெட்டி சேகரித்து விற்றும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

காட்டு முனியப்பனே கண்கண்ட தெய்வம்

இவர்கள் காட்டு முனியப்பனைக் குலதெய்வமாகக் கொண்டுள்ளனர். மற்ற இந்துக்கள் பண்டிகைகளான பொங்கல், தீபாவளி ஆகியவற்றையும் கொண்டாடுகின்றனர்.

இருளர் 'தமிழ்' மொழியிலேயே பேசுகின்றனர்.

இவர்கள் இறந்தவர்களைப் புதைத்து விடுகின்றனர். இறந்த 11-ஆம் நாள் தலைமகன் மொட்டை அடித்துக்கொள்ள வேண்டும். இறந்தவர்கள் வீட்டிற்கு 11-ஆம் நாள் வரும் உறவினர்கள் அரைப் படி அரிசி, தேங்காய் இவற்றைக் கொண்டு வருவர். இறந்தவர்கள் குடும்பத்திற்கு மட்டும் கோழி அடித்து சாப்பாடு பரிமாறுவர். குடும்பத்தில் ஆண் இறந்து விட்டால் அப்பெண் வெள்ளைச் சேலை உடுத்தவேண்டும். பூ, நகை இவற்றை அணியக் கூடாது.

வெள்ளெருக்கன் வேரால் பாம்புக் கடிக்கு வைத்தியம்

இவர்கள் முடிந்த அளவு மருத்துவர் உதவி இல்லாமலேயே நோயைக் குணப்படுத்த முயலுகின்றனர். இயற்கை வைத்திய முறையையே கையாளுகின்றனர். கூடுமரப்பட்டை

என்ற ஒரு பட்டையை அடிபட்டால் தேய்த்துச் சரிசெய்து கொள்ளுகின்றனர். மற்ற நேரங்களில் மருத்துவர்களை நாடுகின்றனர். பாம்புக் கடிக்கு வெள்ளெருக்கன்வேர் கொண்டு வைத்தியம் செய்கின்றனர்.

இக்கிராமத்தில் வசிக்கும் இருளர் மாணவர்கள் இங்குள்ள ஆரம்பப்பள்ளியில் 15 பேரும், காவேரிபட்டினத்திலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 8 பேரும் அரசு மானியத்தில் படிக்கின்றனர். அரசுப் பணியில் இன்னும் யாருமில்லை.

மாலையிட்டுத் தேன் அறுக்கும் அண்ணன்மாரும் தம்பிமாரும்

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும், மலை மக்களாகிய இருளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முக்கியமாக இருளர்கள் மலைவாழ் மக்கள் எனச் சான்றிதழ் இவ்வட்டத்தில் தான் முதன் முதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அரசு மானியம் மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றில் இவர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது. இலவச மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இம்மக்கள் தேன் எடுக்கச் செல்லும்போது பாடும் பாடல்களில் சில வரிகள் வருமாறு:

"தேன் அழிக்கப் போறோம்
அண்ணன்மாரே
தேன் அழிக்கப் போறோம்
அண்ணன்மாரே
ஏழு பேரு அண்ணன் மாரே
தேன் அழிக்கப் போறோம்
அண்ணன்மாரே
தேன் அழிச்சி கொடி புடுங்கி
மாலை பின்னலாம்
தம்பி மாரே,
மாலை பின்னி தேங்கல் மலையில்
மாலையிடணும்,
மாலைவிட்டுத்
தேன் அறுக்கப்போகலாம்
தம்பி மாரே"

இம்மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அரும்பொருள்கள் விரைவில் கிருட்டிணகிரி அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ☹

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா!'

வாழ்க்கை என்னும் வானத்திலே ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சுவது பெண் என்னும் ஞாயிறுதான். அந்த ஞாயிறு இல்லையேல், வாழ்வு வறண்ட பாலைவனமாகும்.

- வெப்ஸ்டர்

பெண், கணவனின் அடிமை அல்லள். அவள் அவனுடைய தோழி. அவன் உடலின் பாதி.

- காந்தியடிகள்

✷ பெண்களின் நிலை உயர்த்தப்பட்டால் அவர்களுடைய குழந்தைகள் மேலான செயல்களைச் செய்து நாட்டின் பெயரை மகிமைப்படுத்துவார்கள். அப்போது தான் பண்பாடு, கல்வி, ஆற்றல், பக்தி ஆகியவை நாட்டில் மலரும்.

✷ மங்கையரின் நிலைமை வளர்ச்சியடைந்தாலன்றி, உலகம் நலம் பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. பறவை ஒரே ஒரு சிறகைக் கொண்டு பறப்பது என்பது இயலாத காரியம். சமுதாயம் என்ற பறவைக்கு ஆண், பெண் ஆகியோர் இருவரும் இரண்டு சிறகுகள் போன்றவர் ஆவர்.

✷ பெண்களுக்குச் சரியான கல்வி புகட்டப்படுமானால் அவர்கள் உலகத்திற்கே மிகச் சிறந்த இலட்சியப் பெண்களாக உருவெடுப்பார்கள்.

✷ சமயம், கலைகள், சுகாதாரம் இப்படிப்பட்ட எளிமையான பாடங்களை நமது பெண்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

- சுவாமி விவேகானந்தர்

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் 9 பெண்களும், தி.மு.க. சார்பில் 9 பெண்களும், இப்போது மூன்றாகப் பிரிந்து நிற்கின்ற காங்கிரஸ் கூட்டணி சார்பில் 7 பெண்களும், கம்யூனிஸ்ட் (மார்க்) சார்பில் 5 பெண்களும், ம.தி.மு.க. சார்பில் 5 பெண்களும், பா.ம.க. சார்பில் 3 பெண்களும், பா.ஜ.க. சார்பில் 5 பெண்களும், ஜனதா கட்சி சார்பில் ஒரு பெண்ணும் போட்டியிடுகிறார்கள்.

வெள்ளெருக்கு வேரினால் ஆன விநாயகர், பாதரசத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ரசலிங்கம், விநாயகர், குபேர யந்திரம், ரசமணி ஆகியவற்றைப் பார்க்கிறபோது கைவினைஞர்களின் கைவண்ணம் பளிச்சிடுகிறது.

அழகிய குத்து விளக்குகள், ஆராதனைத் தட்டுகள், பஞ்சதுள்ளது. அத்துடன் சிவலிங்கம் போன்ற உருவங்களும் தென்படுகின்றன. இந்தக் கல்லைப் பூஜிப்பதால் பாவ வினைகள் நீங்கும் என்பது நம்பிக்கை!

வந்துள்ள ஒயிட் மெட்டலில் ஆன மண்டபங்களும் மனத்தில் இடம்பெறுகின்ற கலைப் பொருள்களாகும்.

சென்னை நகரில் காதிபவன் சார்பில் முதன் முதலாக இந்த தெய்வீகப் பூஜைப் பொருட்கள் கண்காட்சி நடத்தப்படுவது

'கல்லுக்குள் ஈரம்' என்பார்கள், ஆனால், 'கல்லுக்குள் அதிசயம்' ஒன்றை இங்கே காண்கிறோம்.

'சாளாகிராமம்' என்பது ஒரு வகைக் கல். இந்தக் கல்லில் அதாவது உடைந்த இந்தக் கல்லின் உள்ளே இயற்கையாகவே சக்கரம் அமைந்

ஆரத்திகள், மணைகள், மணிகள், ஊது சங்குகள் இவையெல்லாம் கண்ணுக்கு விருந்தாய் உள்ளன.

கண்ணாடி வேலைப்பாடுகள் கொண்ட மண்டபங்கள், கும்பங்கள், முதலானவையும், மைசூரிலிருந்து வந்துள்ள ரோஸ் வுட்டினால் ஆன மண்டபங்களும், ராஜஸ்தானிலிருந்து

குறிப்பிடத்தக்கது. இந்தக் கண்காட்சி மே மாதம் 18-ந் தேதி வரை நடக்கிறது.

பல மாநிலங்களில் உருவான கலைப் பொருள்களையெல்லாம் ஒரே இடத்தில் பார்க்கிறபோது தெய்வீக உணர்வும், ஒருமைப்பாட்டு உணர்வும் மேலோங்கி நிற்கிறது!

–பி.வி.ஜி.

அட்டைப்படவிளக்கம்

முதலாம் அட்டை:

வண்ண ஓவியம்
திரு வி.எஸ். சதீஸ்குமார்
அரசு கலைத் தொழில் கல்லூரி, சென்னை

இரண்டாம் அட்டை:

புகைப்படம்:
திரு என். அனந்தகிருஷ்ணன்

நான்காம் அட்டை:



1. காந்திமண்டபம், கன்னியாகுமரி
2. மாமல்லபுரக் கற்கோவில்
3. அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயம், மதுரை
4. உதகை எழில்மிகு காட்சி
5. விவேகானந்தர் பாறை, கன்னியாகுமரி
6. அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில் மலைக்கோட்டை, திருச்சி
7. அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயில், திருப்பரங்குன்றம்

படங்கள் உதவி: சுற்றுலாத்துறை

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் காப்பாட்சியராகப் பணியாற்றிவரும் திரு ப.காசிலிங்கம் அம்மாவட்டத்தில் வாழ்கின்ற மலையின மக்களான இருளர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வை இக்கட்டுரையில் விளக்குகிறார்.

தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள்:

இயற்கையோடு இயைந்த இருளர்களின் இனிய வாழ்வு

ப. காசிலிங்கம்

தருமபுரி மாவட்டம் 1965-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் முதல் தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது. இம்மாவட்டத்தில் 10 வட்டங்கள் தற்சமயம் உள்ளன. இம்மாவட்டத்தில் பல்வேறு வகையான இன, மத, மொழி பேசும் மக்கள் ஒன்றாகக் கூடி வாழ்கின்றனர்.

மலைப்பகுதி அதிகம் மலைவாழ் மக்களும் அதிகம்

இம்மாவட்டத்தைச் சுற்றி மலைகள் ஏராளமாக உள்ளன. இதன் காரணமாக இங்கு குளிர் மிகவும் அதிகம். அதேசமயத்தில் மழை குறைவு. இருந்தாலும் இருக்கின்ற நீரை வைத்து மக்கள் பயிர்த் தொழிலில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் தென்பெண்ணை ஆறு, காவிரி மற்றும் சிற்றாறுகள் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தைச் சுற்றி மலைப்பகுதி அதிகமாக இருப்பதால் மலைவாழ் மக்கள் இங்கு அதிகம் வாழ முடிகிறது. இம்மாவட்டத்தில் குறும்பர்கள், இலம்பாடிகள், இருளர்கள் வாழ்கின்றனர். இம்மக்கள் கிருட்டிணகிரி, அரூர், ஊத்தங்கரை, பாலக்கோடு, பென்னாகரம், ஓசூர், தேன்கனிக்கோட்டை ஆகிய வட்டங்களில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர், கிருட்டிணகிரி வட்டத்தில் பனக்கமுட்லு இருளர் வாழும் பகுதிக்குப் பயணம் மேற்கொண்டு அவர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை ஆய்வு செய்யப்பட்டது. அவர்களின் கைவினை அரும்பொருள்கள் கிருட்டிணகிரி மற்றும் சென்னை அருங்காட்சியகங்களின் கண்காட்சிக்காகச் சேகரிக்கப்பட்டன.

தொட்டியம்மன் மலையடிவாரம் இருளர்களின் இனிய வாசம்

இக்கிராமம் காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ளது. காவேரிப்பட்டினத்திலிருந்து 8 கி.மீ. தூரத்திலுள்ள 'தொட்டியம்மன் மலை' என்ற மலையடிவாரத்தில் இவர்கள் தற்சமயம் வசித்துவருகின்றனர்.

இக்கிராமத்தில் சுமார் மொத்தம் 43 குடும்பங்கள், 30 குடிசைகளில் வாழ்ந்து

கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி வளர்ச்சிப் பணிகள்

இந்நகராட்சியில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன

	முடிவுற்ற பணிகள்	மதிப்பீடு இலட்சத்தில் (ரூ)
1.	தெருவிளக்கு வசதி அபிவிருத்தி செய்யும் பணி	6.51
2.	சாலைப் பணிகள்	14.48
3.	வடிகால் கட்டும் பணி	13.17
4.	கழிவுகள் அகற்ற லாரிகள் வாங்கும் பணி	13.44
5.	பெரியார் மைதானம் அருகே கீரிப்பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்டும் பணி	6.50
6.	குடிநீர் விநியோகம் சீர்படுத்தும் பணி	15.25
7.	ஈரோடு - சத்தி சாலையின் இருபுறமும் குடிநீர் விநியோகக் குழாய் அமைக்கும் பணி	15.00
	நடைபெற்றுக் கொண்டுள்ள பணிகள்	
1.	பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம் மற்றும் பேருந்து நிற்குமிடம் கட்டுதல்	6.63
2.	பேருந்து நிலையத்தில் கடைகள் மற்றும் உறைவிடங்கள் கட்டுதல்	13.22
3.	பழைய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் வணிக மையம் கட்டுதல்	58.11
	துவக்கப்பட உள்ள பணிகள்	
4.	பழைய லாரி நிலையத்தில் கடைகள் வளாகம் கட்டுதல்	9.44
	மொத்தம்	171.75

1995-96 வருடத்தில் அரசு மானியத்தில் நடைபெற்று வரும் பணிகள்

1.	சிறப்பு மானியத்தில் சாலைப் பணிகள்	25.00
2.	பாதிக்கடன் - பாதி மானியம் திட்டம்	5.00
3.	தீவிரப்படுத்தப்பட்ட குடிசைப்பகுதி அபிவிருத்தித் திட்டம்	3.00
4.	ஒருங்கிணைந்த பிற்படுத்தப்பட்ட பகுதி அபிவிருத்தித் திட்டம்	2.00
5.	மழைநீர் வடிகால் கட்டும் பணிகள்	5.00
	மொத்தம்	40.00

மேற்கண்ட பணிகள் நடைபெற அனுமதி அளித்து நகர மேம்பாட்டிற்கு வழிவகை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் மேற்படித் திட்டம் இந்நகருக்கு வர உறுதுணையாக இருந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்நகராட்சி பொதுமக்கள் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. இராஜநாயகம், எம்.எஸ்சி., எம்.பில்.,
நகராட்சி ஆணையாளர்
[illegible]செட்டிபாளையம் நகராட்சி

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்வில் ஒளி விளக்கேற்றிடுவோம்

ஒரு வீட்டில் குழந்தை பிறக்கும் போது குடும்பத்தில் எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. எல்லோருக்கும் ஒரே. கொண்டாட்டம். குழந்தை வளர வளர, இளம் பெற்றோர் அதன் ஒவ்வொரு அங்க அசைவு களையும் பார்த்துப் பார்த்து பூரித்துப் போகின்றனர். ஆசைக் கனவுகளும் கூடவே வளர் கின்றன. 'என் குழந்தை வளர்ந்து வருங்காலத்தில் பெரிய கம்ப்யூட்டர் எஞ்சினியராக ஆவானா? உலகம் போற்றும் விளையாட்டு வீரனாகத் திகழ் வானா? என் மகள் ஒரு சிறந்த டாக்டராக வருவாளா? என் றெல்லாம் சிந்தனை சிறகடித்துப் பறக்கிறது.

குறைகொண்ட குழந்தையால் குமுறுமே தாயின் இதயம்!

குழந்தையின் வருங்காலத்தைப் பற்றி இப்படியெல்லாம் கற்பனை செய்து இன்புறுவது இயற்கைதான். ஆனால், எல்லாக் கனவுகளும் நனவாகிவிடுவ தில்லை. சில குழந்தைகள் வளரும்போது அவற்றின் நடவடிக்கைகளில் ஏதோ குறை இருப்பதை முதல் முதலில் காணும் தாய் திடுக்கிடுகிறாள். குழந்தையின் தசை இயக்கத் திலும் சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ளும் விதத்திலும் குறைகள் இருப்பது தெரிய வருகிறது. தனது குழந்தை இயல்பான முறையில் இல்லை என்பதை உணரும் தாய் பதைபதைக் கிறாள். பயந்து, செய்வதறியாமல் திகைக்கிறாள்.

துணிவு வேண்டும் துவள வேண்டாம்

தங்களுக்குப் பிறந்தது மன வளர்ச்சி குன்றிய குழந்தை என்பதை இளம் பெற்றோர் அறியும்போது, எதிர்காலம் பற்றி கட்டிய கோட்டைகளெல்லாம் சரிந்து போகின்றன. மன வளர்ச்சி குன்றிய குழந்தையை வாழ்நாள் முழுவதும் கட்டிக் காக்க வேண்டுமே என்ற பெரிய பொறுப்புணர்வு குடும்பத்தில் மிகுந்த மனபாரத்தையும், குழப் பத்தையும் ஏற்படுத்திவிடுகிறது. இந்த அதிர்ச்சியிலிருந்து மீள பல மாதங்கள், ஏன், சில வருடங்கள் கூட ஆகலாம். ஆனால், அதற்காக ஒரேயடியாகத் துவண்டுபோகத் தேவையில்லை.

> **"நமது சமுதாயத்தின் நலிவுற்ற மக்களிடம் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறோமோ அதைக் கொண்டுதான் நமது நாகரிகத்தின் வளர்ச்சியை அளவிட முடியும்"**
>
> **–பெர்ள்'ஸ் பக்.**

தவறான கருத்துக்களால் தங்கத்தைத்தவிக்கவிடலாமா?

மனவளர்ச்சி குன்றிய குழந்தைக்குச் சரியான பயிற்சி கொடுத்தால், அது தனக்குரிய திறமையை எட்டுவதில் உதவ முடியும் என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். 'மனவளர்ச்சி குன்றிய குழந்தை களுக்கு எந்த திறமையும் கிடையாது; ஆகவே அவர் களுக்கு வாய்ப்புக்கொடுத்தாலும் எதையும் கற்றுக்கொள்ள மாட்டார்கள்' என்று சில பெற்றோர் நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. இப்படிப்பட்ட பெற்றோர்க்கும் அவர்களின் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும் ஆறுதலும் புகலிடமும் அளிக்க திருச்சி அறிவாலயம் போன்ற தனிப் பயிற்சி நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு

திருச்சி கைலாசபுரத்தில் உள்ள பாரத மிகுமின் நிறுவன (பெல்) வளாகத்தின் ஊழியர் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஒரு நர்சரி பள்ளிக்கூடத்தில் மனவளர்ச்சி குன்றிய மூன்று வயது குழந்தை ஒன்றின் பரிதாபத்திற்குரியநிலைமையைத் தொழிற்சாலை நிர்வாகத்தினர்

கண்ணுற்றனர். அந்தக் குழந்தை, மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து பழகாமல் ஒதுங்கியே இருந்தது. அப்போது, இப்படிப்பட்ட அவல நிலையில் காணப்படும் குழந்தைகளுக்காகத் தனி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உதித்ததின் விளைவாக ஜெர்மனியைச் சேர்ந்த கிறிஸ்டோபெல் பிளிண்டன் மிஷன் என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியோடு, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக 1977 பிப்ரவரியில் அறிவாலயம் என்ற தனிக் கல்வி நிறுவனம் பெல் நிறுவன வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டது. இன்று இந்த நிறுவனம், தனது உதவியை நாடி வரும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் அனைவரின் வாழ்க்கையிலும் விளக்கேற்றி வைக்கும் அளவுக்கு சிறப்பான வளர்ச்சி கண்டிருக்கிறது.

குறைகளை நீக்கிட முறையான பயிற்சி

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இங்கு மூன்று நிலைகளில் கல்வி கற்பிக்கிறார்கள். முதலாவது, பள்ளிக்கு முந்தைய வயதுக்குரிய வகுப்புகளில் 6 முதல் 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால் இவர்களது மனவளர்ச்சியின் வயது இரண்டரை முதல் மூன்றரை வயதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 8 முதல் 10 வயதுக்கு உட்பட்டவர்கள் மனவளர்ச்சி வயது மூன்றரை முதல் 6 வரை நர்சரி வகுப்புகளிலும், 13 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆரம்ப வகுப்புகளிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அறிவாலயத்தில், குழந்தைகளின் சொந்தத் திறமை, நடைமுறை பழக்க வழக்கங்கள், கல்வி வளர்ச்சி, மற்றவர்களோடு இசைந்து பழகுவது, பொதுமுபோக்கு நடவடிக்கைகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படுகிறது.

அறிவுத்திறனை வளப்படுத்தி 'ஐகியூ'வை அதிகமாக்குவோம்

இயல்பான மனவளர்ச்சி கொண்ட குழந்தைகளின் அறிவுத் திறன் அளவு (ஐ.கியூ) சுமார் 120 என்ற அளவில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இந்த ஐ.கியூ. அளவு 70க்கு குறைவாகவே இருக்கும். சில குழந்தைகளுக்கு மனவளர்ச்சிக் குறை இலேசாகவும், சிலருக்கு மிதமாகவும், சிலருக்குக் கடுமையாகவும் இன்னும் சிலருக்கு மிக மோசமாகவும் இருக்கும். இந்தக் குழந்தைகளுக்குத் தக்க பயிற்சி அளித்து, நாளடைவில் தங்கள் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் சுமையாக இல்லாத



மனவளர்ச்சி குன்றிய மழலைச் செல்வங்கள் சரியான பயிற்சியால் சந்தன மாலைகள் தயாரிக்கும் காட்சி.

> **பொறியின்மை**
> **யார்க்கும் பழிஅன்று;**
> **அறிவறிந்து**
> **ஆள்வினை இன்மைபழி**
>
> **—திருவள்ளுவர்**

வகையில் அவர்களது அறிவுத் திறனை முடிந்த அளவுக்கு உயர்த்துவதே அறிவாலயத்தின் குறிக்கோளாகும்.

இயல்பான வாழ்க்கைக்கு இசைவான பயிற்சிகள் 360

இயல்பான வாழ்க்கை வாழவேண்டுமானால், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் 360 வகையான திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். சுய உதவி, தசை இயக்கம், பேசும் திறன், கல்வி கற்கும் திறன், மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் திறன், சரியாகப் புரிந்து கொள்ளும் திறன் ஆகியவை இதில் அடங்கும். இந்தக் குழந்தைகளுக்குத் தேவையான ஆலோசனைகளை அளிப்பதற்காக ஒரு மனநோய் சிகிச்சை நிபுணரும் ஒரு மனவியல் நிபுணரும் அவ்வப்போது அறிவாலயத்திற்கு வருகை தருகின்றனர். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளில் 80 சதவிகிதம் பேர் பேச்சுத் திறனிலும் குறை உள்ளவர்களாவர். இதன் பொருட்டு, பேச்சு சிகிச்சை நிபுணர் ஒருவரும் அறிவாலயம் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அடிக்கடி ஆலோசனை அளிக்கிறார்.

தங்களது தேவைகள் யாவும் தாங்களே கவனித்துக் கொள்வர்

மற்ற பள்ளிக்கூடங்களைப் போலவே அறிவாலயத்தில் பயிலும் குழந்தைகளும் தேர்வுகளில் கலந்து கொள்கின்றனர். பல்வேறு கலை, கலாச்சார நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். ஓவியம் வரைதல், இசை, பேச்சுப்போட்டி, மாறுவேடப் போட்டி, பொம்மை செய்தல் போன்றவற்றில் தேசிய மற்றும் மாநில மட்டங்களில் நடந்த பல்வேறு போட்டிகளில் அறிவாலய மாணவ மாணவியர் கலந்து கொண்டு பற்பல பரிசுகளையும், நற்சான்றிதழ்களையும் பெற்றிருக்கின்றனர். இங்கு பயிற்சி பெற்றுத் தக்க திறன் ஆற்றலை அடையும் குழந்தைகள், வழக்கமான பள்ளிக்கூடங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அறிவாலயத்தில் உள்ள மாணவ மாணவியர் விடுதியில் 60 பேர் தங்கியிருக்கின்றனர். சுய தேவைகளை தாங்களே கவனித்துக் கொள்வதற்கு ஏற்ற பயிற்சியை இந்த விடுதியில் அவர்கள் பெறுகின்றனர்.

துவக்க நிலைப் பயிற்சியும் பெற்றோர்களின் பங்கும்

மனவளர்ச்சி குன்றியவர்கள் சொந்த திறமையைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டு சமுதாயத்தில் மற்றவர்களோடு இரண்டறக் கலக்க வேண்டுமானால், அவர்கள் ஒருவருக்கும் ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் தக்க கல்விச் சூழலில் பயிற்சி அளிக்க வேண்டும். ஆனால் நமது நாட்டில் அந்தஅளவுக்குச் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், ஐந்து மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரை நியமிப்பது கூட நடைமுறையில் இயலவில்லை. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோரிடத்தில் காணப்படும் மனித வளத்தைப் பயன்படுத்தி குழந்தைகளுக்குப் பயிற்சி அளிப்பது இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு ஒரு நல்ல தீர்வாகும். தொடக்க நிலைப் பயிற்சி என்று அழைக்கப்படும் இத்திட்டம் இப்போது பிரபலம் அடைந்து வருகிறது.

வருங்காலம் நலமாக திட்டம் வாழ்நாள் முழுவதும் கவனம்

இந்தத் திட்டத்தின் கீழ், பெற்றோர்கள் மனவளர்ச்சி குன்றிய தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களேஓரளவுக்குக் கல்வி புகட்டவும், பயிற்சி கொடுக்கவும் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நிபுணர்களும் அவர்களுக்கு அன்றாடம் சொல்லித் தருகின்றனர். பின்னர் இந்தப் பெற்றோர், நாளடைவில் தாங்களே முழுக்க முழுக்க தங்கள் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில் தேர்ச்சி பெற்று

> **'முடியும்' என்ற உணர்வு பிறந்துவிட்டால் போதும்! அதைச் செய்து முடிக்கும் திறமையும் அந்த உணர்விலேயே அடங்கி இருப்பதால் வெற்றி நிச்சயமாகிறது.**
>
> **—ஜேம்ஸ் ஆலன்**

விடுகின்றனர். ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட குறை யையும் பற்றி பெற்றோருக்கு எடுத்துரைத்து வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய கவனம், வருங் காலத்தைச் சரியானபடி திட்ட மிடுவது போன்றவை இத்திட்டத் தின் கீழ் போதிக்கப்படுகின்றன.

பெற்றோர்கள் மற்றோருக்குக் கற்றுக் கொடுக்கலாம்

இந்தப் பயிற்சியை இயன்ற விரைவில், அதாவது குழந் தைக்கு இரண்டு வயது முடியுமுன்னரே துவக்கிவிடுவது நல்லது. இத்தகைய துவக்க நிலைப் பயிற்சிகள் மிகவும் பயனுள்ளவையாகவும் குழந்தை களிடத்தில் நீடித்த நல் விளைவு களை ஏற்படுத்துபவையாகவும் இருக்கின்றன என்பது பல ஆய்வுகள் மூலம் தெரிய வந் துள்ளது. இதனால் குழந்தையின் ஐ.கியூ அளவும் அதிகரிக்கிறது. இரண்டு வயதுக்கு உட்பட்டக் குழந்தைகள் வீட்டுக்கு வெளியே சென்று கல்வி பயில முடியாது என்பதால், தனிப்பயிற்சி பெற்ற தாய், மனவளர்ச்சி குன்றிய தன் குழந்தைக்கு வீட்டுச் சூழலிலேயே, புலனறிவு, தசை இயக்கம், பேச்சு, மொழிப் பயிற்சி தனக்குத்தானே உதவி போன்ற பல்வேறு துறை களில் நல்ல பயிற்சி கொடுக்க முடிகிறது. இப்படி ஒரு குழந் தைக்குப் பயிற்சி கொடுப்பதில் தேர்ச்சி அடைந்து விட்ட பெற்றோர், தங்களைப் போன்ற நிலையில் இருக்கும் மற்ற பெற்றோருக்கும் இத்தகைய பயிற்சியைக் கற்றுக் கொடுக்க இயலும்.

> **ஊனம் என்பது ஒரு**
> **குறையல்ல**
> **உயர்வுக்கு வானம்**
> **எல்லையுமல்ல**
>
> **—கவிஞர் இளந்தேவன்**

ஆசிரியர்களின் பங்கு - பணி அன்பு - பொறுமை - சகிப்புத்தன்மை

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு மிகுந்த பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேண்டும். இந்த அப்பாவிக் குழந்தைகள் ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கவனித்து அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். அவர்கள் காட்டும் அர்ப்பண உணர்வும், கடமைப் பற்றும் பாராட்டுக்குரியது. ஆனால், இவ்வளவு கடினமான பணிக் காக அவர்களுக்குக் கிடைப்பது சொற்ப சமபளம்தான். சாதாரணமாக மாதம் 350 ரூபாயிலிருந்து 1,500 ரூபாய் வரைதான் சம்பளம் பெறு கிறார்கள். எனினும் மனிதாபி மானத்துடன் ஒரு கடமை உணர் வோடு அவர்கள் தொண்டு செய்து வருகிறார்கள்.

கைதேர்ந்த வல்லுநராய் பயிற்சியால் பரிமளிப்பர்

மனவளர்ச்சி குன்றியவர் களுக்குச் சரியானபடி பயிற்சி கொடுத்தால், மற்றவர்கள் எளிதில் சலித்துப் போகக் கூடிய பல துறைகளில் இவர்கள் கைதேர்ந்த வேலையாட்களாகப் பரிமளிப்பார்கள். அறிவாலயத் தில் பயிற்சி பெற்ற மாணவ மாணவியரில் பலர் இப்போது வளர்ந்து பெரியவர்களாகி விட்டதால், இவர்களுக்கென்று 10 இலட்சம் ரூபாய் செலவில் தனியாகப் பட்டறை ஒன்றை அமைக்க அறிவாலயம் திட்ட மிட்டிருக்கிறது. இங்கு அவர் களுக்கு இலேசுரக பொறியியல் பொருட்களைச் செய்வதற்கும் உபயோகிப்பாளர் பண்டங் களைத் தயாரிப்பதற்கும் பயிற்சி கொடுக்கப்படும்.

மனவளர்ச்சி குன்றியோருக்குச் சமுதாயம் கைகொடுக்கட்டும்

மனவளர்ச்சிக் குறைவை மனநோயாகக் கருதிவிடக் கூடாது. எந்த ஒரு தம்பதிக்கும் மனவளர்ச்சி குன்றிய குழந்தை பிறக்கக்கூடும். உலகில் மனவளர்ச்சி குன்றியவர்கள் 25 கோடி பேர் இருக்கிறார்கள். இதில் இந்தியாவின் பங்கு 1 கோடியே 72 இலட்சம், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு தக்கபடி கல்வி கற்பித்து, பயிற்சி அளித்து வேலையிலும் அமர்த்த முடியும். அவர்கள் நமது அன்புக் குரியவர்கள் நம்மை அன்புடன் நேசிக்கக் கூடியவர்கள். சமுதாயம் அவர்களை உதாசீனப் படுத்தக் கூடாது; உதறித்தள்ள முடியாது! அவர்கள் ஓரளவுக்கு குடும்ப வாழ்க்கையையும் நடத்த இயலும், பயனுள்ள குடிமக்களா கவும் விளங்க முடியும். அதற்கு உறுதுணையாக நின்று உதவ வேண்டியது ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

—ஜோசப் சந்திரகுமார்

பாரதி கனவு நனவாகும்

— முனைவர் இராதா தியாகராசன்

பெண்ணின் பெருமை களைப் பார்க்கும்போது 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று கூறினார் வள்ளுவர். பெண்களின் மாண்பைப் பண்டைக் காலத்தில் மாமன்னர்கள் மதித்துப் போற்றி னார்கள். செயற் பெருமை யாலும், உளப் பெருமையாலும் ஏற்றம் பெற்ற பெண்மையைத் தெய்வம் என்று மதித்துப் போற்றி வந்த நாடு நம் தமிழ்நாடு.

கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம் என்று போற்றப்பட்ட கண்ணகியையும், நற்பெரும் தெய்வம் என்று நாயன்மார்களால் பாராட்டப் பட்ட புனிதவதியாரையும் பெற்ற நாடு நம் நாடு. அதுமட்டுமல்ல செங்கோல் வழுவிய பாண்டிய, நெடுஞ்செழிய மன்னன் முன் நின்று, அஞ்சாது வழக்குரைத்த கண்ணகியின் பெருமை... மணிமேகலை அரசமாதேவிக்கு அறவுரை பகர்ந்து சிறைக் கோட்டத்தை அறக் கோட்ட மாக்கிய பெருமை... இலக்கியம் காட்டும் வீரப் பெண்களின் பெருமை எல்லாம் சொல்லி முடியாது!

களச் சாவு

தமிழினத்துப் பெண்கள் தலைசிறந்த வீரத்தைப் பார்க்கும்போது முதல் நாள் போரில் தன் தந்தை இறக்க, மறுநாள் போரில் கணவன் இறக்க போர்க்கோலம் புனைந்து 'வேல் பிடித்துச் செல்' எனத் தன் ஒரே மகனையும் அனுப்பினாள் ஒரு தாய். ஒரு மகனை செருமுகம் காட்டி செல் என விடுத்தாள்.

அந்தப் போர்க்களத்தைக் காட்டி நீ செல் என விடுக்கிறாள்.

இதுமட்டுமா? ஒரு தாய் தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடினான் என்று யாரோ சொன்னதைக் கேட்டு, நானே சென்று இந்த உண்மையைப் பார்க்கிறேன் என்ற துணிவுடன் அந்தத் தாய் போர்க்களம் செல்கிறாள். போர்க்களத்திற்குச் சென்று பார்க்கும்போது தன் மகன் நெஞ்சில் வேல் பாய்ந்து மடிந்து கிடப்பதைப் பார்த்து மகிழ்ச்சியுற்றாள்.

அவன் புறமுதுகு காட்டி மாண்டிருந்தால் அந்த வேல் அவன் முதுகில் அல்லவா பாய்ந்திருக்கும்? அவன் வீரர்களுடன் எதிர் நின்று போராடியிருக்கிறான். ஆகவே, அந்த வேல் அவன் நெஞ்சில் பாய்ந்திருக்கிறது என்று மகிழ்ந்து அவனைப் பெற்ற காலத்தைவிட மகிழ்ச்சி அடைந்தாள் அந்தத் தாய்!

இங்கேதான் இருந்தார்கள்!

இத்தகைய வீரம் படைத்த பெண்ணின் பெருமைகளைப் புறநானூறு மிக அழகாகப் பேசுகிறது!

அதுமட்டுமின்றிப் பெண் பால் புலவர்கள், வீரம் தோன்றப் பாடக்கூடிய திறமை யுள்ள பெண்பால் புலவர்கள், வேறெங்கும் இருந்ததாக வரலாறு இல்லை. நேரே போர்க்களம் சென்று பாடல் பாடக்கூடிய பெண் புலவர்கள் நம் தமிழ்நாட்டில்தான் இருந்

ஆகையால், பெண் உரிமை நமது பிறப்புரிமை என்று கூறுவதில் தவறில்லை.

ஆனால், ஆணும் பெண்ணும் ஒருங்கிணைந்து அந்த நோக்கும் போக்கும் சமநிலை பெற்று இருக்கக்கூடிய ஒரு செயல் பாட்டை எவ்வாறு உருவாக்குவது? அத்தகைய ஒரு சமுதாய நிலை மையை எப்படி உருவாக்குவது?

அதற்கான பரிந்துரைகளை அனைவரும் தாருங்கள். அதனடிப்படையில் நாம் நல்ல சமநிலையை எதிர்பார்க்கலாம். இந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற கொடுமைகள், தீய செயல்கள் வரதட்சணை போன்ற கொடுமைகள் இன்னும் ஒழிந்தபாடில்லை.

சில குடும்பங்களில் இன்று விளக்கு எரியவில்லை. ஆனால், குடும்ப விளக்கே எரிகின்றது! அந்த நிலைமைதான் இன்று வரதட்சணையினால் இருந்து வருகிறது. குடும்ப விளக்கு எரிகிறது என்றால், மருமகளே எரிந்து போகிறாள். வட நாடுகளில் வரதட்சணைக் கொடுமையால் இன்று நடப்பது எல்லாம் இதுதான்.

கவசம் போன்ற சட்ட திட்டங்கள்

மகளிர் நலம்பெற இந்தச் சட்டங்கள் நன்றாக அமைக்கப்பட வேண்டும். பெண்மைக்கு, பெண் உரிமைக்கு நிறைய சட்டங்களை நாம் வகுக்கவேண்டும். ஆனால், சட்டங்களை நீங்கள் கவசங் களாகப் பயன்படுத்தலாமே தவிர, அதை உறவுகளை முறிக்கும் கத்தியாகப் பயன் படுத்தக் கூடாது.

இத்தகைய எண்ணங்களை எல்லாம் மனதில் கொண்டு சமுதாயத்தில் பெண்களுக்கு நடக்கின்ற கொடுமை, பெண் மேல் மேற்கொள்ளப்படுகின்ற கொடுமைக்கு என்ன காரணம் என்பதையெல்லாம் ஆராய்ந் தாக வேண்டும். அப்போதுதான் பெண்ணினம் பற்றிப் பாரதி கண்ட கனவு நனவாகும்!

கவிதையும் கவிஞர்களும்

★ எல்லா மனிதர்களும் இதயத்தால் கவிஞர்களே!

—எமர்சன்

★ உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்பம் உருவெடுப்பது கவிதை!

—கவிமணி
தேசிக்விநாயகம் பிள்ளை

★ புதுக்கவிதை எழுதுவோர் பேனாவில் எவ்வளவு மை இருக்கிறதோ, அவ்வளவு தண்ணீரும் கலக்கப்பட்டிருக்கிறது!

—கதே

★ பொய் சொல்ல உரிமம் பெற்றவர்களே கவிஞர்கள்!

—பிளினி

★ நீதிக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் உறுதுணை போன்றதே கவிதை என்பது என் கருத்து.

—ஷெல்லி

★ இசைச் சிந்தனையே கவிதையாகும்.

—கார்லைல்

★ 'பாட்டினைப்போல் ஆச்சரியம்
பாரின்மிசை இல்லையடா!'

—மகாகவி பாரதியார்

★ எல்லா நாடுகளையும் சேர்ந்த பெருங் கவிஞர்களுக்குச் சிறப்புத் தருவது அவர்களிடம் நிறைந்துள்ள நாட்டுணர்வு அல்ல; உலக உணர்வேயாகும்!

—லாங்ஃபெல்லோ

★ 'எத்தனையோ இன்பம் இந்த
நாட்டிலே உண்டு;
அத்தனைக்கும் பெரிய இன்பம்
பாட்டிலே உண்டு!'

—பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

தொகுப்பு: ராஜு

1100 ஆண்டுகட்கு முற்பட்ட பல்லவர் கால முருகன் சிலை

தமிழ்நாடு அரசு தொல் பொருளாய்வுத் துறை, சென்னை அயனாவரத்தில் உள்ள பரசு ராமலிங்கேஸ்வரர் கோயிலில் பல்லவர் காலத்து மிக அழகிய முருகன் சிலையொன்று இருப் பதைக் கண்டறிந்துள்ளது.

செவ்வக பீடத்தின் மீது நேராக நின்ற நிலையில், மேல் வலக்கரத்தில் அக்கமாலையும், மேல் இடக்கரத்தில் கமண்டலத் தையும் ஏந்திய மாறுபட்ட நிலையில் வடிக்கப்பட்ட ஒன்ப தாம் நூற்றாண்டைச் சார்ந்த சிலை இது. பொதுவாகப் பிற் கால முருகன் சிலைகளில், வலக் கரத்தில் வஜ்ரமும், இடக்கரத்தில் சக்தியும் காட்டப்படுவதே வழக்கம். கீழ் இரு கரங்களும் அபய, வரத முத்திரைகள் காட்டப்பட்டிருக்கும்.

இவ்வடிவில், அக்கமாலையும், கமண்டலமும் இருப்பது மிக அரிதான ஒன்றாகும். வலக்கரம் அபயத்திலும், இடக்கரம் தொடைமீது வைத்த நிலையிலும் உள்ளது. தடித்த கன்னிமாலையை நெற்றியில் சூடி, 'சன்ன வீரத்தினை' மார்பில் பூண்டு, காதிலும் பெரிய பத்ர குண்டலங்களைத் தரித்து முருகன் காட்சியளிக்கிறார்.

இச் சிற்பத்தில் காணப் பெறும் ஆடை, அணிகலன் களின் வடிவமைப்பைக் கருத்தில் கொண்டு, இது திருவொற்றியூர் மற்றும் மாமல்லபுரம் சிற்பங் களை ஒத்த தன்மையுடையது என்றும், பல்லவர் காலத்தில் வடிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநர் திரு. நடனகாசிநாதன் கருத்துத் தெரிவிக்கிறார். சிற்பத்தின் முகம் மட்டும் பிற்காலத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது போன்று தோன்றுகிறது. இது தவிர, பிற உருவ அமைதிகளைக் கொண்டு காண்கையில், இது பல்லவர் காலக் கோயிலின் மாடத்தில் காணப்பெறும் தேவதையாகவோ, அல்லது பல்லவர், சோழர் கால மாற்றத்தின்போது அமைக்கப் பெற்ற கோயிலிலே வணங்கப் பெற்ற சிலையாகவோ இருத்தல் வேண்டும் எனலாம். மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் குளக் கரையில் அமைந்த சேட்டையின் சிற்பம், திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள சில சிற்பங்கள், வேளச்சேரி திருமால் கோயிலில் உள்ள செப்புத் திருமேனி ஆகியவை சென்னை யிலுள்ள பல்லவர் காலத்தைச் சேர்ந்த வேறுசில அழகிய கலைப் படைப்புகள் ஆகும்.

இச்சிற்பம் இடம்பெறும் கோயிலில், ஒரு சிறிய கல்வெட்டு 'அம்முதடுவான் சுரைக் குடையான் நயினான்' என்று எழுதப்பட்டிருப்பதன் மூலம், இக்கோயிலில் நிவேதனத்துக் குரிய உணவினைச் சமைத்தவன் சுரைக்குடையான் நயினான் என்பது பெறப்படுகிறது. கரு வறையின் நிலைக்காலில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல் வெட்டின் எழுத்தமைதி கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதிலிருந்து இக் கோயில் கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டிலிருந்தே இங் குள்ளது என்பது தெரிய வரு கிறது. இக்கோயிலில் வழிபாட்டி லிருக்கும் இம்முருகன் சிலை யினைக் கொண்டு காண்கையில், பல்லவர் காலத்திலேயே இங்கு ஒரு கோயில் இருந்திருக்கலாம் என்று கருதவும் இடமேற் படுகிறது. எவ்வாறாயினும், பல்லவர் கலைப்படைப்பான இச்சிற்பத்தின் அழகு கண்டு களிக்கத்தக்கது. போற்றி மகிழக் கூடியது.

திருக்கிறார்கள்!

ஔவையின் வீர உணர்வு

இதற்குச் சான்றாக, ஔவையைக் காட்டலாம். தமிழகத்தில் அதியமானை எதிர்த்துப் பகை மன்னர்கள் பெரும் திரளாகப் போர்க்களத்தில் திரண்டபோது, ஔவையார் அந்தப் போர்க் களத்திற்குத் தாமே செல்கிறார்; சென்று, அந்தப் பகைவர்களைப் பார்த்து மனம் நெகிழும்படியாக, அவர்களுடைய நெஞ்சம் நெகிழும்படியாக, அவர்களுடைய மனம் கலங்கும்படியாக அவர்களைப் பார்த்துப் பாடுகிறார். பல பாடல்கள். அதில் ஒரு பாடலில் ஔவையார் சொல்கிறார். எதிரிகளைப் பார்த்து சொல்கிறார்.

அதாவது நாள் ஒன்றுக்கு 8 தேர் செய்கின்ற ஒரு தச்சன், அவன் ஒரு மாதம் முழுவதும் முயன்று ஒரு தேர்ச் சக்கரத்தையே செய்தான் என்றால், அந்தச் சக்கரம் எத்தனை வலிமை உடையதாக, எத்தனைத் திண்ணியதாக, எத்தகைய ஆற்றல் பொருந்தியதாக இருக்கவேண்டும்! அது போன்று ஆற்றல், வீரம் படைத்தவன், திண்மைபடைத்தவன், என் அதியமான் அரசன், அவனை நீங்கள் எதிர்பார்ப்பதற்குத் துணிந்து இங்கே வந்திருக்கிறீர்களே என்னே உங்கள் மடமை!

களம் விட்டு ஓடுமின்—

பகைவர்களே! களத்தை விட்டு ஓடுமின்! என்று வீரத்துடன் பகைவர்களைப் பார்த்துக் கவிதை பாடுகிறார்.

எப்படிப் பேச வேண்டும் என்று உங்களுக்குத் தெரியவில்லையென்றால் எப்படிப் பேசாமல் இருப்பது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அது மிகவும் நல்லது.

—மே தாட்

சங்க காலத்தைப் பார்க்கும்போது, 30-க்கும் மேற்பட்ட பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இதுபோல் வேறு எந்த நாட்டிலும் இருந்திருக்க முடியாது. தமிழகத்திலும் பிற்காலத்தில் இப்படி இல்லை.

கண் போன்ற கடமைகள்

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது அதாவது பெண்ணினுடைய பெருமை, பெண்ணினுடைய கல்வி, இந்தப் பெரும் சான்றுகள் எல்லாம் அவள் எத்தகைய கல்வி உடையவளாக இருந்திருக்கிறாள், எத்தகைய அறிவுடையவளாக இருந்திருக்கிறாள், எத்தகைய வீரம் படைத்தவளாக இருந்திருக்கிறாள் என்பதை நமக்கு நன்றாக உள்ளங்கை நெல்லிக் கனி போலக் காட்டுகிறது.

அதுமட்டுமல்ல, ஒரு இளைஞனுக்குத் தாய், தந்தை, அரசன், சமுதாயம் ஆகியோர் என்னென்ன கடமைகள் செய்ய வேண்டும் என்பதைப் பொன்முடியார் என்ற பெருமாட்டி அழகாகக் கூறியிருக்கிறார். அந்தக் கவி நம்மில் பலருக்கும் தெரியும்.

ஈன்று புறந்தருதல் என்தலைக்
கடனே,
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக்
கடனே,
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லர்க்குக் கடனே,
எல்லாவிதச்சான்றான்மையையும்
அமைத்துக் கொடுப்பது
அரசனுக்குக் கடனே...

—என்று ஓர் இளைஞருக்கு எவ்வாறு ஒரு சமுதாயமும், அரசனும், தாயும், தந்தையும் சிறப்புச் செய்ய வேண்டும், அவர்களது கடமைகள் என்ன என்று அழகாக அந்தப் பொன்முடியார் கூறுகிறார். இதிலிருந்தே அந்தப் பெண் எவ்வளவு சமுதாய உணர்வு உள்ளவளாக இருந்திருக்கிறார் என்பது நன்றாகத் தெரியும்.

எத்தகைய வீரம் படைத்த பெண் இனம் பாருங்கள்! பெண்ணினுடைய வீரத்தை இன்னும் இப்படிச் சொல்லி அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

ஆனால், இத்தகைய வீரம் படைத்த பெண்ணினம் சமுதாயத்தில் ஏற்பட்ட சில மாறுபாடுகளால், அந்தப் பெண் இனத்தின் பெருமை இடைக் காலத்தில் சிறிது சரிந்தது.

அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்பது போன்ற நச்சுக் கொள்கைகள் தோன்றி, பெண் இனத்தின் பெருமையை அவளது ஆற்றலை, அவளது வீரத்தை, சிறிது சரியச் செய்தது. குன்றச் செய்தது.

ஆனால், நல்ல செயல் ஆற்றலும். தெளிந்த உணர்வும் உடைய ராஜாராம் மோகன்ராய், பாரதியார், காந்தியடிகள் போன்ற பேரறிஞர்கள் தோன்றி, அந்நிலை மாறப் பாடுபட்டனர். நம் நாட்டுப் பெண்கள் இது போல் வீரம் குன்றி, அறிவார்ந்த பெண்கள், இடுப்பொடிந்து மனையகத்தே ஒடுங்கி மடங்கிக் கிடப்பது அழகல்ல. அறன் அல்ல என்று உலகம் தெரியுமாறு எடுத்துக் கூறினார்.

அன்றும் இன்றும்

அடுப்படியில் இடுப்பொடிய ஒடுங்கிக் கிடக்கும் பெண்களுக்கும் அன்னையின் அடிமைத் தளையை நீக்கும் ஆற்றல் உண்டு. அறிவுண்டு, உரிமை உண்டு, திறமை உண்டு என்பதை இந்தச் சீர்திருத்தச் செம்மல்கள் உலகறிய எடுத்துரைத்தார்கள். காந்தி அடிகளின் தலைமையில் அந்தப் பெண் படை ஒன்று சேர்ந்தது. அறப்போர் வென்றது. அடிமைத்தளை நீங்கியது. சமுதாயம் மிகவும் வெளிச்சம் பெற்றது. போர்ப்பறை கேட்டு ஆர்ப்பரித்தெழுந்த மகளிர் வீரவரலாறு இலக்கியம் காட்டும் பழைய நிகழ்ச்சி. ஆனால், பெண்கள் பெருமை, அவர்களுடைய வீரச் செயல் இன்றும், நிகழ் காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற செயலாக நமது பாரத அன்னையின் அடிமைத் தளையை நீக்கிவிட்டது. புதியதாக நிகழ்காலத்தினுடைய நிகழ்ச்சியாக இன்று நாம் ஒவ்வொரு புதுப்புதுச்செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

அன்று வீரம் படைத்த பெண்கள், பாரதத்திற்குச் சுதந்திரம் தேடிக் கொடுத்த பெண்கள், போராட்டத்தில் ஈடுபட்ட அந்தப் பெண்கள் இன்று ஒரு வாழ்வியல் போராட்டத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். அதைத் தொட்டுக் காட்டினார்கள். பலபேர். அவர்கள் இன்னொரு வாழ்வியல் போராட்டத்திற்குத் தயாராக நிற்கிறார்கள். வாழ்வியல் போராட்டத்தில், அந்த உணர்வுதான், அந்த எழுச்சிதான் இன்று அவர்கள் கூறிய பெண்ணியலாக Feminism-ஆக மலர்ந்திருக்கிறது.

ஆண் ஆதிக்கம்

பெண்ணியம் என்று சொல்லும்போது, அந்த உரிமைக் குரல் ஆண்களை எதிர்ப்பதே அல்ல. ஆண் ஆதிக்கத்தைத்தான் அந்தப் பெண்ணியம் எதிர்கிறதே தவிர, பெண்ணியம் ஆண்களை எதிர்க்கவில்லை.

உலக வரலாற்றை நாம் உற்றுநோக்கும்பொழுது, ஆண் ஆதிக்கம் முதன் முதலாக எவ்வாறு வந்தது என்றால், அவனுடைய உடல் வலிமையைப் பொறுத்து அது வந்தது. பெண்ணினுடைய பெண்மை, அவளுடைய தாய்மை, அவளுடைய இனிமை, அவளுடைய செம்மை ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, உடல் வலிமை உள்ளவனாக இருக்கிறான் ஆண். அதனால்தான் அந்த ஆணின் ஆதிக்கம் முக்காலத்திலிருந்தே வந்தது என்று சரித்திரம் கூறுகிறது.

கோழைகளாய் நூறு முறை பிறவியெடுத்து வாழ்வதைக் காட்டிலும் வீரத்துடன் விளங்கினோம் என்று பெருமிதம் கொள்ளும் வகையில் வாழ்கின்ற ஒரு பிறவியே போதுமானது.

—நெப்போலியன்

ஆனால், இன்று காலம் மாறிப்போய்விட்டது. ஏனென்றால், அறிவியல் இன்று சிறந்து வளர்ந்திருக்கிறது.

அறிவியல் வளர்ச்சி

அறிவியல் நோக்கம், அறிவுத்திறன் இந்த மாதிரி வளர்ந்து கொண்டே இருக்கின்ற ஒரு சமுதாயச் சூழ்நிலையில் பால் வேறுபாட்டுக்கு இடமே இல்லை. ஒரு பாலருக்கு ஆதிக்கம், ஒரு பாலருக்கு இல்லை என்று அறிவியலில் நாம் சொல்ல முடியாது. ஆனால், அவ்வாறு அறிவியல் வளர்ச்சி இருந்தும் கூட ஏன் இன்னும் பெண்ணியம் வளரவில்லை? ஏன் இந்த ஆண் ஆதிக்கம் நடக்கிறது? என்று கேட்டால் அதற்கு மனிதம்- Human என்ற பண்பியலையும் இந்த அறிவியலோடு ஒத்து வளர்க்காததுதான் காரணம் என்று நான் கூற முடியும்.

ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையுடன், 'நாட்டைக் காப்பது ஆண், வீட்டைக் காப்பது பெண்' என்ற நிலைமை மாறி, இருவரும் ஒத்து நாட்டையும், வீட்டையும் பார்க்க வேண்டும். பெண்ணுடைய உளவியலையும், தாய்மைப் பண்பையும், நன்கு உணர்ந்து இருவரும் சேர்ந்து அந்த் மனையியலின் மாட்சியை உணர்ந்து நாட்டுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புகளையும் உணர்ந்து ஒரு சமநிலை- equilibrium என்ற இந்தச் சமுதாயத்தின் நிலையை உயர்த்தத்தான் நாம் வழிவகுக்க வேண்டும்.

"அறிவொளி - தொடர்கல்வி இயக்கம்"

பெரியார் மாவட்டம், ஈரோடு

"15 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்டோரில் கல்லாதோரே இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்" என்ற நமது இலட்சியத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம். இந்த இலட்சியப் பயணம் முழு வெற்றி அடைந்திட தொடர்கல்வி இயக்கம் துவக்கப்பட்டுள்ளது.

☆ கற்போர் தொடர்ந்து கற்க வசதியாக மாவட்டம் முழுவதும் 2,000 தொடர்கல்வி படிப்பகங்கள் அமைக்கப்படவுள்ளன. முதல் கட்டமாக இதுவரை 800 படிப்பகங்கள் மாவட்டம் முழுவதும் துவக்கப்பட்டுள்ளன. இப்படிப்பகங்களில் தினசரி செய்தித்தாள்கள், வார, மாத பத்திரிகைகள், அரசு நலத்திட்டங்களை விளக்கும் நூல்கள், பொது அறிவு நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பகங்களில் கற்போர் கட்டணம் ஏதும் செலுத்தாமல் படித்துப் பயன்பெறலாம். இவை மகளிர் விவாதக்குழு மையங்களாகவும் செயல்படுகின்றன.

☆ அரசு நலத்திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள், தீவிர சுகாதாரத் திட்டங்கள், மகளிர் நலம், ஆரம்பக் கல்வி, மருத்துவம், நுகர்வோர் பாதுகாப்பு, சிறுசேமிப்பு, குடும்ப நலம், சாலைப் பாதுகாப்பு, சட்டக்கல்வி மற்றும் பிற அரசுத் திட்டங்களைக் கற்போருக்கு விளக்கி அதன் மூலம் கற்போர் இத்திட்டங்களில் பங்கேற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

☆ முழு எழுத்தறிவுத் திட்டத்தின் மூலம் கற்றவர் கற்றுக்கொண்டதை மறக்காமல் இருக்கத் தொடர்ந்து படிக்கச் செய்து கற்றக் கல்வியைப் பயன்படுத்திக் கற்போர் தங்கள் வாழ்க்கையை சமூகப் பொருளாதார ரீதியில் உயர்த்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

☆ தொடர்கல்வித் திட்டப் பணிகளுக்காக மாவட்டம் முழுவதும் கிராமக் கல்விக் குழுக்கள், ஆலோசனைக் குழுக்கள், இளைஞர் அமைப்புகள், மகளிர் அமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

☆ தொடர்கல்வித் திட்டப்பணியில் அரசின் சிறப்புத் திட்டங்களான யுனிசெப், சிடிடி, வாட்சன், சி.பி.சி.எஸ்., டோக்ரா, வி.எல்.ஓ.எம்., ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

☆ பொதுத்துறை நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சேவா அமைப்புகள், மகளிர் அமைப்புகள், தொடர்கல்விப் பணியில் இணைந்து செயல்பட திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

☆ எழுத்தறிவு, விழிப்புணர்வு பெற்ற கற்போர் மற்றும் மகளிர் தங்கள் வாழ்க்கையில் பொருளாதார மேம்பாடு அடையச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி சிறுதொழில் பயிற்சி மற்றும் கடனுதவி பெற்று பயன்பெற தொடர்கல்வி துணைபுரியும்.

ஒரு மகத்தான மக்கள் இயக்கமாக அறிவொளி இயக்கத்தை மாற்றியது போலவே, தொடர்கல்வி இயக்கத்தையும் மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றியடையச் செய்ய வேண்டுகிறேன். இதற்கு பொதுமக்களும், சேவை நிறுவனங்களும், தன்னார்வு அமைப்புகளும் ஒத்துழைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கற்பது உரிமை! *கற்பிப்பது கடமை!*

அறிவொளி நன்றி!

அன்புடன்
நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
தலைவர்
பெரியார் மாவட்ட அறிவொளி-
தொடர்கல்வி இயக்கம், ஈரோடு

செய்திகள்... செய்திகள்... செய்திகள்...

மொழி வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளுவதற்கான ஆய்வு மையம் ஒன்றைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் விரைவில் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

○○○

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் நாளுக்கு முந்திய இரு நாட்கள், தேர்தல் நாள், ஓட்டு எண்ணப்படும் நாளுக்கு முந்திய நாள் மற்றும் ஓட்டு எண்ணிக்கை நாட்களை மதுவிலக்கு நாட்களாக அறிவிக்கும்படி மத்திய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

○○○

தமிழக நீச்சல் வீராங்கனை நிஷா மில்லட், ஆந்திரத்தின் உலகப் பளுதூக்கும் சாம்பியன் மல்லேஸ்வரி இருவரும் 1995-96-ஆம் ஆண்டின் சிறந்த ஜூனியர் வீராங்கனைகளாகக் கல்கத்தா பத்திரிகையாளர் சங்கம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

○○○

பொதுத் தேர்தலையொட்டி, மே மாதம் 6ஆம் தேதி முதல் நடைபெறவிருந்த தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள் மே 13 ஆம் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன.

○○○

தமிழகத் தேர்தலில், மக்களவைக்குப் போட்டியிடுபவர்களிலேயே மிகக் குறைந்த வயதுடையவர், காஞ்சிபுரம் வழக்கறிஞரான கே.டி. இராகவன். இவருக்கு வயது 25 ஆண்டு 6 மாதம் மட்டுமே.

○○○

"ஒலிம்பிக்கின் உண்மையான நோக்கம் தற்சமயம் அழிந்து வருகிறது. இப்போதெல்லாம் விளையாட்டுப் போட்டிகள் வியாபாரமாகி வருகின்றன" என்று ஒலிம்பிக் சாம்பியன் லின்போல்டு கிறிஸ்டி கூறியிருக்கிறார்.

○○○

ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 24 ஆம் நாள் தீயணைப்புத் தொண்டு நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஏன் தெரியுமா? 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் அன்று, பம்பாய் துறைமுகத்தில் நின்ற ஒரு வெடிமருந்துக் கப்பலில் பிடித்த தீயை அணைக்க மேற்கொண்ட முயற்சியில் ஈடுபட்ட தீயணைப்புப் படையினரும் பணியாளர்களும் மாண்டு போனார்கள்.

○○○

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது, பஞ்சாபில் உள்ள ஜாலியன்

வாலாபாக்கில் 1919 இல் அதாவது 77 ஆண்டுகளுக்கு முன்னால் ஜெனரல் டயர் என்ற கொடிய பிரிட்டிஷ் அதிகாரி, ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுத் தள்ளினான். அதன் நினைவுநாள் 13.4.96 அன்று அமிர்தசரசில் கடைப்பிடிக்கப்பட்டது.

○○○

கிரிக்கெட் வீரர் மனோஜ் பிரபாகர் டில்லி தெற்குத் தொகுதியிலிருந்து தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் ஆதரித்துப் பிரச்சாரம் செய்கிறார்.

○○○

வரவிருக்கும் பொதுத்தேர்தலில், தமிழ்நாட்டில் மட்டும் 54,000 வாக்குச் சாவடிகள் இருக்கும் தமிழ்நாட்டில் மொத்தம் 4 கோடியே 24 இலட்சத்து 61 ஆயிரத்து 801 வாக்காளர்கள் இருக்கின்றனர். இதில் பெண் வாக்காளர் எண்ணிக்கை மட்டும் 2 கோடியே 10 இலட்சத்து 71 ஆயிரத்து 456 ஆகும்.

○○○

ஐரோப்பிய வான்வழிக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஏர்பஸ் நிறுவனம் 500 கோடி பவுண்ட் ஸ்டெர்லிங் செலவில் சூப்பர் ஜம்போ விமானத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இதற்காக

சீனா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள விமான நிறுவனங்களின் உதவியை இந்த நிறுவனம் நாடியிருக்கிறது. அண்மையில் சீனாவுடனான ஒப்பந்தம் பாரிசில் கையெழுத்தாயிற்று.

○○○

மூளையில் ஏற்படும் கட்டியை அகற்றும் நவீனக் கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.12 கோடி. உலகில் இந்தக் கருவி மூன்றே இடங்களில்தான் இருக்கிறது. அதில் ஒன்று புதுடெல்லியில் உள்ள இந்திரபிரஸ்தா அப்போலோ மருத்துவமனையில் இருக்கிறது.

○○○

கொசுவை விரட்ட நாம் பயன்படுத்தும் வில்லைகள், சுருள்கள் போன்றவற்றால் பலவிதமான பக்க விளைவுகள் ஏற்பட இடமுண்டாம். ஆனால், வேப்பெண்ணெய் மூலம் தயாரிக்கப்படும் கிரீம், தைலம் போன்றவற்றால் பாதிப்பில்லை என்கிறார். மலேரியா ஆராய்ச்சி மைய இயக்குநர் வி.பி. சர்மா.

○○○

நடைபெறவிருக்கும் 11வது பொதுத் தேர்தலில் இந்தியா முழுமைக்குமாக மொத்தம் 27 இலட்சத்து 22 ஆயிரம் ஓட்டுப் பெட்டிகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. இது சென்ற தேர்தலைவிட 5.5 இலட்சம் அதிகமாகும்.

○○○

இந்தியாவின் தேசிய விளையாட்டு ஆக்கி. ஆஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு கிரிக்கெட். அதேபோல், ஆப்கானிஸ்தானின் தேசிய விளையாட்டு குதிரையிலிருந்தபடி விளையாடும் புஸ்காசி என்பதாகும். இது, போலோவைப் போலப் பந்தைப் போட்டு விளையாடுவதல்ல; இறந்துபோன கன்றின் தலையைப்போட்டு விளையாடுவதாகும்!

தொகுப்பு பி.எல்.ஆர்.



வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு வரலாற்றுப் பெட்டகம்

சிறப்பும், பொறுப்பு மிக்க சட்டப்பேரவை அமைந் துள்ள 'கோட்டை' என்று எல்லோ ராலும் பொதுவாக அழைக்கப் படும், புனித ஜார்ஜ் கோட்டை வரலாற்றுச் சிறப்புப் பெற்ற தாகும். சென்னைக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

வசீகர கோட்டை

எவ்வளவு ஆட்சியாளர் களைக் கண்டுள்ளது; எத்தனை வருடங்களைத் தாண்டியுள்ளது; எவ்வளவோ முக்கியமான சட்டங்கள் இயற்றும் ஒப்பற்ற இடமாக திகழ்ந்துள்ளது; எவ்வளவோ காரசாரமான வாக்குவாதங்களை சுவைத் துள்ளது; எத்தனையோ ஆட்சி களின் மாட்சியையும் வீழ்ச்சி யையும் கண்கூடாகப் கண்டுள்ளது; அவ்வளவையும் கண்டும், கேட்டும், அமைதியாக கம்பீரமாக வரலாற்றுச் சிறப்பின் வசீகரத்தோடு வீற்றிருக்கிறது புனித ஜார்ஜ் கோட்டை.

உப்புக்காற்று உலாவரும்

கடலலைகள் வாசலிலே தண்ணீர்த் திவலைகளைத் தூவிட, வீசுகின்ற கடற்காற்று உப்புச்சுவைப் பெற்று உலா வரும் இடமான வங்கக் கடற்கரை விளிம்பில் சென்னை யின் வரலாற்றுக்கு எழிலைச் சேர்க்கும் பொலிவு பெற்ற புனித ஜார்ஜ் கோட்டை அமைந் துள்ளது.

காப்பரண்

ஆங்கிலேயர்களால் கட்டப் பட்ட முதல் கோட்டையான கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டை காலப்போக்கில் சிதைந்துவிட, புனித ஜார்ஜ் கோட்டை என்றென்றும் நின்று நிலைபெற்ற ஒரு கோட்டை யாக இளமை மாறா புத்தெழிலோடு திகழ்ந்து வருகிறது. கடைசிவரை ஆங்கிலேயருக்கும், இடையில் சில காலம் பிரெஞ்சுக்காரர் களுக்கும், இந்திய சுதந்திரத் துக்குப் பின்னர் தமிழ்நாட்டு ஆட்சியாளர்க்கும் காப்பரணாக, ஆட்சிபீடமாக திகழ்ந்து வரு கிறது.

பல நூற்றாண்டுகளாகவே,

நீண்ட இந்திய கடற்கரைமீது மேல் அயல்நாடுகளுக்கு ஒரு ‘கண்’ உண்டு. உரோமாபுரி, கிரேக்கம், அரேபியா, கதே, டச்சுக்காரார், பிரெஞ்சு நாட்டவர், போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர் இப்படி பலரின் பார்வையும், பாதங்களும் பட்ட பூமி இந்திய மண் என்று வரலாற்றுச் செய்தி பறை சாற்றும்.

கி.பி. 1630-ஆம் ஆண்டு தங்கள் வணிகத்தை வங்கக் கரையோரம் நடத்திவந்த கிழக்கிந்தியக் கம்பெனியினர் தங்களின் வணிகத்தை வளர்க்கும் பொருட்டு ஒரு நிரந்தரமான இருப்பிடத்தைத் தேர்வு செய்ய அலைந்தார்கள்.

முதன்முதலில் இன்றுள்ள சென்னைக்கு அருகேயுள்ள புலிக்காடு என்னுமிடத்தில் கடற்கரையில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். ஆனால், அக்கோட்டை இயற்கைச் சீற்றத்தாலும், கழிமுக பிரச்சினையாலும் அவர்களுக்கு ஒத்துவரவில்லை.

எனவே, நிலையான ஒரு கோட்டையை அமைத்திட ஆவலோடு காத்திருந்தனர். இடம் தேர்வு செய்யும் பொறுப்பு பிரான்சிஸ் டே என்பவரிடம் விடப்பட்டது. அவரும் பல இடங்களைக் கண்டு, இறுதியாக மெட்ராஸ்பட்டாம்(Medraspatam) என்ற ஒரு மணற்பாங்கான இடத்தைத் தேர்வு செய்தார். அம்மணல்மேடு கூவம் நதியாலும், வங்கக் கடலாலும் சூழப்பெற்றுக் கோட்டை கட்டுவதற்கான அனைத்துத் தகுதியும் பெற்றிருந்தது.

மீனவக் குடியிருப்பு

அந்த இடத்தில் பழைய கட்டுமரங்களும், மீன் பிடிக்கும் வலைகள் காயும் ஓர் மீனவக் குடியிருப்பாகவே இருந்திருக்கிறது. மூன்று மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட இந்த நிலப்பரப்பை பிரான்சிஸ்டே தேர்ந்தெடுத்தார். அந்நிலத்திற்குச் சொந்தக்காரரான பூனமல்லி ஜமீன்தாரர் சென்னப்பா என்பாரிடமிருந்து ஒரு உடன்படிக்கை வாயிலாக கிழக்கிந்தியக் கம்பெனியினர் பெற்றார்கள். இது கி.பி. 1639-ஆம் வருடம் ஜூலை 22-ம் நாள் நடைபெற்றது. அந்த உடன்படிக்கை என்னவென்றால்,

---

வெற்றி என்பதெல்லாம் வெறும் அதிர்ஷ்டம் தான்; வேண்டுமென்றால் தோல்வியடைந்த எவனை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்களேன்!

—வில்சன்

ஜமீன்தாரர் சென்னப்பா மேல் நாட்டிலிருந்து குறிப்பாக அரேபியா நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்ய கிழக்கிந்தியக் கம்பெனிகள் உதவ வேண்டும் என்பதேயாகும்.

பணப் பிரச்சினை

அந்தச் சிறு நிலத்தில் பிரான்சிஸ் டே என்பவரிடமே கிழக்கிந்தியக் கம்பெனியினர் கோட்டை கட்டும் திட்டப் பணியை ஒப்படைத்தார்கள். ஆனால், பின்னர் அதில் திருப்தியில்லாததால், ஆன்ட்ரூ கோகன் என்பவரை அணுகி டேயுடன் இணைந்து கட்டச் சொல்லியிருக்கிறார்கள். கோட்டைக் கட்டும் பணி தொடர்ச்சியாக நடைபெற பணப் பிரச்சினை ஒரு காரணமாக இருந்திருக்கிறது. சூரத் கோட்டையிலிருந்து அவ்வப்போது, உதவி பெற்றே கோட்டை கட்டும்பணி நிறைவடைந்துள்ளது. அவ்வளவு அரும்பாடுபட்டுக் கட்டிய இக்கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியினரின் தலையாக கோட்டையாகப் பிற்காலத்தில் திகழ்ந்தது. இக்கோட்டை 1640-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ஆம் நாள் கட்டப்பட்டு, அன்று முதல் புனித ஜார்ஜ் கோட்டை பெயரே இன்றும் தொடர்கிறது.

ஆங்கிலேயரின் ஆட்சிபீடம்

தொடக்கத்தில் வணிக மேம்பாட்டுக்காக இக்கோட்டை கட்டப்பட்டது என்று கூறப்பட்டாலும் உண்மையில் இராணுவப் படைக்கலன்கள், வைத்துப் பாதுகாக்கும் பல வசதிகளைக் கொண்டு விளங்கி வந்திருக்கிறது. அதாவது கிழக்கிந்தியக் கம்பெனியின் இருப்பிடமாகவும், பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சி பீடமாகவும் வளர்ந்துள்ளது.

காலப்போக்கில் இக்கோட்டையினுள் பல கட்டடங்கள் சமயச் சார்புச் செயல்களுக்காகவும், பொதுக் காரியங்களுக்கர்கவும் கட்டப்பட்டுள்ளன. ஏறக்குறைய 9 நிலைகளில் கோட்டையின் கட்டட வளர்ச்சி நடைபெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

வரலாற்று மனிதர்கள் வாழ்ந்த கோட்டை

புனித ஜார்ஜ் கோட்டை பல அரசுகளின் ஆட்சியைக் கண்டிருக்கிறது. இன்றும் இது தொடர்கிறது.

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சில ஆங்கிலேயர்களான இலிகு யேல், இராபர்ட் கிளைவ், ஜாப்சார்நாக், ஆர்தர் வெல்லஸ்லே, மெக்கன்சி, மன்றோ, வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் காரன் வாலிஸ் போன்றவர்கள் இக்கோட்டையில் வசித்துள்ளார்கள் அல்லது வந்துபோய் உள்ளார்கள்.

இக்கோட்டையிலுள்ள பல கட்டடங்கள் அக்கால வரலாற்றை சுமந்து கொண்டிருக்கும் வரலாற்று ஆவணங்கள் என்பதில் வியப்பில்லை. இங்குள்ள கட்டடங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை ராபர்ட் கிளைவ் வாழ்ந்த கிளைவ் இல்லம், போர் வீரர் குடியிருப்பு வரிசை மற்றும் புனித மேரி மாதா கோவில் முதலியவையாகும்.

கி.பி. 1746-இல் நடந்த கடலூர் போருக்குப் பின்னர் இப் புனித ஜார்ஜ் கோட்டை பிரெஞ்சுக்காரர்களின் கைக்கு மாறியது. மூன்றாண்டுகளுக்குப் பிறகுதான் மீண்டும் ஆங்கிலேயரிடம் திரும்பியது.

உயரமான கொடிக்கம்பம்

இராபர்ட் கிளைவுக்கு முன்னால், பாஸ்டன் நகரில் பிறந்த யேல் என்பார் ஆளுநராக 1687 முதல் 1692 வரைக்கும் பொறுப்பு வகித்தார். இவருடைய



காலத்தில்தான் 1687-ஆம் ஆண்டு, புனித ஜார்ஜ் கோட்டையில், நாட்டிலேயே உயரமான மரத்தாலான கொடிக்கம்பத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கொடி முதன்முதலில் ஏற்றி வைக்கப்பட்டது. இன்று இந்திய தேசியக் கொடி பட்டொளி வீசி பறக்கிறது.

மரத்தாலான பழைய கொடிக்கம்பம் பழுதடைந்துள்ளது என கண்டுபிடித்ததால் 1995-ஆம் ஆண்டு புதிய கொடி மரம் மாற்றப்பட்டது.

எலிகுயேல் ஆளுநராக இருந்தபோது கோட்டையின் பழையக் கட்டடங்களை இடித்து விட்டு, அங்கு புதிய மூன்று அடுக்கு கட்டடத்தையும் கட்டினார். அதன் பிறகே, இன்றுள்ள தலைமைச் செயலக பழையக் கட்டடம் கட்டப்பட்டது.

1910-ஆம் ஆண்டு சட்டப் பேரவைக் கட்டடத்தின் இரண்டாவது தளமும் மற்ற அலுவலகங்கள் உள்ள பகுதிகளும் அமைக்கப்பட்டன.

பல்லாவரத்துக் கற்றூண்கள்

ஜார்ஜ் கோட்டையின் அழகே அதன் ஓங்கியுயர்ந்த தூண்களேயாம். இந்தத் தூண்கள் பல்லாவரத்திலிருந்து கொண்டு வரப்பட்டவை. மொத்தம் உள்ள 32 கற்றூண்களில் 20 கரிய கற்றூண்கள் 1910-ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

சட்டப்பேரவை மாமண்டபம்

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற அழகிய சட்டப்பேரவை மாமண்டப அறைக்குள் கண்ணைக் கவரும் மரவேலைப்பாடுகளும், கருமையும், வெண்மையும் கலந்து அழகு மிளிரக் காட்சியளிக்கும் கருங்கல் வேலைப்பாடுகளும் நிறைந்துள்ளன.

இந்த மாமண்டபம் பெருமைகள் பல கொண்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்து இன்று வரை மண்டபத்துள் செல்ல

அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது. முன்னர், ஆங்கிலேய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், இன்று வாக்குரிமைப் பெற்றுப்பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே மண்டபத்துள் சென்று உறுப்பினருக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமரமுடியும். அவ்வளவுக் கட்டுப்பாடுகள் நிறைந்த புகழ்பெற்ற மண்டபம் இது.

இந்த மாமண்டபத்தில் **1991**-ஆம் ஆண்டு முதல் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

இம்மண்டபம் ஓங்கி உயர்ந்த விதானத்தையும், உயரத்திலிருந்து கலைநயமிக்க ஒளிர்விளக்குகள் தொங்கும் அழகையும், நாற்புறமும் எழில் மாடங்களும் கொண்டு காண்போரைக் கவர்ந்திழுக்கும் பேரழகு கொண்டது.

இன்று கோட்டைக்குள் இராணுவ அலுவலகங்களும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகமும், மத்திய அரசு தொல்பொருள் ஆய்வு அலுவலகங்களும், அருங்காட்சியகமும் அமைந்துள்ளன.

அருங்காட்சியகம்

வரலாற்று ஆவணங்களை, இனி வருகின்ற சந்ததியினருக்கும் தெரியப்படுத்தும் நோக்கோடு கோட்டை வளாகத்துக்குள் ரிசர்வ் வங்கியின் அருகாமையில் அமைந்துள்ள கி.பி. **1795**-இல் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தில் அருங்காட்சியகம் உள்ளது. இதற்கு அனுமதி இலவசம். பழமையான இக்கட்டடத்தில் முந்தைய மதராஸ் வங்கியும், பின்னர் பம்பாய் மற்றும் வங்காள வங்கியும் இயங்கியுள்ளன.

மாடியிலுள்ள மிகப் பெரிய அரங்கம் பொதுமக்களின் பண்டமாற்று இடமாகவும், பொதுக்கூட்டங்கள் நடத்துமிடமாகவும், பரிசுச்சீட்டுக் குலுக்கல் நடத்துமிடமாகவும், கேளிக்கை விளையாட்டுகள் நடைபெறுமிடமாகவும் விளங்கியுள்ளது.

கலங்கரை விளக்கம்

கி.பி.**1796**-இல் இக்கட்டடத்தின் உச்சியில் முதலாவது கலங்கரை விளக்கம் பொருத்தப்பட்டது. இது ஆங்கிலேய ஆட்சி அலுவலர்களின் உணவுக் கூடமாகவும் இருந்துள்ளது.

இக்கட்டடம் கி.பி. **1948**-இல் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் இக்கட்டடத்தில் அருங்காட்சியம் இயங்கி வருகிறது.

காட்சிப் பொருள்கள்

இந்தக் காட்சியகத்தில் எண்ணெய்ச்சாய உருவப் படங்கள், வெள்ளிப்பாத்திரங்கள், பீங்கான் பாத்திரங்கள், ஆவணங்கள், உலோகப் பதக்கங்கள் அரிய சித்திரங்கள் மற்றும் படைக்கலன்கள் உள்ளன.

ஒரு பஞ்சு மெத்தை மீது நெருங்கியடித்து உட்கார்ந்திருக்கிறாயா அல்லது ஒரு பூசணிக் காய் மீது தனியாக வசதியாக உட்கார்ந்திருக்கிறாயா என்று கேட்டால் நான் பூசணிக் காயைத் தான் தேர்ந்தெடுப்பேன்.

—தொராவ்

புனித மேரி மாதாக் கோயில்

கோட்டையின் வலதுபுறத்தில் உள்ள மாதா கோயில்,வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தியாவில் முதன் முதலாக கட்டப்பட்ட ஆங்கிலேய மாதாக் கோயில் எனும் பெருமை கொண்டது. ஆசியக் கண்டத்திலுள்ள பழமையான கோயில்களில் இதுவும் ஒன்றாகும். கி.பி.**1678**-ஆம் ஆண்டு திருமதி பிரான்சிஸ் டே அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது, கோட்டைக்குள் வசித்தவர்கள் உவந்தளித்த அன்பளிப்புத் தொகையிலிருந்து இது கட்டப்பட்டதாகும். குண்டு துளைக்காத **5** அடி அகலம் கொண்ட சுவர்களைக் கொண்டது. **1680**-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து இயங்குகிறது.

ராபர்ட் கிளைவ் திருமணம், எலிகு ஏல் திருமணம் போன்றவை இங்கு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

16-ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட கடைசி உணவு (Last Supper) வண்ண ஓவியம் இன்று வரையப்பட்டதைப் போல புத்தம் புதிதாகக் காட்சியளிக்கிறது.

அகழிகள்

புனித ஜார்ஜ் கோட்டைக்குள் உள்ள கட்டடங்களில் மரத்தாலான படிக்கட்டுகளும், தளங்களும் உள்ளன. ஆட்சியாளருக்கெனத் தனி படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டு நடைமுறையில் செயல்படுத்தப் பட்டுள்ளதாகத் தொல்பொருள் அருங்காட்சியகக் கண்காணிப்பாளர் திரு கே.டி. நரசிம்மன் சொல்கிறார். இது நாற்புறமும் அகழிகளால் சூழப்பட்டு எதிரிகள் நெருங்க முடியாத பாதுகாப்புப் பெற்றது.

புனித ஜார்ஜ் கோட்டையே இன்றைய சென்னை நகரம் உருவாக அடிப்படைக் காரணம் என்று சொல்லப்படும் அளவுக்குச் சிறப்புப் பெற்றது. கோட்டை இல்லையெனில் மதராஸ்பட்டணம் என்று அழைக்கப்படும் சிற்றூராகக் கூடச் சென்னை இருந்திருக்கும்.

வருகின்ற சந்ததியினருக்கும் வரலாறாய், கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலையைப் போல் ஒளிருகின்ற புகழோடு, தமிழ் நாட்டுக்கு, ஏன் இந்தியாவுக்கே ஒரு குன்றாச் சிறப்பாய், ஆட்சியாளர்களின் அன்றாடக் கனவாய், அல்லலுறும் ஆயிரக் கணக்கான பொதுமக்களுக்கு நலத் திட்டங்கள் தீட்டப்படும் மணிமேகலைக் கையிலுள்ள அமுதசுரபியாய் என்றென்றும் விளங்கும் புனித ஜார்ஜ் கோட்டையின் புகழ் நின்று நிலைத்து என்றும் பெருகும் என்றே கூறலாம்.

—எம்.வி.எம். அசோகன்

கட்டுப்படுவோம் ... கடமை புரிவோம்!

அ. அப்துல்லா அஹமத்

அழுக்கைச் சாப்பிட்டாலும்
காகம்
அன்றாடம் குளிக்கத்
தவறுவதில்லை!
ஆதவனும்
அவன் தம்பி சந்திரனும்
நேரத்தில் உதிக்கவும்
மறையவும் மறப்பதில்லை!
காற்றும் கடலலையும்
தம் கடமையில் ஒரு போதும்
ஓய்ந்ததில்லை!
காலத்தில் பூக்கவும் காய்க்கவும்
தாவரங்கள்
தவறுவதே இல்லை!
இதுபோல்,
இயற்கையின் இயக்க உருபுகள்
எதுவுமே
வழக்கத்திற்கு மாறாய்
செயல்படுவதில்லை!
ஆனால், படைப்பதில்
இறைவனுக்கு நிகரென
இறுமாப்பெய்தும் மானிடனோ
எதிர்பார்ப்பது போல்
நடப்பதில்லை!
இனிய உளவாக
இன்னா கூறுகையிலும்
தமிழை மாசுபடுத்துகின்றான்
தாய்தனக்குச் செய்ய
வேண்டிய தொண்டதனில்
தவறும்போது
உயர் குணநலன்களையே
மாசுபடுத்துகின்றான்
கொலையும் கொள்ளையையும்
கற்பழித்தலையும்
புரிகின்ற மனிதனோ
மானிட தர்மத்தையே
மாசுபடுத்துகிறான்
கள்ளக் கடத்தல்காரனும்
கறுப்புப் பணத்தானும்
தேசப் பொருளாதாரத்தை
மாசுப்படுத்துவோர்!
அத்துடன் நின்றானா மனிதன்?
இல்லை
அழுக்கையும் புகையையும்-
பிறர் அருவருக்கத்தக்க
ஒலியையும் கழிவு நீரையும்,
இப்படியே
காலனை வரவேற்கும்
காரியம் பலவும் புரிந்து
சுற்றுப்புறச் சூழலேயே
மாசுபடுத்தி
காசு சேர்த்து மகிழ்கின்றான்!
சட்டம் பல இருந்தும்
திட்டம் நூறு வகுத்தும்
சுற்றுப்புறம் கெட்டுப்போமாயின்
நட்டமே வரும்
நலிவுகளே சூழும்!
நாட்டவர் அனைவரும்
உணர வேண்டிய
கட்டாயப் பாடமிது! மாசுக்
கட்டுப்பாட்டு வாரியத்திற்குக்
கட்டுப்படுவோம்- நம்
கடமையைப் புரிவோம்!

Phone 30491

E.H.88, மூவேந்தர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்.,

மேட்டூர் மெயின் ரோடு,
குருப்பநாயக்கன்பாளையம் P.O.
பவானி T.K.
பெரியார் மாவட்டம் - 638 302

எங்கள் சங்கத்தில் ஜமுக்காளங்கள், ஹால் ஜமுக்காளங்கள் எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்

எங்கள் விற்பனை நிலையம்:

பவானி கார்ப்பெட் கோ ஆப்ரடிவ்ஸ்
22, கும்பர்வேஷ் ஷாப்பிங் சென்டர்
சோலாப்பூர் - 413 002

எம். பழனிசாமி B.Com.,H.D.C.,
தனி அலுவலர்

எங்கள் நல்வாழ்த்துக்கள்

பாரதி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட் நெ. E.H. 19

88, காமராஜ் வீதி, எண் 2, சூரம்பட்டி P.O.
ஈரோடு - 638 009

தயாரிப்பாளர்கள்:

நேப்கின்கள்
கலர் துணிகள்
படுக்கை விரிப்புகள்

என்.எஸ். குமாரசுவாமி, பி.ஏ.,
கைத்தறி அலுவலர்/தனி அலுவலர்

வாழ்த்துக்கள்

தொட்டம்பாளையம் அண்ணா நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட், நெ.C.H.24

தொட்டம்பாளையம் P.O.
பவானிசாகர் வழி - 638 451,
பெரியார் மாவட்டம்

எங்களது தயாரிப்புகள்:

சீகோ சேலைகள், கோவை காட்டன் சேலைகள், மற்றும் கோரா & கோரா சேலைகள்

A.M. ஹபிபுல்லா
மேலாளர்

V.R. பெரியசாமி
தனி அலுவலர்
கைத்தறி அலுவலர்

ESTD. 1982 Phone: 60343

ஸ்ரீமாதேஸ்வரன் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., EH 82

Head Office:

சேத்துனாம்பாளையம் - அந்தியூர் - 638 501
பெரியார் மாவட்டம்

விற்பனை நிலையம்:

105, காமாட்சி அம்மன் கோயில் வீதி
பவானி - 1

எங்களிடம் தரமான அறை விரிப்பு ஜமுக்காளங்கள், ஈசிசேர், பந்தி ஜமுக்காளம் மற்றும் சின்னசைஸ் ஜமுக்காளங்கள் கிடைக்கும்.

தனி அலுவலர்

அறிவின் திறவுகோல்

ஆசிரியர்:
துரை சந்திரசேகரன்

வெளியிட்டோர்:
அறிவுப் பொன்னி பதிப்பகம்
1-ஏ, சோதி நகர்
வடலூர் - 607 303

பக்கம்: 83 விலை: ரூ.20

'பெரியாரியல்' என்ற தலைப்பில் நான்கு கட்டுரைகளும் 'அம்பேத்காரியல்', 'தொழிலாளரியல்', 'கவிதையியல்' ஆகிய தலைப்புகளின் கீழே ஒவ்வொரு கட்டுரையும் கொண்டிலங்கும் தொகுப்பு நூல் இது. திரு கி. வீரமணி, திரு பிரபஞ்சன், திரு பழமலை ஆகியோரின் அணிந்துரை, மதிப்புரை, பாராட்டுரை ஆகியவை நூலின் முன்னோட்டமாக அமைந்திருக்கின்றன.

இந்நூலில் உள்ள எழுத்தோவியங்கள் யாவும், பேச்சு வன்மை மிக்க நூலாசிரியரால் அவ்வப்போது புதுவை வானொலியில் பேசப்பட்டவைகளாகும்.

ஆண் என்ற சொல்லே அழிக்கப்பட வேண்டும் என்னுமளவுக்குத் தந்தை பெரியார் அவர்கள் 'பெண்ணியம்' பற்றி அறிவித்த கருத்துகள், 'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்' என்று முழங்கிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தெரிவித்த எழுச்சி மிக்க சிந்தனைகள், சமத்துவமும் சமூகநீதியும் நாடெங்கும் நிலவச் செய்யச் சட்டமேதை அம்பேத்கர் வெளிப்படுத்திய எண்ணங்கள் ஆகியவை இந்த நூலில் பரவலாகக் காணப்படுகின்றன.

சீர்திருத்தங்களை, பகுத்தறிவு வாதங்களை, புதுமைகளை விரும்புவோருக்குப் பெரிதும் இந்த நூல் இனிப்பதாய் இருக்கும்.

—'கங்கைகொண்டான்'

தோட்டுக்காரி கதை

பதிப்பாசிரியர்:
முனைவர் வ. அலமேலு

வெளியிட்டோர்:
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113.

பக்கம்: 141 விலை: ரூ.28

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமானது நடத்திவரும் சுவடியியல் பட்டய வகுப்பு, பழங்காலத் தமிழ்ச்

சுவடிகளைத் தேடிப்பிடித்துப் புது மெருகோடு தருவதில் புகழ்பெற்று வருகிறது. அதற்கு இந்தத் 'தோட்டுக்காரி கதை' நூல் ஒரு சான்றாகும்.

அக்காலத்தில், அம்மானை எனக் குறிப்பிடப்பட்ட கதைப் பாடலே இந்நூலின் இருப்பாகும். அதுவும் வில்லை முதன்மையாக வைத்துப்பாடும் வில்லுப்பாட்டு முறையில் அமைந்துள்ளன பாடல்கள். நாட்டுபுற இலக்கியத்திற்கு வலிவூட்டுவதாயுள்ள 'தோட்டுக்காரி கதை' இறைப்பற்றும் படிப்போர் மனதில் படியச் செய்வதாக உள்ளது.

ஒருத்தி- தோட்டுக்காரியாய் பிறந்து, மறுபிறவியும் வாய்க்கப் பெற்றுத் தெய்வமாகிறாள். இது தான் கதை!

சகுணங்களால், கனவுகளால், அவரவர் செய்கிற தீமைகளால் எவ்வாறான பலாபலன்கள் கிட்டும் என்பன போன்ற கருத்துக்கள் நூலின் பல பகுதிகளில் நம் பார்வையில் படுகின்றன. இதற்கான மூலச் சுவடியை எழுதியவர் பால்நாடார் என்கிற சுப்பிரமணிய நாடார் என்று தெரிகிறது. இதன் காலம் 1917-ஆ ஆண்டு.

'பந்தெடுத் தாடிவாறாள்
என் நாச்சியார்
பந்தெடுத் தாடிவாறாள்...'

—என்பன போன்ற சுவைமிக்க பாடலடிகள் மட்டுமல்ல...

'அம்புபட்ட மானானேன்
அலையிட்ட துரும்பானேன்
கொம்பிழந்த மந்தியைப்போல்
குழந்தையில்லாக்
குறையானேன்
ஆடாத செக்கானேன்
அரசிழந்த பதியானேன்...'

—போன்ற உருக்கமிகு பாடல்களும் இனிய தமிழில் ஏற்றபல எடுத்துக்காட்டுகளோடு உருவாக்கப்பட்டிருக்கிற நூல் இது. தமிழார்வலர்கள் அனைவரும் படித்து மகிழலாம்.

—'மதுராந்தகன்'

விவேக சிந்தாமணி

ஆசிரியர்: ஞா. மாணிக்கவாசகம்

வெளியீடு:
உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டி தெரு
சென்னை - 600 001

பக்கம்: 90 விலை: ரூ.12

நமக்குக் கிடைத்த இலக்கியச்

மாமுனிவர் விழாவுக்குப் பேராசிரியர் சேதுப்பிள்ளை விரிவுரையாற்றுவதற்கு அழைக்கப் பெற்றார். இவர் வருகிறார் என்பதையறிந்த ஞானப்பிரகாச சுவாமிகளுக்குப் பழைய நினைவு எழலாயிற்று.

45 ஆண்டுகட்கு முன்னால் அவர் பாளையங்கோட்டைப் பள்ளியில் ஆசிரியப் பணியாற்றிய காலத்தில் நிகழ்ந்தவை மனத் திரையில் தோன்றின. உடனே, ஞானப்பிரகாசர் சேதுப் பிள்ளையை எதிர்கொண்டு அழைத்து வருவதற்குப் புகை வண்டி நிலையத்திற்குச் சென்ற கல்லூரி மாணவர்களை வர வழைத்தார். அவர்களிடம், "நீங்கள் அழைத்து வரச் செல்லும் பேராசிரியரிடம் 'உங்களுக்கு ஞானப்பிரகாச சுவாமிகள் என்னும் ஆசிரி யரைத் தெரியுமா' என்று கேளுங்கள். அவர் தெரியு மென்றால் என்னிடம் அவரை அழைத்து வாருங்கள்" என்று வேண்டிக் கொண்டார்.

மாணவரைக் கண்டு முகம் மலர்ந்த ஆசிரியப் பெருந்தகை

புகைவண்டி நிலையம் சென்று பேராசிரியர் சேதுப் பிள்ளையை மாலையிட்டு வர வேற்று உந்து வண்டியொன்றில் அவரை அழைத்து வந்த மாண ர்கள், வரும் வழியிலேயே அவரிடம் 'பாளையங்கோட்டை சேவியர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியாற்றிய ஞானப் பிரகாச சுவாமிகளை அறி வீர்களா?" என்று பணிவுடன் வினவினார்.

'ஆம். அவரை நன்றாக அறிவேன்' என்று கூறி, அன்பால் உளமுருகினார் சேது. அவர் மாணவர்க்கு ஆங்கிலம் பயிற்றிய முறையினைப் பாங்குற பாராட் டினார். அம்மாணவர்கள், பேராசிரியர் சேதுப்பிள்ளை யைத் தொண்டு கிழவராக இருந்த ஞானப்பிரகாசர் அறைக்கு அழைத்துச் சென்றனர். நோயாலும் முதுமைப்பருவத் தாலும் பாயும் படுக்கையுமாகக் கிடந்த ஞானப்பிரகாசர், எவரிடமும் பேசலாகாது என்று மருத்துவர்கள் . விதித்திருந்த தடையையும் மீறிச் சேதுப் பிள்ளையைக் கண்டதும் அவர் எழுந்து அமர்ந்தார். மலர்ந்த முகத்துடன் பிள்ளையை வர வேற்றார். அன்போடு தமிழில் உரையாடினார்.

மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட பாங்கு

அதுகண்டு மகிழ்ந்த சேதுப் பிள்ளை "நான் உங்களிடம் மாணவனாகப் பயின்ற நாளில் உங்கள் வகுப்பில் தமிழ் பேசியதற்காகச் சொல்லொன் றுக்கு ஒரு காசு வீதம் தண்டனை செலுத்தினேன். இன்று உங்கள் கல்லூரி விழாவில் **2000** தமிழ்ச் சொற்களுக்குக் குறையாமல் பேசப் போகிறேனே! அதற்கு முன்னதாகவே தண்டனைப் பணத்தை உங்களிடம் கட்டி விடலாமா?" என்று வினவினார்.

அப்போது ஞானப்பிரகாசர், "அந்நாளில் ஆங்கிலம் வேண்டி யதாக இருந்தது. நீங்கள் நன்கு ஆங்கிலம் கற்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பினேன், இந்நாளிலோ வீட்டிலும், நாட்டிலும், கல்லூரி ஏட்டிலும் எங்கும் தமிழ் மணம் பொங்கிக் கமழ்கின்றது. இன்று நான் விரும்புவது அதுதான். ஆதலின் நானே இப்போது ...நுடன் தமிழில் தானே ...றேன்" என்று அன்புகனியும...இனிய மொழி பகர்ந்தார்.

இல்லால் அகத்திருக்க இல்லாதது ஒன்றுண்டோ

வீடு என்றாலும், இல் என்றாலும் மனை என்றாலும், அகம் என்றாலும் பொருள் ஒன்றே. இல் என்பது இல்லம் என்று வழங்கும். இல்லத்துக்கு உரியவள் இல்லாள் எனப்படுவாள், இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை என்றார் ஒரு தமிழ்க்கவிஞர். இல்லத்திலிருந்து செய்யும் அறம் இல்லறம் எனப்படும். இல் என்பது இல்லு என்றும், இல்லாள் என்பது இல்லாலு என்றும் தெலுங்கில் வழங்குகின்றன.

மலையாளத்தில் இல் என்பது இல்லம் என வழங்கும், வீட்டைக்குறிக்கும் மற்றொரு சொல் மனை, மனைக்குரியவளை மனைவி என்றும், மனையாள் என்றும் கூறுவர்.

- ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய
'தமிழ்விருந்து' நூலிலிருந்து

★★★

வானிலே தவழும் வெண் மேகமே...

முகில் என்பது தெலுங்கில் மொகிலு என்றும், கன்னடத்தில் முகில் என்றும், துளுவத்தில் முகில் என்றும் காணப்படுகின்றது. வானத்திலே தவழும் வெண்மேகத்திற்கு மஞ்சு என்று பெயர். தெலுங்கிலும், கன்னடத்திலும், மலையாளத்திலும் மஞ்சு உண்டு.

- ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய
'தமிழ் விருந்து' நூலிலிருந்து

★★★

அன்புமிகு இல்லத்தரசி ஆழ்வார் சானகியம்மை

'ஆழ்வார் சானகி' என்னும் பெயருடைய பெண்மணியை மணந்தார். கம்பன் காவியக் கடலில் மூழ்கித் திளைக்கப் போகும் சேதுப்பிள்ளைக்கு அக்காவியத் தலைவியாகிய சானகியின் பெயரைத் தாங்கிய பெண்ணரசியே வீட்டம்மையாக வாய்த்தது மிகப் பொருத் தல்லவா?

அவர் எழுதிய நூல்களில் பலர் பாராட்டியது ஊரும் பேரும், தமிழின்பம், தமிழர் வீரம், தமிழ் விருந்து, வேலும் வில்லும்!

வெள்ளிதோறும் கம்ப ராமாயணம் வகுப்பை 5 ஆண்டுகளாக ஒய்.எம்.சி.ஏ.வில் நடத்தினார். 2 ஆண்டுகளி சிலப்பதிகார வகுப்பை கோகலே மண்டபத்தில் நடத்தினார். 2 ஆண்டுகளாக திருக்குறள் வகுப்பை சென்னை புரகிரசிவ் மேல்நிலைப் பள்ளியில் நடத் தினார். கந்தசாமி கோயில் அருகில் கந்தபுராண வகுப்பை நடத்தினார்.

பட்டிமன்றம் என்ற பெயரைத் தமிழகத்தில் பரவ வைத்தவர் அவரே. ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் பல கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பேச்சுப் பயிற்சியை சனிக் கிழமை தோறும் 2 ஆண்டுகள் வரை தந்தவர்.

'திருவள்ளுவர் நூல்நயம்' என்னும் நூல் மாணவர் யாவருக்கும் பயன்படும். கா.சு. பிள்ளை அவர்கள் பொன்னுரை களால் போற்றிப் புகழ்ந்த நூல் இது.

எல்லாவிதமான குறை களையும் தடைகளையும் வென்று விடக்கூடிய ஒரே சாதனம் உழைப்பு. உழைப்பு மட்டுமே.

–இங்கிலாந்துப் பழமொழி

பேராசிரியர் தம் வாழ் நாளில் பெற்ற சிறப்புகள் அனைத்துள்ளும் தலைமை வாய்ந்தது, சென்னைப் பல் கலைக் கழகம் தனது நூற் றாண்டு விழாவில் 'இலக்கியத் துறைப் பேரறிஞர்' என்று அவருக்கு அளித்த அரிய பட்டமேயாகும்.

என்றும் புகழ் மணக்கும் இனிய தமிழ்த் தொண்டு

தமிழ்ப் புத்தாண்டின் பிறப்பு நாளன்று *13.4.1961* பேராசிரி யருக்குத் தமிழகப் பெரு மக்களின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றத் தில் வெள்ளிவிழா எடுத்தனர்.

ஆட்சிச் சொற்காவலர் திரு. கீ. இராமலிங்கனார், ஒரு நாள் சேதுப்பிள்ளை வீட்டுக்குச் சென்றதும் குடிப்பதற்குப் பால் கொடுத்தாராம். என்னபால்? 'தமிழ்ப் பால்' குடிப்பதற்குக் கொடுத்தார் என்றார்.

9.2.1943 அன்று சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் கோவைக் கிழார் இராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் அறிஞர் அண்ணாவுக்கும் சேதுப் பிள்ளைக்கும் சொற்போர் நடைபெற்றது.

சொல்லின் செல்வர் *25.4.1961* அன்று காலை *11.30* மணிக்கு மீளா உலகம் புகுந்தார். *2.3.1996* அன்று அவருடைய நூறாவது ஆண்டு முடிந்து விட்டது. ஆனால் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவர் தமிழுக்கு ஆற்றிய நற்தொண்டின் புகழ் என்றும் மணக்கும் என்பதில் ஐயமில்லை.

செல்வங்களுள் விவேக சிந்தாமணியும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. மணிமணியான கருத்துக்கள் கோக்கப்பட்ட மணியாரமாக இதிலுள்ள பாடல்கள் விளங்குகின்றன.

உலக இயல்பை உள்ளது உள்ளபடி எடுத்துக்கூறுகின்ற பாடல்கள், இன்றைக்கும் பொருந்துவனவாக உள்ளன. வாழ்க்கையில் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும், எப்படியெல்லாம் நடந்து கொள்ளக்கூடாது என்பதற்குத் தக்க உதாரணங்களுடன் அமைந்துள்ள பாடல்கள் படித்து மகிழ்தற்குரியது. எல்லாத் திறத்தாரும்-குறிப்பாக மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டிய கருத்துக் கருவூலம் இது.

—பி.வி. கிரி

சுதந்திரப் பறவைகள்

ஆசிரியர்: வல்லிக்கண்ணன்

வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர்
சென்னை - 600 004

பக்கம்: 162 விலை: ரூ.25

இந்த நூல் கரிசல்காட்டுப் பேச்சு வழக்கு விரவிவரும், இருபது கதைகளைக் கொண்டது. ஆசிரியர் வல்லிக்கண்ணனின் நுண்ணிய சமுதாய நோக்கமும், திண்ணிய எழுத்து வன்மையும் படிப்போரின் மனத்தைப் பற்றிக் கொள்ளும்.

காளவாய், வாழ்க்கை நாடகம், மனம் வெளுக்க, சாப்பாட்டு ராமன், எளிய காரியம், மாமா வந்த ஜோர், அரைகுறை, வெளிச்சம், விளையாட்டுப் பிள்ளை, சுதந்திரப் பறவைகள், ஒரு சின்னக் கேள்வி, அவள் சிரித்தாள், சந்திப்பு, முத்து மாலையின் மனமாற்றம், கொடுக்கல் வாங்கல், விழிப்பு, உரிமை, அழகைத் தேடியவன், ரொம்ப வேண்டியவர், வேதனை போன்ற தலைப்புகளில் சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

இவரது படைப்புகளில் சமுதாய அவலங்களையும், தனி மனித உணர்வுகளையும், அனைவரும் அள்ளிப்பருகும் ஆற்றோடையாக்கியுள்ளார். எழுத்தாளர் உள்ளடக்கி எவரையும் படிக்கவைக்கும் பட்டறிவுப் பதியன் போடப்பட்ட, பண்பட்ட எழுத்துப் பிரவாகம். எல்லோரும் படிக்கலாம்.

—மா. அசோகன்

தெரிந்துகொள்ளுங்கள்

★ மனிதர்களின் வேலைகளை எளிதாக்கும் கம்ப்யூட்டர் என்னும் கணிப் பொறி பிறந்தது 1946-ஆம் ஆண்டில், அமெரிக்க நாட்டு, பிரிட்டன் பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் அதை உருவாக்கியவர், புகழ்பெற்ற கணிதமேதை ஜான் வான்நியூமன் ஆவார்.

★ உலகப் புகழ்பெற்ற விளையாட்டுகளில் ஒன்றான கிரிக்கெட் முதன்முதல் இங்கிலாந்து நாட்டில்தான் பிறந்தது. Cric என்னும் நார்டிக் சொல்லிலிருந்தே cricket என்னும் ஆங்கியலச் சொல் பிறந்ததாம்.

★ பண்டைய எகிப்தியரும் ரோமானியரும் பென்சிலைக் காரீயத்தால் செய்தே எழுதப் பயன்படுத்தினார்கள். ஆனால் இப்போதோ, சாதாரணமான பென்சில்கள் சிறிய நுண்ணிய கார்பைட் கம்பிகளால் மரத்தால் மேற்பாகம் அமைக்கப் பட்டுக் குழாய்கள் கொண்டு செய்யப்படுகின்றன. இந்த முறையை 1791 பிரான்சு நாட்டில் நிகோலாஸ் ஜாக்குஸ்கோண்டி என்பவர் கண்டுபிடித்தார்.

★ நகராட்சி என்பதை ஆங்கிலத்தில் Municipality என்று கூறுகிறோம். இச்சொல் முனிசிபியம் என்னும் லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. அச்சொல், ரோமாபுரிக்கும் அதற்கடங்கிய சிற்றூர்களுக்கும் இடைப்பட்ட அரசைக் குறிப்பிட்டது.

★ உலகிலேயே மிக உயரமான கலங்கரை விளக்கு ஆலந்து நாட்டில், ஹெல்டர் அருகே உள்ள கிஜ்க்டுயின் என்ற இடத்திலிருக்கிறது இதன் உயரம் 197 அடி.

★ ஜப்பானிய மொழியில் Kara என்றால் வெறும் என்றும் te என்றால் கை என்றும் பொருளாம். வெறும் கையைக் கொண்டே வெல்லுவது தானே கராத்தே!

—இந்திரன்

தமிழ் வளர்த்த பெரியார்

செந்தமிழுக்குச் சீர்செய்த சேதுப்பிள்ளை

—அன்புப்பழம் நீ

கம்பரின் கவினுறு காவியமும், இளங்கோவின் இணையற்ற இனிமையும், வள்ளுவரின் வழுவற்ற வலிமையும் வானோங்கி வளரும் தமிழ்நாட்டில் பிறந்தவர் நம் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை.

சேது என்னும் பெயர் வர சீர் மிகுந்த காரணம்!

பிறவிப்பெருமாள் பிள்ளைக்கும் சொர்ணத்தம்மையாருக்கும் 1896 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2-ஆம் நாள் துன்முகி ஆண்டு மாசித் திங்கள் பூச நன்னாளில் ஆண் குழந்தையொன்று பிறந்தது. சேதுக்கடலாடி, இராமேச்சுரத்தீசனை நேசமுடன் வழிபட்டு வரங்கிடந்து பெற்ற அக்குழந்தைக்குச் 'சேது' என்றே பெயர் சூட்டிப் பெற்றோர் மகிழ்ந்தனர்.

சேதுவுக்கு 5 ஆண்டு நிரம்பும் போது கன்னிப் பருவம் எய்தியிருந்த அவர் தமக்கையார் உயிர்நீத்தனர். அதனால் 11 மக்களைப் பெற்றெடுத்த அப்பெற்றோர்க்குச் சேது ஒருவரே தனிமகனாக இருந்தார். தமக்கையை இழந்ததால் சேது ஒருவரே தனிமகனாக இருந்தார்.

அன்னைத் தமிழுக்கு ஆற்றிய நாற்பதாண்டு நற்தொண்டு

'டாக்டர் சேதுப்பிள்ளை' அவர்களைத் தமிழ் கூறு நல்லுலகமேயன்றிப் பாரதநாடு முழுவதும் நன்கறியும். அவர்கள் நாடறிந்த நாவலர். எளிய வேளாளர் குடும்பத்தில் பிறந்த அவர்கள், தம் சிறந்த நுண்ணறிவால் உயர்ந்த கலைஞராயினர். தமிழகத்தின் தலைசிறந்த சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பணியாற்றிப் பேராசிரியப் பெரும் பதவி பெற்றனர். இன்பத் தமிழன்னைக்கு 40 ஆண்டுகளாக தொண்டாற்றினார்.

சொல்லின் செல்வர் ஆங்கில நாட்டு உடையணிந்து, சட்டைக்கு மேல் கழுத்திற் கட்டிய வண்ணத் துணியைக் கையால் இழுத்த வண்ணம், இடையிடையே தோள்கள் குலுங்கச் சிங்கவேறு போல் அங்குமிங்கும் நோக்கியவாறு, மலர்ந்த முகத்துடனும் கிளர்ந்த உள்ளத்துடனும் நல்ல தமிழில் பேசும்போது வியந்து போற்றாதார் யாவர்?

தமிழில் பேசிடவே நிதம் தண்டனைக் காசு தந்தார்

சேதுப்பிள்ளை அவர்கள் 8-ஆம் வகுப்புப் பயிலும் காலத்தில் அவ்வகுப்பிற்குச் சரித்திரம் கற்பிக்க ஞானப் பிரகாச சுவாமிகள் என்னும் பாதிரியார் வந்தார். அவரது வகுப்பில் எந்த மாணவனும் மறந்தோ தவறியோ தமிழில் ஒரு சொற்கூடப் பேசலாகாது என்பது அவர் கட்டளை. எவனும் பேசினால், சொல்லுக்கு ஒரு காசு வீதம் தண்டனை கொடுத்தல் வேண்டும். அம்முறையிலே மிகுதியாகத் தண்டனைக் காசுகள் செலுத்தியவர் சேதுவே.

இவ்வாறு வகுப்பில் மாணவர் தமிழ் பேசுவதற்குத் தண்டனை விதித்த ஞானப் பிரகாசர், பின்னாளில் தம் முதுமைப் பருவத்தில் திருச்சி தூசையப்பர் கல்லூரியில் ஆட்சியாளராக இருந்து ஓய்வு பெற்றார். அவர் 85 ஆண்டுகள் நிரம்பிய முதியவராக அக்கல்லூரியில் தங்கியிருந்த நாளில் சேது, சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அந்நாளில் தூசையப்பர் கல்லூரியில் நடைபெற்ற வீர

நல்வாழ்த்துக்கள்

ஈரோடு நகராட்சி

நேரு வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புறத்திலுள்ள நலிவடைந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை எளிய மக்களுக்கான திட்டங்கள்

		பயன்பெற்றோர்	கடன்	மானியம்
1994-95				
1.	வங்கிகள் மூலம் கடன் வழங்கி சுய வேலைவாய்ப்பிற்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்:	1,544 நபர்கள்	ரூ. 90,74,124	ரூ.30,24,708
1993-94				
2.	சிறுவினைத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளித்தல், திட்டப் பயன் அடைந்தவர்கள்:	107 நபர்கள்		ரூ.1,25,190
3.	வீடு மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சியளித்தல் திட்டப் பயன் அடைந்தவர்கள்:	30 நபர்கள்		ரூ.45,000

பொ. ஸ்ரீராமுலு
ஆணையாளர்
ஈரோடு நகராட்சி

நல்வாழ்த்துக்கள்

ஈரோடு நகராட்சி

ஈரோடு நகராட்சியில் 1994-95-ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட பணிகள் பற்றிய விவரங்கள்

சாலைப் பணிகள், கட்டடப் பணிகள், பொதுக்கழிப்பிடம், சுகாதாரப் பணிகள், பள்ளிக்கூடப் பராமரிப்புப் பணிகள், பூங்கா பராமரிப்பு, பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், குடிநீர் விநியோக பணிகள், சாக்கடை வசதி, சத்துணவுக் கூடப் பராமரிப்பு, தாய்சேய் இல்லப் பராமரிப்புப் பணிகள்:

367 வேலைகள்   *ரூ 193.39 இலட்சம்*

ஈரோடு நகராட்சியில் 1995-96-ஆம் ஆண்டில் நடைபெறும் பணிகள் பற்றிய விவரங்கள்

சாலைப் பணிகள், கட்டடப் பணிகள், பொதுக்கழிப்பிடம், சுகாதாரப் பணிகள் பள்ளிக்கூடப் பராமரிப்புப் பணிகள், பூங்கா பராமரிப்பு, பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், குடிநீர் விநியோக பணிகள், சாக்கடை வசதி, சத்துணவுக் கூடப் பராமரிப்பு, தாய்சேய் இல்லப் பராமரிப்புப் பணிகள்:

436 வேலைகள்   *ரூ .294.63 இலட்சம்*

பொ. ஸ்ரீராமுலு
ஆணையாளர்
ஈரோடு நகராட்சி

பொதுத்தேர்தல்: ஆணையர்கள் அறிவிப்பு

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைக்கான பொதுத்தேர்தல் தேதிகளை 19.3.1996 அன்று, மத்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆணையர்கள் திரு டி.என். சேஷன், திரு ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, திரு எம்.எஸ்.கில் ஆகியோர் அறிவித்தார்கள்.

அதன்படி- தமிழ்நாட்டில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஏப்ரல் மாதம் 27, மே 2 ஆகிய தேதிகளில் தேர்தல் இரண்டு கட்டமாக நடத்தப் படும்.

25 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், அதில் அடங்கியுள்ள 150 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏப்ரல் மாதம் 27ஆம் தேதியன்று வாக்குப்பதிவு நடைபெறும்.

14 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், அதில் அடங்கியுள்ள 84 சட்டமன்றத் தொகுதிகளிலும் மே மாதம் 2 ஆம் தேதி அடுத்தகட்ட வாக்குப்பதிவு நடைபெறும்.

ஏப்ரல் 27, மே 2 ஆகிய நாட்களில் வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளின் வாக்குகள், மே மாதம் 8ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவு அறிவிக்கப்படும். தமிழகச் சட்டமன்றத் தேர்தல் வாக்குகளும் அன்றே எண்ணப்படும்.

இந்தியா முழுமைக்குமாக ஐந்து மாநிலங்கள்- புதுவை யூனியன் பிரதேசம் ஆகிய 6 இடங்களில் சட்டப் பேரவைத் தேர்தல்களும், மக்களவைத் தேர்தல்களும் நடைபெறும். மொத்தத்தில், இத்தேர்தலில் 59 கோடிப் பேர் வாக்களிப்பார்கள். தேர்தல் பணிகளில் 50 இலட்சம் அரசு அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுவர். தேர்தலின்போது, பாதுகாப்புப் பணியில் 15 இலட்சம் மாநிலப் போலீசாரும், ஒரு இலட்சம் மத்திய ரிசர்வ் படைப் போலீசாரும் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தேர்தல் ஆணையாளர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய மக்களவையின் பதவிக்காலம் ஜூலை 8-ஆம் தேதியும், தமிழகச் சட்டப்பேரவையின் பதவிக்காலம் ஜூன் 30-ஆம் தேதியும் முடிவடைகிறது. கேரள சட்டப் பேரவை பதவிக்காலம் ஜூன் 28, அரியானா சட்டப் பேரவை பதவிக் காலம் ஜூலை 8, மேற்கு வங்க சட்டப் பேரவை பதவிக் காலம் ஜூலை 17, அசாம் சட்டப் பேரவை பதவிக்காலம் ஜூலை 28, புதுவை யூனியன் பிரதேசச் சட்டப் பேரவை பதவிக்காலம் ஜூலை 25 ஆகிய தேதிகளில் முடிவடைகின்றன



'தமிழ்ப் புலவர் தமக்குள்ளே
மாறுபட்ட தன்மையினால்
இந்நாள் மட்டும்

தமிழ்ப்பெருநா டடைந்துள்ள
தீமையினைத் தமிழறிஞர்
அறிகி லாரோ?

—புரட்சிக் கவிஞர்

பண்டைத் தமிழரின் கடல் வழி வணிகம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, இவ்வாண்டு தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க அழகன்குளம் (இராமநாதபுரம் மாவட்டம்), பூம்புகார் (நாகை காயிதே மில்லத் மாவட்டம்), கரூர் (தீரன் சின்னமலை மாவட்டம்) சேந்தமங்கலம் (விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்) ஆகிய நான்கு இடங்களில் நில அகழாய்வை மேற்கொண்டுள்ளது.

பாண்டியர்களின் கடற்கரைத் துறைமுகமாகத் திகழ்ந்தது அழகன்குளம். பண்டைய நகரங்களுள் பெருஞ்சிறப்புடன் விளங்கியது பூம்புகார் நகரம். இது சோழர்களின் தலைநகரமாகவும், துறைமுகமாகவும் திகழ்ந்தது.

கரூர், சேரர்களின் இரண்டாம் தலைநகராக இருந்திருக்கிறது.

சோழர்களின் கீழ் ஆட்சி செய்த குறுநில மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் காடவராயர்கள். இவர்களின் தலைமையிடம் சேந்தமங்கலம்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் முன்னர் இத்துறை அகழாய்வுப் பணியை மேற்கொண்டபோதும் பல அரிய தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சான்றுகள்

தற்பொழுது அழகன்குளத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் தமிழர்நாகரீகத்தின் சிறப்பினையும், அவர்களின் வரலாற்றிற்கு மேலும் சான்றுகளாகத் திகழும் வகையிலும் அமைந்துள்ளன.

அழகன்குளம் அகழ்வாய்வில் பண்டைத் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும். குறியீடுகளைக் கொண்ட பானை ஓடுகளும், பல விலை மதிப்பற்ற கற்களால் ஆன மணிகளும் சங்கு வளையல்களும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

பானையில் கப்பல்

அழகன்குளம் அகழாய்வில் கிடைத்த மற்றொரு சிறப்பான தொல்பொருள், கப்பல் உருவம் பொறிக்கப்பட்ட பானை ஓடு ஆகும். கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுக் காணப்பெறும் பானை ஓடு இப்போதுதான் முதன்முதலில் தமிழகத்தில் கிடைத்துள்ளது.

ஆனால், இலங்கையில் பிராமிக் கல்வெட்டொன்றின் இறுதியில் கப்பல் உருவம் முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அழகன்குளத்தில் கிடைத்துள்ள இப்பானை ஓடு ரௌலெட்டட் எனப்படும் பானை ஓட்டின் வகையைச் சேர்ந்தது. இவை கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்தன. இதன்மூலம் பண்டைத் தமிழரின் கடல் வழிப் பயணமும், பிற நாடுகளுக்குக் கப்பல் மூலம் அவர்கள் சென்று வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததும் உறுதிப்படுத்தப்படுகின்றன. தற்போது நடைபெற்று வரும் அகழாய்வில் மேலும் சில அரிய தொல்பொருட்கள் கிடைக்கக்கூடும் என்பது திண்ணம்.

கல்வியின் குறிக்கோள், நல்லதொரு நிகழ்ச்சியை உண்டாக்க வேண்டும். அவ்வாறன்றி, அறிவை மட்டும் புகட்டுவதும், பரிமாறிக் கொள்ளுவதும் மட்டுமே கல்வியின் குறிக்கோள் ஆகிவிடாது

- டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

எல்லா உலகங்களையும் விடப் பெரியது மனித மனம்!

- பேரறிஞர் அண்ணா

புத்திசாலித்தனத்துக்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் எதிர்ப்புகள் உண்டு. ஆனால் முட்டாள்தனத்துக்கு அப்படிப் பட்ட துன்பங்கள் எதுவும் கிடையாது.

—எல்பர்ட்

21428. JL N71TA 26.

போன்: 21458 பவானி
30458 பவானி

ஸ்ரீ வீரமாத்தி சேம்பர்ஸ் & ஸ்ரீ வீரமாத்தி டயர்ஸ்

சக்தி பிரிக்ஸ் இண்டஸ்டீரிஸ்

அலுவலகம்:
பவானி மெயின் ரோடு
காளிங்கராயன்பாளையம்
பவானி அஞ்சல்

பேக்டரி
கேசரிமங்கலம்
சித்தார்

1. எங்களிடம் தரமான டேபிள் மோல்டு செங்கல் எந்த நேரத்திலும் கிடைக்கும்

உயர்ந்த ரகம் **சிறந்த சேவை**

2. கட்டடங்களுக்கு ஸ்ரீ சக்தி ஏஜென்ஸீஸ் மூலம் இரும்பு, பெயிண்ட், சிமெண்ட் முதலான பொருட்கள் கிடைக்கும்.

நல்வாழ்த்துக்கள்

மொத்தமாகவும், சில்லரையாகவும் தரமான மளிகைச் சாமான்கள் மற்றும் அரிசி பெறுவதற்குக் கீழ்க்கண்ட கைராசி ஸ்தாபனத்தை அணுகவும்:

ஜெயசீலன் ஸ்டோர்ஸ்

316, மெயின் ரோடு, பவானி - 638 302
தொலைபேசி: 30210

உரிமையாளர் ஜே. குணசீலன்

மொத்தமாகவும், சில்லரையாகவும் அரிசி வாங்குவதற்கு கீழ்க்கண்ட கைராசி நிறுவனத்தை அணுகவும்

கார்த்திகா டிரேடர்ஸ்

13, அந்தியூர் ரோடு, பவானி - 638 302
தொலைபேசி: 20233

உரிமையாளர் ஜே. ரமேஷ்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



★ வியர்வையினால் ஒரு விதி எழுது...... 25

இந்த இதழில்...

★ வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயர் 2
★ செய்திகள்... செய்திகள் 7
★ நரைமுடித்து முறை செய்த கரிகாற் சோழன் 9
★ தமிழ் வளர்த்த பெரியார் மயிலை சீனி. வேங்கடசாமி 17
★ பெண் கல்வியின் பெருமை 20
★ எங்கெங்கு காணினும் சக்தியடா 26
★ இவர் ஆசியாவிலேயே முதல் பெண்மணி 33
★ புதியதோர் உலகம் காணத் துடித்த புரட்சிப் பாவேந்தர் 35
★ சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 38
★ அறப்புரட்சிக்கு வித்திடும் தொழிலாளர் இயக்கம் 41
★ மூலிகையின் முக்கியத்துவம் 44

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (41)

★ இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
சித்திரைத் திங்கள் : 19
மலர்: 26 இதழ்: 21
1.5.1996
விலை: ரூபாய் 3

தமிழரசு
Licence No.TN
தமிழரசு

வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயர்

திராவிட சமுதாயச் சிற்பிகளில் குறிப்பிட்டுப் பாராட்டத் தக்க பெருமை பெற்றவர் வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயர் ஆவார்.

தேவாங்கர் வகுப்பில் 1852-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர் பிறந்தார். இதற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் தான் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்பட்டது.

வணிகக் குடும்பத்தில் உதித்த விடிவெள்ளி

இவருடைய முன்னோர்கள் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர்மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார் இவர். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலைவாய்ப்புத் தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார். செல்வமும் செல்வாக்கும் பெற்றவர் சர்.பிட்டி தியாகராயர்.

சுதேசி இயக்கச் சுடரேந்திய கரங்கள்

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திப் பண்டைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார் இவர். தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்று இதழையும் பதக்கங்களையும் பெற்றது.

தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். அச்சபையின் தொடக்கக் காலமான 1910-லிருந்து 1921-ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் வளர்ச்சிக்கும் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்பும் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

கல்வி வளர்ச்சிக்கோர் காப்பரண்

செங்கல்வராய நாயக்கர் தொழிற்பயிற்சிப் பள்ளியின் நிர்வாகக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இருந்து அப்பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார். அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையிலும் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுக்காலம் இருந்து, அந்த நிறுவனங்களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்கேற்றார் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். நாளடைவில் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

நாதியில்லாதோர்க்கு நம்பிக்கையொளி

பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு, அவர் உள்ளம் வேதனை யடைந்தது. அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தம்மின் மக்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து அவதிப்படுவதைக் கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சியுற்ற சமுதாயத்துக்கு எழுச்சியூட்ட, அவரும் டாக்டர் டி.எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையைப் பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை 1916 நவம்பர் 20ஆம்

திராவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

சர் தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைப் பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்தை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

எங்கு நோக்கினும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனைமிகுந்த காட்சியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப்போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்த மட்டும் அவருக்கு ஒரு குறையு மில்லை. மற்ற பிரச்சாரங்களை விட அறிவுப் பிரச்சாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப்போரைத் துவக்கினார். அந்த அறப்போர் இன்று வெற்றிபெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம்.

இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அரசியல் வாழ்விலோ பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விசயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால், முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பிய பின்தான், மத விஷயத்திலே புக விரும்பினார். முதன் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்த அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

–பேரறிஞர் அண்ணா

தமது கையெழுத்திட்டே வெளியிட்டார்.

அந்த அறிக்கை, நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதிய பாதை அமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார் செயல் வீரர் தியாகராயர்.

ஒரு வகுப்புமீது மற்றொரு வகுப்பு ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க, வகுப்புகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தொடங்கியது. கடைசியில் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றது.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக் கட்சியினர் வெற்றிவாகை சூடினர்.

பதவியை விரும்பா செழுதகை

சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் லார்டு வெல்லிங்டன், முதலமைச்சர் பதவியேற்று அமைச்சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று வெற்றி பெற்றவரும் நீதிக் கட்சித் தலைவருமான தியாகராயரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், தியாகராயர் பதவி ஏற்க மறுத்துவிட்டுத் தனது கட்சிப் பிரமுகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து அமைச்சரவை அமைக்கச் செய்தார். அவர், ஆளுநருக்கு எழுதிய கடிதத்திலும், நேரில் சந்தித்துக் கூறியதிலும் குறிப்பிட்டதாவது;

> உழைப்பு மூன்று பெருந் தீமைகளை நம்மிடமிருந்து நீக்குகின்றது; தொந்தரவு, தீயொழுக்கம், தரித்திரம்.
>
> **—வால்டேர்**

'இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்துக்காக என்னையும், அகால மரணமடைந்த என் அருமை துணைத் தலைவர் டாக்டர் டி.எம். நாயரையும் வெள்ளையரின் வால் பிடிப்பவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும், அவர்களுடைய பத்திரிகைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம் விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்கமாட்டேன் மன்னிக்க வேண்டும்' சர்.பிட்டி தியாகராயரின் இந்த அறிவிப்பு எதிரிகளையும் வியக்கச் செய்தது.

இந்திய வரலாற்றில், முதல் பொதுத் தேர்தலில் தனது நீதிக் கட்சி வெற்றி வாகை சூடியது கண்டு பூரித்துப் போனார் தியாகராயர்.

மக்கள் போற்றிய மாநகராட்சித் தலைவர்

தியாகராயர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் தொண்டுபுரிந்திருக்கிறார். 1919-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவராவார் அவர். அந்த ஆண்டிலிருந்து 1923-ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னாரின் தூய தொண்டினைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909-இல் ராவ்பாகதூர் பட்டத்தையும், 1919-இல் திவான் பகதூர் பட்டத்தையும், 1921-இல் சர் பட்டத்தையும், வழங்கிச் சிறப்பித்தது.

அந்நாளில் சர்.பிட்டி தியாகராயர் செய்த அறச்செயல்களுக்கு அளவே இல்லை. துன்புற்ற பல குடும்பங்களை இன்புற்று வாழச் செய்தார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வேதனை நீக்கினார்.

இத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாள் அன்று, தமது 73 வது வயதில் இயற்கை எய்தினார்.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத் தெளிவுக்கும், உணர்ச்சி வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும், வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர் அண்ணல் தியாகராயர் ஆவார்.

தியாகராயரும், செய்தித் தாள்களும்

சர்.பிட்டி தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித்தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.

'ஜஸ்டிஸ்' என்ற பெயரில் ஆங்கிலச் செய்தித் தாளை 1971 பிப்ரவரி 26 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்1263. 'ஜஸ்டிஸ்' என்ற இதழின் பெயரின் காரணமாக சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என்றும் தமிழில் 'நீதிக்கட்சி' என்றும் அழைக்கப்படலாயிற்று.

1885-இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி 'திராவிட பாண்டியன்' என்ற ஒரு தமிழ்ச் செய்தித்தாளை வெளியிட்டார். அதே நேரத்தில் தான் சர்.பிட்டி தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலம் கருதி 1917 ஜூன் 1 சனிக்கிழமை 'திராவிடன்' என்ற பெயரில் தமிழ்த் தினச் செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்.எம்.1279.

1885-இல் தெலுங்கு மொழியில் 'ஆந்திர பிரகாசிகா' என்ற செய்தித்தாள் வெளிவந்தது. சர்.பிட்டி தியாகராயர் அதே தெலுங்கு செய்தித் தாளை 1917 ஜூன் 10 திங்கட்கிழமையிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித் தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண்.1280.

வாழ்ந்து காட்டிய வள்ளல்

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலே, தாழ்வுற்று வறுமைமிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காகச் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதி பெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக் கட்சியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட, சமூகநலத் தொண்டர் சர்.பிட்டி தியாகராயர். சீரிய அரசியல் வாதியாகவும் புகழ்மிக்க சட்டப் பேரவை உறுப்பினராகவும் பெருமை பெற்ற தீரராகவும் வாழ்ந்துகாட்டிய வள்ளல் பெருந்தகை அவர்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி நவீன முறையில் தழைத்திடவும், முக்கியப் பகுதிகளில் புதிய பெயரில் பாதைகள் அமைத்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடையவும், இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாகப் பயன்படவும், பெரிதும் உழைத்த உத்தமர் அவர். 1914-1915-இல் முதல் உலகப் போர் மூண்டிருந்த வேளையில், இறக்குமதித் தட்டுப்பாட்டைச் சமாளிக்க எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கலாமென்னும் உயரிய ஆலோசனைகளை வழங்கிய பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தவர்.

> ஏழ்மை என்ற நோய் அகல வேண்டுமானால், உழைப்பு என்ற மருந்தைக் கொடு.
>
> **—எமர்சன்**

> ஒரு இலட்சம் வாள்களைவிட, மூன்று பத்திரிகைகளுக்கு நான் அதிகமாய்ப் பயப்படுகிறேன்.
>
> **—நெப்போலியன்**

தொழில்நுட்பக் கல்விக்கு வந்தனை செய்த மாமனிதர்

இந்தியக் கப்பல்துறை, கப்பல் கட்டுப் பணியின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பல்வேறு வழி வகைகளைத் தெரிவித்து ஆக்கம் தேடியவர் தியாகராயர். தொழில்களின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவை மட்டும் தரும் கல்வியை அவர் சாடினார்.

தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார்.

கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாட்டில் செல்வ வளம் பெருக்கத் தக்க கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர். நமது கல்வி முறையிலே மாற்றம் ஏற்பட்டுத் தொழில் நுட்பக் கல்வி, தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்பட வேண்டுமென்று விரும்பியவர் அவர். பல ஆண்டுக்காலம் சென்னை மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்து தேசிய நலப்பணிகளுக்கு ஊக்க மூட்டிய சீலர் தியாகராயர்.

அண்ணா போற்றிய அண்ணல்

பேரறிஞர் அண்ணா அவர்களேகூட தியாகராயரின் சமூகப் பணிகளால் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால்தான் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். 30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் சர்.பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அவரது உயரிய தன்மை பற்றி

"சர். தியாகராயர் தோன்றிய திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்!"

எனத் தொடங்கிப் பலபடக் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்.

— பி.எல். ராஜேந்திரன்

மேலான மே நாள்

அகில உலகமெங்கும் அகமகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மே தின விழாவை, கட்சி கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள், ஓய்வு பெற்று நின்று, சென்ற கால வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மே நாள்.



இம் மே நாள் சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ பயன்படுகின்றது.

☆ பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம். நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள் வாழ்வுக்காக விடுதலைக்காக உரிமைக்காக மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது இந்தத் திட்டத்தையே மே தினம் எடுத்துக் கூறுகிறது!

☆ உலகம் மாயை இல்லை. உழைப்பவன் வாழ்வும் மாயமன்று. ஆனால், உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது.

☆ பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள், நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள். அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால், அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்தப் பேதம் நாட்டிலே எனச் சிந்திக்க வேண்டும்!

☆ வேலை, மனிதத் தன்மையை மாய்க்காத அளவு இருக்க வேண்டும்.

செய்திகள்... செய்திகள்... செய்திகள்...

திருப்பதி லட்டு ஒன்றைச் செய்ய ரூ.11 செலவாகிறது. 175 கிராம் எடையுள்ள இந்த லட்டு நான்கு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே, திருப்பதி வெங்கடாசலபதி கோயிலில் லட்டு விற்பனையால் ஏராளமாக நட்டம் ஏற்படுவதாகவும், இது சிறப்புத் தரிசனத்திற்காக விற்கப்படும் டிக்கட்டுகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் சரிக்கட்டப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

○ ○ ○

சென்னையைச் சேர்ந்த கிண்டியில் உள்ள 'கில்பர்ன் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி' வளாகத்தில் 30 கிலோ எடையுள்ள மலைப்பாம்பு ஒன்று பிடிபட்டிருக்கிறது. மலேசியக் காடுகளில் காணப்படும் இவ்வகை மலைப்பாம்பு இங்கே மூன்றாவது தடவையாகப் பிடிபட்டிருக்கிறதாம்!

○ ○ ○

விண்வெளியிலோ, சந்திரன் அல்லது செவ்வாய்க் கிரகத்திலோ வளர்க்கத் தக்க புதியரகக் கோதுமையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். (அபோஜி) எனப்படும் இந்த அதிசயக் கோதுமை, சாதாரணக் கோதுமையைவிட மூன்று மடங்கு பலன் தரக் கூடியது என்கிறார்கள்!

○ ○ ○

'ஜேம்ஸ் பாண்ட் 007' என்கிற கதாபாத்திரத்தை முக்கியமாக வைத்துத் துப்பறியும் புதினங்கள் எழுதிப் புகழ்பெற்ற 'இயன் பிளமிங்'கிற்கு இலண்டனில் அண்மையில்தான் பாராட்டு விழா நடைபெற்றது. இதிலென்ன வேடிக்கை தெரியுமா? அவர் இறந்து முப்பதாண்டுகள் ஆகின்றன.

○ ○ ○

தைவான் நாட்டில் ஆண்களின் ஆதிக்கம் அதிகம் இருக்கிறது; எல்லாவற்றிலும் ஆண்களுக்கே அதிகம் சலுகை காட்டப்படுகிறது. புகைவண்டி நிலையத்தில்கூட பெண்களுக்குப் போதிய கழிப்பறைகள் ஒய்வறைகள் இல்லை; இதைக் கண்டித்து, தைவான் நாட்டுக் கல்லூரி மாணவிகள் அண்மையில் ஒரு நூதனப் போராட்டத்தில் இறங்கினார்கள்; ஆண்கள் ஒய்வறையிலும், கழிப்பறையிலும் போய்ப் புகுந்து அமர்க்களப்படுத்தி விட்டார்கள்.

○ ○ ○

அமெரிக்க மருத்துவக் கல்லூரிகளில் அண்மைக் காலமாக மாணவர்கள் சேர்க்கை அதிகரித்திருக்கிறது. இதன் காரணமாக அங்கே இந்திய பாகிஸ்தான் டாக்டர்கள் தேவை குறைந்துவிட்டது. தவிரவும், நோய்க்குச் சிகிச்சைப் பெறுவதை விட, நோய்வராமல் தடுக்கும் விழிப்புணர்ச்சி அமெரிக்க மக்களிடையே இப்போது வலுப்பெற்று வருகிறது.

○ ○ ○

சென்ற வாரக் கணக்குப்படி உலகமெங்கும் சுமார் ஒரு கோடி எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர்; இதில் 15 இலட்சம் பேருக்கு நோய் முற்றியுள்ளது; இவர்களில் 40 சதவிகிதத்தினர் பச்சிளங் குழந்தைகள். 2000 ஆம் ஆண்டில் நான்கு கோடிப் பேர் எய்ட்ஸ்க்கு ஆளாகக் கூடுமாம்!

○ ○ ○



அரசுத் துறையைச் சேர்ந்த கொச்சி கப்பல் கட்டும் நிறுவனம், சென்ற நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.124 கோடியை விற்பனை வருமானமாகப் பெற்றிருக்கிறது. ரூ.16 கோடியை நிகர லாபமாக ஈட்டியுள்ளது.

○ ○ ○

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனுக்கு மிரட்டல் கடிதம் எழுதியதாக 13 வயது சிறுமிகள் இருவர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

○ ○ ○

அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமி ஜெசிகா என்பவள் 11,000 கி.மீ. தூரத்திற்கு விமானம் ஓட்டிச் சாதனை படைக்கத்துடித்தாள். அவ்வாறே பறந்த அவள், தன்னோடு வந்த பயிற்சியாளரோடும், தந்தையாருடனும் விமானம் புயலில் சிக்கியதால் மாண்டுபோனாள்.

○ ○ ○

இங்கிலாந்து செல்லும் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனாக அசாருதீன் அறிவிக்கப்பட்டிருக்கிறார். இரண்டரை மாத காலம் சுற்றுப் பயணம் செய்யவிருக்கும் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவினர், தமது தலைவர் விசுவநாத் தலைமையில் கூடி அணிவீரர்களைத் தேர்ந்தெடுத்தனர். அப்போதுதான், அணியின் கேப்டன் பொறுப்பில் அசாருதீன் தொடர்ந்து நீடிப்பார் என்று முடிவெடுக்கப்பட்டது.

○ ○ ○

பிரிட்டன் மருத்துவ நிபுணர்கள், மரபு வழி மருத்துவ ஆராய்ச்சிக்கென 35 வயதுக்கு மேலான இரட்டையர்களாக இருப்பவர்கள் சிலரை 'வரலாம்' என அறிவித்திருந்தது; ஆயிரத்திற்கு மேலான இரட்டையர்கள் அதிலும் குறிப்பாகப் பெண் இரட்டையர்கள், ஒவ்வொரு ஜோடியினரும் ஒவ்வொரு வண்ண உடையோடு வந்து குவிந்ததைக் கண்டு மருத்துவர்களே பிரமித்துப் போனார்களாம்.

○ ○ ○

கிரிக்கெட் விளையாட்டில், உலகின் தலைசிறந்த 'ஆல் ரவுண்டர்'களில் ஒருவருமான இம்ரான்கான் 1992-இல் ஓய்வு பெற்றதும், லாகூரில் தன் தாயார் நினைவாகப் புற்றுநோய் மருத்துவமனை ஒன்று கட்டினார். இப்போது, புதிதாக பாகிஸ்தானில் ஒரு கட்சியும் தொடங்

கியிருக்கிறார் 'தாரிக் ஏ இன்சாப்' என்பது அதன் பெயர். நீதிக் கட்சி என்பது அதன் பொருள்.

○ ○ ○

அமெரிக்க விசா கோரி, அஞ்சல் மூலமே விண்ணப்பிக்கலாம் என்று சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்திருக்கிறது. அமெரிக்க விசாகோரும் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

○ ○ ○

புகழ்பெற்ற பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் பிரான்சிஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் அருகே ஒரு கோட்டையை 25 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்; 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோட்டையில் 7 கோபுரங்கள் 82 அறைகள், ஓர் அகழி ஆகியவை இருக்கின்றன.

தொகுப்பு: பி.எல்.ஆர்.

"மிக இளைஞனாக இருக்கிறானே இவன்; நம் வழக்கில் முறை செய்வானா" என்று அஞ்சிய முதுமக்கள் இருவரின் மனம் நிலை கொள்ளுமாறு மாறுவேடம் தரித்து நியாயத் தீர்ப்பு வழங்கினான் கரிகாற் பெருவளத்தான். காவிரிக்குக் கரை அமைத்தவன், குறை காண முடியாதபடி அந்த வழக்குக்கும் முறை செய்து காட்டினான். அவ்வரலாறே எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்ட 'இலக்கியச் சோலை' திரைக் காவியத்தில் ஓர் அங்கமாய் மிளிர்ந்தது. இதோ அவ்வரலாறு:

காட்சி 1

(இடம்: கரிகாலனின் கவின்மிகு சோழநாடு.

உயர்ந்தோங்கிய ஆலய கோபுரங்களும், நெல்மணிகள் காய்த்துக் குலுங்கும் பொன் வயல்களும், சலசலக்கும் நீரோடைகளும் கண்ணுக்கு விருந்தாய்- எழிற்காட்சிகளாய் விரிகின்றன.

கரிகாற் பெருவளத்தானின் பெருமைகள் ஒலி முழக்கமாய் பின்னணியில் கேட்கிறது.)

சேற்றால் மடையடைக்காமல்
சோற்றால் மடையடைக்கும்
சோழ வள நாடு...

அகிலமெங்கும் அறிவியல் தோன்றாத காலத்தில் ஆற்றுக்கு அணைகட்ட முடியும் என்ற பொறியியல் அறிவை முதன்

முதலில் கண்டவன் யார் தெரியுமா?

இந்தக் கரிகாற் பெருவளத்தான்!

காவிரிக்குக் கல்லணை அமைத்தான். தன் இள வயதிலேயே நடுநிலை மாறாத நெறிமுறை வகுத்தான்.

மன்னன் எப்படியோ மக்களும் அப்படிதான்.

அறம் மாறிச் சென்றதும் இல்லை; அடுத்தவர் பொருளைக் கொண்டதும் இல்லை.

இது இந்த மண்ணோடு பிறந்த பண்பாடு.

(காட்சி முடிவு)

காட்சி 2

(இடம்: தஞ்சையின் பொன்கொழிக்கும் ஒரு நஞ்சை)

பாத்திரங்கள்: நன்னர், உடன் பணியாற்றும் இருவர்.)

(ஏர்பூட்டி வயலில் உழுது கொண்டிருக்கிறார் நன்னர். திடீரென ஓரிடத்தில் கலப்பை மேலே போகாமல் இடறுகிறது. காளைகளை முடுக்குகிறார் நன்னர். இருந்தும் அக்காளைகளால் தொடர்ந்து செல்ல இயலவில்லை.)

நன்னர்: என்ன இது சிக்குகிறது... ஆங்... புதையல்...

ஆஹா!... புதையல்... புதையல்... ஏய் புதையல்.

(இருவர் ஓடி வருதல்)

ஒருவர்: புதையலா...வா வா.. என்ன வென்று பார்ப்போம்!

நன்: பொற்குடம் கிடைத்திருக்கிறது. அய்யா!

ஒருவர்: பொற்குடமா?

மற்றவர்: நன்னரே, நீர் கொடுத்து வைத்தவர்!

இருவரும்: பொன்னரது நிலத்தை நீங்கள் வாங்கின உடனேயே உங்களுக்குப் புதையல் கிடைத்திருக்கிறது. பார்த்தீர்களா?

நன்: ஊஹூம்! நேற்று வரை இந்த நிலம் பொன்னருக்குத்தான் சொந்தம். இல்லை... இந்தப் புதையல் என்னுடையதல்ல. இது பொன்னருக்கே உரிமையானது.

பங்கு பெற்ற கலைஞர்கள்

நடிகர்கள்	: கார்த்திக் சண்முகசுந்தரம் இராஜசேகர் சுகுமார் மணிமாறன்
ஒப்பனை	: முத்தப்பா
உடைகள்	: ஆசிர்வாதம்
கலை	: தோட்டா தரணி
படத் தொகுப்பு	: பி.எஸ். நாகராஜ்
வசனம்	
பாடல்கள்	: புலவர் புலமைப்பித்தன்
ஒளிப்பதிவு	: அப்துல் ரஹ்மான்

இசை : விஸ்வநாதன்-இராமமூர்த்தி

தயாரிப்பு ஒருங்கிணைப்புக் குழு:
எஸ்.பி. முத்துராமன், ரமேஷ் பிரசாத்

தயாரிப்பு பொறுப்பு:
எம். சரவணன்,
எம். பாலகப்பிரமணியம்,
எம்.எஸ். குகன்

தயாரிப்பு: இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

திரைக்கதை - இயக்கம்:
ஆர்.வி. உதயகுமார்

காட்சி 3

(இடம்: பொன்னரின் இல்லம்)

பாத்திரங்கள்: நன்னர், பொன்னர்)

(வயலில் கிடைத்த புதையல் தனக்கு உரிமையானதில்லை என்றும், அது பொன்னருக்கே சொந்தமானது என்றும் கூறுகிறார் நன்னர். அதற்குப் பதில் அளிக்கிறார் பொன்னர்.)

பொன்னர்: இல்லை.. இல்லை... எப்பொழுது அந்த நிலத்தை நான் உங்களுக்கு விற்றுவிட்டேனோ அப்போதிலிருந்து அது உங்களுடையதுதான். அதிலிருந்து கிடைக்கும் எதுவும் உங்களுக் குரியது தான்.

நன்: இதில் தங்க நாணயம் பொற்குவியல் இருக்கிறது. நான் விலை கொடுத்தது மண்ணுக்கு மட்டும் தானே? ஆனால் எனக்கோ புதையலில் பொன் கிடைத்து இருக்கிறது பொன்னரே!

பொன்: அந்த மண்ணில் கிடைக்கும் எதுவாயினும் அது உங்களுக்குத்தான் சொந்தம். அது உங்கள் நல் மனதுக்குக் கிடைத்த பரிசு.

நீங்களே எடுத்துச் சொல்லுங்கள்.

நன்: இல்லை... இல்லை... இது உங்களுக் குத்தான்

பொன்: இல்லை... இல்லை... இது உங்களுடையதுதான்

நன்: நமக்குள் வாதம் வேண்டாம். இந்த வழக்கை மன்னர் கரிகால் வளவன் மன்றத்துக்கு எடுத்துச் செல்வோம்.

பொன்: அதுவும் சரிதான். தீர்ப்பை அவரே சொல்லட்டும்.

காட்சி 4

(இடம்: மாமன்னன் கரிகாலனின் அரசவை)

பாத்திரங்கள்: கரிகாலன், நன்னர், பொன்னர், அவையோர்.)

கரிகாலன்: நீங்கள் கொண்டு வந்துள்ள இந்த வழக்கு மிகவும் புதுமையானது. ஒரு பொன் புதையலையே எனக்கு உரியது அல்ல, எனக்கு உரியது அல்ல என்று இருவருமே கூறிக் கொள்கிறீர்கள். ஒருவகையில் பார்த்தால் இந்தப் புதையல் பொன்னருக்கு உரியதோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் நிலத்திற்கு முதல் உரிமையாளர் பொன்னர் தானே...

பொன்: இல்லை... இல்லை...



கரி: இன்னொரு வகையில் பார்க்கும் போது இந்தப் புதையல் நன்னருக்குத்தான் உரியதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

நன்: இல்லை... இல்லை

கரி: ஏனென்றால் அந்த நிலத்திற்கு இப்பொழுது உரிமையாளர் நன்னர்தானே..

நன்: ஊஹூம்.

கரி: உம். குழப்பமாக இருக்கிறதே...

நன்: இவர் மிகவும் குழம்பிப் போயிருப் பதால் சரியான தீர்ப்பு நமக்குக் கிடைக்குமா?

பொன்: இளம் வயது. சரியான தீர்ப்பு வரும் என்று எனக்குத்தான் தோன்றவில்லை.

நன்: இப்போது என்னதான் நடக்கும்?

பொன்: பொறுத்திருந்து பார்ப்போம்.

வயலில் ஏர் உழும்போது கிடைத்த புதையலைத் தன்னுடையது அல்ல என்று வழக்காடிய நல் மனமுடைய உழவர்கள் இருவருக்கு, அவர்களே ஏற்றுக் கொள்ளும் வகையில் நல்ல தீர்ப்பு வழங்கிய இளம் வயது கரிகாலனின் அறிவுத்திறன்.

கரி: அமைச்சரே...

(அமைச்சர் எழுந்து நிற்க)

கரி: உம்.. அமைச்சரே

அமைச்சர்: அரசே

(அமைச்சர் அருகில் வருகிறார். அவரிடம் மெல்லிய குரலில்...)

கரி: அவர்கள் இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தங்களுக்குப் புரிகிறதா?

அமை: புரிகிறது அரசே. தாங்கள் வயதில் இளையவர்.

கரி: வழக்கோ புதியது

அமை: அதனால்...

கரி: உம்.

அமை: தங்களால் சரியான தீர்ப்பு வழங்க முடியுமோ முடியாதோ என்று அவர்கள் இருவருக்கும் ஐயம்.

கரி: ஐயமா?

அமை: அப்படித்தான் தோன்றுகிறது அரசே!

கரி: சரி. நீர் சென்று உமது இருக்கையில் அமரும்.

அமை: ஆகட்டும் அரசே!

கரி: (உரத்த குரலில்...) அவையோரே... நானோ வயதில் இளையவன். இந்த வழக்கோ மிகவும் சிக்கலானது. அறநூல்கள் பலவும் கற்ற என் தாய்வழிப் பாட்டனார் ஒருவர் இருக்கிறார். அவர் வந்து இந்த வழக்கில் தீர்ப்புக் கூறட்டும். உம். அதுதான் நல்லது. நாளை இந்த அவை கூடட்டும்.

காட்சி 5

(**இடம்:** நன்னர் பொன்னர் இல்லங் களுக்கு இடையே ஓர் இடம்)

பாத்திரங்கள்: நன்னர், பொன்னர்.

(இருள் தன் கட்டுக்குலைந்து ஒளிவெள்ளம் எங்கும் மெல்லப் பரவும் இளங்காலைப் பொழுது. நன்னரும் பொன்னரும் நடுவழியில் சந்திக்கின்றனர்.)

நன்னர்: பொன்னரே... என்ன சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள்?

பொன்னர்: இல்லை.. இல்லை.. அந்தப் பெரியவர் வந்து நமக்கு என்ன தீர்ப்புச் சொல்லப் போகிறாரோ என்றுதான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.

நன்: நிச்சயமாக அந்தப் பெரியவர் வந்து நமக்கு நல்ல தீர்ப்பைத்தான் வழங்குவார் என்கிற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

நன்: பார்த்துக்கொண்டே இருங்கள். அந்தப் புதையல் உமக்குத்தான் சொந்தமாகப் போகிறது.

பொன்: ஊஹூம்

நன்: பார்க்கத்தானே போகிறீர்கள். அந்தப் புதையல் உம்மைத்தான் சேரப் போகிறது. அவையில் வந்து பாருங்கள். வாருங்கள்.

பொன்: சரி வாருங்கள். போகலாம்.

காட்சி 6

(**இடம்:** மன்னன் கரிகாலன் மாமன்றம்)

பாத்திரங்கள்: கரிகாலன், நன்னர், பொன்னர் மற்றும் அவையோர்.)

(கரிகாலன் முதுமைக் கோலத்தானாக மாறுவேடம் பூண்டு நடுவராக அமர்ந்து வழக்கினைக் கேட்கிறான். வந்திருப்பது கரிகாலன்தான் என்பதை அறியாமல் நன்னரும் பொன்னரும் தங்கள் வழக்கை எடுத்துரைக் கின்றனர். அவையோரும் மாறுவேடம் பூண்டிருப்பது தங்கள் மன்னனே என்று அறியாமல் நடவடிக்கைகளைக் கவனிக் கின்றனர்.)

கரி: இதுவரை வழக்கில் வராத வழக்கு. இந்த வழக்கைக் கேட்பதே மகிழ்ச்சி. பொன்னரே, நீர் என்ன சொல்கிறீர்கள்?

பொன்: நன்னருக்கு நான் நிலத்தை எப்போதோ விற்று விட்டேன். என்னிடத்தில் நிலம் இருக்கும் போது அங்கே புதையல் எதுவும் இல்லை. ஆகையால் அது எனக்கு உரியது ஆகாதய்யா.

கரி: இருக்கட்டும். நன்னர் என்ன சொல்லுகிறார்?

நன்: அய்யா, இவர் சொல்வது தவறு. அப்போதும் புதையல் இருந்திருக்கிறது. இருந்தது இவருக்குத் தெரியவில்லை. இப்போது இருக்கிறது என்பதால் அதை நானோ புதைத்து வைத்தேன்?

கரி: அப்படியென்றால் அதை நீங்களும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்.. உம்..?

நன்: அய்யா, பிறர் பொருளை என்னுடையது என்று எப்படி நான் ஏற்றுக் கொள்ளுவது அய்யா?

பொன்: இப்போது எனக்கும் இது பிறர் பொருள்தான். தான் மட்டும் ஏற்றுக் கொள்வேனா?

கரி: அது இருக்கட்டும்.. உங்கள் இருவருக்கும் மக்கள் இருக்கிறார்களா?

இருவரும்: இருக்கிறார்கள்.

பொன்: எனக்கு ஒரு மகள்.

நன்: எனக்கு ஒரு மகன்.

கரி: அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தால்?

நன்: திருமணத்திற்கும் இந்தத் தீர்ப்புக்கும்...

கரி: என்ன தொடர்பு என்று கேட்கிறீர் களா? சொல்லுகிறேன். முதலில் உங்கள் இருவருக்கும் இந்த திருமணத்தில் விருப்பம் உண்டா?

பொன்: உண்டு.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற நரைமுது மக்களுவப்ப - நரைமுடித்துச் சொல்லால் முறை செய்தான் சோழன்.

- பழமொழி

கரி: அப்படியென்றால் வழக்கு முடிந்து விட்டது. நீங்கள் இருவருமே புதையல் என்னுடையது அல்ல, என்னுடையது அல்ல என்று கூறிக் கொள்கிறீர்கள். அதனால் உங்கள் இரு பிள்ளைகளுக்கும் திருமணத்தை முடித்துவிட்டு, அவர்களுக்கு இந்தப் புதையலைப் பரிசாகக் கொடுத்து விட்டால் இருவருக்குமே பொதுவில் என்று போய் விடும். என்ன நினைக்கிறீர்கள்?

நன்: ஆஹா. ஐயா, இது நல்ல தீர்ப்பு அய்யா.

பொன்: மிக நல்ல தீர்ப்பு.

(தங்கள் இருவருக்கும் உகந்த வகையில் நியாயம் மாறாமல் தீர்ப்பு வழங்கப்பட்டதை ஏற்று நன்னரும் பொன்னரும் பெரிதும் மகிழ்ந்து கட்டி அணைத்துக் கை குலுக்கி

நெஞ்சுக்கு நிறைவைத் தருகின்றது. படித்துப் பயன்பெறத்தக்க கருவூலம் இது.

–பி.வி. கிரி

நாலடியார்

உரையாசிரியர்:
ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு:
உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித் தெரு,
சென்னை 600 001

பக்கம்: 166 விலை: ரூ15

'**ஆ**லும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது ஆன்றோர் வாக்கு. நான்கு அடிகளால், இந்த நாநிலத்தையே அளந்து, நன்மக்களாக வாழும் வழிமுறைகளைக் கூறும் வாழ்க்கை நெறி நூலே நாலடியார்.

உதாரணங்கள்- உவமைகள்- கற்பனைகள் எல்லாம் இப் பாடல்களில் இழைந்தோடக் காண லாம். பொருளும், சொற்சுவையும் மிகுந்த பாடல்களின் தொகுப்பாக இனிய எளிய உரையுடன் அழகுறத் தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்நூல்.

–பொன். மறைமலை

வெளிச்சம் வருகிறது

ஆசிரியர்: கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

வெளியிட்டோர்:
சுதா பதிப்பகம்
4, முத்து முதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை - 600 007.

பக்கம்: 160 விலை: ரூ.30

வெளிச்சம் வருகிறது எனும் கவித்திரட்டில், தென்பட்ட சில ஒளிக்கற்றைகள் இவை:

"அறிவாற்றல் தனைவளர்த்து
அவனியெங்கும்
அறிவினது வெளிச்சத்தைப்
பரவச் செய்வோம்!"

(பக்கம் 136), "கல்லாமை என்ப தொரு இருட்டே யானால், கண்ணி லொரு வெளிச்சமிங்கே கல்வி தானே!" (பக்கம் 134), "பசுவதை நாட்டில் பாவமாய் ஆனா, பசிவதை பற்றியேன் பேச்சையே காணோம்?" (பக்கம் 127).

கவிதைகள் கைகோத்து, கனவுலகில் வலம்வந்து, சமுதா அவலங்களைக் கனக, விஜயர்போல் தலை சுமந்து, வெளிச்சமாய் வருகிறது. வெளிச்சமாய் தெரி கிறவர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன். தமிழ்ப் புவிதனில் கவிவேள்வி புரிபவர். கவிதை எனக்குப் பொழுது போக்கல்ல என்று இவர் சொன் னாலும், கவி, விதைகளைத் தூவி விட்டுள்ளார். ஏனெனில் காலமே இவற்றை வளர்த்துக் காக்கும். கருத்தாழமும், வடிவழகும் வாய்ந்த இக்கவிதைத் தொகுப்பு தமிழ்கூறு நல்லுலகில் விழுதுவிட்டு, வேர் பரப்பி, தமிழ்த்தாய்க்குத் தண்ணிழல் கொடுக்கும் தகத்தன. படிக்கத் தூண்டும், படித்தப் பின்னும் நினைக்கத் தூண்டும் பண்பின.

–எம்.வி.எம். அசோகன்

கவண் கற்கள்

ஆசிரியர்: எல். மோகனப்பிரியன்

வெளியீடு:
கிறிஸ்துவ இலக்கிய‌ச் சங்கம்
த.பெ.எண் 501, பார்க் டவுன்
சென்னை - 600 003.

பக்கம்: 72 விலை: ரூ.25

கிறிஸ்துவ வரலாற்றை மைய மாகக் கொண்டு படைக்கப்பட்ட இந்நூலில் கோக்கப்பட்டிருக்கும் கவிதை மலர்கள் நம் மனமெங்கும் மணம் வீசுகின்றன. கவிஞரின் சிந்தனை வானில் சிறகடிக்கும் ஒவ்வொரு கவிதையும், புதுக் கவிதைக்கு ஒரு புது இலக்கணம்.

'சிலுவை எனக்குப் போதி மரம்' என்ற கவிஞரின் உயரிய பார்வையில் சிதறிய சிந்தனை சிறப்புக்குரியது.

இந்துக் கிளிக்களும்
முஸ்லீம் கொக்குகளும்
கிறிஸ்துவப் புறாக்களும்
கட்டிய கூடுகளைக் கண்டுபிடித்துக்
கலைக்க முடியுமா?
வர்ணங்கள் வேறு
ஓவியம் ஒன்று

—என்ற ம(னி)த நேயப் பார்வை புதுக் கவிதையில் ஒரு புதிய பரிமாணம்.

'கவண் கற்கள்' கவின் கற்கள் போல் மிளிர்ந்து, படிப்போரின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது.

–சுந்தர்ஜி



எவ்வளவு செல்வமும் கல்வியும்
இருந்தாலும் சரி; அடக்கம் இல்லையேல்
பண்பாடு இல்லை; அதற்கெல்லாம் மதிப்பில்லை!

—மூதறிஞர் இராஜாஜி

தமிழ் வளர்த்த பெரியார்:
மயிலை சீனி வேங்கடசாமி

தமிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் சான்றாக, நடுநிலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக, வள்ளுவர் வழிவந்த அறிஞராக விளங் கியவர் மயிலை சீனி. வேங்கட சாமி அவர்கள்.

இவர் 16.12.1900 அன்று பிறந்தார். தந்தை மயிலை சீனிவாச நாயகர். நாட்டு மருத்து வரான இவர், தமிழார்வம் மிக் கவராகவும் விளங்கினார். திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், இராமாயணம், பாரதம் என்று பல நூல்களைக் கற்றவர்.

சீனி. வேங்கடசாமி அவர் களுக்கு, நாட்டு மருத்துவராக வர வேண்டும் என்று விருப்பம் இருந்தது. தந்தையார் மருந்து களைத் தயார் செய்யும்போது உடனிருந்து கவனித்து வந்ததால், இந்த ஆர்வம் அவருக்கு இருந்து வந்ததில் வியப்பில்லை. என்றாலும், சீனி. வேங்கடசாமி அவர்கள், தமிழ் இலக்கியத் திலேயே முக்கியக் கவனம் செலுத்தினார். இதற்குக் காரணம், இவருடைய தமையனார் திரு சீனி. கோவிந்தராஜன் அவர் களாவார். இவர் நல்ல தமிழ்ப் புலவர். மகாவித்துவான் சண்முகம் பிள்ளையவர்களிடம் தமிழ் படித்தவர்

இளமையில் இவர் திவ்வியப் பிரபந்தம், தேவாரம் ஆகிய பாடல்களை மனப்பாடம் செய் வார். திருவாசகம், இராமாயணம், பாரதம், நன்னூல் முதலிய

நூல்களை ஐயந்திரிபறக் கற்றவர். தமையனாரின் தமிழார்வம் தம்பிக்கும் தொற்றிக் கொண்டது. அப்போது சீனி. வேங்கட சாமி அவர்களுக்குப் பதினாறு வயதே ஆகியிருந்தது. இலக்கியங்களைப் படிக்கும் ஆர்வம் அப்போது அவருக்கு மேலோங்கி இருந்தது.

மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களின் நினைவு நாள்: மே - 8

அத்துடன் ஓவியக் கலையிலும் அவருக்குப் பயிற்சி இருந்தது.

காலப்போக்கில், சீனி. வேங்கடசாமி அவர்கள் நாலடி யாரைக் கற்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். நாலடி யாரின் சொற்சுவையும் பொருட் சுவையும் இவரை வெகுவாகக் கவர்ந்தன. அத்துடன் சிறுபஞ்ச மூலம், திரிகடுகம், ஏலாதி ஆகிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தார்.

சீனி. வேங்கடசாமி அவர் களுக்கு 22 வயதிருக்கும். அப்போது அவரது தமையனார் சீனி. கோவிந்தராஜன் கால மானார். சீனி வேங்கடசாமிக்கு குடும்பத்தைக் காப்பற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. சீனி. வேங்கடசாமி, மோட்டார் வண்டிச் சாமான்கள் விற்கும் கடையில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். இதயம் இலக்கியத்தை நாடியபோது இரும்புச் சாமான்கள் மீதா பற்று ஏற்படும்? அவருக்கு அந்த வேலை பிடிக்கவில்லை.

விரைவிலேயே அவருக்கு பிடித்த வேலை ஒன்று கிடைத்தது. ஆம். நீதிக்கட்சியினர் 'திராவிடன்' என்னும் பெயரில் ஒரு நாளி தழைத் தொடங்கியிருந்தனர். அந்த நாளிதழின் ஆசிரியர்

மகிழ்கின்றனர்.

கரிகாலன், தான் புனைந்திருந்த பொய் முடியையும் சூடியிருந்த வெண்தாடியையும் களைகின்றான். மகத்தான தீர்பபை வழங்கியது மாறுவேடம் பூண்ட தங்கள் மாமன்னனே என்றறிந்து அவையில் கூடியிருந்தோர் எழுந்து நின்று ஆரவாரம் செய்கின்றனர்.)

கரி: என்ன பார்க்கிறீர்கள்? வியப்பாக இருக்கிறதா? அமருங்கள்.

(அனைவரும் அமர்கின்றனர்.)

உருவு கண்டு எள்ளாதீர். ஒருவனின் அறிவைத் தள்ளாதீர். நிலவுக்குக் குளிரவும், நெருப்புக்குச் சுடவும், ஆற்றுக்கு ஓடவும், காற்றுக்குப் பாடவும் கற்றுத்தர தேவையில்லை.

நல்லதைக் கொள்ளவும், தீயதைத் தள்ளவும், நெறி முறை காணவும், நீதி கூறவும் இந்த மண்ணில் பிறந்த யாருக்கும் சொல்லித் தரவும் தேவையில்லை. போரிலே மறம், வாழ்விலே அறம், நெஞ்சிலே உரம், நேர்மைத் திறம் இவையனைத்தும் நம்மோடு பிறந்தவை- நம் குருதியிலே கலந்தவை.

நீதிக்காகவே பிறந்து, நீதிக்காகவே வாழ்ந்து, நீதிக்காகவே உயிர்த் தியாகம் செய்யும் இனம் நமது தமிழ் இனம். நான் என்னுடையது என்ற வழக்காடும் உலகில் ஒரு பொன் புதையலையே என்னுடையது அல்ல என்று வழக்காடும் வழக்கு வேறே எங்கேனும் உண்டா?

இந்தச் சோழ வள நாட்டில் தாழாத கொடியும், சாயாத குடையும், வளையாத செங்கோலும், வணங்கா முடியும் நிலை பெற்றிருப்பது ஒரு மன்னரை மட்டும் நம்பி அல்ல. இந்த நாட்டு மக்களையும் நம்பித்தான்.

நாம் கொடுத்தறிந்தவர்களேயன்றி, எடுத்தறியாதவர்கள் என்று இந்த உலகத்திற்கு உணர்த்திய உங்களை வாழ்த்துகிறேன். இந்நாடு நன்னாடு. எழில் மிகுந்த பொன்னாடு இந்தச் சோழ வளநாடு. இந்த மண்ணில் பிறந்ததை விடப் பேறு வேறு எனக்கு ஏது? நானல்ல மன்னன். இந்த நாட்டு மக்கள் அனைவருமே எனக்கு மன்னர்.

இந்தக் கரிகாலன் உங்களுக்குக் காவலன் மட்டுமே.

(காட்சி முடிவு)

ஆம்!

இவன் மகுடம் சூட்டிய மன்னன்

ஆனால் மக்களுக்கோ தொண்டன்.

—திரை

மனிதன் தானாக உழைத்துப் பழகிக் காய்த்துப் போயிருக்க வேண்டும். இன்ப நுகர்ச்சியிலும், மகிழ்ச்சியிலுமே ஆழ்ந்திருக்கக் கூடாது. அவை உடலுக்கும் நன்மை செய்வதில்லை. அறிவுக்கும் உதவுவதில்லை.

—சாக்ரடீஸ்

கடினமான நிலத்தில் ஏர் கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்க சரளைக் கல் உடைப்போரிடமும், இறைவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகின்றான் வெயிலில் உலர்கின்றான். அவனைப் போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வியர்வை விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டு கொள்ளுங்கள்.

—கீதாஞ்சலியில் தாகூர்

நான் வாழ்வதற்காக மற்றவர்களை உழைக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் உழைக்காமல் வாழ முடியும் என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ, அங்கே அடிமைத்தனம் நிச்சயமாக இருக்கும்.

—டால்ஸ்டாய்

தமிழ் நாடக மலர்

வெளியீடு:
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை 600 113

பக்கம்: 192 விலை: ரூ.60

முத்தமிழில் ஒன்றாகக் கருதப் படுவது நாடகத் தமிழ். சமுதாயத்தைச் சீர்திருத்தும் சாதனங்களில் நாடகத்திற்கு முக்கிய இடமுண்டு. இக்கலையின் தோற்றம் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தொடங்குகிறது; இதன் பெருமை பண்டைக் காலத்திலிருந்தே பறைசாற்றப்பட்டு வருகின்றது; இதன் அருமை இக்காலம் வரை தொடர்கின்றது. இதன் அருமை பெருமைகளையெல்லாம் ஒரு சேரத் தொகுத்து, தமிழ் அன்னைக்கு மாலையாய்ச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இந்த நூலில், தமிழ் நாடக முன்னோடிகளின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சங்கரதாஸ் சுவாமிகள், பேரறிஞர் அண்ணா, தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், தமிழ்த் தென்றல் திரு.வி.க. நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் இப்படி நாடகத்துறைப் பேராசிரியர்கள் பலரின் கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன.

மொத்தம் 45 கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகின்றன. நாடக ஆர்வலர்கள் இந்நூலைப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

—பொன். மறைமலை

7 உலக அதிசயங்கள்

ஆசிரியர்: அ. ஜெய்குமார்

வெளியீடு:
மருதம் பதிப்பகம்
59, ஆடம் தெரு,
சென்னை - 600 004

பக்கம்: 20 விலை ரூ.120

உலக அதிசயங்கள் எத்தனை என்றால் ஏழு என்று கூறி விடுவோம். ஆனால், அவை என்னென்ன என்பது மட்டும் நம் நினைவுக்கு வருவதில்லை. அவற்றை நினைவுபடுத்துகின்றது இந்நூல். கற்காலம், மத்தியக் காலம், தற்காலம் என மூன்று வகையாகப் பிரித்து உலக அதிசயங்களை நம் கண் முன் கொண்டு வருகிறார் நூலாசிரியர்.

மேற்போக்காக இல்லாமல், ஒவ்வொரு அதிசயம் குறித்தும் விளக்கமான படங்களுடன் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. எல்லாத் திறத்தாரும் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக் கருவூலம் இது.

—பி.வி.ஜி.

திருமுறை இலக்கியம்

ஆசிரியர்:
முனைவர் சோ.ந. கந்தசாமி

வெளியீடு:
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி
சென்னை - 600 113

பக்கம்: 256 விலை: ரூ.50

சங்க கால வாழ்க்கை முறைகளை விளக்கிட சங்க இலக்கியம் உதவியது போலவே, இடைக்காலச் சமுதாய வரலாற்றை விளக்கிட திருமுறை இலக்கியம் உதவுகின்றது.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த காரைக்காலம்மையார் முதல், கி.பி. 12-ஆம் நூற்றாண்டினராகிய சேக்கிழார் வரை இருபத்தெழுவர் பாடிய, பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட பைந்தமிழ்ப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

திருமுறைகளால் பெற்ற பயன்கள் பலப்பல. தமிழிசை வளரவும், சிற்பக்கலை சிறக்கவும், ஓவியக் கலை உன்னத நிலையடையவும் இவை வழிவகுத்தன. இதனால் தமிழ்ப்பற்று வளர்ந்தது. தமிழ்ப் பண்பாடு தழைத்தது.

திருமுறை ஆசிரியர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற ஆசிரியப் பெருமக்கள் பாடிய தெய்வ மணங்கமழும் பாடல்களின் இனிமையை நூல் முழுவதும் பார்க்கிறோம். அந்தப் பாக்கள் எல்லாம் தேன் பலாச் சுளைகள். படிக்கப் படிக்க வாய் மணக்கும், பக்திப் பரவசம் நம் ஊனில் உயிரில் பரவும். அத்தகைய திருமுறைப் பாடல்களைப் பகுத்தும் தொகுத்தும் தந்துள்ளார் நூலாசிரியர். திருமறைச் செந்தமிழ், திருமுறையில் இயற்கை, கற்பனை முதலான தன்மைகளை ஆய்வு நோக்கோடு கூறியிருப்பது, தமிழ் ஆர்வலர்களின்

பெண்கல்வியின் பெருமை

முனைவர் சிவகாம சுந்தரி

கடல் சூழ்ந்த இத்தமிழ் நாட்டின் அச்சாணியாக இருக்கக்கூடிய தாய்க்குலம், இன்றுவரை ஆடம்பரமான வார்த்தைகளாலும், அலங்கார மான சொல் அடுக்குகளாலும், அபிஷேகிக்கப்பட்டு வருகின்ற தேயல்லாமல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய, சரியான இடத்தைக் கொடுப்பதற்கு நம்மில் பலரும் சிறிது தயங்கிக் கொண்டி ருக்கிறோம். அக்காரணத்தால், இந்த எட்டாவது உலகத் தமிழ் நாட்டில் பெண்ணின் பெருமை யைச் சிறிது அளவாவது நாம் புரட்டுவோமேயானால், 21-வது நூற்றாண்டை நோக்கி நாம் செல்ல வேண்டிய கட்டத்தில், என்னையல்ல, எனக்குப் பிறந்திருக்கக்கூடிய என்னுடைய மக்களை, என்னுடைய மக்களைக் கூட அல்ல; அந்த மக்களுக்குப் பிறக்கக்கூடிய பேரக் குழந்தை களை மிகச் சிறப்பாக வளர்க்க வேண்டுமென்று சொல்கின்ற நோக்கத்தை மனதிலே தாங்கித் தான் பெண்ணின் பெருமையை இந்த மாநாட்டிலே ஒரு சிறப்பான இடமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

கல்வியைப் பற்றி வளமாக நம்முடைய புழங்காலத்திலே யிருந்து இக்காலம் வரை அதாவது கல்வி என்று பொதுவாகச் சொன்னாலும், பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லி வந்திருக் கிறார்கள்.

கல்வியின் அடித்தளம்

அது முறையான கல்வியாக இருந்தாலும் சரி, அது முறை சாராக் கல்வியாக இருந்தாலும் சரி, தொடர்க் கல்விய க இருந்தாலும் சரி, அனுபவக் கல்வியாக இருந்தாலும் சரி, ஆரம்பக் கல்வியாக இருந்தாலும் சரி, பல்கலைக் கழக ஆராய்ச்சிக் கல்வியாக இருந்தாலும் சரி அந்தக் கல்வியிலே என்ன அடித்தளமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், Man making educaiton அதாவது மனிதனை மனிதனாக்கக்கூடிய கல்வியை, இந்த நாட்டிலே 2000 ஆண்டு காலம் தொடங்கி, இந்தக் காலத்திலே பாவேந்தர் பாரதி தாசன் அவரைத் தொடர்ந்து வருகின்ற பரம்பரை வரைக்கும், தமிழால் இந்தப் பெண் கல்வியை வற்புறுத்திக் கொண்டே வந்திருக் கிறார்கள்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்று திட்ட மிட்டக் கல்வியைக் கற்றிருந்தாள் சங்க காலத்துப் பெண். **"செருமுகம் நோக்கிச் செல்க"** என்கிற வீரக் கல்வியைக் கற்றிருந்தாள். "உங்கள் தலை நரைத்துவிட்டதா? நீங்கள் இதை உபயோகப்படுத்தினால் கறுப்பாக மாற்றலாம்!" என்றில்லை. என்றும் இளமைக்குரிய ஒரு கல்வியை ஒரு தாய் சொல்வதாகப் பிசிராந் தையார் அங்கே சுட்டிக்காட்டிச் சொல்வார். என் தலை நரைக்கவில்லை. அதற்கு என்ன காரணம் தெரியுமா? **"மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்."**

மாட்சிமை பொருந்தியவள் என் மனைவி. அந்த மாட்சிமை என்று சொல்கின்ற சொல்லிலே

அவள் கற்று இருக்கக்கூடிய அனைத்துக் கல்வியையும் காலத்திலே எடுத்துக்காட்டிய தன்மையை நம்முடைய சங்க இலக்கியங்கள் எடுத்துச் சொல் கின்றன.

'புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'

—என்று புரட்சிக் கவிஞர் பாடினார். பண்டைத் தமிழகத்தில் அந்த வயது முதிர்ந்த மூதாட்டி தலை நடுங்க, கோலைக் காலாகக் கொண்டு, மூன்று கால்களை வைத்துக்கொண்டு, அதியமானுக் கும், தொண்டமானுக்குமிடையே நடந்து, அவள் செய்த ஒரு பெரிய புரட்சி, அமைதி புரட்சி என்று சொல்கின்ற அந்த அமைதிக் கல்வியை அந்த சங்க காலத்துத் தாய் ஔவையார் கற்றிருந்தாள்.

மனித நேயக் கல்வி

கொடை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் அப்பாவோடு நாங்கள் இருந்தோம், இன்றில்லை தாயே நீங்கள் வந்துவிட்டீர்கள் என் நீலச் சிற்றாடையை உங்களுக்கு நான் கொடுக்கின்றேன் ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல் கின்ற அந்த மனித நேயக் கல்வியைப் பாரி மகளிர் கற்றிருந்தார்கள். இந்தத் தன்மை யைச் சங்ககால கல்வி முறை எடுத்துக் காட்டுகிறது.

விரலியர் ஆடினார்கள். தமிழ் ஆடியது. தமிழ்க் கல்வி ஆடியது. பாடினிகள் பாடினார்கள், அங்கே பண்ணோடு தமிழ் பாடியது என்று சொல்கின்ற தன்மையைக் காண்கிறோம். அதனால்தான் வள்ளுவப் பேராசான், ஆண் கல்வி பெண் கல்வி என்று சொல்லாமல் என்ன சொன்னார் என்றால்,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' - என்றார்

'கற்றோர் என்றால் அது ஆண்கள், இது பெண்கள் அப்படியெல்லாம் சொல்லாமல்

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

—என்று கூறினார்.

மனித நேயம்

கல்வி என்பது பொது அது நாட்டினுடைய பொது உடைமைச் சொத்து என்பதை அழுத்தமாக வள்ளுவப்பேராசான் எடுத்துச் சொன்னார். அதனால்தான்

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

குழுவில், ஓர் உறுப்பினரானார் சீனி. வேங்கடசாமி அவர்கள்.

பத்திரிகைத்துறை அவருக்குப் புதிய அனுபவங்களைக் கற்க உதவியது. செய்தி திரட்டுதலிலிருந்து கட்டுரைகள் எழுதுவது வரை உற்சாகத்துடன் செய்து வந்தார். ஆனால், அங்கும் அவருக்குப் போதிய ஓய்வு கிடைக்கவில்லை. அவர் மனத்தில் தமிழாராய்ச்சியே தலைதூக்கியிருந்தது. அதற்குத் தகுந்த வேலை எது? என்று தேடிக் கொண்டிருந்தார்.

அப்போது, ஆசிரியர் தொழிலே உகந்தது என்று அவருக்குத் தோன்றியது. பிறகு தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து வெற்றி பெற்றார். சென்னை மயிலாப்பூர் நகராண்மைக் கழகப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

இலக்கிய ஆராய்ச்சி தொடர்ந்தது. அவருடைய கட்டுரைகள் பல இதழ்களில் வெளிவந்தன. படித்தவர்கள் பலர் பாராட்டினார்கள். அவ்வமயம் திருநெல்வேலி கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவர்களின் நட்பால் தமிழாராய்ச்சி தடையின்றி வளர்ந்தது.

தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரிடம் தனி மதிப்பு வைத்திருந்தார் சீனி. வேங்கடசாமி அவர்கள். அவரது நூல்கள், இவரது தணியாத தமிழ்த் தாகத்துக்குக் குளிர்ந்த நீராய் உதவின.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் நட்பு இவரது இலக்கியச்சோலையில் தென்றலாய் வீசியது. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய "இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்" என்னும் நூலுக்கு அழகிய அணிந்துரை நல்கிப் பாராட்டினார் திரு.வி.க.

பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள், சென்னைத் தமிழ்ச் சங்கம் என்னும் இலக்கிய அமைப்பை உருவாக்கி, பல அரிய சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்தச் சொற்பொழிவுக் கூட்டங்களுக்குத் தவறாமல் செல்வார் சீனி. வேங்கடசாமி. அதன் விளைவாக உருவானவையே 'கிறிஸ்துவமும் தமிழும்', 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய ஆராய்ச்சி நூல்கள். அத்துடன் தெ.பொ.மீ.யின் நட்பு அவருக்குக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதினார். அவரிடம் பாடம் கேட்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் நடத்தி வந்த 'குடியரசு' பத்திரிகையைத் தவறாமல் படித்து வந்ததுடன், அதில் கட்டுரைகளும் எழுதினார். இது, தந்தை பெரியாருக்கும், சீனி. வேங்கடசாமி அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. தந்தை பெரியாரின் மூலம் பாவேந்தர் பாரதிதாசன் இவருக்கு அறிமுகமானார்.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் இலக்கியப் பயணம் தங்கு தடங்கலின்றி நடந்தது. அவரது அயராத உழைப்பின் காரணமாக, பல நூல்கள் வெளிவரத் தொடங்கின. தமிழறிஞர்களின் தொடர்பு, அவருக்குப் பலவகையிலும் பெருந்துணையாக இருந்தது. ஏட்டுச் சுவடிகள், சாசனங்கள் முதலானவற்றை ஆராய வழி வகுத்தது. விடுமுறை நாட்களில் இவர் வாளா இருந்ததில்லை. காலம் பொன் போன்றது என்பதைக் கவனத்தில் கொண்டு செயல்பட்டு வந்தவர். கோவில்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் என்று ஊர்ஊராகப் பார்க்கப் போய்விடுவார். அவை குறித்து

பொன்மொழிகள்

மாணவர்களிடையே வேகம் தேவைதான், அது ஏற்படுவது இயற்கைதான் என்றாலும், அந்த வேகம் வகைப் படுத்தப்பட வேண்டும் முறைப் படுத்தப்பட வேண்டும் கல்வியின் தன்மையே வேகத்தை முறைப் படுத்தி வகைப்படுத்துவதுதான்.

—அறிஞர் அண்ணா

நாட்டின் வலிமை நமது ஒற்றுமையால் மட்டும் அமைந்து விடாது நாளைய தினம் நம் கடுமையான உழைப்பால் உருவான முன்னேற்றமும் வளர்ச்சியுமே வலிமை மிக்க இந்தியாவை உலகுக்கு உருவாக்கிக் காட்டும்.

—சர்தார் படேல்

☆ எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

ஆராய்ச்சிகள் செய்வார். தமிழ் எழுத்துகள் பற்றி ஆராய்வதிலும் கவனம் செலுத்தினார்.

தமிழ்நாட்டின் மிகப் பழைய சமயங்களில் மிக முக்கியமானது ஜைனமும், பௌத்தமும் ஆகும். இவை புறக்கணிக்கப்படுவதை அவர் உணர்ந்தார். இவற்றுக்குப் புத்துயிர் ஊட்ட முனைந்தார். இம்மதங்கள் ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்புற்று விளங்கி வந்ததையும், அது தமிழிலக்கியத்திற்குச் செய்துள்ள தொண்டுகள் குறித்தும் சீனி. வேங்கடசாமி அவர்கள் அடிக்கடி கூறுவார். எனவே, இம் மதங்களைச் சேர்ந்தவர்களை அணுகினார். அவர்களோடு பழகினார். அம் மதங்கள் குறித்த உண்மைகளை அறிய இந்தத் தொடர்பு அவருக்கு உதவியாக இருந்தது.

இந்தச் சமயத்தில், உயிர்ப்பலி எதிர்த்துப் போராடி வந்த ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால் அவர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இருவரும் இணை பிரியா நண்பர்களாயினர். இருவரும் பல இடங்களுக்குச் சென்று ஜைன மதத் தொடர்பான செய்திகளைத் திரட்டி வந்தனர்.

சீனி. வேங்கடசாமி அவர்களின் ஆராய்ச்சித் திறனை, பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார், வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன், மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை, டாக்டர் மு.வ., டாக்டர் அ. சிதம்பரநாதனார், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோர் பாராட்டியுள்ளனர். மகாகவி பாரதியாரும் சீனி. வேங்கடசாமி அவர்களின் சீரிய தமிழ்ப் பணிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

ஜைன, பௌத்த மதங்களின் அருமை பெருமைகளையெல்லாம் எடுத்துக் காட்டியவர் சீனி. வேங்கடசாமி அவர்கள். எந்தக் கட்டுரையாக இருந்தாலும், நூலாக இருந்தாலும் பல முறை ஆய்ந்தபிறகே எழுதுவார். எளிமை, இனிமை அவரது எழுத்துக்களில் இருப்பது போலவே, அவரது தோற்றத்திலும் இருந்தது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் என்னும் குறளமுத நெறி நின்று செயற்கரிய செயல்களைச் செவ்விதின் ஆற்றிவரும் அன்பர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த கலைக் களஞ்சியம்" என்று புகழ்மாலை சூட்டுகிறார் தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்கள்.

அல்லும் பகலும் அயராது உழைத்து, அன்னைத் தமிழுக்குப் பல அணிகலன்களைத் சூட்டி மகிழ்ந்தார் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள். அவை:

1. கிறிஸ்தவமும் தமிழும், 2. பௌத்தமும் தமிழும், 3. சமணமும் தமிழும், 4. மகாபலிபுரத்துச் சைன சிற்பம், 5. இறையனார் களவியல் ஆராய்ச்சி, 6. பௌத்தக் கதைகள், 7. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள், 8. மகேந்திர வர்மன் சரித்திரம், 9. நரசிம்மன் சரித்திரம், 10. மூன்றாம் நந்திவர்மன், சரித்திரம் 11. புத்த ஜாதகக் கதைகள் (மொழி பெயர்ப்பு), 12. அஞ்சிறைத் தும்பி, 13. கௌதம புத்தர், 14. மறைந்து போன தமிழ் நூல்கள், 15. சாசனச் செய்யுள் மஞ்சரி, 16. மனோன்மணீய உரை தொகுப்பு

காலமெல்லாம் கன்னித் தமிழுக்காகவே தம் கவனத்தையெல்லாம் செலுத்திய மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், திருமணமே செய்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றாசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், 8.5.1980-இல் மறைந்தார். என்றாலும் அவரது புகழ் மறையவில்லை. அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு அகல் விளக்காய் இன்றும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது.

—பி.வி. கிரி

ஒன்றே குலம்

நமது சமூகத்தில் நிலவி வரும் குறைபாடுகள் நீங்க வேண்டுமெனில் நாம் எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

பாரதிதாசன் பாடினார்.

ஆக இந்தக் கல்வி ஆண்களுக்கு, பெண்களுக்கு என்று பேதம் பார்க்காமல் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டால்தான் இந்த நாடு எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறதோ, அந்த வழியிலே செல்ல முடியும்.

தனிச் சட்டம்

தொல்காப்பியர் காலத்திலே "முன்னீர் வழக்கம் மகளோடு இல்லை"யென்று சொல்கின்ற நிலையிலிருந்தது. அவர்கள் போகக்கூடாது. கடல் தாண்டி எக்காரணம் கொண்டும் போகக் கூடாது என்று சொல்கின்ற நிலை மாறி, நம்முடைய பிள்ளைகள் இன்று அயல்நாடுகளிலே, பொறியியல் படிப்பதற்கு, மருத்துவம் படிப்பதற்கு, சட்டங்களைப் படிப்பதற்கு, இலக்கியங்களைப் படிப்பதற்கு, துறைதோறும், நுறைதோறும் வளர்ந்து வருகின்ற கல்வியைப் படிப்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றாலும், இன்றும் பெண் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய உயரிய மதிப்பு, அந்த 40 சதவிகிதத்தைத் தாண்டாத நிலையில் இருக்கின்ற இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே நம்முடைய தமிழ் நாட்டிலே வருகின்ற 21-ஆம் நூற்றாண்டு காலத்தில் எல்லாத் துறையும் முதல் துறையாக, சிறப்பாக வர வேண்டுமென்று சொன்னால், இந்தப் பெண்கள் கல்விக்கு 100 சதவிகித முக்கியத்துவம் கொடுத்து அவர்களைக் கல்வி அறிவு உடையவர்களாக வருங்காலச் சந்ததியைச் செய்ய வேண்டும். அதற்கான ஒரு தனிச் சட்டத்தை இயற்ற வேண்டும்.

பெண் குழந்தைகள் படித்து விடுவார்களேயானால், அவர்கள் பகுத்தறிவு பெற்றுவிடுவார்கள். அவர்கள் பகுத்தறிவு பெற்று விடுவார்களேயானால், இந்தச் சமுதாயம் எதை எதிர்பார்க்கிறதோ அந்தச் சமுதாயத்திற்கு வேண்டிய அனைத்தையும் செய்வார்கள்.

'அ' சொல்லிக் கொடுப்போம். 'அம்மா' என்று விரிவாக்கம் சொல்லித் தருவோம். அதன் வழியாக அன்பைச் சொல்வோம். 'அ' என்று சொல்லிக் கொடுப்போம். அதற்கு 'அகத்தியன்' என்று விரிவாக்கம் சொல்லிக் கொடுப்போம். தமிழன் பெருமையை எடுத்துக் காட்டுவோம்.

அறிவியல் தமிழ் 'அ' என்று சொல்வோம். அகத்திக்கீரை என்று சொல்லிக் கொடுப்போம். அந்த அகத்திக்கீரை நீங்கள் சாப்பிட்டால் உங்கள் அகம் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து உனக்கு அன்புக் கல்வி கிடைக்கும் என்று சொல்கின்ற அந்தச் சத்துணவுக் கல்வியை, அந்த அறிவியலையும், அகத்தியனையும், அகத்திக்கீரையையும், என்னுடைய முத்தமிழோடு, நான்காவது கல்வியையும் சேர்த்துச் சொல்லித் தர வேண்டும். இந்தக் கல்வி, பாதுகாப்பாகத் தமிழகத்திலே பெண்கள் கையிலே நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

கடினமான உழைப்பே நம் வளர்ச்சிக்கு அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கும். உண்மை பொறுப்புணர்ந்து ஒற்றுமையுடனும் உறுதிப்பாடுடனும் நம் மன உறுதியுடனும் உழைக்கும் நம் நாட்டில் பாட்டினால்தான் நம் நாட்டில் முன்னேற்றத்தைக் காண முடியும்.

—அண்ணல் காந்தியடிகள்

ஒரு நல்ல தொழிலும், போதுமான வருமானமும், எதிர்காலத்துக்கும் கொஞ்சம் மீத்துவைக்க வசதியும் தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அறிவும், பிறருக்கு உதவிடும் எண்ணமும் உடையவன் எவனோ அவன் உண்மையான மகிழ்ச்சி உள்ளவனாவான்.

—இங்கர்சால்

வியர்வையினால் ஒரு விதி எழுது



வியர்வை யினாலொரு விதியெழுது
விண்ணிலும் மண்ணிலும் அதையெழுது
உணவைத் தொடுகிற தனிஉரிமை
உழைக்கிற கைக்கே என எழுது

உலகம் உண்கிற உப்பெல்லாம்
உழைப்பவர் வியர்வை வழங்குவது
உலகப் புதுமையின் ஆதாரம்
ஒருதுளி வியர்வையில் அடங்குவது

பனிமலை வியர்க்கும் பொழுதினிலே
பாகீரதிகள் கருவாகும்
மனிதர்கள் வியர்க்கும் பொழுதினிலே
மாபெரும் உலகம் உருவாகும்



கல்லைப் படைத்தவன் கடவுளென்றால்
கலைகளைப் படைத்தவன் மனிதனடா
மண்ணைப் படைத்தவன் பிரம்மன் என்றால்
மாநகர் படைத்தவன் மனிதனடா

வேர்கள் நமக்குச் சொந்தமென்றால்
விழுதுகள் நமக்கென்ன உறவில்லையோ!
வேர்வை நமக்குச் சொந்தமென்றால்
விளைகிற பயனில் தொடர்பில்லையா!

வெற்றிக்கும் உழைப்புக்கும் திருமணமாம்
வியர்வைக் குழந்தைகள் பிரசவமாம்
நெற்றியின் வியர்வையை விரலில்வழி
நீள்புவி இவர்க்கென உமில்எழுது!

கவியரசர் இளந்தேவன்

—என்று சொன்னார்.

சான்றாமைக்கு அடிப்படை எது என்று சொன்னால், எம்.ஏ., பட்டம் அல்ல எம்.பில். பட்டம் அல்ல. பி.எச்டி. பட்டம் அல்ல. பல்கலைக்கழகத்திலே இருக்கக் கூடிய பேராசிரியர் பட்டம் அல்ல. மனித நேயம் என்று சொல்கின்ற அந்தப் பக்குவமான பண்பு, என்னுடைய பிள்ளைகளுக்கு வந்துவிட்டால் இந்தச் சமுதாயம் முன்னேறும் என்று சொல்கின்ற கல்வியைத்தான் வள்ளுவப் பேராசான் எடுத்துச் சொன்னார்.

அதனால்தான்,

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர் கெல்லாம் இனிது.

—என்று சொன்னார்.

அறிவு என்றால் நான் இந்த அ, ஆ, படிப்பில் ஏ,பி., சி,டி., படிப்பில் வந்துவிடும் என்று சொல்லவில்லை. ஆனாலும், சரியான அடித்தளம், அரங்கு இல்லாமல் வட்டாட முடியாது அல்லவா? எனவே, அந்த அரங்கை வைத்துக்கொண்டு கல்வியை முறையாகப் படித்து விட்டால், அறிவறிந்த மக்கட் பேற்றை அந்தப் பிள்ளை அங்கே கொடுப்பான் என்று வள்ளுவ பேராசான் எடுத்துச் சொன்னார்.

நாலடியாரில் கல்வி நலம்

நாலடியார் செய்யுள்கூட இவ்வாறு சொன்னது—

'குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல, நெஞ்சத்து
நல்லம் யாம்என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

—என்பதை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாக வைத்துச் சொன்னார்கள். அடுத்து வந்த காப்பியம்கூட இதை அழகாகச் சொன்னது. அன்று மதுரை நகர் வீதியிலே கண்ணகி நடந்து போகும்போது மன்னன் அவைக்குச் செல்லும் முன்னதாக ஒன்று கேட்டாள்.

'சான்றோரும் உண்டுகொல்,
சான்றோரும் உண்டுகொல்,
ஈன்ற குழவி எடுத்து வளர்த்த
சான்றோரும் உண்டுகொல்'

ஆக, தெரியாமல் அந்தக் குழந்தைகளை வீதியில் போட்டு விட்டுப் போகிற காலம், அந்தக் காலத்திலேயே இருந் திருக்கிறது. அந்தக் குழந்தைகளை எடுத்து வளர்ப்பதற்கான குழந்தைகள் காப்பகங்கள் அந்தக் காலத் திலேயே இருந்திருக்கின்றன.

அதிலே ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று திட்டவட்டமாகச் சிலப்பதிகாரமே சொல்லவில்லை. இந்தக் காலத்திலே பெண் குழந்தைகள் அப்படிப் போடப்படுகிறார்கள். அந்தக் காலத்திலேயே அந்தக் குழந்தைகளை எடுத்து வளர்த்து அவர்களுக்கு நல்ல கல்வி புகட்ட வேண்டும் என்பதை சிலப்பதி காரக் கல்வி முறை எடுத்துச் சொல்கிறது.

ஆட்சி மொழி

மன்னன் முன்னால் சென்று ஒரு பெண் தமிழிலேயே வழக்காட முடியும். ஆட்சி மொழி தமிழாக வர வேண்டும் என்பது பற்றி அறிஞர் பெருமக்கள் அழகாகச் சொன்னார்கள்.

அதுபோல, வழக்குமன்ற மொழி தமிழிலேயே வர முடியும் என்பதை

"தேரா மன்னா செப்புவ துடையேன்" என்று தொடங்கி...
"பட்டாங்கில் யானும் ஓர் பத்தினியேயாமாகில்
ஒட்டேன் அரசனோடு ஒழிப்பேன் மதுரையையும்

—என்று சொல்கின்ற அடிப் படையிலே அங்கே அழகாக, அந்தச் சிலப்பதிகாரத்திலே அரசியல் கல்வியை அந்தப் பெண்மணி கற்றிருந் தாள் என்பதை எடுத்துச் சொல்கிறது.

"அறிவின்மிக்கார்" என்று சொல்கிறது பெண்களைப் பற்றிப் பெரியபுராணம். அதுமட்டுமல்ல, ஆதிசிவனே சொல்கிறான் காரைக்கால் அம்மையார் நடந்து வருவதைப் பார்த்து, நம்மைப் பேணும் அன்னை காண், கற்றவள் காண் முத்தமிழ் காண்" என்று சொல்லி, அவளுடைய கற்ற திறமையைப் பற்றிப் பெரிய புராணம் அழகாக எடுத்துச் சொல்கிறது.

இதை 19-வது நூற்றாண்டிலே வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளல் பெருமான் சொன்னார். "பால் நினைந்து ஊட்டும் அந்தத் தாய் சாகாக் கல்வியின் தரம் எல்லாம் உணர்ந்தவள் என்று. பெண்ணுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொன்னார்.

வித்தையைப் படிப்பியுங்கள்

இடைக்காலத்தில் சாதியாலோ, சமயத்தாலோ பல்வேறு வகை யான சங்கடங்களாலோ, அரசியல் சூழ்நிலைகளாலோ, மாதரை நம்பக் கூடாது என்று சொல்லக் கூடிய ஒரு கருத்து வந்தபோது இந்தத் தஞ்சைப் பகுதியிலே வாழ்ந்த மாயுரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை அவர்கள் பாடினார்கள்:

"வித்தையைப் படிப்பியுங்கள் அய்யா,
புத்தியுள்ள கனவான்களே,
உங்கள் கண்களாம் எங்களுக்கு
வித்தையைப் படிப்பியுங்கள்
ஐயா!

நான் உங்களுக்கு வண்ணாண் கணக்கு எழுதுவேன்.

புளி, மிளகு, சீரகம் அந்தக் கணக்குகளைப் பற்றியெல்லாம் நான் அழகாக எழுதுவேன்.

புண்ணிய பொக்கிஷம்; பொறுமையின் இருப்பிடம்,

ஞானக் களஞ்சியம், நற்குணப் பாத்திரம்,

அவள் அழகான சுந்தரி, அறிவிலே மந்திரி,

மங்காத தீபம், ஆடாத மாமயில், அணையாத விளக்கு

—என்று எல்லாம் சொல்லி எங்களுக்கு நீங்கள் கல்வியைக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

கல்வி கற்றவள்

இதைத் தொடர்ந்துதான் பாரதிக் கவிஞன்

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்!"

—என்று பாடினான். எங்களால் வேதம் படைக்கவும், முடியும், தெய்வ சாதி படைக்கவும் முடியும், நன்கு பல் வேதங்கள் வரைந்த கை, இந்தப் பாரத நாயகியினு டைய திருக்கை, உலக வாழ்க்கையி னுடைய நுட்பங்கள் தேரவும், ஓது பற்பல நூல்வகை கற்கவும், எம்மால் முடியும் எனப்பேசினார்.

எனவே, தமிழா பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்களைக் கட்டு. அந்தத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே என்னு டைய தமிழச்சியை நீ படிக்க வை, ஏனென்றால், காலம் காலமாக அவளை நாம் ஏமாற்றிக் கொண்டே வந்திருக்கிறோம்.

உழைப்பே உயர்வு

உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன், வாழ்த்துக் குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

—பேரறிஞர் அண்ணா

பெண் தெய்வங்கள்

தெய்வமாகவே ஆக்கி அவளை உட்கார வைத்துவிட்டோம். செல்வத்தைத் திருமகள் என்றும், கல்வியைக் கலைமகள் என்றும், வீரத்தைக் கொற்றவை என்றும், பாடுகின்ற பாடல்களுக்கெல்லாம் அமைக்கும் இசைக்கு வசந்தா என்றும், கல்யாணி என்றும், சண்முகப் பிரியா என்றும் இப்படிப் பெண்களுடைய பெயரையே சொல்லி அவளை நன்றாக மிளகாய் அரைத்துக் கொண்டே இருக்கிறோம்!

ஆகையினால் அதிலிருந்து மாறி அவளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிற அந்தத் தன்மையைத் தொடர்ந்துதான் பாவேந்தர் பாரதிதாசன் உங்களுக்கும் எனக்கும் புரிகின்ற தமிழிலேயே பாடிய அந்தப் பாட்டுப் பாட்டனுடைய, பாரதியினுடைய வாரிசு பாரதிதாசன் பேசினார்.

"கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்திலே
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைவ தில்லை!"

கல்வி இல்லாத பெண மின்னாள், எதிலும் மின்னாள், வாழ்க்கையில் மின்னாள், என்றார். இன்னொன்றும் சொல் லுவர் மகளிரெல்லாம் கல்வி அறிவு பெற்றவராயின் மருத் துவமே வேண்டாமாம்! அந்த மைசின், இந்த மைசின் இந்த சின். எல்லாம் ஓடிப்போகும். அந்தப் பெண்ணுக்குக் கல்வி கொடுத்து விட்டோம் என்று சொன்னால், கல்வி அறிவுடையவராயின் மருத்துவமே வேண்டாம் என்று

எங்கெங்கு காணினும் சக்தியடா!

—டாக்டர் புனிதா ஏகாம்பரம்

"செந்தமிழே உயிரே நறுந்தேனே, செயலினை மூச்சினை உனக்களித்தேனே...

நைந்தாய் எனில்நைத்து போகும் என் வாழ்வு. நந்நிலை உனக்கெனில் எனக்கும் தானே?"

—செழுந்தமிழ், மக்களின் செந்தமிழாக உணர்வோடு இருக்கக் கூடிய தமிழர்களின் உயிர்த் தேனாக விளங்கக் கூடியது என்பதை இவ்வாறு விளக்கிப் பாடினார், 'எங்கெங்கு காணினும் சக்தியடா ஏழு கடல் அவள் வண்ணமடா' என்று பாடின்ரார் பாவேந்தர் பாரதி தாசனார்.

'பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா

பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா'

—என்று பாடினார் மகாகவி பாரதியார். அப்படியெல்லாம் கவிஞர் போற்றும் இலக்கிய வடிவமாக் விளங்குவதே மகளிர் சமுதாயம்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். இலக்கியத்திலே பெண்களை ஒரு காலத்தில் மட்டமாக-கேவலமாகப் பேசினார்கள். வள்ளுவரைக் கூட வம்புக்கு இழுத்துப் பார்த்தோம் நாங்களும். வாழ்க்கைத் துணை நலம் என்று பத்துக் குறளைப் பெண்களுக்குத்தானே சொல்லியிருக்கிறார்கள். ஏன் ஆண்களுக்குச் சொல்லவில்லை? நமக்குத்தான் சொல்லுவார்கள். சொன்னால் நாம் கேட்டுக் கொள்வோம். ஆண்கள் சொன்னால் கேட்கமாட்டார்கள் என வள்ளுவருக்கே தெரிந்திருக்கிறது. அதனாலேதான் ஏன் அதைச் சொல்லவேண்டும் என்று அவரே விட்டுவிட்டார்.

ரொம்பப் பெருமையோடு இந்த வாழ்க்கைத் துணை நலத்தைச் சொல்லியுள்ளார். பெண்கள் அதைப்போன்று ஏற்றம் மிகுந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு காலத்திலே அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு நான்கு குணங்கள் பெண்களுக்கு வேண்டும் என்றனர். வந்தார் எங்கள் எட்டயபுரத்துச் சிங்கம், அவர் சொன்னார் "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று ஒரே போடாய்ப் போட்டார். குழந்தைகள் பிறக்கறதைப் பற்றிச் சொன்னார். "பெண் குழந்தை பிறக்கிறது மோசம். 'ஜாண் பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை' என்பார்கள் சிலர். ஆனால் அவர் சொன்னார் 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்' அப்படி ஒரு கம்பீரம் பெண்களுக்கு வேண்டும் என்றார். அப்படியிருந்தால்தான் நமக்குப் பெருமை, சிறப்பு.

'தனம்தரும் கல்விதரும்,
ஒரு நாளும் தளர்வறியா...
மனம்தரும் தெய்வ வடிவும்தரும்,
நெஞ்சில் வஞ்சமில்லா

இனம்தரும், நல்லன எல்லாம்தரும் எது? 'அபிராமி கடைக்கண்களே' என்று பாடினார்கள்.

பாரதி என்ன அழகாக இலக்கியத்திலே சொன்னார் தெரியுமா?

'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!'

எவ்வளவு அழகாகச் சொல்கிறார்!

'மெச்சி உன்னை ஊரார்
புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி!'

எத்தனை அழகாகச் சொல்கிறார்!

'மெச்சி உன்னை ஊரார்
புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி!

ஓடி வருகையிலே என் உள்ளம் குளிருதடி என்றார். பெண் பிள்ளை அவ்வளவு அழகாக ஓடிவரும். ஆண் பிள்ளை ஓடி வரமாட்டான். ஓடியே போயிடுவான்! அப்பா பேச்சைக் கேட்க மாட்டான். அம்மா பேச்சைக் கேட்க மாட்டான்

பெண்கள் என்றால் பேணுகின்ற தன்மை உடையவர்கள், சிறப்பு உடையவர்கள். ஆடவர் என்பதற்கு என்ன இலக்கணம்? ஆடிக்கொண்டே இருப்பதா?

'உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு' என்கிறார்கள்; அப்படியானால் 'தொந்தி போடுதல் ஆணுக்கு அழகு' என்று கூறலாமா? ஆகவே இந்தப் பழமொழிகளை வைத்துக் கொண்டு நாம் பேசக்கூடாது.

பெண் என்பவள் அறிவோடு இருக்க வேண்டும் என்பதற்காக, திறமையோடு இருக்க வேண்டும் என்பதற்காக அருமையாக வீரத்தோடு பாடினார்கள். ஆணுக்கு வீரம் இயற்கையிலே இருக்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த வீரம் எப்படி வருமென்றால், ஒரு பெண்ணாலே தான்.

ஒரு பெரிய சபை, இதுபோல இருக்கக்கூடிய சபை; அந்தச் சபையிலே வில்லைக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இராமபிரான் அந்த வில்லை வளைக்கவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. எல்லோரும் வந்து முயன்று பார்த்துத் தோற்றுப் போனார்கள். அங்கேயிருந்த இராமபிரான் வந்தார். வளைக்க வேண்டும் என்பதுதான் போட்டியின் விதி. இராமபிரான் வந்தார். எடுத்தார். ஆனால் என்ன ஆயிற்று என்றால், 'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்' என்கிறார் கம்பர்.

வில்லை அவர் எடுத்ததைத் தான் பார்த்தார்களாம் அடுத்து அது ஒடிந்த போன சத்தம்தான் கேட்டதாம். "ஆடேயப்பா எவ்வளவு பெரியபவர்! எவ்வளவு பெரிய சக்தி! அப்படின்னு எல்லோரும் வியந்து பார்த்திருக்கிறார்கள்.

இராமனுக்கு அந்த வீரம் வரக் காரணம், அவன் முன் சீதை வந்து நின்றதுதானாம்!

இதை இராமாயணத்திலே கம்பர் எழுதுகிறார். அந்தப் பெண் நடந்து வருகிறாள். ஒசிந்து, ஒல்கி, மென்மையாக அழகாக நடந்து வருகிறாள். அந்தப் பெண் சீதையைப் பார்க்கிறார் ஒரு பெரியவர். அந்த முனிவர் அவளைப் பார்த்துவிட்டுச் சொல்கிறார்.

"நச்சுடைக் கண்மலர் நங்கை இவள் நின்றால், இச்சிலை கிடைக்க மலை ஏழையும் தகர்ப்பேன்"! 'இந்த மாதிரி ஒரு பெண் எனக்குக் கிடைப்பாளானால், இந்த வில் என்ன-ஏழேழு மலையும் நான் நொறுக்கிவிடுவேன் என்று சொன்னாராம் அக்கிழவர்!

வாழ்க்கையை
வளமடையச் செய்வதே
கல்வியின் நோக்கம்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டி விட்டால்....

'குமரர்க்கு மாமலையும் மண்ணில் ஓர் கடுகாம்' —என்றும் 'காற்றில் ஏறி அவ் விண்ணையும் சாடுவோம் காதல் பெண்கள் கடைக்கண் பார்வையில்'

—என்று பாரதியும் பாரதி தாசனும் பாடினர். ஆக, பெண்கள் கடைக்கண் பார்வை பார்த்தால் போதும், பெண்ணுடைய வீரம் வெளிப்பட்டு, அது ஆணுக்குப் போய்ச் சேரும்.

பெண்ணின் பார்வை என்பது அருள் பார்வை. தன்னம்பிக்கையோடு தலைவனுக்கு நிறைவு தரக்கூடிய பார்வை. அழகாக ருசித்துக் காட்டக்கூடிய இலக்கியத்தைப் படைத்து, பெண்மையை உயர்த்தின இந்த நாட்டின் இலக்கியங்கள். நாம் மறந்துவிடக் கூடாது. நினைத்துப் பார்ப்போம்.

இங்கே புனிதவதி அம்மையார் பற்றிப் பேசினார்கள், அன்றைக்கு இருந்த முதலமைச்சர் ஒருவர் அவருடைய பெயர் அருட்செல்வர். சேக்கிழார் பெருமானால் ரொம்ப அருமையாகப் பாடப்பட்டவர். அம்மையாருடைய பெயரை எழுதாமல் அவர் ஊர்ப் பெயரை எழுதி, அம்மையாருடைய பெயரிலே புராணத்தை எழுதாமல்

'புனிதவதியார் புராணம்' என்று எழுதாமல் 'காரைக்கால் அம்மையார் புராணம்' என்று எழுதினார்கள். செய்யலாமா இப்படி?

அதனால்தான் இன்றைக்கு சிவன் கோவிலுக்குள்ளே போனால், பிரகாரத்தை வலம் வருகிறபொழுது, 63 நாயன்மார்களிலே 62 பேர் நின்று கொண்டு இருப்பார்கள். ஒரே ஒரு பெண்மணிக்குத்தான் உட்காரக் கூடிய பெருமை!

ஓர் ஆண் ரொம்பப் பிரியமாக இருந்தால்- பெண்ணைக் கனி என்பான், பிடிக்கவில்லையென்றால் சனி என்பான். பெண்ணைத் தெய்வமாக வைத்துப் போற்றிப் பாடியது இலக்கியம். நாம் அதை மறந்துவிடக் கூடாது.

ஒவ்வொரு படியாக வந்து கொண்டே இருக்கக் கூடிய காலகட்டத்திலே, சங்க இலக்கியம்...அதில் ஔவை மூதாட்டி என்கிற பெண்பாற் புலவர் அவர்கள் இந்த உலகத்திலே இருக்கக் கூடிய இடங்களுக்கு எல்லாம் சென்று தமிழகத்தினுடைய ஒவ்வொரு பகுதிக்கும் சென்று தன்னுடைய அருமையான தமிழை, செந்தமிழை ஒவ்வொருவருக்கும் சொல்லிக் கொண்டு வந்தார். அவருடைய பெருமையைப் பார்க்கிறான் அதியமான்.

தான் சென்ற இடத்திலே ஒரு அருமையான நெல்லிக் கனி அந்த நெல்லிக்கனியைச் சாப்பிட்டான் என்று சொன்னால், அவன் நீண்டகாலம் உயிர் வாழலாம்; ஆனால் அவன் என்ன நினைத்தான்? அதை அந்த ஔவைப்பிராட்டி கையில் கொடுக்க வேண்டும். இவர்கள் கையிலே கொடுத்தால்தான் இவர்கள் பல கோடி ஆண்டுகளுக்கு வரலாறு காணக் கூடிய அளவுக்கு மிகச் சிறப்பாக வாழ்வார்கள் என்று தனக்குக் கிடைத்த நெல்லிக் கனியை ஒரு தமிழ் மகளுக்குக் கொடுத்தான் என்றால், அதை விடப் பெண்ணிண் பெருமையை வேறு எந்த இலக்கியம் சொல்ல முடியும்?

"இரண்டு பெண்கள் சேர்ந்தால் வேறு எதுவுமே வேண்டாம். இன்னொரு பெண்ணைப் பத்தி பேசுவாங்க. இல்லைன்னா கோள் மூட்டுவாங்க" என்பார்கள் சிலர். ஆமாம், இரண்டு பெண்கள் சேர்ந்து பேசினால் மூன்றாவதாகவும் ஒரு பெண்ணைப் பற்றித்தான் பேசுவோம். ஆனால், இரண்டு ஆண்கள் பேசினால்- மூன்றாவதாக- ஒரு பெண்ணைப்பற்றித்தான் பேசுவார்கள். நாங்கள் அப்படியில்லை, பேசினால் நாங்க எங்களைப் பற்றித்தான் பேசுவோம்.

அது போலவே சிலர் பெண்கள் எப்போதுமே சண்டை போடுவார்கள் என்று வேடிக்கையாகச் சொல்லுவார்கள். எங்களை ஏளனப்படுத்துவார்கள். ஆனால் ஒரு பெண், அந்த ஔவை மூதாட்டி என்ன செய்தார்?

அதியமானுக்கும், தொண்டமான் இளந்திரையன் என்று சொல்லக் கூடிய அரசனுக்கும் இடையில் பெரிய போர் மூளக் கூடிய அபாயம் வந்த நேரத்திலே எல்லாரும் ஒதுங்கி விட்டார்கள். பெரியவர்கள் எல்லாம் அப்படி இப்படி மறைந்து ஒதுங்கிவிட்டார்கள். அந்தப் பெண், தமிழ் மூதாட்டி, ஔவை, நேராகப் போய், பெருமிதத்தோடு போய், போரைக் கைவிடும்படி தொண்டமானிடம் பேசினார்.

பெண்கள் எதையும் பெரும்பாலும் நேரடியாகச் சொல்ல மாட்டார்கள், கிண்டலாகவே சொல்லுவார்கள். பையனைப் பார்த்துத் திட்டுகிற மாதிரி, அப்பாவைத் திட்டுவார்கள். அதுதான் பெண்களுடைய இயல்பு. "ஏண்டா 'திரு திரு' ன்னு உங்க அப்பா மாதிரியே முழிக்கிறே?" என்பார்கள். அவன் புரிந்துகொள்ளுவான். 'அப்பா முழி திருட்டு முழி போல இருக்கு, அம்மா சரியா சொல்றா' அப்படின்னு புரிஞ்சுக்குவான்.

லேசா திட்டற மாதிரி, அதே மாதிரிதான் மாமியாரைத் திட்டணும்னா நேரிடையாகத் திட்டமாட்டாங்க. 'ஏங்க உங்களுக்கு ஏதாவது தெரியுதா, உங்களுக்கும் ஒண்ணும் தெரியாது, உங்கம்மாவுக்கும் ஒண்ணும் தெரியாது'ம்பாங்க. 'டூ இன் ஒன்' மாதிரி அப்பாவையும் சேர்த்து அடிச்சுடுவாங்க- அதாவது ஜாடையாகக் கிண்டல் பண்ணுவது.

அதுபோலவே, ஔவை மூதாட்டி வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசினார். தொண்டமானுடைய அவைக்குப் போனார். போனதும் அவரை அழைச்சுக்கிட்டு, நேரே 'மிலிட்டரி' அணி வகுப்பு மாதிரி ஒவ்வொரு இடமாகக்காட்டிக் கொண்டு வருகிறான் மன்னன். பெருமையோடு ஆயுதங்கள் எல்லாம் வீற்றிருக்கிறது. எல்லாம் பளபளன்னு இருக்கு. வேல் வில் எல்லாம் வரிசையாக அடுக்கி வைச்சிருக்கு. அந்த ஔவையைப் பார்த்து, 'பார்த்தியா? உன்னுடைய அதியமான் நெடுமாறன் எப்படி- நான் எப்படி பார்த்தாயா? என்னுடைய படைக்கலன்களைப் பார்த்தியா? எவ்வளவு அருமையா தயார் பண்ணி பளபளன்னு வெச்சிருக்கேன் பார்த்தியா?' என்று பெருமையோடு கேட்டான்.

அந்த அம்மையார் அவை எல்லாவற்றையும் பார்த்துவிட்டுச் சொன்னாங்க, 'உண்மைப்பா, எல்லாம் பளபளன்னு அப்படியே

> **பெண்களுக்கு அழகு என்பதை ஆடையிலும் ஆபரணங்களிலும் காண முடியாது. பணியாற்றுவதில் தான் உண்மையான அழகு பரிணமிக்கிறது.**
>
> **அண்ணல் காந்தியடிகள்**

இருக்கே! நல்ல நறு நெய் பூசி பிரமாதமாக வெச்சிருக்கியே! பார்க்கிறதுக்கு பளபளன்னு சிறப்பாக இருக்கு. ஆனால் என்னுடைய அரசன் அதியமான் நெடுமான் அஞ்சியினுடைய ஆயுதங்கள் எல்லாம் முனை உடைந்து, வேலெல்லாம் பழுதாகி உடைஞ்சு கிடக்கும். வில் எல்லாம் அப்படியே வளைஞ்சு ஒடிஞ்சு கிடக்கும், எல்லாம் போய் எங்கே தெரியுமா கிடக்குது? செம்மை பண்ணக் கூடிய அந்தக் கொல்லன் உலை கடையிலே போய்க் கிடக்கிறது. ஏன் தெரியுமாப்பா? அவன் அடிக்கடி போர் செஞ்சிக்கிட்டே இருப்பான். அதனாலே எப்போதும் ஆயுதங்கள் பயன்படும். உன் ஆயுதங்களை எப்போதும் அழகு பார்த்துக்கிட்டிருக்கிற 'ஷோ கேஸ்'லே வைச்சுக் கிட்டிருக்கறே! அதனாலேதான் இப்படி பளீர்னு இருக்கிறது" என்று சொன்னாள்.

இப்படிச் சொன்ன உடனேயே 'இந்தக் கிழவியை நாம என்னமோ நினைச்சோமே, இந்த அம்மா தபால்னு இப்படி ஒரு குண்டைத் தூக்கி போட்டிருச்சேன்னு' வெட்கப்பட்டு, ஆகா எப்போதும் போர் புரியும் ஆற்றலுடைய மிகப் பெரிய வீரனா அதியமான் நெடுமான் அஞ்சி! என்று அச்சப்பட்டுக் கொண்டு போரையே அவன் நிறுத்திவிட்டான் என்றால், ஒரு போரை நிறுத்தக் கூடிய மிகப் பெரிய பெருமை யாருகிட்டே இருக்கு? அதைத்தான் சொன்னாங்க, 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்று!

ரொம்ப அருமையான சிறப்

பான செயல்களைச் செய்வது பெண்களின் உந்து சக்தி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்? இருந் தாலும் வீட்டிலே குடும்பத் திலிருக்கும் போது, இல்லறத்தில் இருக்கும்போது குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

'வினையே ஆடவருக்கு உயிரே' என்பார்கள். வேலை விஷயமாகக் கணவன் வெளியே போய் விடுவார். ஆனால் மனைவியினுடைய மனதிற்கு ஆடவர் உயிர். வீட்டிலே இருக்கக் கூடிய பெண்ணுக்கு யார் உயிர்? ஆடவர் உயிர். அந்த உயிரை வாங்கிக்கொண்டு ரொம்ப அருமையாகக் கண்ணுக் குள்ளே கணவனை வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, 'தற் காத்துக் கொண்டார் பேணி, தகை சார்ந்த சொற்காத்து' இவ்வளவு வேலைகளைச் சோர்வின்றிச் செய்வார்கள்.

எவ்வளவோ எண்ணற்ற அரும்பணிகள், தன்னையும் காப்பாற்றிக்கணும்; கணவனை யும் காப்பாற்றிக்கணும் சமு தாயத்திலே நல்ல பெயரையும் வாங்கிக் கொண்டு, இவ்வளவும் செய்துகொண்டு ஒரு பெண் சோர்வில்லாமல் இருக்கிறாள் என்றால், அந்தப் பெண்ணைப் பார்த்து அழகாகச் சொன்னார். பாவேந்தர் பாரதிதாசன்; 'குடும்ப விளக்கு' என்று சொன்னார். குடும்ப விளக்குன்னா பெண் களுக்குத்தான் சிறப்பு. டியூப் லைட்டு மாதிரி மின்னிட்டுப் போறதில்லே.

அதற்குத்தான் அழகாகப் பெண்ணைச் சொல்கிறபோது 'வந்தாள் மகாலட்சுமி', என் பார்கள். 'வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பெண் வேணும்' என் பார்கள். 'அப்படியானால், அது

வரையில் வீடென்ன இருட்டாவா இருக்கு- போய் சுவிச் போடற துக்கு ஒரு பெண்ணா?' என்று சிலர் கேலி பேசுவர். இல்லை வீட்டுக்கு விளக்கேற்றுவதற்கு ஒரு பெண், என்பது ஒளியைத் தரக்கூடியவள் ஒரு பெண். அந்தப் பெண் வருகிறாள், மகாலட்சுமி போன்ற தோற்றத் தோடு வருகிறாள் என்று அழகாக அந்தப் பெண்ணுடைய பெருமையைச் சொல்லுவார்கள்.

அந்தப் பெண் எவ்வளவு அருமையாக, விடியும் முன் எழுந்து, வீணை போல் பாடி, மாடு கறந்து அண்டா குண்டான் அழகாக விளக்கி, வட்ட நிலவை வரவழைத்தது போல் இட்டிலி சுட்டு, தொட்டுக்கொள்ள துவையல் அரைத்து, சுவை நீர் வடித்து, பள்ளி செல்லும் பிள்ளைகளுக்குப் பாங்கோடு பறிமாறி, பள்ளிக்கனுப்பி, கடைக்குச் செல்லும் கணவனுக்குக் கனிவோடு பரிமாறி கடைக்கு அனுப்பிவிட்டு கொண்ட வனுக்கு எதை பிடிக்கும், குழந் தைகள் எது விரும்பும், கண் தூங்கும் மாமன் மாமிக்கு எது விருப்பம் என்றெல்லாம் மிக அருமையாக அந்த உணவை ஆக்கிப் படைத்து, களைப்போடு வரக்கூடிய கணவனுக்கு கனிவோடு பரிமாறி கடைக்கு அனுப்பிவிட்டு, பள்ளியிலிருந்து வரக்கூடிய பிள்ளைகளுக்குக் கனிவோடு கதைகள் சொல்லி, சத்தான உணவுகளை ஊட்டி, நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை ஓயாத தீபமாக அந்த வீட்டிலே சென்று ஆடக் கூடிய பெண்தான், அவள்தான் குடும்ப விளக்கு என்ற அழகாகச் சொல்லிவைத்தார் புரட்சிக் கவிஞர்.

மேலும் சொல்வார் வாழ்க் கையைச் சரியாக நடத்த உதவுவது பெரும்பாலும் மனைவியாவாள். அவ்ளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான், அவளாலே மணவாளன் சித்தி பெற்றான். 'குவியும் எழில் பெண்ணுக்கு ஊறு செயின் குள்ளர்களே, கேட்டீரோ சாவின் கேட்டை, கவலையுறும் ஆடவர்கள் நாளும் செய்யும் கணக்கற்ற ஊழல் களையெல்லாம் அந்த நகையற்ற பெண்கள் அன்றோ விளக்கு கின்றார் என்று அருமையாகப் பெண்களைப் பற்றி ஒரு இலக் கியம் படைக்கிறார்கள் என்றால் அந்தப் பெருமை இந்தப் பெண்ணுக்குத்தானே இருக் கிறது?

அதனால்தான் இவள் தனக் குள்ளே எல்லாவிதச் சிறப்பு களையும் அடக்கிக் கொண்டு, எல்லாவிதப் பெருமைகளையும் அடக்கிக் கொண்டு, அகழ் வாரைத் தாங்கும் பூமிபோலப் பொறுமையோடு இருக்கிறாள். யாராவது தீயது செய்ய வரு கிறார்களா, அவர்களை எதிர்த்து நிற்கக் கூடிய, மிகப் பெரிய பூபாளம் பாடக் கூடியவளாக இருப்பவள், பூ ஒன்று புயலானது போல, இருபதாம் நூற்றாண் டிலே புறப்பட்டு வரக்கூடிய பெண் பொற்கொடியாக மாறி அவள் அந்தத் தீயதை அழிக் கிறாள்.

கண்ணகியைப் பார்க் கிறோம். மணிமேகலையைப் பார்க்கிறோம். ஒரு சாதாரண பெண், அவள் காலிலே கிடந்த

அமைதிக்கு உழைப்பதே
உலகிற்கு நாம்
செய்யும்
கடமை ஆகும்.
—டாக்டர் ராதாகிருஷ்ணன்

சிலம்பு, அது அதிகாரம் செய்த காப்பியம்தான் சிலப்பதிகாரம் என்று சொல்லி, இளங் கோவடிகள், பற்றற்ற துறவி, எல்லாவற்றையும் துறந்த முனிவர், யாரையும் வணங்காதவர், அவர் எவ்வளவு பெருமையாகக் கண்ணகியினுடைய காப்பியத் தையே எழுதி—

'இவளோ கொங்கச் செல்வி
குடமனையாட்டி,
செந்தமிழ் பாவை, செய்தவக்
கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்
தோன்றிய
திருமாமணி'- என்றெல்லாம்

சொல்லி, அந்தப் பெண்ணைச் சொல்கிறார் என்றால் எல் லோரும், கண்தோறும் கூப்பி, கை கூப்பித் தொழக்கூடிய பெருமை, பக்குவம் யாருக்கு வந்திருக்கிறது என்றால் இந்தப் பெண்ணுக்குத்தான்.

சேக்கிழார் தன்னுடைய காப்பியமாம் பெரிய புராணத் திலே பெண் என்பவள் மனையறத்தின் வேர், மனைக் குள்ளே இருக்கக் கூடிய வேரைப் போன்றவள், பூமிக்குள்ளே இருக்கக் கூடிய வேரைப் போன்றவள் என்றார்.

அதை அழகாகக் கவியரசு கண்ணதாசன் சொன்னார்,

"ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்தும் என்ன! வேர்என நீயிருந்தாய் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்" என்றார்.

ஆகவே, கணவன் ஒருவன்- ஆடவன் ஒருவன், செம்மாப்போடு தோளிலே துண்டைப் போட்டுக் கொண்டு பெருமையோடு நடுவீதியிலே நடக்க வேண்டும் என்றால், வீட்டுக்குள்ளே இருக்கக்கூடிய ஒரு பெண் நல்லவளாக, சிறந்தவளாக, கற்புடையவளாக, பெருமை உடையவளாக இருந்தால் தான் அவன் இலக்கியம் படைத்து சமுத்ாயத்திலே மிகப் பெரிய புரட்சிகளைத் தர முடியும் என்று அழகாக நம்முடைய இலக்கியம் சொல்வதை நாம் மறந்துவிடக் கூடாது.

குறுந்தொகை இலக்கியமாக இருக்கட்டும், சங்க இலக்கியமாக, எந்த இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும், பெண்ணைச் சொல்லுகிறபோது, மென்மையும் வரும், வீரமும் வரும்.

ஒரு பெண் அழகான பார்வையை உடையவள். அந்தப் பார்வை ஒன்றே போதும் அவளுக்கு. ஆனால் அந்தப் பார்வை என்ன செய்கிறது? நல்லதைச் சாதிக்கப் புறப்படுகிறது. அந்தப் பெண்ணின் கணவன் இவளுடைய வாழ்க்கையில் ஒளி சேர்க்கவேண்டும் என்பதற்காக, பொருள் சேர்க்க வேண்டும் என்பதற்காக வெளியூருக்கப் போய்விட்டான் புறப்பட்டுப்போன பிறகு இந்தப் பெண் அவனுக்காகக் காத்துக் கொண்டே நிற்கிறாள். விரைவில் கணவன் வருவான் என்று எதிர்பார்த்திருக்கிறாள், வருகிறான். வந்தபிறகு, பொருளைக் குவிக்கிறான். குவிந்த பிறகு அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறான்- "எல்லோருக்கும் அள்ளிக் கொடு; நாம் மட்டும் வ்ாழவேண்டுமென நினைக்காதே; எல்லோர்க்கும் கொடு" என்று அந்தப் பெண்ணைப் பார்த்துச் சொல்கிறான். அந்தப் பெண்ணும் வாரி வாரி எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய பொதுநலம் படைத்தவளாக இருந்தாள் என்பதை அழகாக சங்க இலக்கியம் உணர்த்துகின்றது. நாம் அதை மறந்துவிடக் கூடாது.

ஆக- 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற சொல்லில் உள்ள உண்மையை உலகம் உணரவேண்டும்.

வெல்டிங் தொழிலில் ஒரு தமிழ்ப் பெண்மணி

இவர் ஆசியாவிலேயே முதல் பெண்மணி

இந்திய வங்கியின் நாட்காட்டி இந்தப் பெண்மணியின் புகைப்படத்தை வண்ணத்தில் வெளியிட்டு மக்களின் எண்ணங்களைக்கவர்ந்திருக்கிறது. ஸ்வீடன் நாட்டிலிருந்து சில பெண்கள் சென்னைக்கு வந்து இவரை நேரில் சந்தித்துப் பேட்டிக் கண்டு இவரது புகைப்படத்தைப் பல நூறு தபால் அட்டைகளுக்கு மேல் வெளியிட்டு பெருமைப் படுத்தியிருக்கிறார்கள். ரஷ்ய நாடு இவரைப் பற்றி ஒரு வீடியோ படமே எடுத்து வெளியிட்டு இவரது பெருமையை இந்திய எல்லைக்கு அப்பாலும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஆண்கள் மட்டுமே செய்கின்ற தொழிலை ஒரு பெண்மணி அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த, சென்னையைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்மணி செய்து வருகிறார்.

அது என்ன தெரியுமா? கண்களைப் பறிக்கும்

ஒளியைச் சிந்தும் இரும்புகளை இணைக்கும் கடுமையான பணியாகிய வெல்டிங் தொழில். ஒரு காலத்தில் ஆண்களே அந்தப் பணியைக் கண்டு அஞ்சிய நேரத்தில் ஒரு பெண்மணி இந்த வெல்டிங் தொழிலில் இறங்கி கிட்டத்தட்ட தற்போது 60 வயதை எட்டியிருக்கிறார். இவர் தான் சென்னை பெரம்பூரைச் சேர்ந்த திருமதி கே. சுந்தராம்பாள்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பேசி, அடுத்த வீட்டுப் பெண்களையும் வம்புக்கு இழுத்துக் கொண்டு வெட்டிப் பொழுது போக்காமல், சுந்தராம்பாள் தன்னுடைய சொந்தக் காலிலேயே நின்று தன்க்கென ஒரு தொழிலை உருவாக்கிக் கொண்டு தனது கணவனுக்கு பெரிதும் உதவியாக இருந்து வருகிறார். அவர், இன்று சராசரியாக மாதத்திற்கு 50,000 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சம்பாதிக்கின்ற திறமை பெற்றிருக்கின்றார். இவரைப் பற்றித் தெரிந்து கொள்வோமே!

சுந்தராம்பாள் வேலூரைச் சேர்ந்த கணபதி என்பாரின் மகளாவார். இவருடைய குடும்பமே வெல்டிங் தொழிலைச் செய்து வந்தது. தன் தந்தை யாருக்கு,சிறு வயதிலேயே உதவியாக இருந்து அந்தத் தொழிலை படிப்படியாகத் தன்னுடைய சகோதரருடன் கற்று வந்தார். தந்தையின் விருப்பத்திற்கிணங்க வெல்டிங் தொழிலின் நுணுக்கத்தைக் கற்றுக் கொண்டார்.

பின்னர், திருமணமாகி தன் கணவருடன் சென்னையில் தங்கிவிட்டவே, வெல்டிங் தொழிலை விட்டுவிட்டார். சில காலம் பொறுத்துத் தன் கணவரின் வருமானம் குடும்பத்திற்குப் போதாமையால், தான் கைவிட்ட வெல்டிங் தொழிலைச் செய்ய ஆர்வம் கொண்டு தன் கணவரின் உதவியோடு 1976–ஆம் ஆண்டு பெரம்பூரில் ரூ.5,000 முதலீட்டில் சொந்தமாக ஒரு வெல்டிங் தொழிலகத்தைத் தொடங்கினார். அதில் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு இன்றைய நிலையில் ரூ.4 இலட்சம் அளவிற்கு அந்தத் தொழிலகத்தை வளர்த்துள்ளார்.

இவருடைய ஆர்வத்தையும், தொழில்நுணுக்கத்தையும் கண்ட பெரும் தொழிற் சாலைகள் இவருக்கு நிறைய வாய்ப்புகளைக் கொடுத்து ஆதரித்து வருகின்றன. இப்படி, ஒரு ஆண் செய்கின்ற தொழிலை முதன் முதலாக ஒரு பெண்ணே முன்னின்று நடத்துவதால், தன்னுடைய இல்லறக் கடமையைக் கொஞ்சம் கூட விட்டுவிடாமல் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். சான்றாக, சமையலிலும், சரி, வீட்டுப் பராமரிப்பிலும் சரி, அவரை மிஞ்ச எவரும் இல்லை என்று குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பித்து வருகிறார் சுந்தராம்பாள்.

இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்தில் விண்ணிலிருந்து மண்ணுலகம் வரை விரிந்து பரவி சாதனைகள் படைக்க துடித்துக் கொண்டிருக்கும் ஒரு முன் மாதிரியான பெண்மணியாக சுந்தராம்பாள் திகழ்ந்து வருவது அவருக்கு மட்டுமல்ல பெண்ணினத்திற்கே பெருமை சேர்ப்பதாகும். இவர் தான் கற்ற இந்த வெல்டிங் தொழிலைப் பல பெண்மணிகளும் செய்வதற்கு முன் வர வேண்டும் என்கிற தன் விருப்பத்தையும் தெரிவித்துள்ளார். இவருடைய விருப்பம் நிறைவேற நாம் அனைவரும் வாழ்த்துவோமாக.

—நன்றி : ஈவ்ஸ் டச்

முதல் கிரிக்கெட் பெண்மணி

உலகம் பூராவும் பரப்பரப்பாகப் பேசப்படும் விளையாட்டுகளில் கிரிக்கெட் முக்கியமானது. ஆண்களே அதிகமாக விளையாடும் இந்த விளையாட்டில் கிட்டதட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னதாக பெண்களும் பங்கு பெற்றிருக்கிறார்கள். இந்தியாவில் 1974–ஆம் ஆண்டு நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி பெண்கள் பங்குகொண்ட போட்டி என்று சொல்லப்படுகிறது. அதில், சென்னையைச் சேர்ந்த சாந்தா ரங்கசாமி என்பவர் பெண்கள் கிரிக்கெட்டில் இந்தியாவிலேயே பங்குபெற்ற முதல் பெண்மணியாவார். அதே போல், தமிழ்நாட்டு அணியில் முதன்முதலாக கிரிக்கெட் விளையாட்டில் பங்குபெற்ற பெருமை திருமதி சுதா ஷா என்பவருக்கு உண்டு. இவர் முதன்முதலில் 100 ரன்கள் எடுத்த பெண்மணி என்ற பெருமையும் கொண்டவர்.

புதியதோர் உலகம் காணத் துடித்த புரட்சிப் பாவேந்தர்

பன்மொழிப் புலவர் டாக்டர் கா. அப்பாத்துரை

தமிழகத்தில் எந்தத் தலைவர்களையும்விடக் கவிஞர் பாரதிதாசனுடனேயே மிகுதியாகப் பழகும்படி தமிழன்னை எனக்கு அருள் பாலித்திருக்கிறாள். இது பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஏனெனில், என் உளநோக்கில் அவர், கவிதையுலகில் ஒரு தலைசிறந்த கவியரசர் மட்டுமல்லர். காந்தியடிகள் போன்ற கனவியற் பெரியார். புலமையரசு மறைமலையடிகள், அறிவுலக அரசன் அண்ணா ஆகியோரைப் போன்ற தமிழாட்சித் திறம், அறிவாட்சித் திறம் உடையவர். பிளேட்டோ காலந்தொட்டு வழி வந்த புத்துலகச் சிற்பிகள் சமதருமச் சிந்தனைச் செல்வர்களிடையே அம்மரபின் முழுமைத் திறம் சான்ற ஒரு சமதருமப் புத்துலகப் படைப்பாளர் என்ற பன்முகச் சிறப்புடையவராய் விளங்கி வருகிறார்.

பாவேந்தருக்கு முன்னும் பின்னும் ஒப்பற்ற ஒளிமரபுப் பரம்பரைகள் உண்டு. பாரத விடுதலைப் போராட்டத்தில் மட்டுமின்றி, உலக நாடுகள் விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபட்ட போர் வீரர்களிடையே ஒரு போர் வீரரின் உணர்ச்சியுடன் பாடிய ஒரே விடுதலைக் கவிஞர் பாரதியார். அவருடன் ஒப்பிடத்தக்க மற்றொருவர் ஆங்கிலக் கவிஞர் பைரன் மட்டுமேயாவார். பாவேந்தரின் முன் மரபு இது. பன்னூறு கவிஞர்களைத் தோற்றுவித்து இன்றைய தமிழகத்தை வளப்படுத்தும் பாவேந்தர் கவிதைப் பரம்பரையே அவ்வேந்தரின் பின் மரபொளி ஆகும். உலகின் தலை சிறந்த சமதர்மக் கவிஞராகவும் அவர் விளங்குகிறார். இதில் அவருடன் ஒப்பிடக்கூடிய ஒரே கவிஞர் அமெரிக்காவின் விட்டியரே ஆவர்.

பாரதி புகழ் பாடுவதாகப் பாசாங்கு பண்ணி, பாரதிதாசன் புகழை மறப்பவன், மறக்கடிப்பவன் உண்மையான பாரதி பக்தனாகமாட்டான். அதுபோல பாவேந்தர் புகழ்பாடி அதனைப் பாரதி புகழுடன் இணைக்கத் தயங்குபவன் உண்மைப் பாவேந்தர் பக்தனாகமாட்டான். ஏனெனில், பாரதியார் உலகின் ஒப்புயர்வற்ற விடுதலைக் கவிஞன் என்றால், பாவேந்தர் அதுபோல உலகின் ஒப்புயர்வற்ற சமதருமக் கவிஞர் ஆவார். தமிழ்ப் பற்றிலோ, தமிழ் மரபினைப் போற்றுவதிலோ அவ்விரண்டில் புத்துருவாகிய புதுமையார்வத்திலோ, புரட்சியார்வத்திலோ, இருவருமே ஒருவருடன் ஒருவர் போட்டியிடத்தக்கவர் ஆவர். ஒருவர் ஒரு பண்பில் விஞ்சியவர் என்று தோன்றினால், மற்றொருவர் மற்றொன்றில் விஞ்சியிருப்பாராம் என்று காண்டல் எளிது. அதுமட்டுமன்று, பாவேந்தர் விஞ்சிய பண்புகளிலே பாரதியார் அவர் முன்னோடியாவார் என்பதையோ, பாரதியார் விஞ்சி நின்ற பண்பிலே, பாவேந்தர் அதே பண்பின் புதுமரபு அல்லது புதுவிளக்கமாக வளர்ச்சி நோக்குவதையும் எவரும் காணலாம்.

பாரதியார் அரசியல் விடுதலை பாடுவதில் மேம்பட்ட

வரானால், பாவேந்தர் சமுதாய, சமய விடுதலையுணர்வில் விஞ்சி நின்று, சமதரும மரபிலும் தமிழ் மரபிலும், அவரைத் தாண்டி நெடுந்தொலை ஒளி வீசியுள்ளார்.

பாரதியார் பெருமை அவர் காலத்திலோ, அவர் பாடிய பாரத விடுதலைப் போராட்ட நாளிலோ, அவர் பாடிய உருசியப் பொதுவுடைமைப் புரட்சியின் நாளிலோ தமிழக மக்களிடையே சரிவர உணரப் படவில்லை. பாரதிதாசன் வாழ்நாளிலும், பாரதிதாசன் பரம்பரை வளரும் இந்நாளிலும் தான் பாரதியாரின் பெருமை உணரப்படத் தொடங்கி யிருக்கிறது. பாவேந்தர் இன்று வாழ்ந்திருந்தால், இன்றிருப்பதை விடப் பாரதியார் புகழை அவர் இந்தியா அளாவ, உலகளாவப் பரப்பியிருப்பார் என்பதில் ஐயமில்லை. இதுபோலவே பாரதியார் விடுதலைப் போராட்டக் கால முழுவதும் வாழ்ந்திருந் தால், அவர் பாவேந்தர் பாடற்புகழை இந்தியா அளாவ, உலகளாவக் கட்டாயம் பரப்பி யிருப்பார் எனலாம்.

அவர் சிறந்த இலக்கணப் புலவர். வருங்காலத் தமிழகம் என்ற ஏடு அச்சாகும் சமயம் அவர் என்னுடன் என் வீட்டில் தங்கியிருந்தார். இக்காலத்தார் மெல்ல மறைந்து வரும் தமிழ் மரபுகளைக் கண்டிப்பவர் அவர். எனவே சந்திப் பிழைகள் இல்லாமல், அதனைத் திருத்தும் பொறுப்பை அவர் வலிந்து மேற்கொண்டார்.

'குயில்' வெளியீடு கவிதைக் காக மட்டும் தொடங்கப்பட

சமதர்மம் ருசிகரமான வார்த்தை. நாட்டிலே இன்று பலராலும் பேசப்பட்டுவரும் இலட்சியம். பலராலும் என்றால், உண்மையிலேயே அந்த உயர்ந்த இலட்சியத் தின்படி சமூகம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

வில்லை. திருக்குறள் ஆராய்ச்சி மெய்யுரைக்காகவும் தொடங்கப் பட்டிருந்தது. என்னையும் கவிஞர் சுரதா போன்றோரை யும் உடன் கொண்டே அவ்வுரை விரிக்க அவர் எண்ணியிருந்தார். ஆகவே வள்ளுவர் உள்ளத்தை உள்ளவாறு அறிவதற்குரிய ஆராய்ச்சி முறைகளைப் பற்றி அவரிடம் உசாவும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. அவ் வகையில் பாவேந்தரின் திட்டங் களும் அடிப்படைக் கருத்துக்



களும் எனக்கு வியப்புத் தந்தன. புத்தொளியும் தந்தன. ஆராய்ச்சிக் கண்ணோட்டத் துடனும், பகுத்தறிவுக் கண்ணோட் டத்துடனும், வரலாற்று நோக்கு டனும் செய்யப் பெற்ற தமிழரின் சைவ சித்தாந்தம், தமிழ் வைணவ மரபுகள் தமிழிலக்கிய, சங்க இலக்கிய மரபுகள், தமிழ்ச் சொல்லாய்வுகள் ஆகியவற்றின் மூலமே திருக்குறளின் பின்னணி யிலுள்ள வள்ளுவ உள்ளம் காண முடியும் என்றார்.

வெளித் தோற்றத்தை நம்பி பலர் பாவேந்தரைச் சமயத்தில் எதிரி என்று நினைப்பதுண்டு. போலிச் சமயம், அதாவது சமயப் போர்வைக்குள்ளிருந்து கொண்டு செய்யப்படும் மனித இனச் சுரண்டல் முறைகளுக்கு அவர் விடாப்பிடியாக எதிரிதான். ஆனால், உண்மைச் சமயத்தை எந்தப் பக்தரையும் விட அவர் நன்கறிந்து அறிவிப்பவர் என்பதை அவரது தொடக்க காலச் சுப்பிரமணியர் துதியமுது மட்டுமின்றி அவரது முழுச் சீர்திருத்தக் காலக் கவிதையாகிய உலக அன்னையும் காட்டும். பாரதியாரோ, பட்டினத்தார் போன்ற பக்திக் கவிஞரோ கூட உலக அன்னை காட்டும் கற்பனை உயர்ச்சியைச் சென்று எளிதில் எட்டிவிடமுடியாது.

பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவருமே உலகின் ஒப்பற்ற புரட்சிக் கவிஞர்கள்தாம். ஆனால், இருவர் புரட்சிகளுமே இடைக்காலத் தமிழரின் போலி மரபுகளைத்தான் எதிர்த்தன. சங்க காலத் தமிழ் மரபையும் அதற்கு முற்பட்ட பகுத்தறிவுக் கால மரபையும் அவை

புதுப்பித்து வளர்த்தன.

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்!
யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

—என்ற பண்டை ஒருலகச் சமதர்மக் குறிக்கோளைப் புதுப் பித்து, அவ்வழி புதிய தமிழகம், புதிய இந்தியா, புதிய உலகம் படைக்கப் பாடுபட்ட முழுநிறை புரட்சிக் கவிஞர் பாவேந்தரே யாவார்.

இளங்கோ, வள்ளுவனைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத் தியவர் பாரதியார்.

ஆம். 18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சிலப்பதிகார நூலைப் பற்றிப் பலரும் அறிந்திருக்கவில்லை. ஆனால், பாரதியார் இளங்கோவின் சிறப்பினை எப்படியோ உணர்ந் திருந்தார். திருவள்ளுவரைச் சமயவாதிகள் ஒரு நாயனா ராக்கிக் குடத்தினுள் இட்ட விளக்காக்கி வைத்திருந்தனர். வள்ளுவரின் பெருமையையும் பாரதி அறிந்திருந்தார். அறிவார்ந்த அந்த உண்மையின் விளைவே, பாரதி.

'யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்
போல
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை'

என்று அவ்விருவரையும் ஏற்றிப் புகழ்ந்த கவிதைத் தோற்றம்.

பாரதியார் அடியெடுத்துத் திசைகாட்ட, அவ்வழி நின்ற முழுமைத் தமிழ்க் கவியரசராகப் பாவேந்தர் விளங்குகிறார்.

பாவேந்தரைப் பின்பற்றினால்

எந்தச் சூழ்நிலையிலும் அவசர அவசரமாகக் கவிதை, எழுதி, அதனை அப்படியே அனுப்பிவிடும் பலர் இன்று இருக்கிறார்கள். அவை பெரும் பாலும் அரை வேக்காடுகளாகவே இருக்கும். பாவேந்தரைப் பொறுத்தவரை அப்படிக் கவிதைகள் எழுதுவதில்லை. கவிதையைச் சொல்லி, 'எழுது' என்பார். சொல்லச் சொல்ல எழுதியபின், படிக்கச் சொல்லிக் கேட்பார். வார்த்தைகளை, வரிகளை மாற்றி எழுதச் சொல்லி, பிறகு படிக்கச் சொல்வார். அதைக் கேட்டு, அவர் மனதுக்கு நிறைவாகத் தெரிந்தாலே நகலெடுத்து அனுப்பச் சொல்வார்.

இன்று, கவிதை படைப்போர் இந்த முறையினைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்துப் பின்பற்றினால், அது அவர்களுக்கும் நல்லது நமது தமிழுக்கும்; இலக் கியத்திற்கும் கூட நல்லது.

—கவிஞர் சாம்பழனியப்பன்

அடுத்த இதழ்...

'தமிழரசு'

16-5-1996 தமிழரசு இதழ், நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற அனைத்துத் தேர்தல் முடிவுகளையும் தாங்கி, கூடுதலான பக்கங்களுடன் எழிலுடன் வெளிவருகிறது.

முதல் அட்டை: மே நாள் விளக்கமாக, சென்னைக் கடற் கரையில் இலங்கிக் கொண்டி ருக்கும் உழைப்பாளர் சிலை.

இரண்டாம் அட்டை: கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறை

நான்காம் அட்டை: கொடைக்கானல் ஏரியின் கோலமிகு காட்சி

படங்கள் உதவி: சுற்றுலாத்துறை

கோடைவிழா

மலைகளின் இராணி என்று எல்லோராலும் அழைக்கப்படும் ஊட்டியில், 3.5.96 முதல் 27.5.96 முடியவும், கொடைக்கானல், ஏர்க்காடு, கல்ராயன் குன்றுகள், ஏலகிரி, ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் 18.5.96 முதல் 26.5.96 முடிய கோடை விழா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ள தாக, தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது.

புரட்சி, சமதர்மம், புதுவை முரசு, பகுத்தறிவு, புதுவுலகம், சுதர்மா, தொழிலாளன், 'லேபர் கிஸ்ஸான் கெசட் ஆகிய பத்திரிகைகளில் எழுதினார். உலக முழுமையுள்ள தமிழர்கள் கேள்வி கேட்க அவற்றிற்கெல்லாம் சிங்காரவேலர் பதிலளித்தார். பெரியார் "நான் மதித்த ஒரே தலைவர் சிங்காரவேலர்'' என்றார். திரு.வி.க. சிங்காரவேலரைத் தனது ஆசிரியரென்றார்.

பெரியாருக்கு வழிகாட்டி

பெரியார் ரஷியா சென்று வர உதவியவர் சிங்கார வேலர் ஆவார் பெரியார் இலண்டனில் பெர்ரி மந்திரி சபைக்கு எதிராகப் படித்த கட்டுரை சிங்காரவேலரின் ஆலோசனைப்படி அவராலேயே தயாரிக்கப்பட்டதாகும். சுயமரியாதைச் சமதர்மக் கட்சி தோன்ற ஆலோசனை தந்தார். 400-க்கும் மேற்பட்ட சுயமரியாதை சமதர்ம மன்றங்கள் உருவாயின. சமூக சீர்திருத்தம் மட்டுமே தனது பணி. பொதுவுடைமை தமது பணியல்ல என்றவுடன் பெரியாரிடமிருந்து சிங்காரவேலர் விலகினார். இருவரின் பாதைகளும் வேறாயின.

சென்னையில் மண்ணெண்ணெய்க் கிளர்ச்சிக்குத் துணை நின்றார். சாக்கோவான்சிட்டி என்ற அமெரிக்கத் தொழிற்சங்கத் தலைவர்கள் அமெரிக்காவில் கொல்லப்பட்டபோது சென்னையில் அரசை எதிர்த்துக் கண்டனக் கூட்டம் நடத்தினார். அஞ்சாநெஞ்சன் அழகிரி மதித்த பெருந்தலைவராக விளங்கினார். விருதுநகர் மாநாடு

☺ கங்கை நீர் சிறந்தது; அதினினும் சிறந்தது அபிஷேக நீர்; அதினினும் உயர்ந்தது உழைப்பாளிகளின் முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்

–திருமுருக கிருபானந்த வாரியார்

சேலம் மாநாடு, சென்னை மாநாடு, மன்னார்குடி மாநாடு எனப் பல சுயமரியாதைச் சமதர்ம மாநாடுகளில் தலைமை தாங்கினார்.

அண்ணா புகழுரை

சென்னையில் நாத்திக மாநாட்டை முதன் முதல் நடத்தி முதல் நாத்திகராகத் திகழ்ந்தார். இரஷியா உட்பட பல மொழிகளை அறிந்தவர். சிங்காரவேலரின் நூலகம் 20,000 புத்தகங்களைக் கொண்டிருந்தது. அனைத்தையும் பொதுவுடைமைக் கட்சிக்கு உயிலெழுதி வழங்கிவிட்டார் சிங்காரவேலர்.

இரயில்வே தொழிற்சங்க முன்னோடி

40,000 பேர்களைத் திரட்டி முகுந்தலால் சர்க்காருடன் வட இந்திய இரயில்வே தொழிலாளர்களுக்கு வெற்றியீட்டித் தந்தார். தென்னிந்திய இரயில்வே போராட்டத்தில் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார்.

காட்டே, அமீர் ஹைதர்கான், கே.டி.கே. தங்கமணி, ஏ.எஸ்.கே. ஐயங்கார், கே. முருகேசன் உட்படப் பலருக்கும் வழிகாட்டியாக இருந்தார். தன் வீட்டவர்கள் கலப்பு மணம் செய்து கொள்ளவும், வெளி நாட்டவரை மணக்கவும் காரணமாக இருந்தார்.

அந்நாளில் குழந்தைகளுக்கும் பொருட்களுக்கும் பொதுவுடைமை உணர்வுடைய பெயர்களை வைத்தார். நகரசபை உறுப்பினராக இருந்த காலத்திலேயே யுத்த ஒழிப்பிற்கும், உலக சமாதானத்திற்கும் குரல் கொடுத்தார். ஏழைக் குழந்தைகளுக்கு நகர சபையில் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்தார்.

பொதுவுடைமைக் கட்சித் தடை நீக்கப் போராடினார்! வெற்றி பெற்றார்.

1939-இல் பொதுவுடைமைக் கட்சி அரசால் தடுக்கப்பட்டது; அப்படித் தடுக்கப்படக் கூடாது எனக் கூறி அத்தடையை நீக்கிடப் போராடி வெற்றி பெற்றார். அடிமை இந்தியாவில் பிறந்த சிங்காரவேலர் 1946-இல் விடுதலை அடையாத இந்தியாவில் மறைந்தார். 'யுத்தம் இந்த உலகைவிட்டு ஒழியட்டும், எங்கும்' அமைதி தழுவட்டும்' என்ற உயர்ந்த எண்ணத்துடன் அவர் இறுதி மூச்சு அடங்கியது.

உழைக்கும் மக்களுக்காகத் தொழிற்சங்கங்கள் தோன்ற வேண்டுமென்ற தலைவர்களில் மூத்தவராகச் சிங்காரவேலர் திகழ்ந்தார். சிங்காரவேலருக்குப் புரட்சி வழியே பிடித்த வழியாக இருந்தது.

பொருளாதார விடுதலையுடன் சாதி சமய ஒழிப்பிற்கும் பாடுபட்ட பெருந்தலைர் சிங்காரவேலர். கூலி உயர்வுடன் தொழிலாளர்கள் நிறைவடையக் கூடாது; தொழிலில் பங்கு பெற வேண்டும் என்பது சிங்காரவேலரின் தொழிற்சங்க கொள்கையாக இருந்தது.

அறப்புரட்சிக்கு வித்திடும் தொழிலாளர் இயக்கம்

எனது வாழ்க்கை, தொடக்கத்தில் சமயப் பணிகளில் ஈடுபட்டது. அதனால் பல சமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சிப் பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை சமரசம் ஏன் உலகில் பரவவில்லை என்று யான் எண்ணுவேன். சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவது இல்லை. சிங்காரவேலர் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கம் செய்தது. அவ்விளக்கம் பொதுமையை உலகில் பரப்பி நிலை பொறுத்த வல்லது. காரல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது.

காந்தியடிகளின் அகிம்சா தர்மத்தில் என் மனம் சென்றது. அகிம்சை நல்லதே. அது வெறும் தத்துவ உலகிலும், கவி உலகிலும் நிலவிக் கொண்டிருக்கும்; வாழ்க்கை உலகில் ஒன்றி நிலவுமா? என்று ஐயுறுவேன். சிலவேளை ஐயம் முளைத்தெழுந்து என் நெஞ்சைத் துளைக்கும், துளைப்பு, சிற்சில சமயம் மனநோயையும் உண்டு பண்ணும். அந் நோயைப் போக்க, மார்க்ஸ் மருத்துவராய் என் மானத உலகில் தோன்றுவார். மார்க்ஸ் அருளியுள்ள கொள்கை உலகில் பரவினால் வாழ்க்கை அகிம்சையில் ஒன்றாவதாகும் என்னும் நுட்பம் எனக்குச் செவ்வனே விளங்கியது.

ஒரே வயிற்றில் பிறந்தவர் பொருளைக் குறித்துப் போரிடுவதும், மன்றம் ஏறுவதும் உன் உள்ளத்தைப் புண்படுத்தும். உடன் பிறந்தவரிடத்தில் போர் மூட்டாத அவரை மன்றம் ஏற்றாத ஆட்சி முறை அமையுமா என்று ஏக்குறுவேன். மார்க்ஸ்

இந்தியாவிலேயே முதன் முதலில் தொழிற்சங்கம் உருவாகியது சென்னையில்தான். இதன் தோற்றத்திற்குக் காரணமானவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆவார். தொழிலாளர் இயக்கம் குறித்து அவரது விளக்கவுரை இங்கே இடம் பெறுகிறது.

நினைவு அவ்வேகத்தைப் போக்கும். அமைதி நினைவு தோன்றுபோதெல்லாம் மார்க்ஸ் நினைவும் உடன் தோன்றுவது வழக்கமாகியது. மார்க்ஸ் கொள்கைக்கு ஆக்கம் தேடும் அமைப்பு தொழிலாளர் இயக்கம். இவ்வியக்கத்தில் இறங்கி தொண்டுபுரிய கீர் 'ஹார்டியின் காட்சியும், வெங்கடேச குணாமிர்த வருசினி சபையின்' அழைப்பும் துணைநிற்கின்றன. வாழ்க்கையில் என்னென்னவோ மாறுதலும், வளர்ச்சியும் நிகழ்கின்றன. இவ்விசித்திரத்தை யான் என்ன என்று விளம்புவேன்?

மார்க்சியம் பொருட் பொதுமையை அறிவுறுத்தும் நாத்திகமன்றோ என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்சியம் என்று சிலர் நாத்திகப் பிரச்சாரஞ் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனதுக்கு மார்க்சியம நாததிகமாகத் தோன்றவில்லை. எப்படி?

மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அகிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவிலை? சில தடைகள் மறிக்கின்றன அவை யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி பழக்கவொழுக்கங்கள் முதலியன. இவற்றைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

—டாக்டர் முத்து குணசேகரன்—

டாக்டர் முத்து குணசேகரன் சென்னைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வி நிறுவனத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். சுதந்திரப் போராட்டத்தில் அரும்பங்கு ஏற்றவரும், தொழிற்சங்க இயக்கம் காண்பதில் இந்தியா முழுமைக்கும் முன்னோடியாக இருந்தவருமான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரைப் பற்றி, தெளிவுபட விளக்குகிறார் இக்கட்டுரையில்:

இரஷ்யத் திருநாட்டில் யுகப்புரட்சி நிகழ்த்திய மாவீரன் லெனினுக்கு இணையாகவும், மேலை நாட்டின் மாபெரும் மேதை ட்டிராஸ்கிக்கு ஈடாகவும் பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றிப் புகழப்பட்ட சீர்மிகு தலைவர் ஆவார் சிங்காரவேலர். அதனாற்றான் சிங்காரவேலர், சிந்தனைச் சிற்பி என்றழைக்கப்படுகிறார்.

சிங்காரவேலர் 1860-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 18-ஆம் நாள் சென்னை மயிலாப்பூரிலுள்ள நடுக்குப்பத்தில், மீனவர் குடும்பத்தில் பிறந்தார். சிங்காரவேலரின் குடும்பம் செல்வக் குடும்பம். கி.பி. 1800-ஆம் ஆண்டில் முண்டகக்கண்ணி அம்மன் ஆலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு அறக்கட்டளை நிறுவுமளவுக்குச் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த குடும்பம் சிங்காரவேலரின் குடும்பம் என்பதிலிருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இன்று வெலிங்டன் கல்லூரி இடம் பெற்றுள்ள, 22 சவுத் பீச் ரோடு என்பது சிங்காரவேலர் வாழ்ந்த இடம். 1904-இல் திருவல்லிக்கேணி 'கோவாப்பரேட்டிவ் அர்பன் சொசைட்டி' என்னும் கூட்டுறவு நிறுவனம் தோற்றம் பெறக் காரணமானவர்களில் அவரும் ஒருவர்.

சிங்காரவேலரின் திருமணம்

காதல் மணம் கமழும் கலப்பு மணம்.

தன் இளமைக் காலத்தில் கி.பி. 1889-இல் சிங்காரவேலர் காதல் மணம் செய்துகொண்டார். இது ஒருவகையில் கலப்பு மணமாகவும், சடங்குகளற்ற சீர்திருத்த மணமாகவும் இருந்தது. தொடக்கக் காலத்தில் புத்தமதப் பற்றாளராக இருந்து, அயோத்தி தாஸ் பண்டிதர் போன்றவர்களுடன் இயங்கினார்.

1913 முதல் 1916 வரை மகாஜன சபை உறுப்பினராகவும் 'பப்ளிக்ஹெல்த்' கமிட்டியின் செயலாளராகவும் இருந்தார். 'டிரிப்ளிகேன் லிட்ரரி சொசைட்டி' என்னும் பெயரில் திருவல்லிக்கேணியில் இருந்த அறிவார்ந்த அன்பர் கூட்ட உறுப்பினராகவும் இருந்தார். அரசியல் ஈடுபாட்டினால் 1913 முதல் அரசியல் இயக்கங்களில் பங்கு பெற்றார். லட்சுமணராசு, அயோத்திதாஸ் பண்டிதர் இவர்களுடன் இணைந்து சென்னையில் சொற்பொழிவுகள் ஆற்றி மக்களுக்குத் தொண்டாற்றினார். காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய உறுப்பினராகவும், தொண்டர் படைத் தளபதியாகவும் இயங்கினார்.

சிங்காரவேலரின் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தது ஆங்கில அரசு

அன்றைய கிலாபட் இயக்கத்தின் தீவிர உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார். தமிழில் 'தொழிலாளன்', ஆங்கிலத்தில் 'ஹிந்துஸ்தான் லேபர் 'கிஸ்ஸான் கெசட்', 'நான கோவாப்பரேட்டர்' ஆகிய பத்திரிகைகளை நடத்தினார்.

> நவீன உலகின் முதன்மையான ஆச்சரியங்களில் ஒன்று பத்திரிகை.
>
> —ஜெ.ஏ. பிரோடஸ்

> ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள், அவனுடைய பத்து விரல்கள்
>
> —ராபர்ட் கோலியர்

அவை அரசால் பறிமுதல் செய்யப்பட்டன. காங்கிரஸ் தொழிலாளர்களுக்கு உதவாது என்பதை உணர்ந்து, தொழிலாளர்களுக்கு உறுதுணையாக அமைப்புகளைத் தோற்றுவிக்க முயன்றார். 1922-லேயே சோவியத்து ரஷ்யாவுடன் இரகசியத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

தொழிற்சங்க இயக்க முன்னோடி

1923-இல் 'இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான்' கட்சி என்ற பொதுவுடைமைக்கும் முந்திய கட்சியைத் தோற்றுவித்தார். செங்கொடியை ஏற்றி சென்னையில் மே நாள் கொண்டாடினார். தொழிற்சங்க இயக்கம் காண முன்னோடியாக இருந்து, தொழிலாளர்கள் மத்தியில் சிங்காரவேலர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திவருவதைக் கண்டு, அதனைப் பொறுக்க இயலாத அந்நியர் ஆட்சி ஆயுதம் கடத்தி பிரிட்டிஷ் அரசைக் கவிழ்க்க முயன்றார் என்று குற்றம்சாட்டிச் சிங்கார வேலர் மீது 'கான்பூர் சதி வழக்கு' என்ற நூதன வழக்கைத் தொடுத்தது.

துப்பாக்கி மிரட்டலுக்கும் அஞ்சாத துணிவு கொண்ட நெஞ்சத்தார்

'பி அண்ட் சி மில்' போராட்டத்தில் கலந்து கொண்டு ஊர்வலத்தில் தலைமை தாங்கினார். வெள்ளை அதிகாரி சுட்டு விடுவேன் என்று மிரட்டிய போது - 'சுடு' என்று சிங்காரவேலர் நெஞ்சைக் காட்டினார். 1921-இல் சட்டமன்ற மறியல் நடத்தினார்.

1922-களில் தொழிற்சங்கப் பிரச்சினைகளை முன்நிறுத்தி 'சுதர்மா' என்ற ஆங்கில இதழில் தொடர்ந்து எழுதினார். கானாட்டுக் கோமகன் புறக்கணிப்பு, சைமன் புறக்கணிப்பு எனப் பல புறக்கணிப்புகளை மேற்கொண்டார். அந்நியப் பொருள் புறக்கணிப்பு செய்திடும் அறப்போரை ஏற்று அரசுக்கு எதிரான ஒத்துழையாமையை மேற்கொண்டு 1921-இல் தன் வக்கீல் அங்கிக்குப் பொது இடத்தில் தீயிட்டார்.

சில ஆண்டுகள் சில நிகழ்வுகள்

1922-இல் இந்துஸ்தான் பஞ்சாயத்தில் சுப்பிரமணிய சிவாவுடன் தலைவராக இருந்தார். 1922-இல் சிங்கார வேலரின் இல்லம் பிரிட்டிஷ் அரசால் பறிமுதல் செய்யப்பட்டது. 1923-இல் சுயராஜ்யக் கட்சியில் பணியாற்றினார். 1925 காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் கொடியேற்றினார். சென்னை நகரசபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1927-இல் சென்னைக்கு வந்த சக்லத்வாலாவை வரவேற்க அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டார். கான்பூரில் பொதுவுடைமைக் கட்சியைத் தொடங்கிவைத்தார்.

ஆங்கிலேயரிடமிருந்து காந்தி வாங்கி இருக்கும் சுதந்திரம், பாமரர்களை அடிமைப் பிடியிலிருந்து விடுவிக்காது என்று திண்ணமாய் நம்பினார் சிங்காரவேலர். தனது இந்த எண்ணத்தை மக்கள் முன்னே எடுத்து வைக்கவும் அவர் தயங்கவில்லை. சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பரிபூரண சுதந்திரத்திற்கான கொள்கையை முன்வைத்தார்.

நாம் போற்றும் தலைவர்கள் போற்றிய தலைவர் சிங்காரவேலர்

ஆஷ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நீலகண்ட பிரம்மச்சாரி பல ஆண்டுகள் சிங்காரவேலர் வீட்டில்தான் தங்கி இருந்தார். சிங்காரவேலரின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் தங்களை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டனர் குத்தூசி குருசாமி, ப. ஜீவானந்தம் இருவரும் சிங்காரவேலரின் வாரிசுகள் எனலாம். பாரதியார் சிங்காரவேலரின் மடியில் உயிர் நீத்தார். சிங்காரவேலர் வ.உ.சிக்குத் துணையாக இருந்தார். பாரதிதாசன் 'போர்க்குணமிகுந்த செயல் முன்னோடி பொதுவுடைமைக்கே இவர் பின்னாடி' என்று பொதுவுடைமைக்கு இவர் பின்னால் போக வேண்டுமென்றார். குடியரசு,

வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்கவல்லது பொருட் பொதுமை; பொருட் பொதுமை. மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், பிறவும் மன்பதையின் கால் கொள்வ தற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தவை என்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்சியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

உலகம் போராட்டத்துக்கும் இரையாதல் கண்கூடு. மூலம் என்ன? இது குறித்துத் தனித்தனி ஆராய்ச்சி செய்தவர் பலர். அவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். உலகப் போராட்டத் துக்கு மூலமாக நிற்பது முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமை உணர்வென்பது மார்க்ஸ் கண்ட உண்மை. இது நடுநிலையில் நின்று போர் மூலத்தை ஆராயும் ஒவ்வோர் அறிஞர்க்கும் எளிதில் புலனாகும்.

பண்டைநூலில் சாம்ராஜ் யங்கள் பெருகவில்லை. அதனால் முதலாளி தொழிலாளி உணர்வு, வளராமற் கிடந்தது. இந்நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகிட உள்ளன. அப்பெருக்கம் முதலாளி தொழிலாளி வேற்றுமை உணர்வை வளர்ப்பதாயிற்று. அவ்வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத்தைப் புகுத்தியது. போராட்டத்தை ஒழிக்கும் மருந்து காரல் மார்க்சுக்குக் கிடைத்தது. அது, பொதுமை அறத்தை நிலை பெறுத்தவல்ல பொருளாதார சமரசம்.

மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை, உலகில் புற அமைதியை நிலவச் செய்யும்

அன்பென்பது ஏசுவும் புத்தரும் போல் எல்லாரிடத்தும் காட்டும் நேயம். அது அறமாகவும் அற வினைகட்கெல்லாம் காரண மாகவும் கருதப்படும்.

-மொழிஞாயிறு
ஞா. தேவ நேயப்பாவாணர்

மாண்புடையது. அக அமைதியை மகம்மது, கிறித்து அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டதாயிற்று.

புற அமைதியை உலகில் நிலவச் செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்சியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்சியத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத் தள்ளுவதாகும். போராட்டத்தை அழைப்ப தாகும்.

சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கந்தேடவே யான் மார்க்ஸ் பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்சியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடுபடுவதில்லை.

மார்க்சியம் முழுமையதா? குறையுடையதா? எதிலுங் குறையுண்டு. மார்க்சியத்திலும் சிறு குறையுண்டு. என்ன குறை? அதன் கண் சத் என்னும் நுண் பொருள் வெளிப்படையாகக் காணப்படாமை. மார்க்சியத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடைய தாகும்.

மார்க்சியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது. சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். 'சத்' தைக் கொண்ட சமதர்மமேசன்மார்க்க மென்பது. சன்மார்க்கம் எது? மார்க்சியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கையுஞ் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம். இது எனத கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவங்களின்றும் கனிந்த உண்மை.

முதலாளி தொழிலர்ளி வேற்றுமை உணர்வு சன்மார்க் கத்தை வளர விடாது. சன் மார்க்க வளர்ச்சிக்கு, முதலாளி தொழிலாளி வேற்றுமை உணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமை உணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்ல வேண்டுவ தில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

புரட்சி இருவகை. ஒன்று அறவழியில் நிகழ்வது. மற்றொன்று மறவழியில் நிகழ்வது. அது அறப் புரட்சி. இது மறப்புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப்புரட்சி இடம் பெறாத வேளையில், மறப்புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப் புரட்சிக்கு இடம் தருவதே அறிவுடைமை. இல்லையேல் மறப் புரட்சி எழும். எனது மனதுக்கு இயைந்தது அறப்புரட்சியே. அறப் புரட்சி வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்.

இந்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத் தைந்து ஆண்டு அனுபவம் எனக்குண்டு. புரட்சி ஏன் உச்சநிலையை அடையவில்லை? சாதி மத வெறி, சம்பிரதாயக் கட்டு, மூடவழக்கவொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புகளில் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக் கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைந்து நிற்கின்றன என்று எனது அனுபவம் சொல்கிறது. இத் தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம். இது தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வியப்பாகத் தோன்றாது.

(1944-இல் வெளிவந்த திருவி.க. வாழ்க்கைக் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து)

காய்கறிகளும், பழங்களும் புற்றுநோய் பரவாமல் தடுக்கின்றன

அமெரிக்க நாட்டில் உள்ள தேசிய புற்றுநோய்க் கழகம் காய்கறிகளையும் பழங் களையும் சாப்பிடுவதன் மூலம் புற்றுநோய் பரவுவதைத்தடுக்க முடியும் என்ற நல்ல செய்தியை அறிவித்துள்ளது. பழவகை களில் பளிச்சென்ற நிறமுள்ள வைகளும் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு வண்ணப் பழங்களும் கேரட், இனிப்பான உருளைக் கிழங்கு, பூசணிக்காய் போன்றவை புற்றுநோய்க் கிருமிகளை மேலும் பரவாமல் தடுக்கின்ற சக்தி வாய்ந்தவை என்று தெரிவிக்கப் பட்டது. தக்காளியும், காலிப்ள வரும், டர்னிப்பும், முட்டைக் கோசும் புற்றுநோய்க் கிருமிகளை அண்டவிடாமல் தடுக்கக்கூடிய சக்தி வாய்ந்த சத்துக்களைப் பெற்றுள்ளதாகத் தெரிவித் துள்ளார்கள். அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சி அறிஞர்கள் கீரை வகைகளை உண்பதன் மூலம் புற்றுநோயைத் தடுக்க முடியும். குறிப்பாக, கீரைகளில் அதிகப் பசுமை கொண்ட கீரை வகைகளே முதலிடம் வகிக்கின்றன.

பழ வகைகளில் ஆரஞ்சு, எலுமிச்சை, தர்பூசணி மற்றும் அன்னாசிப் பழங்கள் புற்று நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றிருக்கின்றன. எனவே, பழவகைகளையும், காய்கறி களையும் அதிகமாக உணவில் பயன்படுத்தி புற்றுநோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாமே!

மூலிகைகளின் முக்கியத்துவம்

டாக்டர் திருமதி ஜி.வி. சத்யவதி



நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்தே மூலிகைகள் மானுட வாழ்வோடு இணைந்துள்ளன. ஆதிமனிதன், சோதனையாகவோ தவறாகவோ உணவு மூலங்களைக் கண்டறிந்தது போலவே, இயற்கையிலிருந்து மூலிகைகளைக் கண்டறிந்தான். அருகாமையில் இயற்கையாகத் தோன்றிய மூலிகைகளில் இருந்து அவன் இதைக் கண்டறிந்தான். எனவே, மனிதன் பயன்படுத்திய மிகப் பழைமையான மருந்துகள் இந்த மூலிகைகளேயாகும்.

மரபுவழி மருந்துகள்

உலகில் எல்லா முக்கிய மருத்துவ முறைகளும் மருந்திற்கு இந்த மூலிகைகளையே பெரிதும் நம்பியிருக்கின்றன. இன்றும் கூட, கசகசாவில் இருந்து மார்பின், லவங்கத்திலிருந்து டிஜிடாலிஸ் கிளைகோஸைட்ஸ், மற்றும் பல மூலிகைகளில் இருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஆங்கில வைத்திய முறையான அலோபதி மருத்துவ முறையில் இவை பயன்படுகின்றன. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஓமியோபதி இயற்கை வைத்திய முறைகளில் பல மூலிகை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்திய மருத்துவ மறையில் பெருமளவிலான மூலிகைகள் மருத்துவக் குணங்கள் கொண்டதாகக் கூறப்படுவது உண்மையே ஆனாலும், எல்லா நோய்களுக்கும் மூலிகைகளைக் கொண்டே குணம் தர முடியும் என்று இப்போது கூறுவதில்லை. உயிர்க் கொல்லிக்கு இப்போது தடுப்பு மருந்துகளும் 'ஆன்டிபயோடிக்' மருந்துகளும் புரட்சிகரமாகக் குணப்படுத்துவதால், இவை நெடுங்காலததிற்கு நீடிக்கும். அதே சமயத்தில், கண்டபடி 'ஆன்டிபயோடிக்' மருந்துகளைப் பயன்படுத்துவது எதிர் விளைவுகளை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்கியுள்ளது. இதய நோய், ஆஸ்த்துமா, தோல் ஒவ்வாமை, வீக்கம் போன்ற நோய்களுக்கு மூலிகை அடிப்படையிலான மருந்துகள் இன்றும் விரும்பிக் கொடுக்கப்படுகின்றன. என்றாலும், மனித சமுதாயத்திற்கு இன்று நவீன மருந்துகளும், தேவை; மரபுவழி மருந்துகளான இந்திய மூலிகை மருந்துகளும் தேவை.

மூலிகை மருந்துகள்

மூலிகை மருந்துகள் ஊறு விளைவிக்காதவை என்று நம்புவது சரியல்ல. என்றாலும், ஆயுர்வேதம் மற்ற இந்திய மருந்து முறைகளைப் பின்பற்றும் மருத்துவர்கள், தங்களுடைய மருந்துகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கடுமையாக மறுக்கிறார்கள். எதிர்விளைவுகள் பற்றிய சாத்தியக்கூறுகளை எல்லாம் முன்னரே கண்டறிந்து, பல மூலிகைகளின் கலவையாக மருந்துகளைத் தயாரிக்கும்போது மூலப்பொருளின் பாதக விளைவுகளைக் கட்டுப்படுத்தி விடுவதாக அவர்கள் கூறுகிறார்கள். மேலும், ஆயுர்வேதம் போன்றவை உணவுக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றன. 'அனுபான' உபயோகம் பாதக விளைவுகளைக் கட்டுப்படுத்தும் நோய்களை மட்டும குணப்படுத்தாமல், நோய் முதல் நாடி நோயாளியையே குணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை இந்திய மருந்துவ முறைகள்.

புதிய உத்திகள்

நோயாளிகள்- ஏன், மருத்துவர்களேகூட நெடுநாளைய நோய்களைக் குணப்படுத்துவதற்கே மூலிகைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதும் திடீர் நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்துவது இல்லை என்பதும் ஓரளவிற்கு உண்மையே. பெரும்பாலான மூலிகை மருந்துகள் கச்சா வடிவிலேயே பயன்படுத்தப்படுவதால், அவற்றை நெடுநாட்களுக்கு உபயோகிக்க வேண்டும். அவற்றின் மருத்துவக் குணமும் பின்விளைவும் வெளிப்பட அதிக நாட்களாகும். 'ஆன்டிப்யோடிக்', 'ஸ்டெராய்டு' போன்ற அலோபதி மருந்துகள் போல உடனே, விளைவுகளைக் காண முடியாது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை புதிய உத்தி ஒன்றை வகுத்திருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மரபுவழி மருத்துவ முறைகள் பற்றி இது ஆய்வு

மேற்கொண்டது. தொன்றுதொட்டு இருந்துவந்த மருந்து நோக்கு அணுகுமுறைக்குப் பதிலாகப் புதிய நோய் நோக்கு அணுகுமுறை மூலம், இது ஆய்வு செய்ய வலியுறுத்தியது. எல்லா மூலிகை மருந்துகள் பற்றியும் ஆராய்வதற்காக மேம்பட்ட மருந்தியல் ஆராய்ச்சிக்கான மையம் நிறுவப்பட்டது. லக்னோவில் இருக்கும் மத்திய மருந்து ஆய்வுக் கழகத்தில் இது அமைக்கப்பட்டது. தேவையான அடிப்படை ஆராய்ச்சி வசதியை இது வழங்குகிறது.

இரண்டு முக்கியப் பகுதிகளில் இந்த உத்தி ஏற்கெனவே நல்ல பலன்களை வெற்றிகரமாகத் தரத் துவங்கி விட்டது. 'ஷாரசூத்ரா' (Kshaarasootra) ஆயுர்வேத மருத்துவச் சரடு, மூல நோய்க்குச் சரியான மருந்தாக அமைந்துவிட்டது. அறுவைச் சிகிச்சையோடு ஒப்பிடுகையில் சிறந்த மருத்துவக் குணங்களை இது காட்டியுள்ளது.

இந்தச் சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனைகளில் தங்க வேண்டியதில்லை. வீட்டிலிருந்தே செய்துகொள்ளலாம். இந்தப் பரிசோதனை நடந்த பெரும்பாலான அலோபதி மருத்துவமனைகளில், அறுவை சிகிச்சைக்கு மாற்றாக 'ஷாரசூத்ராவைப் பயன்படுத்தலாம் என்பதை இப்போது ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கல்லீரல் பாதுகாப்பிற்கு மூலிகைகளைப் பயன்படுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டிருப்பது மற்றொரு துறையாகும். இந்த மூலக் கூறுகளை குட்கி (Picrorhiza kurroa) பிலாந்தஸ் வகை (Phyllanthus) மூலிகைகள் பெற்றுள்ளன.

வளம் குறைகிறது

மருத்துவ மூலிகைகளாகிய இயற்கை வளங்கள் குறைந்து வருவது மற்றொரு முக்கிய அம்சம். இதற்குப் பரிகார நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாவிட்டால், இந்தியா ஒருநாள் தனது மூலிகை வளத்தை இழந்துவிடக்கூடும். இங்குதான் உயிரி நுட்பவியல் முக்கியப் பங்கு பணி ஆற்றுகிறது. ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறையினர் கவனத்தை ஈர்க்க வேண்டிய மூலிகைகள் பல உண்டு.

வெப்பம் காரணமான நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைகள், இந்திய மருத்துவத் தொழில் உற்பத்திக்குப் பயன்படும் மூலிகைகள், மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மூலிகைகள், ஏற்றுமதி செய்யப்படும் மூலிகைகள், அரிதாகிவிட்ட மூலிகைகள் ஆகிய அனைத்து மூலிகைகளையும் பாதுகாப்பது அவசியம்.

தரக் கட்டுப்பாடு

இந்தியாவில் மருத்துவ மூலிகைகள் மூலமாக மருந்து உற்பத்தி செய்வதில் தரக் கட்டுப்பாடும் ஒரு தரப்படுத்தலும் முக்கியக் குறைபாடாக இருக்கிறது. தரக்கட்டுப்பாடும் ஒரு தரப்படுத்தலும் இல்லாத காரணத்தால், மருந்து உற்பத்தித் தொழிலில் இதைப் பயன்படுத்திக்கொண்டு ஆயுர்வேத மருந்துகள் என்ற பெயரில் தரக் கட்டுப்பாடோ, ஒரு தரப்படுத்தலோ இன்றிச் சந்தை விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்கிறது. தரக் கட்டுப்பாடு ஒரு தரப்படுத்துதலுக்கான விதிமுறைகளை வகுக்க இந்திய மருத்துவ முறைகள் கழகமும், மற்ற ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்புகளும் முயற்சி மேற்கொண்டுள்ளன.

சில 'முக்கிய மூலிகை மருந்துகளின் தரத்தைக் கட்டுப்படுத்தும் அளவை இதனால் நிர்ணயிக்க முடியும். 'ஷாரசூத்ரா' போன்ற மிகச் சிரமமான மருந்துக் கலவையை ஒருதரப்படுத்தி வெற்றிகண்டது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.



ரசாயனக் கருத்து

மருத்துவ மூலிகைகள் வளம்

இந்தியாவில் அதிகம் என்பது தொன்றுதொட்டு இருந்துவரும் மருந்து என்றாலும், இவற்றை மருத்துவ ரீதியில் ஆயுர்வேதம் போன்ற மருத்துவ முறைகள் பயன்படுத்துவது தனித்தன்மைவாய்ந்தது. 'அலோபதி' அணுகுமுறைக்கு இது வேறானது. பல ஆயுர்வேத மருந்து மூலிகைகளில், இன்றைய நிலையில், 'ரசாயனம்' என்பது காலத்திற்கு ஏற்றதும் முதுமைத் தடுப்பு, மன இறுக்க நீக்கம், மற்றும் மன நரம்பியல் நோய்களில் இவை மிக நவீன மருந்துகளுக்கு இணையானவை. ஆயுர்வேதத்தின் ரசயானக் கருத்துபற்றி ஆராய்வதற்காக, இந்திய மருத்துவ முறைகள் கழகம் செயல் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. 'எய்ட்ஸ்' அல்சர் நோய் போன்றவற்றுக்குத் தகுந்த மருந்துகளைப் பலதுறை

ஒருங்கிணைப்பு ஆராய்ச்சி கண்டுபிடிக்கும்.

அறிவுச் சொத்து உரிமை

வேம்பு, டாக்ஸஅஸ் பக்காட்டா என்னும் செடி வகை இரண்டும் பெரும்பாலும் நாள்தோறும் செய்திகளில் அடிபடும் மூலிகைகள் ஆகும். வேம்பு தானாக வளர்ந்து, எளிதாகக் கிடைக்கும் வகை. ஆனால் டாக்ஸஅஸ் பக்காட்டா ஒரு குறிப்பிட்ட உயரத்தில் சில நிலப்பகுதிகளில் மட்டுமே வளர்வது ஆகும். இந்த இரண்டு மூலிகைகளின் மருத்துவக் குணத்தை வெளிநாட்டுப் புகழமிக்க ஆய்வுககூடங்கள் ஆராய்ந்து, இவற்றின் மருத்துவப் பயன்களைக் கண்டறிந்ததால் இவை முக்கியத்துவம் பெற்றன. பேட்டண்ட் உரிமைகள், அறிவுச்சொத்து உரிமைகள் போன்ற பிரச்சினைகள் இதனால் தோன்றின.

துரதிர்ஷ்டவசமாக, இப்போதைய பேட்டண்ட் சட்டங்கள்படி, செடிகள் பயிர்கள் போன்றவற்றை இயற்கை நிலைப்படியே பேட்டண்ட் செய்ய முடியாது. ரசாயனப் பொருள் கண்டறியப்பட்டால்தான் பேட்டண்ட் செய்ய முடியும். இது பற்றி விரிவான ஒரே மாதிரியான உத்தி ஒன்றை வரைவது பற்றி கூட்டாய்வு நடத்தப் பல்வேறு தேசிய அமைப்புகள் முனைந்துள்ளன.

உயிரி நுட்பவியல் துறை மூலம் மருத்துவ மூலிகைகள், மணப்பொருள் மூலிகைகளின் ஜி.15 நாடுகளின் நுண்ணுயிர் மரபு வங்கி அமைக்கப்பட்டது.

மருந்தாகப் பயன்படுத்த முடியாத பொருள் எதுவும் உலகில் இல்லை என்பது ஆயுர்வேதத்தின் அடிப்பட.

நெறி. மருந்து, நோயாளி, சூழல் பற்றிய மருத்துவரின் அறிவே, அது உயிர்காக்கும் மருந்தா அல்லது உயிர்போக்கும் நஞ்சா என்பதை முடிவுசெய்யும் என்று ஆயுர்வேதம் கூறும்.

–பிஜபி



சிங்காரவேலரின் 'புது உலகம்'

பாவேந்தரின் வாழ்த்துப்பா

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நடத்திய திங்கள் இதழான 'புதுஉலகம்' ஏட்டைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதை:

"நல்லறிவும், பெருநோக்கும் கேட்பா ராயின்
நம்தோழன் சிங்கார வேலன் கண்ட
வெல்லுதமிழ் 'புதுஉலகம்' என்னும் மாத
வெளியீட்டை வாசித்தல் வேண்டும் என்போம்"
அம்மட்டோ!
"புதுஉலகம் மாதமொருமுறை கிடைக்கும்
புலன்அடைந்த மாசையெல்லாம் அது
துடைக்கும்.

இது உண்மை. உபசார வார்த்தை யல்ல
எல்லோரும் வாங்கி வாசித்தல் வேண்டும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



இந்த இதழில்...

- பெரியார்-அண்ணா அறிவுரைகள் 2
- மாண்புமிகு முதல்வரின் முதல் அரசாணை 3
- புதிய அமைச்சரவை பதவியேற்பு 4
- டெல்லியில் மாண்புமிகு முதல்வர் 11
- தமிழ்நாடு அமைச்சரவை ....
- "உங்களுக்காகவே உழைப்பேன்" - மாண்புமிகு முதல்வர் 15
- பொதுத் தேர்தலில் பங்கேற்ற கட்சிகள் பெயர் விளக்கம் 16
- சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் 17
- படமும் செய்தியும் 47
- நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 82
- பதவியேற்பு விழா - செய்தித் தொகுப்பு 94

தமிழரசு

தேர்தல் சிறப்பிதழ்

திருவள்ளுவராண்டு - 2027
வைகாசித் திங்கள் - 3
மலர்: 26 இதழ்: 22
16-5-1996
விலை: ரூ.3

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இரந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (42)

துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இரந்தோர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவனே நல்ல துணையாவான்.

தமிழரசு
16.5.1996 ரூ.3

புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

கலைஞர் மு. கருணாநிதி
முதல் அமைச்சர்

பேராசிரியர் க. அன்பழகன்
கல்வி அமைச்சர்

திரு ஆர்க்காடு என். வீராசாமி
மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மின்துறை அமைச்சர்

திரு நாஞ்சில் கி. மனோகரன்
வருவாய்த்துறை அமைச்சர்

திரு கோ.சி. மணி
உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு வீரபாண்டி ஆறுமுகம்
வேளாண்மைத்துறை அமைச்சர்

எதற்கும் சலியாது உழைத்துத் துன்பம் வந்தாலும் ஏச்சு வந்தாலும் எவ்வித இழப்புகள் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது எதிர்த்துழைத்துக் கடைசிவரை கொள்கையை நழுவ விடாது காத்து நிற்பதே உண்மைத் தொண்டின் குணமாகும்.

- தந்தை பெரியார்



ஆயிரமாயிரம் திறமைமிகு அலுவலர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது ; ஆட்சி உண்மையிலேயே செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால் வயலில், தொழிற்சாலையில், அங்காடியில், பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் ஆட்சி நடத்திடுவோர் நாமே' என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்ய வேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடத்திடச் செய்ய வேண்டும். இதழ் நடத்துவோர் உடனிருந்து முறை கூறிட வேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்திடுவதே அரசு. நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள்.' "நாமாகத் தேடிப் பெற்றுக் கொண்ட அரசு இது ; நம்முடைய துணையை நம்பியே இயங்கும் அரசு இது. எனவே இது செம்மையாக நடந்திட, நாம்தான் துணையிருக்க வேண்டும்" என்று ஒத்துழைத்திட மக்கள் முனைந்து நின்றிட வேண்டும்.

- பேரறிஞர் அண்ணா

(முதல்வர் பொறுப்பேற்றவுடன் 15.3.67 அன்று வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)

"மனைவரி, தலவரி, கூடுதல் தலவரி இனி விதிப்பதில்லை"

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் முதல் அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபின், 13.5.96 அன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் முதல் கையெழுத்திட்ட அரசுக்கோப்பு பற்றிய விவரம் வருமாறு :

1988 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் கிராமங்களில் உள்ள குடியிருப்பு, வீட்டுமனைப் பகுதிகளை நில அளவை உதவியாளர்களால் நில அளவை செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர்களால் உரிமையாளர்களுக்குப் பட்டா வழங்கப்படுகிறது. இதனால் உரிமையாளர்களது உடைமைகள் வரையறை செய்யப்படுகின்றன. நில உடைமைக்குச் சான்றாவணம் கிடைப்பதால், நிதி உதவி பெறுதல் போன்றவை எளிமையாகிறது.

வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு உரிமையாளரிடமிருந்து மனை வரி (Ground Rent) தல வரி, (Local Cess) கூடுதல் தல வரி (Local Cess Surcharge) ஆகியவை வசூலிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் பயனாளிகளில் பெரும்பாலோர் ஏழைகள் மற்றும் நலிந்த பிரிவினர். மனைவரி முதலிய வரிகளைச் செலுத்துவது அவர்களுக்குப் பெரும் சுமையாக இருக்கும் என்று அரசு கருதுகிறது. ஆகவே, நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டாக்களுக்காக உரிமையாளர்களிடமிருந்து மனை வரி, தல வரி, கூடுதல் தல வரி எதுவும் இனி விதிப்பதில்லை என அரசு அறிவிக்கிறது.

இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூ.14 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். ஏற்கெனவே நிலுவையிலுள்ள ரூ.23.52 கோடி தள்ளுபடி செய்யப்படுகிறது. இது குறித்த அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

இதனால் சுமார் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் குடும்பங்கள் பயனடையும்.

திரு துரைமுருகன்
பொதுப்பணித்துறை அமைச்சர்

டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி
போக்குவரத்துத்துறை அமைச்சர்

டாக்டர் மு. தமிழ்க்குடிமகன்
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர்



திரு கே.என். நேரு
உணவு மற்றும் பொது விநியோகத் துறை



திரு கே. சுந்தரம்
பால் வளத்துறை அமைச்சர்

திரு ரகுமான்கான்
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

திரு ஆலடி அருணா
சட்டத்துறை அமைச்சர்

திரு வே. தங்கபாண்டியன்
கூட்டுறவுத்துறை அமைச்சர்



திரு என்.கே.கே. பெரியசாமி
கைத்தறித்துறை அமைச்சர்



திரு எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

திரு பொங்கலூர் என். பழனிசாமி
வனவளம் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர்

திரு கே. பிச்சாண்டி
வீட்டுவசதித்துறை அமைச்சர்

திரு இ. பெரியசாமி
ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்



திரு வ. முல்லைவேந்தன்
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

திரு புலவர் செங்குட்டுவன்
அறநிலையத்துறை அமைச்சர்

திருமதி எஸ்.பி. சற்குணம்
சமூக நலத்துறை அமைச்சர்



தமிழ்நாடு அமைச்சரவை

டாக்டர் மு. கருணாநிதி

முதல் அமைச்சர்

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல்துறை, நிதி, திட்டம், தொழில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வணிக வரிகள்.

2. பேராசிரியர் க. அன்பழகன்

கல்வி அமைச்சர்

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை மற்றும் முன்னாள் ராணுவத்தினர் நலம்.

3. திரு ஆர்க்காடு என். வீராசாமி

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மின்துறை அமைச்சர்

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக்கல்வி, குடும்ப நலம், மற்றும் மின்சாரம்.

4. திரு நாஞ்சில் கி. மனோகரன்

வருவாய்த்துறை அமைச்சர்

வருவாய்த்துறை மற்றும் மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. திரு கோ.சி. மணி

உள்ளாட்சித்துறை அமைச்சர்

நகராட்சி நிர்வாகம், கிராமப்புற வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புறக் கடன் நிவாரணம், நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

6. திரு வீரபாண்டி ஆறுமுகம்

வேளாண்மைத்துறை அமைச்சர்

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் சேவைக் கூட்டுறவுகள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. திரு துரைமுருகன்

பொதுப்பணித்துறை அமைச்சர்

பொதுப்பணித்துறை, சிறிய பாசனத் திட்டங்கள் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் திட்டப்பணிகள்.

8. டாக்டர் பொன்முடி என்கிற **தெய்வசிகாமணி**

போக்குவரத்துத்துறை அமைச்சர்

திட்டப் பயன்கள் முழுமையாகவும் விரைவாகவும் மக்களுக்குக் கிடைத்திட வழி செய்வோம்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மேதகு ஆளுநர் **டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் ஆற்றிய உரை**

தமிழ்நாட்டு மக்கள் ஓர் அமைதி நிறைந்த மௌனப் புரட்சியை நடத்தி, ஜனநாயக மாண்பினைப் பாதுகாத்ததின் காரணமாக இந்தப் பதினோராவது சட்டப் பேரவையின் உறுப்பினர்களாகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்கள் அனைவரையும் ''ஒளிபடைத்த கண்ணினாய் வா வா - உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா!'' என மகாகவி பாரதியின் கவிதை வரிகளில் வரவேற்று வாழ்த்துகிறேன்.

மக்களின் மகத்தான எழுச்சி

பெரும்பான்மை எனும் குறிப்பிட்ட எல்லைக்கோட்டையும் கடந்து மக்களின் மகத்தான எழுச்சி வெள்ளத்தினால் கிடைத்துள்ள இந்த வெற்றியை அளித்துள்ள மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ள இந்த அரசுக்கு உங்களின் அன்பானதும் அக்கறையுடையதுமான ஆர்வமிகு ஒத்துழைப்பு கிடைக்குமென்பதில் எனக்குச் சிறிதும் அய்யமில்லை.

அமைதியாய் ஓர் ஆட்சி மாற்றம்

சிக்கனமாகவும், முறைகேடுகளுக்கு இடமளிக்காத வகையிலும், சீராகத் தேர்தல் நடைபெற விதிமுறைகளை வகுத்து அவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்திட, தேர்தல் ஆணையம் எடுத்த முயற்சிகள்; ஜனநாயக முறையினால் மட்டுமே அமைதியாக ஏற்படுத்தக் கூடிய ஆட்சி மாற்றத்துக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்பட்டுள்ளது.

தேர்தல் முறை சீர்திருத்தம் நாடுதழுவிய கருத்து உருவாக்குவோம்

தேர்தல் முறையில் மேலும் தேவைப் படுகிற சீர்திருத்தங்கள் பல இருக் கின்றன. ஜனநாயகம் வழங்கும் உரிமையை வேடிக்கையாகவும் விபரீதமாகவும், சுயேச்சை வேட்



பாளர்கள் என்ற பெயரால் பயன்படுத்திக் கொள்கிற ஒரு நிலை வளர்ந்துள்ளதைக் கட்டுப் படுத்தி ஜனநாயகமும் கட்டுப்பாடும் காத்திடும் வண்ணம், அந்தச் சீர்திருத் தங்கள் அமைந்திட அனைத்துக் கட்சிகளுடன் கலந்து, நாடு தழுவிய அளவில் கருத்து உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்ட இது தக்க தருணமெனக் கருதுகிறேன்.

மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி

இந்திய நாட்டின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும், உறுதியும் வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கு ஏற்ப, மாநிலங்களுக்குச் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்ட அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பை இந்த அரசு, தொடர்ந்து வலியுறுத்தும்.

மாநில ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்தியஅரசின் ஆட்சிமொழி ஆக்கவேண்டும்

தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற மறைந்த இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்களின் உறுதி மொழி இருந்தபோதிலும் நீண்ட காலமாகத் தீர்க்கப் படாமல் இருந்து வருகிற மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி, மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவது தான் என்பது இந்த அரசின் மொழிக் கொள்கையாகும். அதற்குக் காலம் தேவைப் படுமென்ற வாதம் வைக்கப்படு மேயானால் திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழைமையானதும் சிறப்பு பெற்றதும் இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

தமிழ் ஆட்சி மொழித் துறைக்கு முதன் முறையாகத் தனி அமைச்சகம்

நமது மாநிலத்தில் அனைத்து நிருவாக நடைமுறைகளிலும் குறிப்பிட்ட கால அளவுக்குள் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்துவதற்கு முனைப்பான பணி மேற்கொள்ளப்படுவதற்கும் ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்ற ஏற்றமிகு நிலையை உருவாக்குவதற்கும் தமிழ் ஆட்சி மொழித் துறை அமைச்சகம் ஒன்று முதல் தடவையாக தனியாகவே அமைக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத் தில் மொழிச் சிறுபான்மையினரின் நலன் களுக்கு எந்தக் குந்தகமும் விளையாமல் பாது காக்கப்படும் எனவும் உறுதியளிக்கிறேன்.

சமுதாய நல்லிணக்கம் பேண அமைதிக் குழுக்கள் அமைத்துப் பணியாற்றுவோம்

சமயச் சார்பின்மைக் கொள்கையையும் சமுதாய நல்லிணக்கத்தையும் போற்றிப் பேணுகின்ற இந்த அரசு, அனைத்து மதத்தினரும் அனைத்து வகுப்பினரும் ஒரு தாய் மக்கள் என்கிற உணர்வு தோன்றி நீடித்து நிலைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை, விரைந்து செயல் படுத்துவதுடன், தேவைப்படும் பகுதிகளில் எல்லாம் சமூகப் பெரியவர்களையும் அனைத்துக் கட்சி முன்னோடிகளையும் கொண்ட அமைதிக் குழுக்களை அமைத்துப் பணி யாற்றும் என்ற உறுதிமொழியை அளிப்பதுடன், அனைத்து தரப்பு மக்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.



வருவாய் இழப்பு பெரிதல்ல, மக்களின் மகிழ்ச்சியான நலவாழ்வே அரசின் குறிக்கோள்

மனைவரி இனி இல்லை

— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு. நாஞ்சில் கி. மனோகரன்

நத்தம் என்பது கிராமத்தில் மக்கள் வாழுகின்ற இடமாகும்.

**''நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது''**

என்ற குறளில் வள்ளுவப் பெருந்தகை நத்தம் என்ற சொல்லை, புகழ் என்ற பொருளில் குறிப்பிடுகின்றார்.

மனிதர் வாழும் இடம் புகழ் வழிந்தோடும் இடம் என்று, பெருமைக்குரிய நமது முன்னோர்கள் வாழும் இடத்தை நத்தம் என்று பெயர் வைத்தார்கள்! 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள் அல்லவா நம் தமிழ்ப் பெருங்குடி மக்கள்!!

இம்மக்கள் வாழும் பகுதிகள் கிராமக் கணக்குகளில் மொத்தமாக இதுகாறும் குறிப்பிடப்பட்டு வந்தது. ஒவ்வொரு குடிமகனும் அனுபவித்து வரும் உரிமைகளைத் தீர விசாரித்து முறைப்படி நிர்ணயம் செய்து பட்டா வழங்கப்படவில்லை. அதனால் அவர்களுக்கு அனுபோக உரிமை இருந்ததே தவிர மேற்படி நிலங்களை ஈடுகாட்டி வங்கிகளில் கடன் பெறவோ அல்லது வேறு நன்மைகள் பெறவோ இயலாமல் இருந்தது.

அதோடு, மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக விவசாய நிலங்கள் நத்தமாக மாற்றப்பட்டும், அதோடு திரைப்பட அரங்குகள், கடைகள், தொழிற்கூடங்கள், போன்ற வேளாண்மையற்ற பிற பயன்பாட்டிற்கும் மாற்றப்பட்டு வந்தன. உண்மை நிலை இவ்வாறிருக்க வருவாய்க் கணக்குகளில் மேற்படி நிலங்கள் வேளாண் நிலங்களாகவே குறிக்கப்பட்டு வந்தன. இந்நிலை சரி செய்யப்பட வேண்டும் என்பதற்காக, நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் நிலங்கள் குறித்த நாளது வரையிலான விபரங்களை கிராமக் கணக்குகளில் சரியாகப் பதிவு செய்து, மக்களின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்கள் உரிமைகளை உறுதி செய்யவும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. நத்தம் நிலவரித் திட்டத்தின் பயன்களில் குறிப்பிடத் தகுந்த சிலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றேன். அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக.

1. முதன் முறையாக குடியிருப்புப் பகுதிகளுக்கு நில வரித்திட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறது.
2. வீட்டுமனை உரிமையாளர்களது எல்லைகளைத் தெளிவாக வரையறுக்க உதவுகிறது.
3. புலப்படத்துடன் பட்டா வழங்கப் படுகிறது.
4. குளம், சாலை, தரிசு நிலம் உள்ளிட்ட அரசு மற்றும் சமூகத்திற்குச் சொந்தமான நிலங்கள் வரையறுக்கப்படுகிறது.
5. அதுபோலவே, கோவில், மசூதி, சர்ச் போன்ற மதச்சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் சொத்துரிமைகளுக்கும் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன.

6. அரசு நிலங்கள் வரையறுக்கப்படுவதால் நத்தத்தில் உள்ள காலியிடங்கள் இனம் காணப்பட்டு அவற்றில் ஏற்படும் ஆக்ரமணங்களைக் கண்டுபிடிக்க இயலுகிறது, மேலும் அவற்றைத் தகுதி உடையவர்களுக்கு ஒப்படை செய்யவும் இயலும்.
7. கிராமங்களில் விவசாய நிலங்களிலும் குடியிருப்புகள் வரிவாக்கம் செய்யப் படுகின்றன. வணிக அலகுகளும் உருவாகின்றன. இத்தகைய மேம்பாடுகளை நத்தம் நிலவையால் கண்டறியப்பட்டு கிராமத்தின் உண்மை நிலை தெரிய வருகிறது.
8. உள்ளாட்சிகள் தமது வீட்டுவரி/சொத்து வரியைத் திருத்தியமைக்க உதவுகிறது.
9. நத்தம் பட்டா வழங்குவதன் மூலம் நில உடைமையாளர்கள் குறிப்பாக ஏழைகள் அரசிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி பெறவும், குடியிருப்புகளை மேம்படுத்தவும் இயலும்.

ஆனால், நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டாக்களுக்கு மனைவரி நிர்ணயம் செய்யப்பட்டு, அப்பட்டாக்கள் வழங்கும்போது வசூலிக்கப்பட்டு வந்தன. இது மட்டுமின்றி உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல்வரி ஆகியவையும் முந்தைய அரசால் வசூலிக்கப்பட்டு வந்தன. ஒரு பட்டாவுக்கு குறைந்தது ரூபாய் பதினான்கு வசூல் செய்யப்பட்டது.



இது ஒரு மக்கள் நலத்திட்டமாகும். நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பயன் பெறும் பெரும்பாலான பயனாளிகள் ஏழை மற்றும் நலிவுற்றோர் ஆவர். ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுள் ஒன்றான வீட்டுமனைப் பட்டா வழங்குவது, திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளில் ஒன்றாகும். எனவே, இத்தகைய வசூல் எங்கள் கவனத்திற்கு வந்தபோது கழக ஆட்சியில் மனைவரி வசூல் ரத்து செய்யப்படும் என மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

''சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்பதே கழக ஆட்சியின் குறிக்கோள். எனவே, ஏழை எளியோரின் நலனில் அக்கறை கொண்டுள்ள கழக அரசு பதவியேற்றவுடன், ஏழை எளியோரைப் பாதிக்கும் மனைவரி, உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல் வரி வசூலிப்பதை ரத்து செய்ய ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாணையே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பதவியேற்றவுடன் கையெழுத்திட்ட முதல் கோப்பாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மனைவரி, உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல் வரி ரத்து செய்ததால் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு குறைந்தது ரூ. 14 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் சுமார் 23 கோடி ரூபாய் அளவில் மனைவரி நிலுவைத் தொகையையும் தள்ளுபடி செய்து கழக அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றால் அரசிற்குப் பெரும் வரி இழப்பு ஏற்பட்டாலும், பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் வெளியிடப்பட்ட முதல் ஆணை இது என்பது மன நிறைவு அளிக்கிறது.

வருவாய் இழப்பு பெரிதல்ல. மக்களின் மகிழ்ச்சியான நல வாழ்வே கழக அரசின் குறிக்கோள்.

69 சதவிகித இட ஒதுக்கிடு

1993-ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும், 69 சதவீத இட ஒதுக் கீட்டைத் தொடருவதற்கு வகை செய்ய சட்டம் ஒன்றை இயற்றியது. அச்சட்டத்தை ஒருமன தாக நிறைவேற்றிக் கொடுத்த தமிழகக் கட்சிகள் அனைத்தும் மற்றும் அனைத்திந்தியக் கட்சி களும் அச்சட்டத்தை அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்க ஒத்துழைத்து, அதன் காரணமாக, 1.9.1994-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட 76-வது அரசமைப்புத் திருத்த சட்டத்தின்வாயிலாக, நீதிமன்றத் திற்குச் செல்ல முடியாத வகையில், அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்ட வணையில் இது சேர்க்கப்பட்டது. எனினும், 50 சதவீத ஒதுக்கீடு பின்பற்றப் பட்டிருந்தால், எவ ருக்கெல்லாம் மருத்துவ பொறியியல் கல்லூரி களில் இடம் கிடைத்திருக்குமோ அவர்களுக் கெல்லாம் இடம் வழங்கும் வகையில் இம் மாநிலத்தில் பொறியியல், மருத்துவ கல்லூரி களில் கூடுதல் இடங்களை உருவாக்க உச்ச நீதி மன்றம் ஆணையிட்டது. 69 சதவீத இட ஒதுக் கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டம் 1.9.1994லேயே அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப் பட்டிருந்த போதிலும்கூட, 23.9.1994 அன்று அன்றைய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விளக்க மனுவில் இது பற்றித் தெரிவிக்கத் தவறிவிட்ட காரணத்தால், உச்சநீதிமன்றம் 50 சதவீத ஒதுக்கீட்டையே நிறைவேற்ற உத்தரவிட்டது. 1995-96ஆம் ஆண்டிற்கும் இதே போன்ற ஆணை ஒன்றை உச்ச நீதி மன்றம் பிறப்பித்தது. பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும், 69 சதவீத இடஒதுக்கீட்டை, வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்து உச்ச நீதி மன்றத்தில் முனைப்புடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



மாநில மனித உரிமைகள் ஆணையம்

நமது மாநிலத்தில், குறிப்பாகப் புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீது இருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு மிகுந்த கவலையுடன் கவனித்து, வேலியே பயிரை மேயும் வேதனையைத் தடுத்து நிறுத்தவும் - குற்றங்கள் புரிய

''அரசியல்'' என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவல நிலையை அறவே போக்கவும் - காவல் துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய ''மாநில மனித உரிமைகள் ஆணையம்'' அமைக்கப்படும்.

ஊழல் குற்றங்களை விசாரிக்க அமைப்பு

தூய்மையான ஊழலற்ற ஆட்சிக்கு இத்தேர்தலில் மக்கள் தங்கள் பேராதரவைத் தந்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நல்லாட்சி வழங்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. உயர் பதவியிலுள்ளோர், அதிகாரிகள் ஆகி யோருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்ய ''ஆம்புட்ஸ்மென்'' என்று சொல்லப்படும் விசாரணை அமைப்பு ஒன்றை உரு வாக்க மத்தியிலும், மற்ற மாநிலங்களிலும் முறையே உள்ள சட்ட முன்வடிவையும், சட்டங் களையும் பரிசீலித்து உரிய சட்டம் இயற்றப்படும்.

உள்ளாட்சித் தேர்தல் உடனே வரும்

சிற்றூர், பேரூர், நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கிற மக்கள், தங்களின் அடிப்படைத் தேவைகளுக்கான கோரிக்கைகளை எடுத்துக் கூறி நிறைவேற்றிக் கொள்ள தங்களால் தேர்ந் தெடுக்கப்பட வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களில் இல்லாமல் தவித்திடும் குறையை நீக்கிட; சட்டமன்றப் பேரவையின் இந்த முதல் கூட்டத் தொட ரிலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடை பெறும் நாள் அறிவிக்கப்படுமென மக்களுக் களித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்று வதற்காக மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் போதிய நிதி ஆதாரங்கள் அளிக்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல்

இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை விரைவில் நடத்த ஆர்வமுடன் இருக்கிறது. முந்தைய ஆட்சிக்காலத்தில், தகுதியற்றவர்களை உறுப்பினர்களாகப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துள்ளதால் அவர் களை நீக்கி தகுதியுள்ள உறுப்பினர்களைச் சேர்த்து கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தேர்தல் நடத்த லாம் என்று இந்த அரசு கருதுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல், முறைகேடுகளின்றி சரியாக நடைபெற, தகுதியற்ற உறுப்பினர்களை நீக்கி,

---

சட்ட மன்றத்தில் நகைச்சுவை

தமிழக முதல்வர் கையில் தடி வைத்துக் கொள்ள வேண்டுமா?

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் திரு அழகிரி பேசும் போது, 'ராஜாஜி முதல்வராக இருந்தபோது கையில் ஒரு தடி வைத்திருந்தார். அவர் முதுமைக்காக அந்தத் தடியை வைத்திருக்கவில்லை. தன் கட்சிக்காரர்கள் அரசு அலுவலகங்களில் சுற்றினால், இந்தத் தடியைக் கொண்டு விரட்டுவேன், என்றார் ராஜாஜி. அதுபோல முதல்வர் கருணாநிதி அவர்களுக்கும் தடி தேவைப்பட்டால் நாங்கள் தடி தரத் தயாராக இருக்கிறோம்' என்றார்.

இவ்வாறு அழகிரி சொன்னவுடன், அமைச்சர் நாஞ்சில் கி. மனோகரனைக் காண்பித்து, அவரிடமுள்ள தடியை வாங்கிக் கொள்கிறேன்! தடி தேவையில்லை என்று சைகை மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய போது அவையில் சிரிப்பலை அடங்க நெடுநேரம் ஆயிற்று.

தகுதியுள்ள உறுப் பினர்களைச் சேர்த்து நடத்த மேலும் 3 மாத கால அவகாசம் தேவைப்படுகிறது. இதற்காக இந்த அரசு உயர்நீதிமன்றத்தை உடனடியாக அணுகி அதன் ஆணைக்கு ஏற்ப காலக்கெடுவை நிர்ணயித்து அறிவிக்கும்.

உரிய நாளில் உணவுப் பொருள் விநியோகம்

தற்போது நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள், சரியான முறையில் விநியோகம் செய்யப்படுவதில்லை என்றும், குறிப்பிட்ட நாளில் வாங்கவில்லை என்றால், சமூக விரோதிகள் அவற்றைத் தவறாக தன்னலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றும், இதனைத் தடுக்க குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் மக்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு எந்த நாள் வசதிப்படுகிறதோ அந்த நாளில் பெற்றுக் கொள்ளும் வகையில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், மேலும் குறைவாக எடை போடுவது, முறைகேடாக வெளிச்சந்தையில் சரக்குகளை விற்பது போன்ற ஊழல்கள் தடுக்கப்பட வேண்டுமென்றும் எழுப்பப்படும் கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எழப்போகிறது இரண்டாவது பசுமைப்புரட்சி

இந்த அரசு, இம்மாநிலத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். வேளாண் தட்ப வெப்ப மண்டலங்களுக்கு ஏற்ற அறிவியல் ரீதியான அணுகுமுறை, வேளாண்மைக் கொள்கையின் முக்கிய அம்சமாகத் திகழும். இயன்ற அளவிற்குப் புன்செய்ப் பகுதிகளுக்குப் பாசன வசதிகளை வழங்கவும் நன்செய்ப் பாசன ஏற்பாட்டு முறைகளை மேம்படுத்துவதன் மூலம் நன்செய் நிலங்களின் உற்பத்தித். திறனை உயர்த்தவும், பூச்செடி வளர்ப்பு, தோட்டக்கலை ஆகியவற்றை மேம்படுத்தவும் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். நிர்ணயிக்கபட்டு அறிவிக்கப்படும் நேரங்களில் விவசாயத்துக்கு மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும். காவிரிப் பாசனத்தைப் பெறுகிற உழவர்களின் நலனை முழுமையாகப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். காவிரி நீர்ப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண நடுவர் மன்றத்தின் முன் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடுவர் மன்ற இடைக் கால ஆணையைச் செயல்படுத்துவது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலீட்டாளர் நேய அணுகுமுறை

தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலைகளில், சிறந்த அடிப்படை வசதிகளும், கல்வித்திறனும், திறமை மிக்க மனித வளமும், பன்னாட்டு விமான நிலையமும், பல துறைமுகங்களும் கொண்ட தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னணி வகித்திருக்க வேண்டும். ஆனால், இம்மாநிலம் கடந்த ஐந்தாண்டுகளில் இந்த அனுகூலங்களை முறையாகப் பயன்படுத்திக்

கொள்ளவில்லை. இந்த அரசு ''முதலீட்டாளர் நேய (Investor friendly) அணுகுமுறை''யை மேற்கொண்டு, தமிழ்நாட்டிற்குத் தொழில் முதலீடுகள் அதிக அளவில் கிடைக்கப் பெறுவதற்கு ஆவன செய்யும். மற்றும் சிறு தொழில் முனைவோருக்குரிய சிறப்புக் கொள்கைத் திட்டம் ஒன்றும் உருவாக்கப் படும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முழுக் கவனம்

இந்த அரசு, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் முழுக்கவனம் செலுத்தும், ஆறுகளையும், நீர் வழிகளையும், தொழிற்சாலைகள் மாசுபடுத்துவதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த மாநிலத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படக்கூடிய தூய்மைக்கேடு, கடுமையான ஒரு பிரச்சினையாகும். அதே சமயத்தில், அத்தொழிற்சாலைகள் எண்ணற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. எனவே, மக்களது நன்மை, சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதிலே விவசாயிகளின் நிலமும் பாதிக்கப்படாமல், அதே நேரத்தில் குடிநீரும் பாதிக்கப்படாமல், தோல் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படாமல் அரசு முயற்சி எடுத்து முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாணப்படும்.

நகர்ப்பகுதி மேம்பாடு மற்றும் வீட்டு வசதித்துறைக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். சென்னை, மதுரை உட்பட முக்கிய மாநகர்களில் உள்ள போக்குவரத்து நெரிசல், புறவழிச் சாலைகள் அமைக்கப்படுவதன் மூலம் குறைக்கப்படும். சென்னை மாநகரில், காய்கறி மொத்த விற்பனை அங்காடியைக் கோயம்பேட்டிற்கு விரைவில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். சென்னைப் பெருநகரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய இருநூறு கோடி ரூபாயும், மற்றும் மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம் ஆகிய மாநகர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மொத்தமாக நூறு கோடி ரூபாயும் ஒதுக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னைக்குக் கிருஷ்ணா நீர்

இந்த மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீரில்லாத குடியிருப்புப் பகுதி இல்லை என்ற நிலை உருவாக்கப்படும். மற்றும் தொடக்கப் பள்ளிகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளைச் செய்துகொடுக்க, இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்கும். அண்மையில் ஆந்திர மாநில முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களுடன் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் பேசியதைத் தொடர்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நீர் வந்து சேரும் என்ற இனிய செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் மக்களுக்குத் தரமான அடிப்படை சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளை அளிக்க இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். கிராமப்புறங்களில் அடிப்படை மருத்துவ வசதி தடையின்றி கிடைத்திட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் முறையாகப் பணியாற்றுவது உறுதி செய்யப்படும்.

தரைவரி ரத்து மகிழ்ச்சிக்கு வித்து

இது அறிஞர் அண்ணா வழியைப் பின்பற்றி நடைபெறும் ஏழை நடுத்தர

தொடர்ச்சி 40-ம் பக்கம்

சான்றோன் தன் மகன் எனக்கேட்டாள்...

ஈன்றபொழுதினும் பெரிதுவந்தாள்!

"நல்லம்மா! நல்லம்மா!" என்று மகிழ்ச்சிபொங்கிட அழைத்தவாறு அந்த ஊர்ப் பெரியவர் உலகளந்தான் வீட்டுக்குள் நுழைந்தார். நரைத்த முடியும் நடுங்கும் உடலும் என்றாலும் உலகளந்தானின் குரலில் மட்டும் வலிமை குன்றிடவில்லை. "என்னய்யா! இவ்வளவு பூரிப்பு?" என்று நல்லம்மாள், மரியாதையுடன் எழுந்து உட்கார்ந்துகொண்டாள், கூடத்தில் விரித்திருந்த சற்றே கிழிந்த பட்டுப்பாயின் மீதுதான் அவள் படுத்திருந்தாள். காய்ச்சல், இருமல், உடலெங்கும் வலி – நோயின் தொல்லையால், அவள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்தத் துன்பத்துக்கிடையேயும் பெரியவருக்கு மரியாதை காட்ட வேண்டுமென்ற பண்பு அவளிடத்தில் இருந்தது.

"நீ எழுந்திருக்காதே! நோயாளி! சும்மா படுத்துக்கொள்!"

பெரியவர் அருகே அமர்ந்தார்.

நல்லம்மாளின் நோய்க்குக் காரணமில்லாமற் போகவில்லை.

ஒரு திங்களுக்கு முன்புதான் அவளது முப்பது வயது மகனை அவள் சாவின் வாயிலே அள்ளிக்கொடுக்க நேர்ந்தது. ஒரே மகன், அவனைத்தவிர அவளுக்கு யாரும் ஆதரவில்லை. அவளைக் கைம்பெண்ணாக்கிவிட்டு அவள் கணவன் பிரிந்து ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. இப்போது மகனும் தந்தையைத் தொடர்ந்து சென்று தாயைத் தனியாக ஆக்கிவிட்டான்.

நல்லம்மாளின் மகன் கட்டிளங்காளை! அவன் இறந்துபோனது மட்டுமல்ல; அவன்மீது ஒரு பழியும் வந்து சேர்ந்தது.

வண்டியோட்டுவது அவன் தொழில். ஒரு நாள் கணவன் மனைவி இருவர் அவன் வண்டியிலேறி வேற்றூர் சென்றனர். இரவு நேரம்! மலைப்பாதை! தொலைவில் விலங்கினங்கள் உறுமும் ஒலிகூடக் கேட்டது! வண்டிக்குள் இருப்பவர்களோ செல்வந்தர் வீட்டுக்குரியவர்கள்; இளமை ததும்பும் வயதினர்; ஏராளமான நகைகளை அந்தப்பெண் சுமந்துகொண்டிருக்கிறாள்.

இரண்டு நாள் கழித்துச் செய்தி வந்தது, நல்லம்மாளின் மகன், தன் வண்டியில் வந்த கணவன் மனைவியைக் காட்டுப்பாதையில் மிரட்டி, ஆடவனைக் கொன்றுவிட்டு அந்த பெண்ணின் கற்பையும் சூறையாடிவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டான். அந்தப் பெண்ணும் கொல்லப்பட்டுவிட்டாள். இருவரைக் கொலை செய்துவிட்டு ஓடிய நல்லம்மாளின் மகனும், திருடிச்சென்ற நகைகளுடன் மலைப்பாதையில் கண் தெரியாமல் வழுக்கிக் கீழே உருண்டு செத்துவிட்டான். நகைகளைக் காவலர் மீட்டுவிட்டனர். இந்தச் செய்தியைக் கேட்டு அலறி விழுந்தவள்தான் அந்த அன்னை! பிறகு நோய் அவளைப் பிடித்துக்கொண்டது.

மகன் மறைந்தது மட்டுமல்ல; தீயவன் என்ற பெயரையல்லவா சூட்டிக்கொண்டு மறைந்துவிட்டான். 'இதற்காகவா அவனை வலியையும் வேதனையையும் தாங்கிப் பெற்றேன். வளர்த்தேன்' என்று நல்லம்மா புலம்பிக்கொண்டேயிருந்தாள்.

உலகளந்தான், நல்லம்மாளிடம் சொன்னார்; "அம்மா, நடந்த கதையே வேறாக இருக்கிறது. உன்மகன், வண்டியில் அவர்களை ஏற்றிக்கொண்டு மலைப்பாதையில் செல்லும்போது ஒரு கொள்ளைக்கூட்டம் வழிமறித்துவிட்டதாம். உடனே உன் மகன் கீழே குதித்து அந்தக் கயவர் கூட்டத்தை எதிர்த்திருக்கிறான், அவனை அந்தக் கூட்டத்தினர் சுற்றி வளைத்து வண்டிச்சக்கரத்திலேயே கட்டிப்போட்டு விட்டனர். பிறகு கணவன் மனைவியைக் கைப்பற்றினர். கணவன் கொலையுண்டான், அந்தப் பெண்ணைக் கற்பழித்தே கொன்று விட்டனர். அவள் அணிந்திருந்த நகைகளை மூட்டையாகக் கட்டி அந்தக் கூட்டத்தாரில் ஒருவன் தூக்கிச் செல்ல முனைந்தபோது, வண்டிச் சக்கரத்திலிருந்து தன்னை மீட்டுக்கொண்ட உன் மகன் ஒரேபாய்ச்சலில் அந்த நகை மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு ஊரை நோக்கி ஓடிவந்திருக்கிறான். கொள்ளைக் கூட்டம் அவனை அந்த இருட்டில் துரத்தியிருக்கிறது. வழி தெரியாமல் தடுமாறி உன் மகன் மலையிலிருந்து உருண்டிருக்கிறான்."

நல்லம்மாள், விழிகளை அகலத் திறந்து பெரியவரைப் பார்த்தாள்.

"இவ்வளவும் உங்களுக்கு எப்படித் தெரியும்?

"அந்தக் கொள்ளைக் கூட்டம் பிடிபட்டுவிட்டது. அந்தக் கூட்டத்தார், காவலர்களிடம் தெரிவித்த உண்மை இது! 'என்னை நம்பி என் வண்டியில் வந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவர்களின் உடைமையைக் காப்பாற்றியாவது அவர்களின் வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன். என்னைத்தடுக்காதீர்கள்' என்று கூறிவிட்டுத்தான் உன் மகன் அந்த நகைமூட்டையுடன் ஓடிவந்திருக்கிறான்."

நல்லம்மாளின் கண்களில் புதிய ஒளி! அவள் இதழ்களில் பரவசம்! முகத்தில் ஒரு மலர்ச்சி!

"பெரியவரே! அவனைப் பெற்றபொழுது நான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேனோ! அதைவிட அதிகமான மகிழ்ச்சியை அவன் சான்றோன்தான் எனக் கேட்கும்போது அடைகிறேன்." என்றாள்! நல்லம்மாள் அந்த மகிழ்ச்சிப் பெருக்குடனேயே பாயில் சுருண்டு படுத்தாள். பெரியவர், அவள் உடலைத் தொட்டு அசைத்துப் பார்த்தார். அந்த உடல் இனி அசையாத நிலை பெற்றுவிட்டது. அமைதியை அவள் உள்ளத்திற்கு வழங்கக்கூடிய அருமருந்தாக அந்த மகிழ்ச்சிச் செய்தி அவளுக்கு அமைந்தது போலும்!

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

(டாக்டர் கலைஞர் அவர்களின்
குறளோவியத்தில் ஒரு காட்சி.)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

ரூ. 2450 கோடி செலவில் புதிய கார் தொழிற்சாலை

கொரியா நாட்டைச்சேர்ந்த ஹுண்டாய் (HYUNDI) கார் தயாரிக்கும் தொழிற்சாலையின் தலைவர் திரு. பார்க் அவர்கள் தலைமையில் எக்சிகியூடிவ் மேனேஜிங் டைரக்டர் திரு.என்.எம்.கின் என்பவரும், இயக்குநர் திரு. ஓய்.கே. ஜங்க் என்பவரும் வந்திருந்தார்கள்.

தமிழக அரசின் தொழில்துறைச் செயலாளர் திரு. பி.சி. சிரியாக், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டார்கள். அந்தத் தொழிற்சாலை சார்பில் சென்னையில் ஒரு கார் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி விரிவாகப் பேசப்பட்டது. அதற்கான இடத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இரண்டு இடங்கள் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இரண்டில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து கொள்கின்ற பொறுப்பு அவர்களிடம் விடப்பட்டிருக்கிறது.

கார் தொழிற்சாலை இங்கே ஆரம்பித்தால் ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்களும், தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் கார்களும் தயாரிக்க இயலும். இந்தத் திட்டத்தின் ஆரம்ப முதலீடு 2450 கோடி ரூபாய் ஆகும். பின்னர், 1400 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

நேரடியாக இரண்டாயிரம் முதல் மூவாயிரம் பேருக்கும் மற்றும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பேர் வரைக்கும் வேறுவகையிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலும்.

இந்தத் திட்டம் பற்றி 30.5.96 அன்று பேசப்பட்டுள்ளது. எந்த இடத்தில் எப்போது தொடங்கப்படும் என்ற விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்.

– மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்
அவர்கள் 30.5.96 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து.

தேசிய கரிம வாயுத்திட்டம்

கிராம மகளிர் வேலைப் பளுவைக் குறைத்திடும் திட்டம்



இத்திட்டம், 1981-82ம் ஆண்டு முதல் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், மைய அரசின் முழு நிதி உதவியுடன் செயல் படுத்தப்படுகிறது. இது இருபது அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் நோக்கம்:

* *இயற்கை எரிபொருள் குறையும் பொழுது மாற்று சக்தியாகப் பயன்படுத்துதல்; காடுகளில் உள்ள மரங்கள் அழியாமல் பாதுகாப்பதுடன் இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்.*
* *மாசற்ற சுத்தமான நிலையில் எரிசக்தி உருவாக்குதல்; இரசாயன உரத்துக்குப் பதிலாக இயற்கையான சக்தி நிறைந்த உரம் உருவாக்குதல்*
* *கிராமத்தில் வாழும் மகளிர், குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையில் வேலைப் பளுவை குறைத்தல்*
* *கரிமவாயுக் கலனுடன் கழிப் பறையை இணைப்பதன் மூலம் சுகாதாரம் மற்றும் உடல் நலத்தை மேம்படுத்துதல்*

கரிமவாயுக் கலன் அமைக்க, பயனடைவோர் மானியங்கள் ரூ. 2000 முதல் ரூ. 2600 வரை, கலன்களின் அளவு மற்றும் பயனடைவோரின் வகை ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப் பட்டு வந்தது. மேற்படி கலன் அமைக்க ஊக்கத்தொகையாக கலன் ஒன்றுக்கு ஊர்நல அலுவலருக்கு ரூ. 50-ம், சுழல்முறை முகவர்களுக்கு ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. கலன்கள் அமைக்க பயனடைவோர்களுக்கு வழங்கப் பட்ட மானியம் 1.4.95 முதல் மைய அரசால் நிறுத்தப்பட்டுவிட்டது. அதே சமயம் இத்திட்டத்தை ஏற்கும் வண்ணம் விளம்பரத்துக்கும், சந்தைப்படுத்துவதற்கும் மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இக் கலன்களை உபயோகிப்பவர்களுக்குத் தக்க பயிற்சியும், கலனமைப்பவர்களுக்குக் கட்டுமான மற்றும் பராமரிப்புப் பயிற்சியும் அளிக்கப்படுவதுடன் ஏற்கனவே பயிற்சி பெற்ற கொத்தனார்களுக்கும், புத்துணர்வுப் பயிற்சியும் இத்திட்டத்தில் அளிக்கப்படுகிறது.

1995-96ம் ஆண்டு முதல் சமவெளிப் பகுதிகளில் அமைக்கப்படும் கலன்களுக்கு ரூ. 2800-ம், சிறப்பு / மலைப்பகுதிகளில் அமைக்கப்படும் கலன்களுக்கு ரூ. 3400-ம், ஒட்டுமொத்த மானியமாக மைய அரசால் வழங்கப்படுகிறது. 31.3.95 முடிய, நிர்ணயிக்கப்பட்ட கலன்களில் 1,29,289 கலன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. 1995-96ம் ஆண்டுக்கு 7000 கலன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, மைய அரசால் இது 8000 கலன்களாக உயர்த்தப் பட்டது. ஆனால் இவற்றில் 31.3.96 முடிய 6901 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புகையில்லா அடுப்பு — மகளிருக்கு புன்னகை தரும் அடுப்பு

தேசிய மேம்படுத்தப்பட்ட சூளாத்திட்டம் 1983-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் மைய அரசின் மரபு சாரா எரிசக்தி வளங்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ் நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மைய அரசின் நிதியுதவியோடு செயல்படும் திட்டமாகும்.

திட்டத்தின் நோக்கம்:

- மரங்களைப் பாதுகாத்து, விறகுகளைக் குறைந்த அளவு பயன்படுத்துதல்
- காடுகள் அழிவதைத் தடுத்தல்
- தூய்மையானசுற்றுப்புறச்சூழலைப் பாதுகாத்து, குடிசைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுத்தல்
- சமையலறையிலிருந்து வெளிப்படும் புகையினைத் தவிர்ப்பதுடன், அதனால் பெண்களுக்கு உண்டாகும் உடல்நலக் கேடுகளையும் தீங்குகளையும், வேலைப்பளுவையும் குறைத்தல்
- புகையில்லா அடுப்புகள் அமைத்தல், பழுது பார்த்தல், பராமரித்தல்போன்ற பணிகளில் சுயவேலை வாய்ப்புப் பணியாளர்களை ஈடுபடுத்துவதன் மூலம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்

மானியம் :

மைய அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்வதற்கேற்ப புகையில்லா அடுப்பு ஒன்றை அமைப்பதற்கு ஏற்படும் செலவில் 33 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இத்திட்டத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. 1992-93ம் ஆண்டுக்கு முன் அதிகமாக இருந்த மானியத்தொகை படிப்படியாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

இதுவரை அமைக்கப்பட்ட அடுப்புகள்

இத்திட்டம் ஆரம்பித்த காலம் முதல், இந்த ஆண்டு வரை 19,90,008 புகையில்லா அடுப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்காக மைய அரசு ஒதுக்கீடு செய்து ரூ. 1137.24 இலட்சம் செலவுசெய்யப் பட்டுள்ளது.

> **வாழ்க்கையில் கண்டிப்பாக ஓர் இலட்சியம் இருக்க வேண்டும், அப்படி இருந்தால்தான் செல்வத்தைத் தொடர்ந்து பெற முடியும்.**
>
> **— ஸ்டீவன்சன்**

> **எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணமே, நல்ல மனத் துணிவை வழங்கும் திறன் உடையது.**
>
> **- ஆல்பர்ட் சுவைட்சர்**

முதல்வருடன் ஆஸ்திரேலிய நிறுவனம் ஆலோசனை

சென்னை நகரில் ரூ. 60 கோடியில் கடல்வாழ் உயிரினங்கள் கண்காட்சி

சென்னை நகரில் ரூ. 60 கோடி செலவில் கடல்வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைப்பது குறித்து ஆஸ்திரேலிய நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டூடியோ பெர்த் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கோர்டன் குரோதர் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் சென்னை வந்தனர். சென்னை நகரில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கடல் வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ரூ. 60 கோடி செலவில் அமைக்கப்படும் இந்த உயிரினங்கள் கண்காட்சி, கடல்வாழ் உயிரினங்கள் தொடர்பாக ஆராய்ச்சி நடத்தவும் பயன்படும்.

இந்தத் துறையில் அனுபவம் உள்ள ஆஸ்திரேலிய நிறுவனம் உலக அளவில் 20 இடங்களில் இதுபோன்ற கண்காட்சியை நடத்தி வருகிறது.

ஆஸ்திரேலிய நிறுவனத்தின் தொழில் அதிபர் கோர்டன் குரோதர் மற்றும் அதன் நிர்வாகிகள் 24.5.96 அன்று தலைமைச் செயலகத்தில் இது குறித்து, தமிழக முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். தமிழக அரசுடன் கூட்டு சேர்ந்து ஆஸ்திரேலிய நிறுவனம் இந்தக் கண்காட்சியை அமைக்கத் தயாராக இருக்கிறது என்று ஆஸ்திரேலிய நிபுணர்கள் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிபுணர் குழுவுடன் பேசுகையில் இந்தத் திட்டத்தை வரவேற்பதாகத் தெரிவித்தார்.

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் திருமதி. ஜெனிபர் சந்திரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களை, அவை முன்னவர் பேராசிரியரும், எதிர்க்கட்சித் தலைவர் திரு சொ. பாலகிருஷ்ணன் அவர்களும் பேரவைத் தலைவரது இருக்கையில் அமர்த்தும் காட்சி.

இரண்டாம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவை உறுப்பினராகப் பதவியேற்கும் காட்சி.

நான்காம் அட்டை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் உரையாற்றுதல்.

சாப விமோசனம்

புதுமைப்பித்தன்

(ராமாயண பரிச்சயம் உள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) இருக்கலாம். அதை நான் பொருட்படுத்தவில்லை.)

1

சாலையிலே ஒரு கற்சிலை, தளர்ந்து நொடிந்து போன தசைக் கூட்டத்திலும், வீரியத்தைத் துள்ள வைக்கும் மோகன வடிவம்; ஓர் அபூர்வ சிற்பி பூலோகத்தில் இதற்காகவென்றே பிறந்து தன் கனவையெல்லாம் கல்லில் வடித்து வைத்தானோ என்று தோன்றும் அவ்வளவு லாகிரியை ஊட்டுவது. ஆனால் அந்தப் பதுமையில் கண்களிலே ஒரு சோகம் – சொல்லில் அடைபடாத சோகம் மிதந்து; பார்க்கின்றவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக் கனவு அன்று. சாபத்தின் விளைவு. அவள்தான் அகலிகை.

அந்தக் காட்டுப் பாதையில் கல்லில் அடித்து வைத்த சோகமாக, அவளது சோகத்தைப் பேதமற்ற கண்கொண்டு பார்க்கும் துறவி போன்ற இயற்கையின் மடியிலே கிடக்கிறாள். சூரியன் காய்கிறது. பனி பெய்கிறது, மழை கொழிக்கிறது. தூசும் தும்பும் குருவியும் கோட்டானும் குத்துகின்றன; பறக்கின்றன. தன் நினைவற்ற தபஸ்வியாக கல்லாக - கிடக்கிறாள்.

சற்றுத் தூரத்திலே ஒரு கரையான் புற்று. நிஷ்டையில் ஆழ்ந்து தன் நினைவகற்றித் தன் சோகத்தை மறந்து தவம் கிடக்கிறான் கோதமன். இயற்கை, அவனையும் அபேதமாகத்தான் போஷிக்கிறது.

இன்னும் சற்றுத் தூரத்திலே இந்தத் தம்பதிகளின் குடும்பக் கூடு கம்பமற்று வீழ்ந்தது போல, இவர்களுக்கு நிழல் கொடுத்த கூரையும் தம்பம் இற்று வீழ்ந்து பொடியாகிக் காற்றோடு கலந்து விட்டது. சுவரும் கரைந்தது. மிஞ்சியது திரடுதான், இவர்கள் மனசில் ஏறிய துன்பத்தின் வடுப்போலத் தென்பட்டது அது.

தூரத்திலே கங்கையின் சலசலப்பு, அன்னை கங்கை, இவர்களது எல்லையற்ற சோகத்தை அறிவாளோ என்னவோ!

இப்படியாக ஊழி பல கடந்தன, தம்பதிகளுக்கு

ஒருநாள்......

முற்பகல் சூரிய ஒளி சற்றுக் கடுமைதான். என்றாலும் கொடிகளின் பசுமையும் நிழலும், இழைந்து வரும் காற்றும், உலகின் துன்பத்தை மறைக்க முயன்று நம்பிக்கையையும் வலுவையும் தரும் சமய தத்துவம்போல, இழைந்து மனசில் ஒரு குளுமையைக் கொடுத்தன.

ஆண் சிங்கம்போல, மிடுக்கு நடை நடந்து, எடுத்த கருமம் முற்றியதால் உண்ட மகிழ்ச்சியை மனசில் 'அசைபோட்டுக் கொண்டு' நடந்து வருகிறான் விசுவாமித்திரன், மாரீசனும் சுவாகுவும் போன இடம்

ஒரு புராணக்கதை புதுமைப்பித்தனின் சமூகப்பார்வையில் புடம் போடப்படுகிறது. இராமன் கால்பட்டதும் கல் அகலிகை யானது! புதுமைப்பித்தன் கைபட்டதும் அகலிகை கதை புதுக்கோலம் பெற்றது! பல்லாயிரம் ஆண்டுக் கதையை, அண்மைக் காலம் எப்படி உரசிப் பார்த்திருக்கிறது என்பதை, நிகழ்காலம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இந்த விழிப்புணர்வுக் கதை 'தமிழரசு' இதழில் வெளியிடப்படுகிறது.

தெரியவில்லை. தாடகை என்ற கிழட்டுக் கொடுமை நசித்து விட்டது. நிஷ்டையில் ஆழ்ந்தும், எரியோம்பியும் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நிம்மதியைத் தரும் சாதனமாகத் தன்னை ஆக்கிக் கொண்டதில் திருப்தி.

... எப்போதோ ஒருநாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது ...

அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொள்கிறான். பார்வையில் என்ன பரிவு! இரண்டு குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடி வருகின்றன. அவர்கள் வேறு யாருமல்ல; அவதார சிசுக்களான ராம லக்ஷ்மணர்களே. அரக்கர் நசிவை ஆரம்பித்து வைத்துவிட்டு, அதன் பொறுப்புத் தெரியாமல் ஓடிப்பிடித்து வருகிறார்கள்.

ஓட்டம் புழுதியைக் கிளப்புகிறது. முன்னால் ஓடி வருகிறான் லக்ஷ்மணன்; துரத்தி வருபவன் ராமன். புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது....

என்ன உத்ஸாகமோ என்று உள்ளக்குதுகலிப்புடன் திரும்பிப் பார்க்கிறார் விசுவாமித்திரர். பார்த்தபடியே நிற்கிறார்.

புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது.

எப்போதோ ஒருநாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது.

கண்களை மூடித் திறக்கிறாள் அகலிகை பிரக்ஞை தெரிகிறது. சாப விமோசனம் சாப விமோசனம்!

தெய்வமே! மாசுபட்ட இந்தத் தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது.

தனக்கு மறுபடியும் புதிய வாழ்வை கொடுக்க வந்த தெய்வீக புருஷன் எவன்? அந்தக் குழந்தையா?

அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள். ராமன் ஆச்சர்யத்தால் ரிஷியைப் பார்க்கிறான்.

விசுவாமித்திரருக்குப் புரிந்து விட்டது. இவள் அகலிகை அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை

கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக, தன் உடம்பை, மாய வேஷத்தால் ஏமாறி, மாசுபடுத்திக் கொண்டவள்; கோதமனின் மனைவி. அவ்வளவையும் ராமனிடம் சொல்கிறார். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே; அதில், வலை முட்டையில் மோனத்தவம் கிடக்கும் பட்டுப் பூச்சிப்போல தன்னை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறான். அதோ அவனே எழுந்து விட்டானே!

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்திபோல் சுருள்கின்றன. உடலிலே, காயகற்பம் செய்ததுபோல் வலுபின்னிப் பாய்கிறது. மிடுக்காக, பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாதவனைப் போலத் தயங்கித் தயங்கி வருகிறான்.

மறுபடியும் இந்தத் துன்ப வலையா? சாபவிமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை. இப்பொழுதோ அது பிரம்மாண்டமான மதிலாக அவனது வாழ்வைச் சுற்றியே மண்டலிக்கிறது. அவள் மனமும் மிரளுகிறது.

ராமனுடைய கல்வி, தர்மக் கண் கொண்டு பார்த்தது. தெளிவின் ஒளி பூண்டது. ஆனால் அநுபவச் சாணையில் பட்டை பிடிக்காதது; வாழ்வின் சிக்கலின் ஒவ்வொரு நூலையும் பின்னலோடு பின்னல் ஓடியாமல் பார்த்த வசிஷ்டனுடைய போதனை. ஆனால் சிறுமையை அறியாதது. புது வழியில் துணிந்து போக அறிவுக்குத் தெம்பு கொடுப்பது.

உலகத்தின் தன்மை என்ன, இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது! மனசுக்கும் காரண சக்தியின் நிதானத்துக்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை? ''அம்மா!'' என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்குகிறான் ராமன்.

இரண்டு ரிஷிகளும், (ஒருவன் துணிச்சலையே அறிவாகக் கொண்டவன்; மற்றவன் பாசத்தையே தர்மத்தின் அடித்தளமாகக் கண்டவன்) சிறுவனுடைய நினைவுக் கோணத்தில் எழுந்த கருத்துக்களைக் கண்டு குதூக்கலிக்கிறார்கள். எவ்வளவு லேசான, அன்புமயமான, துணிச்சலான உண்மை!

''நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக்

... அவளை அன்று விலை மகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்து விட்டது போல இருக்கிறது கோதமனுக்கு ...

கொள்ளுவதுதான் பொருந்தும்'' என்றான் விசுவாமித்திரன் மெதுவாக.

குளுமை பூண்ட காற்றில் அவனது வாதக் கரகரப்பு ரஸ பேதம் காட்டுகிறது.

கோதமனும், அவன் பத்தினியும், அந்தத்தம்ப மற்றுத் திரடேறிப்போன மேடும் அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. முன்பு உயிரற்றிருந்த இடத்தில் ஜீவ களை துவள நினைத்தது.

சாட்டையின் கொடுக்கைப் போலப் போக்கை மாற்றியமைக்க வந்த சக்திகள் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து விட்டன. மிதிலைக்குப் பொழுது சாயும் பொழுதாவது போக வேண்டாமா? மணவினை, இரு கைகளை நீட்டி அழைக்கிறது.

கோதமனுக்கு அவளிடம் முன்போல் மனக் களங்கமின்றிப் பேச நாவெழவில்லை. அவளை அன்று விலை மகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்துவிட்டது போல இருக்கிறது. ''என்ன பேசுவது? என்ன பேசுவது?''

''என்ன வேண்டும்?'' என்றான் கோதமன், அறிவுத் திறம் எல்லாம் அந்த உணர்ச்சிச் சுழிப்பிலே அகன்று பொருளற்ற வார்த்தையை உந்தித் தள்ளியது.

''பசிக்கிறது'' என்றாள் அகலிகை, குழந்தை போல.

அருகிலிருந்த பழனத்தில் சென்று கனிவர்க்கங்களைச் சேகரித்து வந்தான் கோதமன். அன்று, முதன் முதல் மணவினை நிகழ்ந்த புதிதில் அவனுடைய செயல்களில் துவண்ட ஆசையும் பரிவும் விரல்களின் இயக்கத்தில் தேக்கத்தில் காட்டின.

'அந்த மணவினை' உள்ளப் பரிவு பிறந்த பின்னர்ப் பூத்திருந்தாலும், ஏமாற்றின் அடிப்படையில் பிறந்தது தானே! பசுவை வலம் வந்து பறித்து வந்தது தானே!' என்று கோதமனுடைய மனசு, திசை மாறித் தாவித் தன்னையே சுட்டுக் கொண்டது.

அகலிகை பசி தீர்ந்தாள்.

அவர்கள் மனசில் பூர்ணமான கனிவு இருந்தது. ஆனால் இருவரும் இருவிதமான மனக் கோட்டைகளுக்குள் இருந்து தவித்தார்கள்.

கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்பதே அகலிகையின் கவலை.

அகலிகைக்குத் தான் ஏற்றவனா என்பதே கோதமனின் கவலை.

சாலையோரத்தில் பூத்திருந்த மலர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தன.

2

அகலிகையின் விருப்பப்படி, ஆசைப்படி அயோத்தி வெளி மதில்களுக்குச் சற்று ஒதுங்கி, மனுஷ பரம்பரையின் நெடிபடாத தூரத்தில், சரயூ நதிக்கரையிலே ஒரு குடிசை கட்டிக்கொண்டு தர்ம விசாரம் செய்து கொண்டிருந்தான், கோதமன். இப்பொழுது கோதமனுக்கு அகலிகை மீது பரிபூர்ண நம்பிக்கை. இந்திரன் மடிமீது அவள் கிடந்தால்கூட அவன் சந்தேகிக்க மாட்டான். அவ்வளவு பரிசுத்தவதியாக நம்பினான் அவன். அவளது சிற்றுதவி இல்லாவிடின் தனது தர்ம விசாரம் தவிடு பொடியாகி விடும் என்ற நிலை அவனுக்கு ஏற்பட்டது.

அகலிகை அவனை உள்ளத்தினால் அளக்க முடியாத ஓர் அன்பால் தழைக்கவைத்தாள். அவனை நினைத்து விட்டால், அவள் மனமும் அங்கங்களும் புது மணப் பெண்ணுடையன போலக் கனிந்து விடும். ஆனால் அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக்கூட இடங் கொடாதபடி நடக்க விரும்பினாள். அதனால் அவள் நடையில் இயற்கையின் தன்மை மறந்து இயல்பு மாறியது. தன்னைச் சூழ நிற்பவர்கள் யாவருமே இந்திரர்களாகத் தென்பட்டார்கள்; அகலிகைக்குப் பயம் நெஞ்சில் உறையேறி விட்டது. அந்தக் காலத்திலிருந்த பேச்சும் விளையாட்டும் குடியோடிப்போயின. ஆயிரம் தடவை மனசுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பாடம் பண்ணிக்கொண்டு, அந்த வார்த்தை சரிதானா என்பதை நாலு கோணத்திலிருந்தும்

... ஏறிட்டுச் சாதாரணமாகப் பார்க்கிறவர்களையும் களங்கமற்ற கண் கொண்டு பார்க்கக் கூசியது. குடிசையில் ஒளிந்து கொண்டாள் அகலிகை ...

ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் எதையும் சொல்லுவாள். கோதமன் சாதாரணமாகச் சொல்லும் வார்த்தைகளுக்குக் கூட உள்ளர்த்தம் உண்டோ என்று பதைப்பாள்.

வாழ்வே அவளுக்கு நரக வேதனையாயிற்று.

அன்று மரீசி வந்தார். முன்னொருநாள் ததீசி வந்தார், மதங்கரும் வாரணாசி செல்லும் போது கோதமனைக் குசலம் விசாரிக்க எட்டிப்பார்த்தார். அவர்கள் மனசில் கனிவும் பரிவும் இருந்த போதிலும் அகலிகையின் உடம்பு குன்றிக் கிடந்தது. மனசும் கூம்பிக் கிடந்தது. அதிதி உபசாரங்கூட வழுவி விடும்போல இருந்தது. ஏறிட்டுச் சாதாரணமாகப் பார்க்கிறவர்களையும் களங்கமற்ற கண் கொண்டு பார்க்கக் கூசியது. குடிசையில் ஒளிந்து கொண்டாள்.

கோதமனுடைய சித்தாந்தமே இப்பொழுது புதுவித விசாரணையில் திரும்பியது. தர்மத்தின் வேலிகள் யாவும் மனமறிந்து செல்பவர்களுக்கே சுயப் பிரக்ஞை இல்லாமல் வழு ஏற்பட்டு, அதனால் மனுஷவித்து முழுவதுமே நசித்து விடும் என்றாலும், அது பாபம் அல்ல; மனலயிப்பும், சுயப் பிரக்ஞையுடன் கூடிய செயலீடுபாடுமே கறைப்படுத்துபவை. தனது இடிந்து போன குடிசையில் மறுபடியும் பிறர் கூட்டி வைத்த ஒரு தன்மையில் இருந்துகொண்டு புதிய கோணத்தில் தன் சிந்தனையைத் திருப்பி விட்டான் கோதமன். அவனுடைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலாவினாள்; தனக்கே அருகதை இல்லை சாபத் தீயை எழுப்பிய கோபமே தன்னை மாசுபடுத்திவிட்டது என்று கருதினான்.

சீதையும் ராமனும் உல்லாசமாகச் சமயாசமயங்களில் அந்தத் திசையில் ரத்மூர்ந்து வருவார்கள். அவதாரக் குழந்தை, கோதமனின் மனசில் லக்ஷ்ய வாலிபனாக உருவாகித் தோன்றினான். அவனது சிரிப்பும் விளையாட்டுமே தர்மசாஸ்திரத்தின் தூண்டாவிளக்குகளாகச் சாயனம் (வியாக்கியானம்) பண்ணின. அந்த இளம் தம்பதிகளின் பந்தந்தான் என்ன? அது

கோதமனுக்குத் தனது அந்தக் காலத்து வாழ்வை ஞாபகப் படுத்தும்.

அகலிகையின்மனப்பாரத்தை நீக்க வந்த மாடப்புறா சீதை. அவளது பேச்சும் சிரிப்பும், தன் மீதுள்ள கறையைத் தேய்த்துக் கழுவுவன போல் இருந்தன அகலிகைக்கு. அவள் வந்த போதுதான் அகலிகையின் அதரங்கள் புன்சிரிப்பால் நெளியும், கண்களில் உல்லாசம் உதயவொளி காட்டும்.

வசிஷ்டரின் கண் பார்வையிலே வளரும் ராஜ்யலஷ்யங்கள் அல்லவா? சரயூ நதியின் ஓரத்தில், ஒதுங்கிய இரு தனி வேறு உலகங்களில் சஞ்சரிக்கும் ஜீவன்களிடையே பழைய கலகலப்பைத் தழைக்க வைத்து வந்தார்கள்.

அகலிகைக்கு வெளியே நடமாடி நாலு இடம் போவதற்குப் பிடிப்பற்று இருந்தது. சீதையின் நெருக்கமே அவளது மனச் சுமையை நீக்கிச் சற்றுத் தெம்பை அளித்தது.

பட்டாபிஷேக வைபவத்தின் போது அயோத்திக்கு வருவதாக ஒப்புக்கொண்டிருந்தாள். ஆனால், அரண்மனைக்குள் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புக்குத்தான் என்ன வலிமை! ஒரே மூச்சில் தசரதன் உயிரை வாங்கி ராமனைக் காட்டுக்கு விரட்டி, பரதனைக் கண்ணீரும் கம்பலையுமாக நந்திக்கிராமத்தில் குடியேற்றி விட்டது.

மனுஷ அளவைகளுக்குள் எல்லாம் அடைபடாத அதீத சத்தி, ஏதோ உன்மத்த வேகத்தில் காயுருட்டிச் சொக்கட்டான் ஆடியதுபோல், நடந்து முடிந்து விட்டது.

வசிஷ்டர்தான் என்ன, சர்வ ஜாக்கிரதையோடு மனுஷ தர்மத்தின் வெற்றியாக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கண்ணில் எண்ணெயூற்றி வளர்த்தார். அவருடைய கணக்குகள் யாவும் தவிடுபொடியாகி, நந்திக் கிராமத்தில் நின்றெரியும் மினுக்கு வெளிச்சமாயிற்று.

சரயூ நதிக்குடிசை மறுபடியும் தம்பமற்று விழுந்தது என்றே சொல்ல வேண்டும். கோதமன்தர்மவிசாரமெல்லாம் இந்தப் பேய்க் காற்றில் சூறை போயிற்று. மனசில் நம்பிக்கை வறண்டு சூன்யமாயிற்று.

... ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின்உதடு அசைந்தது ''எனக்கு இங்கு இருப்புக் கொள்ளவில்லை, மிதிலைக் குப் போய்விடுவோமே'' ...

அகலிகைக்கோ? அவளது துன்பத்தை அளந்தால் வார்த்தைக்குள் அடைபடாது. அவளுக்குப் புரியவில்லை, நைந்து ஓய்ந்து விட்டாள். ராமன் காட்டுக்குப் போனான்; அவன் தம்பியும் தொடர்ந்தான்; சீதையும் போய்விட்டாள். முன்பு கற்சிலையாகிக் கிடந்தபோது மனசு இருண்டு கிடந்த மாதிரி ஆகிவிட்டது. ஆனால் மனப் பாரத்தின் பிரக்ஞை மட்டும் தாங்க முடியவில்லை.

கருக்கலில் கோதமர் ஜப தபங்களை முடித்துக் கொண்டு கரையேறிக் குடிசைக்குள் நுழைந்தார்.

அவர் பாதங்களைக் கழுவுவதற்காகச் செம்பில் ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின் உதடு அசைந்தது.

''எனக்கு இங்கு இருப்புக் கொள்ளவில்லை, மிதிலைக்குப் போய்விடுவோமே.''

''சரி, புறப்படு; சதானந்தனையும் பார்த்து வெகு நாட்களாயின'' என்று வெளியே இறங்கினார் கோதமர்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள். இருவர் மனசிலும் பளு குடியேறி அமர்ந்திருந்தது. கோதமர் சற்று நின்றார்.

பின்தொடர்ந்து நடந்துவந்த அகலிகையினுடைய கையை எட்டிப் பிடித்துக் கொண்டார்; நடந்தார்; ''பயப்படாதே'' என்றார்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள்.

3

பொழுது புலர்ந்து விட்டது. கங்கைக் கரைமேல் இருவரும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

யாரோ ஆற்றுக்குள் நின்று கணீரென்று குரலில்காயத்திரியைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஜபம் முடியும் மட்டும் தம்பதிகள் கரையில் எட்டிக் காத்து நின்றார்கள்.

''சதானந்தா!'' என்று கூப்பிட்டார் கோதமர்.

''அப்பா.. அம்மா!'' என்று உள்ளத்தின் மலர்ச்சியைக் கொட்டிக் காலில் விழுந்து நமஸ்கரித்தார் சதானந்தர்.

இருளும் ஒளியும்

மனிதன் இரண்டு வகைப் படுகிறான். ஒருவன் இருளில் விழித்திருக்கிறான்; மற்றவன் ஒளியில் தூங்குகிறான்.

–கலீல் கிப்ரான்

அகலிகை அவனை மனசால் தழுவினாள். குழந்தை சதானந்தன் எவ்வளவு அன்னியனாகி விட்டான், தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு ரிஷி மாதிரி!

கோதமருக்கு மகனது தேஜஸ் மனசைக் குளுமை யூட்டியது.

சதானந்தன் இருவரையும் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான்.

சிரம பரிகாரம் செய்து கொள்ளுவதற்கு வசதி செய்து வைத்துவிட்டு, ஜனகனது தத்துவ விசார மண்டபத்துக்குப் புறப்படலானான்.

கோதமரும் உடன் வருவதாகப் புறப்பட்டார். மகனுக்கு அவரை அழைத்துச் செல்லுவதில் பிரியந்தான். நெடுந் தூரத்துப் பிரயாணமாச்சே என்று ரத்த பந்தத்தின் பரிவால் நினைத்தான். ஊழிகாலம் நிஷ்டையில் கழித்தும் வாடாத தசைக் கூட்டமா, இந்த நடைக்குத் தளர்ந்துவிடப் போகிறது? அவனுக்குப்பின் புறப்பட்டார். அவருடைய தத்துவ விசாரணையின் புதிய போக்கை நுகர ஆசைப்பட்டான் மகன்.

மிதிலையின் தெருக்கள் வழியாகச் செல்லும்போது, அயோத்தியில் பிறந்த மனத் தொய்வும் சோகமும் இங்கும் படர்ந்திருப்பதாகப் புலப் பட்டன கோதமருக்கு, அடக்கி விட்ட பெருமூச்சு, காற்றினூனே கலந்து இழைந்தது.

ஜனங்கள் போகிறார்கள், வருகிறார்கள்; காரியங்களைக் கவனிக்கிறார்கள்; நிஷ்காம்ய சேவைபோல எல்லாம் நடக்கிறது; பிடிப்பு இல்லை; லயிப்பு இல்லை.

திருமஞ்சனக் குடம் ஏந்திச் செல்லும் அந்த யானையின் நடையில் விறுவிறுப்பு இல்லை; உடன் செல்லும் அர்ச்சகன் முகத்தில் அருளின் குதூகலிப்பு இல்லை.

இருவரும் அரசனுடைய பட்டி மண்டபத்துக்குள் நுழைந்தார்கள். சத்சங்கம் சேனா சமுத்திரமாக நிறைந்திருந்தது. இந்த அங்காடியில் ஆராய்ச்சி எப்படி நுழையும் என்று

...''வசிட்டன்தான்கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதகு அமைக்கவில்லை'' என்றான் ஜனகன் ...

பிரமித்தார் கோதமர். அவர் நினைத்தது தவறுதான்.

ஜனகன் கண்களில் இவர்கள் உடனே தென்பட்டார்கள்.

அவன் ஓடோடியும் வந்து முனிவர்க்கு அர்க்கியம் முதலிய உபசாரங்கள் செய்வித்து அழைத்துச் சென்று அவரைத் தன்பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான்.

ஜனகனுடைய முகத்தில் சோகத்தின் சோபை இருந்தது. ஆனால் அவன் பேச்சில் தழுதழுப்பு இல்லை; அவனுடைய சித்தம் நிதானம் இழக்கவில்லை என்பதைகாட்டியது.

என்னத்தைப் பேசுவது என்று கோதமர் சற்றுத் தயங்கி னார்.

''வசிட்டன் தான் கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதகு அமைக்கவில்லை'' என்றான் ஜனகன், மெதுவாகத் தாடியை நெருடிக் கொண்டு.

ஜனகரின் வாக்கு, வர்மத்தைத் தொட்டுவிட்டது.

''உணர்ச்சியின் சுழிப்பிலே தானே உண்மை பிறக்கும்'' என்றார் கோதமர்.

''துன்பமும் பிறக்கும். உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாது போனால் ராஜ்யத்தைக்கட்ட ஆசைப்படும் போது அதற்கும் இடம் போட்டு வைக்க வேண்டும்; இல்லாவிட்டால் ராஜ்யம் இருக்காது'' என்றான் ஜனகன்.

''தங்களதோ?'' என்று சந்தேகத்தை எழுப்பினார். கோதமர்.

''நான் ஆளவில்லை; ஆட்சியைப் புரிந்து கொள்ள முயலுகிறேன்'' என்றான் ஜனகன்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''தங்களது தர்ம விசாரணை எந்த மாதிரியிலோ?'' என்று விநயமாகக் கேட்டான் ஜனகன்.

''இன்னும் ஆரம்பிக்கவே இல்லை; இனிமேல்தான் புரிந்து

காலத்தின் மதிப்பு.

காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா? அப்படியானால், உனக்கு வாழ்வின் மதிப்பும் தெரியும்.

– நெல்சன்

படமும் செய்தியும்...



பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி. இராணி அம்மையாரின் திருவுருவப் படத்தை அவரது இல்லத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்கள். (20.5.96)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில், "கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள்" உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. (21.5.96)

தமிழ்கச் சட்டப்பேரவைத் துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட திரு. பரிதி இளம்வழுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். (23.5.96)



சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழக அமைச்சரவை முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அனைத்து அமைச்சர் பெருமக்களும் கலந்து கொண்டனர். (22.5.96)

'தமிழரசு' தேர்தல் சிறப்பிதழை மாண்புமிகு செய்தி - விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லை வேந்தன் அவர்களிடம் இருந்து (23.5.96) மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கொள்ள முயல வேண்டும்; புதிர்கள் பல புலன்களையெல்லாம் கண்ணியிட்டுக்கட்டுகின்றன'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் கோதமர்.

மறுநாள் முதல் அவர் ஜனகன் மண்டபத்துக்குப் போகவில்லை. புத்தியிலே பல புதிர்கள் ஹிமாசலத்தைப் போல் ஓங்கி நின்றன. தனிமையை விரும்பினார். ஆனால் நாடிச் செல்லவில்லை. அகலிகை மனசு ஒடிந்து விடக்கூடாதே!

மறுநாள் ஜனகன், ''முனீசுவரர் எங்கே?'' என்று ஆவலுடன் கேட்டான்.

''அவர் எங்கள் குடிசைக்கு எதிரே நிற்கும் அசோக மரத்தடியில்தான் பொழுதைக் கழிக்கிறார்'' என்றார் சதானந்தர்.

''நிஷ்டையிலா?''

''இல்லை; யோசனையில்''

''அலை அடங்கவில்லை'' என்று தனக்குள்ளே மெதுவாக சொல்லிக் கொண்டான் ஜனகன்.

அகலிகைக்கு நீராடுவதில் அபாரமோகம். இங்கே கங்கைக் கரையருகே நிம்மதி இருக்கும் என்று தனியாக உதய காலத்திலேயே குடமெடுத்துச் சென்று விடுவாள்.

இரண்டொரு நாட்கள் தனியாக, நிம்மதியாகத் தனது மனசின் கொழுந்துகளைத்

சொல்லும் சிந்தனையும்
சொற்கள் நம் சிந்தனையின் உடைகள். அவற்றைக் கந்தல்களாகவும், பிசில்களாகவும், அழுக்காகவும் உடுத்தக்கூடாது.
– செஸ்டர் பீல்டு

தன்னிச்சையோடு படரும்படி விட்டு, அதனால் சுமை நீங்கியதாக ஒரு திருப்தியுடன் குளித்து முழுகி விளையாடிவிட்டு நீர் மொண்டு வருவாள்.

இது நீடிக்கவில்லை.

குளித்துவிட்டுது திரும்பிக் குனிந்த நோக்குடன், மனசை இழைய விட்டுக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தாள்.

எதிரே மெட்டிச் சப்தம் கேட்டது. ரிஷிபத்தினிகள் யாரோ! அவர்களும் நீராடத்தான் வந்து கொண்டிருந்தார்கள், அவளைக் கண்டதும் பறைச்சி

.... தெய்வமே! சாப விமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா?'' என்று தேம்பினாள் அகலிகை...

யைக் கண்டது போல ஓடி விலகி, அவளை விறைத்துப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

''அவள்தான் அகலிகை'' என்பது தூரத்தில் கேட்டது. கோதமனுக்கு அன்று அடிவயிற்றில் பற்றிக் கொண்டு பிறந்த சாபத் தீயைவிட அதிகமாகச்சுட்டன அவ்வார்த்தைகள்.

அவள் மனசு ஒரேயடியாகச் சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. சிந்தனை திரிந்தது. ''தெய்வமே! சாப விமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா?'' என்று தேம்பினாள்.

யந்திரப்பாவை போல அன்று கோதமருக்கும் சதானந்த

மரமும் அறிவும்
பச்சை மரத்தை வேலைக்கு அதிகமாக பயன்படுத்தக் கூடாது. அது போலத்தான் பண்படாத அறிவும்.
– ஹோம்ஸ்

ருக்கும் உணவு பரிமாறினாள். 'மகனும் அன்னியனாகி விட்டான்; அன்னியரும் விரோதிகளாகி விட்டார்கள்; இங்கென்ன இருப்பு?' என்பதே அகலிகையின் மனசு அடித்துக் கொண்ட பல்லவி.

கோதமர் இடையிடையே பிரக்ஞை பெற்றவர் போல் ஒரு கவளத்தை வாயிலிட்டு நினைவில் தோய்ந்திருந்தார்.

இவர்களது மன அவசத்தால் ஏற்பட்ட பளு சதானந்தனையும் மூச்சு திணற வைத்தது.

பளுவைக் குறைப்பதற்காக, ''அத்திரி முனிவர் ஜனகனைப் பார்க்க வந்திருந்தார். அகத்தியரைப் பார்த்துவிட்டு வருகிறார் மேருவுக்குப் பிரயாணம். ராமனும் சீதையும் அகத்தியரைத் தரிசித்தார்களாம். அவர்கள் இருவரையும், 'நல்ல இடம் பஞ்சவடி, அங்கே தங்குங்கள்' என்று அகத்தியர் சொன்னாராம் அங்கே இருப்பதாகத்தான் தெரிகிறது'' என்றான் சதானந்தன்.

''நாமும் தீர்த்தயாத்திரை செய்தால் என்ன?'' என்று அகலிகை மெதுவாகக் கேட்டாள்.

''புறப்படுவோமா?'' என்று கைகளை உதறிக் கொண்டு எழுந்தார் கோதமர்.

''இப்பொழுதேயா?'' என்றான் சதானந்தன்.

''எப்பொழுதானால் என்ன?'' என்று கூறிக் கொண்டே,

மூலையிலிருந்த தண்டு கமண்டலங்களை எடுத்துக்கொண்டு வாசலை நோக்கினார் கோதமர்.

அகலிகை பின்தொடர்ந்தாள்.

சதானந்தன் மனம் தகித்தது.

4

பொழுது சாய்ந்து, ரேகை மங்கிவிட்டது. இருவர் சரயூ நதிக் கரையோரமாக அயோத்தியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

பதினான்கு வருஷங்கள் ஓடிக் காலவெள்ளத்தில் ஐக்கியமாகி விட்டன. அவர்கள் பார்க்காத முனிபுங்கவர் இல்லை; தரிசிக்காத க்ஷேத்திரம் இல்லை, ஆனால் மன நிம்மதி மட்டிலும் அவர்களுக்கு இல்லை.

வலுவற்றவனின் புத்திக்கு எட்டாது நிமிர்ந்து நிற்கும் சங்கரனுடைய சிந்தனைக் கோயில் போல, திடமற்றவர்களின் கால்களுக்குள் அடைபடாத கைலயங்கிரியைப் பனிச் சிகரங்களின்மேல் நின்று தரிசித்தார்கள்.

தமது துன்பச் சுமையான நம்பிக்கை வறட்சியை உருவகப்படுத்திய பாலையைத் தாண்டினார்கள்.

தம் உள்ளம்போலக் கொழுந்துவிட்டுப் புகை மண்டிச் சாம்பலையும், புழுதியையும் சுமக்கும் எரிமலைகளை வலம் வந்து கடந்தார்கள்.

தமது மனம்போல ஓயாது அலைமோதிக் கொண்டு கிடக்கும் சமுத்திரத்தின் கரையை எட்டிப் பின்னிட்டுத் திரும்பினார்கள்.

தம் வாழ்வின் பாதை போன்ற மேடு பள்ளங்களைக் கடந்து வந்துவிட்டார்கள்.

'இன்னும் சில தினங்களில் ராமன் திரும்பி விடுவான்; இனிமேலாவது வாழ்வின் உதய காலம் பிறக்கும்' என்ற ஆசைதான் அவர்களை இழுத்து வந்தது.

பதினான்கு வருஷங்களுக்கு முன் தாம் கட்டிய குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.

இரவோடு இரவாக, குடியிருக்க வசதியாகக் கோதமர் அதைச் செப்பனிட்டார். வேலை முடியும் போது உதய வெள்ளி சிரித்தது.

இருவரும் சரயூவில் நீராடித் திரும்பினார்கள்.

... ''குழந்தை வைத்த நெருப்பு ஊரைச் சுட்டு விட்டால் குழந்தையைக் கொன்று விடுவதா?'' என்றாள் கைகேயி ...

கணவனாருக்குப் பணிவிடை செய்வதில் முனைந்தாள் அகலிகை. இருவரது மனசும் ராமனும் சீதையும் வரும் நாளை முன்னோடி வரவேற்றது. இருந்தாலும் காலக்களத்தின் நியதியை மனசைக் கொண்டு தவிர, மற்றபடி தாண்டிவிட முடியுமா?

ஒரு நாள் அதிகாலையில் அகலிகை நீராடச் சென்றிருந்தாள்.

அவளுக்குமுன், யாரோ ஒருத்தி விதவை குளித்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள்; யார் என்ற அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை; ஆனால் எதிரே வந்தாள், அடையாளம் கண்டுகொண்டு விட்டாள். ஓடோடியும் வந்து அகலிகையின் காலில் சர்வாங்கமும் தரையில் பட விழுந்து நமஸ்கரித்தாள்.

தேவி கைகேயி! தன்னந்தனியாக, பரிசனங்களும் பரிவாரமும் இல்லாமல், துறவியாகி விட்டாளே!

குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவளை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினாள். அவளுக்குக் கைகேயியின் செயல் புரியவில்லை.

''தர்ம ஆவேசத்திலே பரதன் தன்னுடைய மனசில் எனக்கு இடம் கொடுக்க மறந்து விட்டான்'' என்றாள் கைகேயி.

குரலில் கோபம் தெறிக்கவில்லை; மூர்த்தன்யம் துள்ளவில்லை. தான் நினைத்த கைகேயி வேறு; பார்த்த கைகேயி வேறு. படர்வதற்குக் கொழுகொம்பற்றுத் தவிக்கும் மனசைத்தான் பார்த்தாள் அகலிகை.

இருவரும் தழுவிய கை மாறாமல், சரயூவை நோக்கி நடந்தார்கள்.

''பரதனுடைய தர்ம வைராக்கியத்துக்கு யார்காரணம்?'' என்றாள் அகலிகை. அவளுடைய உதட்டின் கோணத்தில் அநு

புத்தகம்
புத்தகங்கள் மற்றவர்களை நீங்கள் புரிந்துகொள்ளும்படி மட்டும் செய்யவில்லை உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.
– அகஸ்டின்

மனிதன்

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே!

– மாத்யூஸ்

தாபம் கனிந்த புன்சிரிப்பு நெளிந்து மறைந்தது.

''குழந்தை வைத்த நெருப்பு ஊரைச் சுட்டு விட்டால் குழந்தையைக் கொன்று விடுவதா?'' என்றாள் கைகேயி.

குழந்தைக்கும் நெருப்புக்கும் இடையில் வேலி போடுவது அவசியந்தான் என்று எண்ணினாள் அகலிகை. ''ஆனால் எரிந்தது எரிந்ததுதானே?'' என்று கேட்டாள்.

''எரிந்த இடத்தைச் சுத்தப் படுத்தாமல் சாம்பலை அப்படியே குவித்து வைத்துக்கொண்டு சுற்றி உட்கார்ந்திருந்தால் மட்டும் போதுமா?'' என்றாள் கைகேயி.

''சாம்பலை அகற்றுகிறவன் இரண்டொரு நாட்களில் வந்து விடுவானே'' என்றாள் அகலிகை.

''ஆமாம்'' என்றாள் கைகேயி. அவள் குரலில் பரம நிம்மதி தொனித்தது. ராமனை எதிர்பார்த்திருப்பது பரதனல்ல; கைகேயி.

மறுநாள் அவள் அகலிகையைச் சந்தித்த பொழுது முகம் வெறிச்சோடியிருந்தது; மனசு நொடிந்து கிடந்தது.

''ஒற்றர்களை நாலு திசைகளிலும் விட்டு அனுப்பிப் பார்த்தாகி விட்டது. ராமனைப் பற்றி ஒரு புலனும் தெரியவில்லை. இன்னும் நாற்பது நாழிகை நேரத்துக்குள் எப்படி வந்துவிடப் போகிறார்கள்? பரதன் பிராயோபவேசம் செய்யப் போகிறானாம். அக்கினி குண்டம் அமைக்க ஏற்பாடு செய்வது வருகிறான்'' என்றாள் கைகேயி.

பரதன் எரியில் தன்னை அவித்துக் கொள்ளுவது தன் மீது சுமத்தப்பட்ட ராஜ்ய மோகத்துக்குத் தக்க பிராய சித்தம் என்று அவள் கருதுவதுபோல் இருந்தது பேச்சு.

சற்று நிதானித்து, ''நானும் எரியில் விழுந்து விடுவேன்; ஆனால் தனியாக, அந்தரங்கமாக'' என்றாள் கைகேயி, அவள் மனசு வைராக்கியத்தைத் தெறித்தது.

... ''பரதன் தர்மத்துக்குத் தான் கட்டுப்படுவான்; வசிட்டருக்குக் கட்டுப்பட மாட்டான்'' என்றாள் கைகேயி ...

பதினான்கு வருஷங்கள் கழித்து மறுபடியும் அதே உணர்ச்சிச் சுழிப்பு. அயோத்திக்க ஏற்பட்ட சாபத் தீ நீங்கவில்லையா?

அகலிகையின் மனசு அக்குத் தொக்கு இல்லாமல் ஓடியது. தனது காலின் பாபச் சாயை என்றே சந்தேகித்தாள்.

''வசிட்டரைக் கொண்டாவது அவனைத் தடை செய்யக் கூடாதோ? என்றாள் அகலிகை.

''பரதன் தர்மத்துக்குத்தான் கட்டுப்படுவான்; வசிட்டருக்குக் கட்டுப்படமாட்டான்'' என்றாள் கைகேயி.

''மனிதருக்கக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்துக்குச் சத்துரு' என்று கொதித்தாள் அகலிகை.

தன்னடைய கணவர் பேச்சுக்குப் பரதன் ஒரு வேளை கட்டுப்படக்கூடாதோ என்றநைப்பாசை, மறுபடியும் அயோத்தியில் துன்பச் சக்கரம் சுழல ஆரம்பித்துவிடக் கூடாதே என்ற பீதி.

கோதமன் இணங்கினான். ஆனால் பேச்சில் பலன் கூடவில்லை.

பரதனை உண்டு பலி கொள்ள அக்கினி தேவன் விரும்பவில்லை. அனுமான் வந்தான்; நெருப்பு அவிந்தது. திசைகளின் சோகம் கரை உடைந்த குதூகல வெறியாயிற்று. தர்மம் தலை சுற்றியாடியது.

வசிட்டனுக்கும் பதினான்கு வருஷங்கள் கழித்த பிறகாவது கனவு பலிக்கும் என்று மீசை மறைவில் சிரிப்புத்துள்ளாடியது.

இன்ப வெறியில் அங்கே நமக்கு என்ன வேலை என்று திரும்பி விட்டான் கோதமன்.

சீதையும் ராமனும் தன்னைப் பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்தாள்.

இளமையின் இரகசியம்!

எப்போதும் இளமையாக இருப்பதற்கான இரகசியம் இதுதான். எந்த உணர்ச்சிக்கும் வசமாகிவிடாமல் இருப்பதே அது.

– ஆஸ்கார் ஒயில்ட்

வரவேற்பு ஆரவாரம் ஒடுங்கியதும் அவர்கள் இருவரும் பரிவாரம் இன்றி வந்தார்கள்.

ரதத்தை விட்டு இறங்கிய இராமனது நெற்றியில் அநுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அனுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோக்ஷ லாகிரியை ஊட்டியது.

ராமனை அழைத்துக்கொண்டு கோதமன் வெளியே உலாவச் சென்று விட்டான்.

தன் கருப்பையில் கிடந்து வளர்ந்த குழந்தையால் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை அவளை உள்ளே அழைத்துச் சென்றாள். இருவரும் புன் சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்துவிட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள், அகலிகை துடித்து விட்டாள்.

''அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?'' என்று கேட்டாள்.

''அவர் கேட்டார். நான் செய்தேன்'' என்றாள் சீதை, அமைதியாக.

''அவன் கேட்டானா?'' என்று கத்தினாள் அகலிகை; அவள் மனதில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?

இருவரும் வெகு நேரம் மௌனமாக இருந்தனர்.

''உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?'' என்று கூறி மெதுவாகச் சிரித்தாள் சீதை.

''உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?'' என்றாள் அகலிகை, வார்த்தை வறண்டது.

''நிரூபித்து விட்டால் மட்டும் அது உண்மையாகி விடப்போகிறதா; உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும்; உலகம் ஏது?'' என்றாள் அகலிகை.

வெளியே பேச்சுக் குரல் கேட்டது, அவர்கள் திரும்பி விட்டார்கள்.

... அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா? ...

சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.

ரதம் உருண்டது; உருளைகளின் சப்தமும் ஓய்ந்தது.

கோதமன் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்தான். நிலை காணாது தவிக்கும் திரிசங்கு மண்டலம் அவன் கண்ணில் பட்டது.

புதிய யோசனையில் ஒன்று மனக் குகையில் மின் வெட்டிப் பாய்ந்து மடிந்தது. மனச சமையை நீக்கிப் பழைய பந்தத்தை வரவிக்க, குழந்தை ஒன்றை வரித்தால் என்ன? அதன் பசலை விரல்கள் அவள் மனசில் சுமையை இறக்கி விடவா?

உள்ளே நுழைந்தான்.

அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம், மறக்க வேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்து கொண்டிருந்தது.

கோதமன் அவளைத் தழுவினான்.

கோதமன் உருவில் வந்த இந்திர வேடமாகப் பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லால் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்.

மனச்சுமை மடிந்தது.

★ ★ ★

கைலயங்கிரியை நாடி ஒற்றை மனித உருவம் பனிப் பாலைவனத்தின் வழியாக விரைந்து கொண்டிருந்தது. அதன் கதிகாலில் விரக்தி வைரம் பாய்ந்து கிடந்தது.

அவன்தான் கோதமன்.

அவன் துறவியானான்.

நன்றி : ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

சாபவிமோசனம் கதைபற்றிய விமரிசனங்களுக்கு படைப்பாளர் புதுமைப்பித்தனின் பதில் பக்கம் எண் 36 .ல்

வள்ளுவர் செய்த புரட்சி!

திருக்குறள் என்னும் நூலின் அமைப்பே, உலக வாழ்வு பற்றிய வள்ளுவரின் பார்வையைத் தெளிவாக்கு கிறது. தலைவனும் தலைவியும் கூடிக்களிக்கும் இன்பத்தை வள்ளுவர் காமத்துப்பாலில், இருபத்தைந்து அதிகாரங்களில் எடுத்துக் கூறியுள்ளார். ஏனைய பல அறநூல்களும் சமய நூல் களும் கூறுவது போல, அவர் இத்தகைய இன்பத்தைச் சிற்றின்பமென இழிந்துரைக்க வில்லை. களவொழுக்கத்தைக் கூட, அவர் கடிந்துரைத்திட வில்லை. உயர்ந்த குறிக்கோளு டைய காதலின்பத்தை வள்ளுவர் காமத்துப் பாலிற் கூறியுள்ளார். இலட்சியநோக்குடையவள்ளுவர் கையில் அகப்பொருள் மரபு இத்தகைய வடிவத்தைப் பெறு கிறது. இயற்கை நெறிக்காலத் தமிழர் வாழ்வில் இடம்பெற்ற பரத்தை வாழ்வில் எழும் பிணக்கினை மருதமாகக் கூறா மல், வெவ்வேறு வளர்ந்த இரண்டு உள்ளங்கள் படிப் படியே ஊடாடித் தட்டுத்தடு மாறி ஒன்றாய்க் கூடுவதனையே மருதமாகக் கூறிப் பெரியதொரு புரட்சி செய்துள்ளார் வள்ளுவர் என எடுத்துக்காட்டுவர். புலவி நுணுக்கம் வள்ளுவர் கூறிய புதுவகை மருதமாகும்.

– டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை எழுதிய ''தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்'' என்னும் நூலிலிருந்து.

எல்லாரையும் கவரும் முல்லாவின் கதை

சர்க்கரையும் உப்பும்

ஒரு சமயம் முல்லாவும், அவருடைய நண்பரும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்றனர்.

நண்பர்கள் இருவரிடமும் ஒரே ஒரு குவளை இருந்தது. எனவே, நண்பர்கள் இருவரும் ஆளுக்குப் பாதி பணம்போட்டுக் குவளை நிறையப் பால் வாங்கினார்கள்.

நண்பர், முல்லாவிடம், ''முல்லா, உங்களுடைய பாதிப்பங்குப் பாலைப் பருகிவிட்டு, மீதிப்பாலை என்னிடம் தந்தால், நான் என்னிடம் உள்ள சிறிது சர்க்கரையை அதில் கலந்து பருகுவேன்'' என்றார்.

உடனே முல்லா, ''தோழரே! பாலில் சர்க்கரையை இப்போதே கலந்துவிடுங்கள். நான் பாதிப் பாலைப் பருகிவிட்டு, மீதிப்பாலை உங்களிடம் தருகிறேன்'' என்று சொன்னார்.

அதற்கு நண்பர் ''என்னிடம் உள்ள சர்க்கரை பாதிக் குவளைப் பாலுக்குத்தான் போதுமானதாக இருக்கும். ஆதலால், நான் இப்போதே பாலில் சர்க்கரையைக் கலக்க மாட்டேன், உங்களுடைய பாதிப்பங்கு பாலைக் குடித்து விட்டு மீதியைக் கொடுங்கள்'' என்று கூறினார் நண்பர்.

நண்பரின் தன்னலத்தைக் கண்டு கோபமடைந்த முல்லா, 'சரி' என்று சொல்லிவிட்டுத் தம் பையிலிருந்த பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார்.

நண்பர், ''அது என்ன பொட்டலம் முல்லா?'' என்று ஆவலுடன் கேட்டார்.

அதற்கு முல்லா, ''இது உப்பு. என் பங்குப் பாலில் உப்பைக்கலந்து பருகப்போகிறேன்'' என்று சொன்னார்.

உடனே நண்பர் பதறி, ''வேண்டாம் முல்லா... அவ்வாறு செய்யாதீர்கள்!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, முல்லா பாலில் உப்பைக் கொட்டி, அது பாலில் கலக்கு முன், மடமடவென்று பாதிக் குவளைப் பாலைப் பருகியபின், மீதியைத் தோழரிடம் கொடுத்தார்.

முல்லாவின் செயலைக் கண்டு திகைத்துவிட்டார் நண்பர்.

மூக்கு

மூக்கின் மேல் விரல் வைக்க வைக்கும் வியத்தகு செய்திகள்

டாக்டர் எம்.ஜூப்ளி, எம்.டி.

சுவாசிப்பதற்கு முக்கியமான உறுப்பு மட்டுமல்ல; முகத்திற்கு அழகு சேர்ப்பதாகவும் விளங்குவது மூக்குதான். மூக்கு எடுப்பாக இல்லாவிட்டால், மற்றவர்கள் கேலி செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். 'இதென்ன ஜப்பான் காரனாட்டம்' என்றெல்லாம் அப்படிப்பட்டவர்களைக் கிண்டல் செய்வார்கள்.

முகத்திலேயே, நம் மூக்கைச் சுற்றிலும் பரவலாக நான்கு காற்றுப் பைகள் (Paranasal Air Sinus) இருக்கின்றன. அவைகளே, நாம் நம் தலையில் பாரத்தை உணரமுடியாமல் செய்கின்றன.



இத்தகைய காற்றுப் பைகளில் Frontal என்ற காற்றுப்பை நம் நெற்றியில் இருக்கிறது. Maxilary Sinus என்னும் காற்றுப்பையானது கண்களுக்குக் கீழே, மேல் தாடையில் இருக்கிறது. Ethmoidal Sinus காற்றுப் பைகள் மூக்கைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. Sphenoidal Sinus எனப்படுவது நம்முடைய நடு நெற்றியின் உள் ஆழத்தில் அமைந்திருக்கிறது.

இந்தக் காற்றுப் பைகளில் சீழ் உண்டானால் 'சைனசைடிஸ்' என்னும் தலைவலி ஏற்படும். இதில் 2 வகை உண்டு. அக்யூட் (Acute) என்கிற 'சைனசைடிஸ்' சில நாட்கள்தான் இருக்கம். கிரானிக் சைனசைடிஸ் என்பது மாதக் கணக்கில் நீடிக்கும்.

முதலாவதைப் போக்க மருந்தே போதும்; ஆனால் இரண்டாவது ஏற்பட்டால் அறுவை சிகிச்சைவரை போய்த்தான் ஆக வேண்டும்.

'கிரானிக் சைனசைடிஸ்' பிறவிக் கோளாறுகளாலும் வரும்; தூசி தும்புகளாலும் ஏற்படும்.

மெலிதான எலும்புகளாலும், தசைகளாலும் ஆன மூக்கில் வெளியே இரண்டு துளைகள் இருப்பது நமக்குத் தெரிகிறது; அதேபோல மூக்கின் கடைசியிலும் இரண்டு துளை கள் உண்டு.

'தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு - சுழிமாறிப் போனாலும் போச்சு' என்பது ஒரு பழம்பாடல். உயிருக்கு அவ்வளவு முக்கியமான காற்றைப் பிராணவாயுவாக உள்ளே இழுத்தும், கரியமில வாயுவாக வெளியேற்றியும் நம்மை உயிர்வாழ வைக்கின்ற உன்னதப் பணியைச் செய்வது மூக்கேயாகும்.

மூக்கின் முன்பு உள்ள புடைத்த பகுதியின் உட்புறத்தில் மெலிதான உரோமங்கள் இருக்கும்; இவைகள் மூலமே நாம் சுவாசிக்கும் காற்று சுத்திகரிக்கப்பட்டு நுரையீரலுக்கு அனுப்பி வைக்கப் படுகிறது.

நம் மூக்குத் துவாரத்தைச் சுற்றி, முகத்தில் இருக்கின்ற சுரப்பிகள் (Mucus Glands) முக்கியமானவை; இவற்றால்தான் நாம் சுவாசிக்கின்ற காற்று குளிர்விக்கப்படுகிறது.

நம்முடைய மூக்கில், முக்கியமாக ஏற்படும் நான்கைந்து கோளாறுகள் உண்டு. அதைக்கூட - பிறவிக் கோளாறுகள் என்றும், அவை அல்லாதவை என்றும் நாம் இரண்டாகப் பிரிக்கலாம்.

அவற்றைப் பற்றி நாம் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

★ மூக்கில் ஏற்படும் குறைபாடு அல்லது நோய் என்பது முக்கியமாகக் கிருமிகளால் உண்டாகும்.

★ ஒவ்வாமையால் (Allergy) உண்டாகும். நரம்புக் கோளாறு மூலம் ஏற்படும்.

★ கட்டிகள் மூலமாக வரும்.

★ இரத்தம் வடிதலால் உண்டாகும்.

★ மூக்கில் அடிபடுவதாலும் வரும்.



முகத்திற்கு அழகு தரும் முக்கிய உறுப்பான மூக்கு, சிலபேருக்கு அவலட்சணம் உண்டாக்குவதாக ஆகிவிடும். பிறவியிலேயே சிலருக்கு மூக்கு கோணல் மாணலாக அமைந்து விடுவதுண்டு. அல்லது மூக்கின் உள் எலும்பில் பிறப்பிலேயே வளைவு (Septal Deviation) ஏற்பட்டு அப்படியொரு குறைபாடு வரக்கூடும்; எதிர்பாராமல் அடிபட்டாலும் மூக்கு அவ்வாறு முகவசீகரத்தை மாற்றிவிடக் கூடும். இப்படிப்பட்ட மூக்கு உள்ளவர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் அதை சரிப்படுத்திட முடியும்; அல்லது பிளாஸ்டிக் சர்ஜரி மூலமும் சீராக்கிட முடியும்.

முள் இல்லாக் கடிகாரம்!

சோம்பேறி என்பவன் இரண்டு முள்களும் இல்லாத கடிகாரம். அது நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை.

—கூப்பர்

பிரச்சினை எது?

பிரச்சினை எது என்று அறிவது முதல் பிரச்சினை. அதை அறிந்தாலே பாதிப் பிரச்சினை தீர்ந்து விடும்.

- ருப்யார்ட் கிப்ளிங்

அடுத்ததாக - மூக்கைத் தான் எல்லாவிதக் கிருமிகளும், பாக்டீரியா, வைரஸ், பங்கஸ் (Funcus) போன்றவைகளும் முதலில் தாக்கும் - அல்லது உடலுக்குள் செல்லும். இதனால் பலவகையான நோய்கள் ஏற்படக் கூடும். பொதுவாக இதனால் சாதாரணமாக முதலில் எல்லோருக்குமே ஏற்படுவது ஜலதோஷம் (Common Cold)

மூன்றாவதாக ஒவ்வாமையைச் சொல்லலாம். Allergic Rhinitis என்கின்ற ஒவ்வாமை நோய் மூக்கால் உண்டாகும். சுவாசிக்கும் காற்றில் கலந்துள்ள தூசி, நாய்களின் உடலில் உள்ள ஒட்டுண்ணி போன்றவைகளால் இந் நோய் வரக்கூடும். நோய் வருவதற்கான முன் அறிகுறிதான் தும்மல், தலைவலி போன்றவைகளாகும். மேலே நாம் தெரிவித்த காரணங்களைத் தவிர்த்தால், இவ் வகை நோயைக் கட்டுப் படுத்தலாம்.

இவ்வகையான பாதிப்பு, சில பேருக்கு வாரக் கணக்கிலோ, மாதக் கணக்கிலோ இருக்கும்; இன்னம் சிலருக்கு ஆண்டு முழுவதும் நீடிக்கும். அப்படி நீடித்திருப்பதை மருத்துவர்கள் 'Perennial Rhinitis' என்பார்கள்.

மூகத்தில் - மூக்கைச் சுற்றியுள்ள காற்றுப் பை களில் நோய்க் கிருமிகள் பரவுவது உண்டு; அப்படிப்பட்ட நிலை வந்தால், மருந்து மாத்திரைகள் மூலம் அதைக் குணப்படுத்துவது அவ்வளவு சுலபம் இல்லை; அப்படி அந்தப்

பிரச்சினையின் முற்றிய நிலை Chronic Sinusitis எனப்படும். இவ்வாறு ஆகிவிட்டால் நிச்சயம் அறுவை சிகிச்சை செய்து தான் தீரவேண்டும்.

இதையடுத்து-மூக்கில் சதை (Polyps) வளர்வது, கட்டிகள் (Tumour) ஆகிய துன்பங்களும் சிலருக்கு உண்டாகும்.

இன்னும் சிலருக்கு அவ்வப்போது மூக்கில் இரத்தம் வருவது உண்டு. இது மூக்கைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிடத் தக்க நோய் ஆகும். இதை ஆரம்பத்திலேயே கட்டுப் படுத்தத் தவறினால் உயிருக்கே ஆபத்தாகி விடும்.

சிறியவர்களைப் பொறுத்தவரையில், மூக்கில் உள்ள Little's area என்ற இரத்த நாளங்கள் நிறைந்த பகுதியில் சிறுகாயம் பட்டால் கூட இதுபோல் இரத்தக் கசிவு ஏற்படும்.

சிறியவர்களானாலும், பெரியவர்கனாலும் - சில பேருக்கு இரத்தப் புற்றுநோய், இரத்தம் உறையத் தேவையான அணுக்கள் (Platelets) குறைதல் போன்றவற்றாலும் மூக்கில் இரத்தக் கசிவு உண்டாகும்.

அவ்வாறில்லாமல் - இரத்தம் உறையத் தேவையான புரதம் (Clotting Factors) குறைவானாலோ, காணப்படாமலோ போனால் கூட மூக்கில் இரத்தம் வரும்.

தேங்கியுள்ள நீரில் உள்ள பாசியானது மூக்கினுட் புகுந்து பெருகினால், அதன் காரணமாக உள்ளே கட்டிகள் ஏற்படும். பெரும்பாலும் குளத்தில் குளிப்பவர்கள் இவ்வகைப் பாதிப்பிற்கு ஆளாவது உண்டு. அது போன்ற கட்டி வந்தாலும் ஆபத்து தான். (உதாரணம்) RHINOSPORIDIOSIS எனப்படும் நோய்.

இந்த நிலை ஏற்பட்டாலும் மூக்கிற்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படும்.

இவை தவிர, உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்படுகிறவர்களுக்கும் எப்போதாவது மூக்கில் இரத்தக் கசிவு உண்டாகும். அவ்வாறானவர்கள், உடனே மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க, அவர் பரிந்துரை செய்யும் மாத்திரைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் உட்கொள்ள வேண்டும்.

நம் மூக்கில், Angioma எனப்படும் சிறு கட்டிகள் உண்டானாலும் சரி; அடி பட்டாலும் சரி, இரத்தம் வரத்தான் செய்யும். ஆனால், அதைச் சற்றும் அலட்சியப்படுத்தக்கூடாது. அதை நிறுத்த ஆவன செய்ய வேண்டும். அதில் நிற்காவிட்டால், அவசியம் மருத்துவரை நாடியே ஆகவேண்டும்.

சிலரை நாம் 'மூக்கால் பேசுகிறார்' என்றோ, பெண் குரலில் பேசுவதாகவோ கேலி செய்வது உண்டு; அதற்குக் காரணம், சளியால் மூக்கில் உண்டாகும் அடைப்புதான். அப்படி ஏற்பட்டால், குரலிலும் மாறுபாடு உண்டாகும்.

பொடி போடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் சிலபேர், அதனால் ஒரு தனி உற்சாகம் ஏற்படுவதாகச் சொல்லுவார்கள்; அதெல்லாம் சுத்தப் பொய். பொடி போடுவதால் எந்தவித நன்மையும் இல்லை; அதே நேரத்தில், அதிலும் ஓர் அளவைத் தாண்டிவிட்டால், அதன் காரணமாகவும் மூக்கில் இரத்தம் வந்துவிடும்.

இப்படி இரத்தக் கசிவுக்கு ஆளாகிறவர்கள், கூடியவரை வாயால் சுவாசிக்கலாம்;

உங்களுடைய படிப்பு அனுபவம் முதலியவற்றைவிட முக்கியமான தகுதி ஒன்று உண்டு. எந்த ஒரு செயலிலும் விடாப்பிடியாகக் கடினமாக உழைக்கும் மன உறுதியே அத்தகுதியாகும்.

– ஹென்றி ஃபோர்ட்

முயலும் ஆமையும்

ரசூல் கம்சதோவ் - ரஷியா

மனிதர்களே,
ஆமையைப் போல் ஏன் இவ்வளவு
மெதுவாகச் செல்கிறீர்கள்?

ஆமை பாய்ந்து ஓடுவதில்லை
ஆனால், அது எச்சரிக்கை மிகுந்த பிராணி,
குறைந்தது நூறு வருஷங்களாவது
வாழ்கிறது.

மனிதர்களே
முயலைப் போல் ஏன் அலறி அடித்துக்
கொண்டு ஓடுகிறீர்கள்?

முயல் வேகமாக ஓடுகிறது.
ஆனால், ஐந்து ஆண்டுகளுக்கு
மேல் அது உயிருடன் இருப்பதில்லையே.

✲ ✲ ✲

சரித்திரம்

சென் ஈ - சீனா

சரித்திரம் மிகவும் நேர்மையானது
கணக்குத் தீர்க்கும் நாள் நிச்சயம் வரும்
சரியான பக்கத்தில் நிற்பவர்கள்
தலைமை வகித்துச் செல்வார்கள்
தவறான பக்கத்தில் நிற்பவர்கள் வீழ்வார்கள்.

''வீணையே வாளாக''
மொழியாக்கக் கவிதைகள் நூலிலிருந்து.

சாபவிமோசனம் கதைபற்றிய விமரிசனங்களுக்குப் படைப்பாளர் புதுமைப்பித்தனின் பதில்

முக்கால் வாசிப் பேருக்கு இந்த சாப விமோசனம் கதை பிடிக்கவில்லை. காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. விமரிசகர் 'சென்று தேய்ந்திறுதல்' என்றார். ஆனால் இன்னும் ஒருவர் வால்மீகி கதையில் அகலிகை கல்லாகவில்லையென்றும் ஜனங்களுக்கு உண்மையை விட உண்மையின் மீதுள்ள பாசிதான் கண்களுக்குப் பளபளப்பாக இருக்கிறது என்றார். பாசி என்பதுதான் என்ன? மனப்பக்குவத்தில் ஒரு நிலைதானே அதுவும்? அப்படிப் பார்க்கப் போனால் ஜனக ராகங்களிலிருந்து ஜன்ய ராகங்கள் பிறப்பது எல்லாமே பாசிதானே? தொன்னைக்கு நெய் தான் ஆதாரம் என்று கருதுகிறவர்கள் தாம், ஒரு குறிப்பிட்ட கோல வகையில்தான் எதுவும் அமைந்திருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். வேறு ஒரு விதமான கோலம் போட்டுக்காண்பிக்க முடியாது, கூடாது என்று கருதுகிறவர்கள் – இவர்கள் தத்துவ வாதிகள். உலக சிருஷ்டி இவர்களுடைய தத்துவத்துக்குள் மட்டும் ஒடுங்கி விடவில்லை.

நான் கதை எழுதுகிறவன். கதையிலே கல் உயிர் பெற்று மனிதத்தன்மை அடைந்து விடும், மூட்டைப் பூச்சிகள் அபிவாதையே சொல்லும். அதற்கு நான் என்ன செய்யட்டும்? கதையுலகத்தின் நியதி அது. நீங்கள் கண் கூடாகக் காணும் உலகத்தில் மனிதன் 'கல்லுப் பிள்ளையார்' மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்க்க வில்லையா? மனிதன் கல் மாதிரி இருக்கும் போது கல் தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே! தவிரவும் பழைய கதைகளை எடுத்துக் கொண்டு அதை இஷ்டமான கோணங்களிலெல்லாம் நின்று கொண்டு பார்க்க எங்களுக்கு உரிமையுண்டு.

சாப விமோசனத்தைப் பற்றிய வரையில் எனக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. அதில் வசிஷ்டனையும் கூனியையும் கூட்டிக் கொண்டு வர மறந்துபோனதுதான் அது. மற்றபடி யார் எப்படி கருதினாலும் ராமாயணக் கதையின் அமைதி முற்றும் பொருந்தித்தான் இருக்கிறது.

– புதுமைப்பித்தன் 24.12.43

குழந்தைகள்

உங்கள் குழந்தைகள் உங்களுடையவை அல்ல
அவர்கள், வாழ்க்கை தன்மீது தானே கொண்ட
வேட்கை பெற்றெடுத்த பிள்ளைகள்

அவர்கள் உங்கள் வழியாக வருகிறார்கள்;
ஆனால் உங்களிடமிருந்தல்ல!
அவர்கள் உங்களோடு இருந்தாலும்
உங்களுடையவர்கள் அல்ல
அவர்களுக்கு நீங்கள் அளிக்க வேண்டியது
உங்கள் அன்பை! உங்கள் சிந்தனைகளை அல்ல!
ஏனெனில் அவர்களிடம் சுயசிந்தனை உள்ளது.

நீங்கள் குடிவைத்திருந்தது
அவர்களின் உடல்களைத்தான், ஆன்மாக்களை அல்ல!
ஏனெனில், அவர்களது ஆன்மாக்கள்
நாளை என்னும் மாளிகையில் வாழ்கின்றன.
அந்த இருப்பிடத்தை உங்கள் கனவுகளிலே கூட
நீங்கள் அடைய முடியாது.
நீங்கள் அவர்களைப் போல் இருக்க முயலலாம்
ஆனால் அவர்களை உங்களைப் போலாக்க நினைக்காதீர்கள்.
ஏனெனில், வாழ்க்கை பின்நோக்கிப் போவது இல்லை!
நேற்றைய பொழுதோடு தங்கிவிடுவதுமில்லை!

நீங்கள் விற்கள்!
உங்கள் மூலம், உயிருள்ள அம்புகளாக,
உங்கள் குழந்தைகள் செலுத்தப்படுகின்றன!
வில்லாளன் 'எல்லையில்லாமை'யின்
பாதையிலுள்ள இலக்கைப் பார்க்கிறான்.
தன் வலிமையெல்லாம் திரட்டி
வளைக்கிறான் — அவனுடைய அம்புகள்
விரைந்து வெகு தொலைவு
செல்ல வேண்டும் என்பதற்காக!
வில்லாளனின் கைகளில்
விருப்பத்தோடு வளைந்து கொடுங்கள்
ஏனெனில் பாய்ந்து செல்லும் அம்புகளை
அவன் நேசிப்பதைப் போலவே
நின்று கொண்டிருக்கும் வில்லையும்
அவன் நேசிக்கிறான்!

*லெபனான் நாட்டுத் தத்துவக் கவிஞர் **கலீல் ஜிப்ரானின்** 'தீர்க்கதரிசி' யிலிருந்து*

சிறந்த பரிசு!

நீங்கள் பிறருக்குத் தரும் பரிசுப் பொருளைவிட மேன்மையானது, நீங்கள் பழகும் விதம்தான்!

- கார்லைல்

ஆனால் தொடர்ந்து அப்படிச் செய்யாமல் 'கைமுறை வைத்தியம்' செய்து பார்க்கலாம்; அதிலும் இரத்தம் வருவது நிற்காத பட்சத்தில் மருத்துவரிடம் போய்க் காட்டிக்கொள்ளத்தான் வேண்டும்.

குளிக்கிற போது சிலருக்கு, மூக்கில் எண்ணெய் விட்டுக் கொள்ளும் பழக்கம் இருப்பதைப் பார்க்கிறோம்; அப்படி விடப்படும் எண்ணெயானது தொண்டைக்கு வந்து ஒருவிதக் கனகனப்பை உண்டாக்கும். ஆகவே, தொண்டை உணரும் படியான எதையும் மூக்கில் விடக்கூடாது. அப்படிச் செய்வதால் சுவாசிப்பதில் கூட தடை ஏற்படலாம்; அந்தப் பழக்கம் நிமோனியா (Lipoid Pnemonia) காய்ச்சல் வரைகூட கொண்டுபோய் விட்டுவிடும்.

மூக்கு அடைத்துக் கொண்டால் இது விரைவில் தானாகவே சரியாகி விடலாம்; அதற்காகத் துணியைத் திரித்து மூக்கில் விட்டுக்கொண்டு தும்முவதெல்லாம் ஆபத்தாகிவிடும்.

மூக்கில் ஏதாவது கேடு உண்டானால், அது நம் காதையும் பாதிக்கும்.

இரண்டுக்கும் அப்படியொரு தொடர்பு இயற்கையாகவே அமைந்திருக்கிறது. மலை வாசஸ்தலங்களுக்குப் போகிறவர்களுக்குக் காது அவ்வப்போது அடைத்துக் கொள்ளும்; உடனே, மூக்கைப் பொத்திச் சிறிது 'தம்' கட்டினால் சரியாகிவிடும். இதிலிருந்தே அதை நாம் உணரலாம்.

இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் காலையிலும் மாலையிலும் நிதானமாகக் காற்றை உள்ளே இழுத்து அதை வாய்வழியே வெளியில் விடச் சொல்வார்கள், மருத்துவர்கள். இது ஒரு வித யோகாசனமுறை, இப்படிச் சிலமுறை செய்வதால், சுருங்கிவிரியும் இதயத்தின் செயல்முறை ஒழுங்குபடுத்தப்படும்.

அறுவைச் சிகிச்சை செய்கிற மருத்துவர்கள், மூக்குவரை துணி கட்டியிருப்பதைப் பார்க்கலாம்; இதற்குக் காரணம், நோயாளியால் மருத்துவருக்குப் பாதிப்பு வரக்கூடாது என்பதல்ல; மருத்துவரின் மூக்கால் நோயாளி பாதிக்கப்படக்கூடாது என்பதுதான். ஏனென்றால், மூக்கின் மூலம்தான் நோய்க்கிருமிகள் எளிதில் பரவும்.

பிணத்தின் முக்கில் பஞ்சு வைத்து அடைப்பதற்கும் இதுவே காரணமாக இருக்கலாம்; அல்லது வேறு ஏதாவது அதற்கு ஐதீகக் காரணங்களும் கூறப்படலாம்.

சமண முனிவர்கள் கூட மூக்கையும் வாயையும் சேர்த்து ஒரு வெள்ளைத்துணிகட்டிக் கொள்ளுகிறார்கள். சுற்றுப்புறச் சீர்கேட்டிலிருந்து தப்புவதுதான் இதற்குக் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணமா என்று தெரியவில்லை!

சிறு குழந்தைகளைப் பெரியவர்களோ, காதலியைக் காதலர்களோ 'கண்ணே மூக்கே!' என்றெல்லாம் கொஞ்சிக் கொண்டாடவும் உதவுகிறது இந்த மூக்கு.

இதன் அமைப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபடுவதில்லை; இவ்வளவு ஏன், விலங்கினங்களுக்கும் கூட, மூக்கின் நடவடிக்கைகள் வித்தியாசப்படுவதில்லை.

இவ்வளவு முக்கிய உறுப்பான மூக்கிற்கு, பெண்கள் மூக்குத்தி கிரீடம் போட்டுக் கொள்ளுவது பொருத்தம்தானே அதே நேரத்தில் - முதல் தாரத்திற்குப் பிறக்கும் முதல் ஆணுக்கும் மூக்குக் குத்துகிறார்களே, அது ஏன் என்று கேட்காதீர்கள், காரணம் நமக்குத் தெரியாது!

●

மலரும் மழலைகளும்

பேரறிஞர் பெர்னாட்ஷா வீட்டிற்கு ஒருவர் சென்றிருந்தார். மேல்நாட்டுப் பழக்கப்படி அவர் இல்லத்தில் கூஜாக்களில் மலர்கள் அலங்காரமாக வைக்காதது பார்க்க வந்தவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பெர்னாட்ஷாவைக் கேட்டார்.

''தங்களுக்கு மலர்கள்மீது ஆசை இல்லையா?''

புரிந்து கொண்டு ஷா சொன்னார்:

''மிகவும் ஆசை, குழந்தைகள்மீது கூட அதிக ஆசைதான்: அதற்காகக் குழந்தைகளின் தலைகளை வெட்டி, கூஜாவில் வைப்பதில்லை.''

★ கடல் கடந்த நாடுகளின் கவிதைச் செல்வம் ★

மழை

வால்ட்விட்மன் - அமெரிக்கா

நீ யார் என்று கேட்டேன்
மழையைப் பார்த்து!

மழை சொன்னது:

''நான் பூமியின் கவிதை;

மண்ணிலிருந்தும் கடலிலிருந்தும்
நிரந்தரமாக எழுந்து ஆகாயம் நோக்கிப்
போகிறேன்.

தெளிவற்ற முறையில் என் உருவம்
அமைகிறது.

வறட்சியையும் புழுதிப்படலத்தையும் மாற்ற
விரும்புகிறேன்.

நானில்லாது போனால் அவற்றில்
இருப்பதெல்லாம்
வெறும் வித்துக்களே: மறைந்து கிடப்பவை
பிறக்காதவை.

இரவும் பகலும், எப்பொழுதும் எனது
உதயத்திற்கு
உயிரூட்டுகிறேன்.
புனிதப்படுத்துகிறேன்.
அழகுபடுத்துகிறேன்.
நான் பூமியின் கவிதை''

✳ ✳ ✳

கண்

ரசூல் கம்சதோவ் - ரஷியா

ஒரு கைத்தடியின் மீது எழுதப்பட்ட
வாசகங்கள்:
''குருடனுக்கு நான் கண்ணாய் இருக்கிறேன்.
முடவனுக்குக் காலாய் இருக்கிறேன்.

✳ ✳ ✳

மனிதன்

சமாதியில் பொறிக்கப்பட்ட வரிகள்:
''அவன் ஞானியல்ல.
ஆதி மனிதனுமல்ல.
ஆனால், அவனை வணங்குங்கள்
ஏனென்றால் அவன் மனிதன்''

✳ ✳ ✳

சிறகு

நீனா காசியன் - ரொமேனியா

தன் தேசத்திற்காகப் போரிட்டபோது
அவன் ஒரு கையை இழந்தான்.

அந்த இழப்பு அவனைப் புலம்ப வைத்தது.

''இனிமேல் எதிலும் பாதியைத்தான்
என்னால் செய்ய முடியும்.

பாதி அறுவடையே என்னால் செய்ய
முடியும்.
பியானோவைப் பாதிதான் இசைக்க
முடியும்
கதவுகளை ஒரு கையினாலேயே தட்ட
முடியும்
எல்லாவற்றிலும் மிகவும் மோசமானது.
என் காதலியைப் பாதியே தழுவிக்கொள்ள
முடியும்
என்பதுதான்

சில விஷயங்களை என்னால் செய்யவே
முடியாது.

கலை நிகழ்ச்சிகளை என்னால் கண்டு
கைதட்ட இயலுமா?

அந்த நிமிஷத்திலிருந்து அவன் மிகுந்த
உற்சாகத்துடன்
ஒவ்வொன்றையும் இருமுறை செய்தான்.

இப்பொழுது
கைமுறிந்த இடத்தில்
சிறகு முளைத்துவிட்டது.

✳ ✳ ✳

மரணத்தின் பின்

சூடே - சீனா

உங்கள் சடலம் நல்லடக்கத்திற்காக
வைக்கப்பட்டபோது
இப்படித் தீர்ப்பளிக்கப்பட்டது
''புரட்சிக்காகக்
காணிக்கையாக்கப் பட்ட
வாழ்வு இது''
உண்மையை மதித்தீர்கள்
ஆசானை நேசித்தீர்கள்
சரியான பாதையில்
தடுமாற்றம் இல்லாது சென்றீர்கள்.

புதிதாகத் தேர்ந்தெடுக்
கப்பட்ட தமிழகச் சட்டமன்ற
உறுப்பினர்களுக்குப் பதவிப்
பிரமாணம் செய்துவைத்த
தற்காலிகப் பேரவைத் தலைவர்
திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்
அவர்களுடன் மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள் (23.5.96)

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர்
திருமதி ஜானகி ராமச்சந்திரன்
அவர்களின் உடல்மீது மாண்புமிகு
முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்
மலர் வளையம் வைத்து அஞ்சலி
செலுத்தினார் (19.5.96)

மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களை, மாண்புமிகு
இலங்கைத் தொழிலாளர்
நல அமைச்சர்
திரு. தொண்டமான்
அவர்கள் சந்தித்து
உரையாடினார். (19.5.96)

மாண்புமிகு
வருவாய்த்துறை
அமைச்சர்
திரு. நாஞ்சில்
கி. மனோகரன் அவர்கள்,
புதிதாகக் கட்டப்பட்டு
வரும் சென்னை மாவட்ட
ஆட்சியர் அலுவலகக்
கட்டிடத்தைப் பார்வை
யிட்டார். (21.5.96)

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.கோ. சி. மணி அவர்கள்
தலைமைச்செயலகத்தில் சென்னைப்
பெருநகர குடிநீர்ப் பிரச்சினை குறித்து
அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு
செய்தார். (18.5.96)

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. எஸ்.பி. சற்குணம் அவர்கள்,
கிண்டியில் உள்ள தமிழ்நாடு மகளிர்
மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்
இயங்கிவரும் அச்சுக்கூடத்தில்
நடைபெறும் பணியினை ஆய்வு
செய்தார்.

11-ம் பக்கம் தொடர்ச்சி

மக்களின் அரசு, அதனால்தான் இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் மக்கள் பயன்பெறக் கூடிய அளவிற்குத் தரை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்த காரணத்தினால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டு உரிய கடன் நிவாரணமும் வழங்கப்படும். வறட்சி நிவாரணப்பணிகள்

போர்க்கால அடிப்படையில் விரைவு படுத்தப்பட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். இதுபற்றி மேலும் ஆய்வு செய்து விரிவான பணிகளைப் தீவிரப்படுத்தி நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் ஜூன் திங்கள் முதல் வாரத்தில் நடைபெறும்.

வரையிலான சிறார்கள் அனைவரும் தொடக்கப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து கல்வி கற்பிக்கப்படுவதை உறுதி செய்ய உயர் முன்னுரிமை அளிக்கிறது. மேனிலைப் பள்ளிகளில் அனைத்து வசதிகளும் கொண்ட ஆய்வுக் கூடங்கள் அமைப்பதன் மூலமாக அறிவியல் கல்வியை மேம்படுத்த முயற்சி எடுக்கப்படும்.

மக்கள் குறை களையும் மனுநீதித் திட்டம்

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள் போன்ற பல்வேறு பிரிவு மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து நிறைவேற்றுகின்ற செம்மையான

நிர்வாகத்தை அளிக்கவும் வேலை வாய்ப்பைப் பெருக்கவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. மக்கள் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளை எளிதில் சந்தித்து தங்களுடைய குறைகளை எடுத்துரைத்து



முற்போக்குக் கல்விக் கொள்கை

21-ஆம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் முற்போக்குக் கல்விக் கொள்கை வகுக்கப்படும். அனைத்து நிலைகளிலும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் கணிப்பொறிக் கல்வி அளிக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்த அரசு, ஆறு முதல் பதினோரு வயது

அக்குறைகளைக் களைந்திட வழிவகை செய்யும் மனு நீதித் திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக இந்த அரசினால்தான் 1969-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இடையில் கைவிடப்பட்ட அந்தத் திட்டம் மீண்டும் செயலாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் மேலவை

65 ஆண்டுகாலம் வரலாறு படைத்த தமிழகச் சட்டமன்ற மேலவை, மேதைகள் பலரின் மேலான கருத்துக்கள் இடம் பெற்று அறிவு, அனுபவம் ஆகியவற்றின் எண்ணக் கருவூலமாக ஒளிவிட்டதாகும். அரசின் கொள்கைகளையும், அதன் திட்டங்களையும், சட்டங்களையும் செம்மையாக வடிவமைப் பதற்குப் பெரிதும் பயன்பட்டு வந்த அந்த அவை 1986-ஆம் ஆண்டு கலைக்கப்பட்டதை அறிவீர்கள். தொன்மை வாய்ந்ததும் புகழ்மிக்கதுமான அந்த அவையை மீண்டும் அமைத்திடுவதற்கு ஏற்றதொரு சட்டம் இம்மன்றத்தில் உங்களின் ஒப்புதலுக்காக வைக்கப்படும்.

பெண்கள் முன்னேற்றம்

''கண்களால் வழி காண முடிவதைப் போல பெண்களால் நாடு முன்னேறக் கூடும்'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அதனை மனத்தில் பதித்து இந்த அரசு முன்பு பொறுப்பேற்றிருந்த காலத்தில் பெண் களுக்குச் சொத்துரிமை, வேலைவாய்ப்புகளில் முப்பது சதவீதம், பெண்காவலர் படை, ஏழைப் பெண்களுக்கு இளங்கலை பட்ட படிப்பு வரை இலவசக் கல்வி, எட்டாவது வரை படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி நிதி, கருவுற்ற மகளிருக்குப் பேறுகால நிதி உதவி எனப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இடைக்காலத்தில் அதில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி அத்திட்டங்களை விரிவுபடுத்துவதுடன் மேலும் மாவட்டத்துக்கு ஆயிரம் பெண்களை, உரிய ஊதியம் வழங்கி, மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தி, குடியினால் வரும் கேடுகளை விளக்கிட, இந்த அரசு முயற்சி மேற்கொள்ள இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பணியாளர் நலனுக்கு உரிய முக்கியத்துவம்

திட்டங்களையும், திட்டப் பணிகளையும் திறம்பட செயல்படுத்துவதில் அரசுத் துறைகள், அரசுத்துறை நிறுவனங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்களது பங்கின் முக்கியத்துவத்தை இவ்வரசு முழுவதும் உணர்ந்துள்ளது. எனவே, அரசுப் பணியாளர்களின் நலனுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படை யில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள வீதங்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும். ஆசிரியர் நியமனங்கள், மீண்டும் வேலை வாய்ப்பகங்கள் வாயிலாகவே மேற்கொள்ளப் படும். இத்தகைய அரசுப் பணியாளர்களின் ஒத்துழைப்பை பெறுவதன் மூலம் பல்வேறு திட்டங்கள், திட்டப் பணிகளின் பயன்கள் எவ்வித விடுபாடுமின்றி மக்களுக்கு முழுமையாகவும் விரைந்தும் கிடைத்திட வழி காணப்படும்.

உங்களை நம்புங்கள்

உலகத்தை நம்ப வேண்டாம். அது சொன்னதை எல்லாம் தந்ததில்லை. உங்களை நம்புங்கள். நீங்கள் விரும்பியதை எல்லாம் பெறலாம்.

– அகஸ்டின்

கருத்து குலுங்கும் சோலையாய் விளங்கட்டும் இம்மாமன்றம்

நாட்டுக்கும், மக்களுக்கும் நற்றொண்டாற்றிட இந்தப் பேரவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றுள்ள நீங்கள், ஜனநாயக மாண்புக்கு மேலும் ஒளி சேர்க்கும் வகையில் நாடு வாழவும், நலிவு நீங்கவும் நல்லதோர் கருத்துக் குலுங்கும் சோலையாக இந்த மாமன்றத்தை ஆக்கிக் கொண்டு, அந்தச் செழுமையான கருத்துக்கள் செயலாக்கம் பெறத்தக்கவகையில் விவேகமிகு விவாதங்களை நடத்தி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றிடுவீர்கள் என்ற நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையுடன் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

(திருவள்ளுவர் ஆண்டு 2027 வைகாசித் திங்கள் 10ம் நாள் 1996 ஆம் ஆண்டு மே திங்கள் 23ம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை)

அறிவியல் உலகம்



✷ **பறவைகள் பலவிதம்:**

பாலினம் பற்றி, பறவை இனத்திடையே ஆராய்ந்த விஞ்ஞானி டார்வின், பெண் பறவைகளைக் கவருவதற்காகவே ஆண் பறவைகளுக்கு விரிவான அலங்கார உறுப்புகள் அமைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இப்போது விஞ்ஞானிகள் பலரும் அதை மறுத்துவருகிறார்கள்.

குறிப்பாக - ஸ்வீடனைச் சேர்ந்த ஆன்டர்ஸ் பேப் மோலர் என்பார், 'தகைவிலான்' என்ற குருவிகளை வைத்து நடத்திய தம்முடைய ஆய்வின் முடிவில் - அவ்வாறான அமைப்பு தற்செயலாக ஏற்பட்டதே என்கிறார். பார்வைக்கு அழகாகத் தோன்றும் ஆண் பறவைகளைப் பெண் பறவைகள் விரும்பித் தேர்ந்தெடுப்பதன் காரணமாக எந்த நன்மையும், சாதகமும் அடைவதில்லை என்று அழுத்தமாகக் கருத்தறிவித்திருக்கிறார், அவர்.

✷ **300 ஆண்டுகள் வாழலாம்:**

ரஷ்ய விஞ்ஞானிகள், விலங்குகளை வைத்து நடத்திய ஓர் ஆய்வு முடிவில், தெரிவித்துள்ள கருத்து நம்மை வியக்கவைப்பதாக இருக்கிறது. மூளையில் செய்யப்படும் ஒரு சாதாரண அறுவைச் சிகிச்சை



யின் மூலம் முந்நூறாண்டுக் காலம் வாழக்கூடிய சாத்தியம் மனிதனுக்கு ஏற்படக்கூடுமாம்!

✷ **குடிக்காதே:**

மது அருந்துவதால் ஒருவருக்கு எவ்வகை பாதிப்புகள் ஏற்படும் என்று லண்டன் மாநகர உளக்கூறு இயல் நிறுவனப் பிரிவு ஒன்று அண்மையில் ஆராய்ச்சி செய்தது.

ஜெப்ரி கிரே என்பாரின் தலைமையிலான அக்குழு, முதலில் ஓர் எலிக்கு மதுவை அளித்துப் பார்த்தது; குடிப்பதால் உண்டாகும் நினைவுத் திறன் பாதிப்பு அதன் மூலம் கணக்கிடப்பட்டது. முடிவில் அவர்கள் அளித்த ஆய்வறிக்கை தெரிவித்த இரண்டு முக்கியச் செய்திகள் வருமாறு:

குடிப்பதால், மூளையின் செயல் பாதிக்கப்பட்டு நினைவுத்திறன் கெட்டுப் போய்விடும்.

அதிக அளவில் குடிப்பவனுக்கு, இழந்த நினைவுத் திறனைத் திரும்பக் கொண்டுவர முடியாமலே போய்விடும்!

✷ **உயிரினத் தோற்றம்:**

உலகத்தில், முதன் முதலாக உயிரினம் கடலில்தான் தோன்றியது என்றும், அதன் பின்பே நிலத்தில் தோன்றியதாகவும் நம் நாட்டு விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் அல்லவா?

ஆனால், லோட்சினா லோசின்ஸ்சி என்கிற ரஷ்ய விஞ்ஞானியொருவர், முதன் முதலில் உயிரினம் தோன்றியது நிலப்பகுதியிலேதான் என்கிற மாற்றுக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

✷ **எப்படிச் சாப்பிடவேண்டும்?**

''பச்சைக் காய்கறிகளையும், கீரைகளையும் நாள்தோறும் ஓரளவேனும் உண்ணுங்கள். உருளைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு ஆகியவற்றை நான் காய்கறிகளோடு சேர்க்க மாட்டேன்; மாவுப்பொருளை மட்டுமே கொண்ட அவைகளைத் தானிய வகைகளோடு தான் சேர்க்கவேண்டும்.''

''வெள்ளரிக்காய், தக்காளிப் பழம், கடுகுக்கீரை போன்ற பச்சைக்காய்கறிகளைச்சமைக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. நன்றாகக் கழுவி விட்டுப் பச்சையாகவே சாப்பிடலாம். அப்படிச்சாப்பிடுவது நல்லது. நம் உடல் நலத்தைப் பாதுகாக்கவல்லது.''



இதைத் தெரிவித்தது எந்த விஞ்ஞானியும் அல்ல; 'தேசத் தந்தை' காந்தியடிகள் தான்! 1905-ல் தாம் எழுதிய 'Key to Health' என்ற நூலில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

✷ **பெண்களும் அறிவியலும்:**

சிலப்பதிகாரக் கண்ணகி, தனது காற் சிலம்பில் இருந்த மாணிக்கப்பரல் தடயத்தைக் கொண்டே, தன் கணவனின் நேர்மையை நிரூபித்தாள் அல்லவா? இப்போதும் கூட தடய அறிவியல் துறையில் பெண்களே அதிக அளவில் விரும்பி இறங்குவதாக ஒரு கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது.

✷ **கரப்பான் பூச்சிகள்:**

கரப்பான் பூச்சிகள், அதற்காக விற்கப்படும் மருந்துகளால் எளிதில் சாவதில்லை; ஆனால், அதற்கு வேறு ஒரு எளிய வழியிருக்கிறது. 2 டீஸ்பூன் போரிக் பவுடரும் அதைப்போல் 4 பங்கு கோதுமை மாவும், சிறிதளவு சர்க்கரையும் கலந்து உருட்டி, அப்பூச்சிகள் வரும் இடத்தில் வைத்தால் போதுமாம். கரப்பான்கள் எளிதில் செத்துவிடும் என்கிறார் ஹாரிமில்லர்.

✷ **இரைச்சலைத் தடுக்கத் தனிப்படை:**

அளவுகடந்த ஓசையும், தூய்மைக் கேடு உண்டாக்கும். ஆகவே இரவு 10 மணிக்கு மேல் அப்படிப்பட்ட இரைச்சல் உண்டாக்குவோரை - அதாவது இசையோடு கூடிய ஆட்டம் பாட்டமானாலும் சரி, அதை ஏற்படுத்துவோரைக் கண்டு பிடித்துத் தண்டிக்கிறார்கள்.

எங்கே தெரியுமோ? லண்டன் மேற்குப் பகுதியில் உள்ள ஈலிங்பரோ நகராட்சியில்.



✷ **நவீன ரோபோட்**

டோக்கியோ அறிவியல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் புமியோஹாரா என்பவர் இயந்திர மனிதன் என்று அழைக்கப்படும் புதிய ரோபோட் ஒன்றைக் கண்டு பிடித்து இருக்கிறார். பெண் வடிவில் உள்ள அந்த இயந்திரம் கோபம், சோகம், அச்சம், வியப்பு, மகிழ்ச்சி, வெறுப்பு போன்ற ஆறு வகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறது. சிலிக்கோன் என்னும் பொருளைக் கொண்டு அதன் தோல் பகுதி செய்யப்பட்டுள்ளது. அலுமினியக் கம்பிகளால் அதன் 24 தசைப் பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதன் கண்களின் பின்புறம் நுண்ணிய வீடியோகாமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இன்னும் அதிகமான ஆராய்ச்சியை மேற்கொண்டு அதிக சக்தி வாய்ந்த கணினி ஒன்றைத் தயாரித்துவிட்டால் அதனைப் பேசவும் வைத்துவிடலாம் என்கிறார் அந்தப் பேராசிரியர்.

✷ **மருத்துவக் கலையின் ரகசியங்கள்**

மேலே குறிப்பிட்ட தலைப்பு கொண்ட புத்தகம், டாக்டர் ஹெர்மன் என்பவரால் எழுதப்பட்டு, அவர் காலமானதற்குப் பின் அவரது அலமாரியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதை ஏலத்தில் விட்ட பொழுது 10000 பவுனுக்குப் போயிற்று. அதன் 'சீல்' உடைக்கப்பட்டு உள்ளே பார்த்த பொழுது, 90 பக்கங்கள் வெறும் பேப்பராகவே இருந்தது. தலைப்பு எழுதப்பட்டிருந்த முதல் பக்கத்தில், டாக்டர் 'உனது தலையை எப்போதும் குளிர்ச்சியாக வைத்துக் கொள். உனது கால்களைச் சூடாக வைத்துக்கொள். இவ்வாறு செய்தால் புகழ்பெற்ற டாக்டரைக் கூட ஏழையாக்கி விடலாம், என்று எழுதியிருந்தார்.

சட்ட மன்றத்தில் நகைச்சுவை

சட்ட மன்றத்தில் நகைச்சுவை

என்றும் மாறா இளமையின் இரகசியம் இதோ!

மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அவை முன்னவர் அன்பழகன் அவர்களையும் சுட்டிக்காட்டி, இவ்வளவு வயதான காலத்திலும் எப்படி இளமையாக இருக்கிறீர்கள்? அதைச் சொன்னால் எங்களுக்கும் உதவியாக இருக்கும், என்றார் தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் திரு அழகிரி. பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாட்டையும், சமுதாயத்தையும் காப்பாற்ற உங்களைப் போன்ற இளைஞர்கள் இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிதான், எங்கள் இளமைக்குக் காரணம் என்றதும் சிரிப்பொலியில் மூழ்கியது சட்டப்பேரவை.

"சூட்கேஸ் போடமாட்டேன்"

அ.தி.மு.க எம்.எல்.ஏ திருதாமரைக்கனி பேசும்போது, "எம்.ஜி.ஆர்., தி.மு.க.வை விட்டுப் பிரிந்த போது கட்சிக்காரர்கள் மீது பொய் கேஸ் (வழக்கு) போடப்பட்டது. கடந்த கால தி.மு.க. ஆட்சியில் என்னை குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் கைது செய்தார்கள். இன்னும் என்னென்ன கேஸ் என் மீது போடப் போகிறீர்களோ?" என்றார்.

உடனே மாண்புமிகு முதல்வர் கருணாநிதி அவர்கள் எழுந்து, எந்த கேஸ் போட்டாலும் போடுவேன், சூட்கேஸ் போட மாட்டேன் என்றதும் சட்டமன்றத்தில் சிரிப்பலை எழுந்தது.

பாராட்டுரையும் பாதுகாப்புரையும்

சட்டமன்றத்தில் அஇஅதிமுக உறுப்பினர் திரு எஸ். திருநாவுக்கரசு பேசுகையில், இதுவரை இருந்த பேரவைத் தலைவர்கள் திருவாளர்கள் பி.எச். பாண்டியன், தமிழ்க்குடிமகன், முத்தையா ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு, இவர்களில் யார் யார் சிறப்பாகச் செயல்பட்டார்களோ, அவர்களைத் தாங்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் பேசுகையில் திரு. திருநாவுக்கரசு சில யோசனைகளைச் சொன்னார். அவரை என் அறைக்கு அழைத்து யார், யாரைப் பின்பற்றக் கூடாது என்ற பட்டியல் வாங்கிக் கொள்வேன் என்று கூறியதும், திரு. திருநாவுக்கரசு மீண்டும் எழுந்து 'நான் பட்டியல் தருவதாகக் கூறவில்லை. முந்தைய பேரவைத் தலைவர்கள் வழங்கிய தீர்ப்புகளைத் தாங்கள் பின்பற்ற வேண்டும் என்றுதான் கூறினேன்' என்றார்.

உடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்து முன்னர் திருநாவுக்கரசு வழங்கியது பாராட்டுரை, இப்போது வழங்குவது பாதுகாப்புரை, என்று நகைச்சுவையோடு கூறினார்.

யார் யார் எனக் கேட்பவர் உங்களவரா எங்களவரா? அவர் நம்மவர்!

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய திரு. டி. ராஜேந்தர், எம்.எல்.ஏ., கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பல வன்முறை குற்ற சம்பவங்களை விவரித்தார். இவற்றைச் செய்த குற்றவாளிகள் யார்? யார்? இப்படி யார் யார் என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பது யார் என்றால் இங்கே உறுப்பினராக உள்ள டி.ஆர். என்றார்.

அவர் பேசி முடிந்ததும் திரு அழகிரி (தமிழ் மாநில காங்கிரஸ்) டி.ஆர். யார்? அவர் உங்களவரா? எங்களவரா? என்று குரலெழுப்ப, அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர் உங்களவரும் அல்ல; எங்களவரும் அல்ல; நம்மவர்; என்று கூறியதும் சிரிப்பலை பேரவையெங்கும் எழுந்தது.

மாண்புமிகு முதல்வரின் இல்லத்தில் ஒரு புதுமை

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்ல வாசலில் புதுமையான ஒரு விளம்பரப் பலகை உள்ளது. அதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அன்றாட நிகழ்ச்சிகள், தினந்தோறும் எழுதப்பட்டுப் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இதனால், மாண்புமிகு முதல்வர் இல்லத்திற்கு வரும் பொதுமக்கள், செய்தியாளர்கள் மாண்புமிகு முதல்வரைச் சந்திக்க, வீணாக அலையாமலிருக்க, இது பெரிதும் உதவுகிறது. இந்த விளம்பரப் பலகை தமிழக முதல்வர்களின் வரலாற்றில் ஒரு புதுமை மட்டுமல்ல பொது மக்களுக்கு ஆற்றப்படும் ஒரு நல்ல சேவையுமல்லவா!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புத்தர் சிற்பம் சென்னைக்கு அருகில் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னையை அடுத்துள்ள மேடவாக்கத்தின் அருகில் அமைந்திருக்கும் ஒட்டியம்பாக்கம் என்ற ஊரில், எழில் வாய்ந்த புத்தரின் சிலையொன்றினைக்கண்டுபிடித்துள்ளது. இதுவரை தமிழகத்தில் கிடைத்த புத்தர் சிலைகளில், காணவியலாத அளவு மிக அழகிய கொடிகளின் சுருள் வேலைப்பாடுகளைக் கொண்ட தனிச் சிறப்பு வாய்ந்த சிற்பம் இது.

செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் அமைந்த மிகச் சிற்றூரான ஒட்டியம் பாக்கத்திலுள்ள ஒட்டீஸ்வரர் கோயிலின் தென் புறத்தே காணப்படுகிறது இச்சிற்பம்.

கணுக்கால் வரை நீண்ட ஆடையணிந்து இரு கரங்களுடன் தோற்றமளிக்கும் இச்சிற்பம் பத்ர பீடத்தின்மீது நேராக நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. நெற்றியும், முகமும் சிதைந்திருப்பினும், இச்சிற்பத்தின் எழிலான பிரபை இதற்கு அணிசேர்க்கின்றது. பிரபையினின்றும் வெளிவரும் வகையில் காட்டப்பட்டுள்ள கொடிகள் சுருள் சுருளாக வளைந்து புத்தபிரானின் பாதம்வரை இருமருங்கிலும் செல்கின்றவாய் வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் அமைதிதவழும் வடிவத்தையும், எழிலார்ந்த வடிவமைப்பையும் கொண்டு கருதுகையில், இச்சிலை கி.பி. 10-11ஆம் நூற்றாண்டில் சோழர் கலைப் பாணியில் வடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

சென்னையில் ஏற்கெனவே கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த புத்தர் புடைப்புச் சிற்பங்களும், அமர்ந்த நிலையிலுள்ள கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிற்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சென்னைக்கு அருகிலேயே நின்ற நிலையிலுள்ள மற்றொரு அழகு வாய்ந்த புத்தர் சிற்பம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியதாகும்.

இக்கண்டுபிடிப்பின் மூலம், சென்னையிலோ அல்லது சென்னைக்கு அருகிலோ பௌத்த ஸ்தூபா ஒன்று இருந்திருக்கலாம் என்ற ஊகம் மேலும் வலுப் பெறுகிறது.

இயற்கை அன்னையின் கோபம்

இயற்கை அன்னையும் மற்ற அன்னையரைப் போலத்தான். பிள்ளைகளின் தவறைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவள்தான். ஆனால் குழந்தைகளின் குறும்பு எல்லை மீறும்போது இயற்கை அன்னை அவர்களைத் தண்டிக்கத் தயங்கமாட்டாள்.

குழந்தைகள் இன்று அன்னையையும் சேர்த்து அழிக்கக்கூடிய அணுகுண்டை வைத்தல்லவா விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்!

மனிதனுக்கு தான் வாழும் தலைமுறை பற்றித்தான் கவலை. இயற்கை அன்னைக்கோ தமக்குப் பின்னும் வரப் போகும் பல ஆயிரம் தலைமுறைகள் பற்றிய கவலை.

அதனால் அவளது சீற்றங்களை, சமயங்களில் நாம் எதிர் கொள்ளத்தான் வேண்டும்.

இதை புரிந்து கொள்ளாததால்தான் மிகப் பெரிய நாகரிகங்கள் கூட சுவடு தெரியாமல் அழிந்து விட்டன.

மரங்கள் பெருவாரியாக வெட்டப்பட்டதால், பெரும் வெள்ளங்கள் ஏற்பட்டன. பைபிள் இதைக் கடவுளின் கோபம் என்று வர்ணித்தது. இது போலவே பல நாடுகளில் ஏற்பட்ட வெள்ளங்களுக்கு ஆங்காங்கு உள்ள கடவுளின் கோபம் என்ற காரணம் பல புராணங்கள் மூலம் கற்பிக்கப்பட்டன.

அப்பொழுது...

ரோமாபுரியில் ரோமப் பொறியியலின் அற்புதத்தால் மனிதக் கழிவுகள் கண்களுக்கெட்டாத் தொலைவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவைகள் நகருக்கு வெளியே உள்ள நீர்வழிகளில் கலந்தன. இறந்த உடல்கள் நகருக்கு வெளியே உள்ள திறந்த குழிகளில் வீசியெறியப்பட்டன.

விளைவு ...

ரோம சாம்ராஜ்யமே நாறத்தொடங்கியது; பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் தலைவிரித்து ஆடின.

எதைச் சுற்றுச்சூழல் அழிப்பு என்று வர்ணிக்கலாம்?

இப்பொழுது இருக்கும் அல்லது வரப் போகும் தலைமுறைகள் இயற்கையின் உதவிப்பெற்று அதோடு இணைந்து வாழ்வும் நம்பிக்கைக்கு அபாயம் விளைவிக்கும் எந்த ஒரு செயலுமே சுற்றுச் சூழல் அழிப்புதான்.

இந்தக் கோலத்தில் பார்த்தால் வேளாண்மை சமுதாயங்களைத் தென்றலுக்கும், தொழில்மயமான சமுதாயங்களை புயலுக்கும் ஒப்பிடலாம்.

உலகப் போர்களுக்கும் பிந்தைய வளர்ச்சி, கூட்டுமுறையற்ற தொழில் நுட்பத்திற்கும் வரைமுறையற்ற உற்பத்திக்கும் ஏகபோக நுகர்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இதனால், மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ நாடுகளும் ஒரே மாதிரி பாதிக்கப்பட்டன. அவை இரண்டின் உற்பத்திக் குறிக்கோள்களிலும் செயல் முறைகளிலும் பலத்த வேறுபாடு இருக்கவில்லை அவை இயற்கையை அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகக் கருதினர். அவற்றுக்கு கழிவுகள் ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை. அவற்றுக்கு இடையே இருந்த ஒரு வேறுபாடு - யார் அதைக் கைப்பற்றுவது என்பதுதான்!

மொத்தத்தில் -

மனிதன் தனது குறுகிய கால நலன்களுக்காக எதிர்காலத்தையே அடகு வைக்கத் துணிந்து விட்டான்.

நாம் விரைந்து செயல்படாவிட்டால் அதை மீட்கவே முடியாது.

'சூழலியல் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து.

சுற்றுச் சூழல் காப்போம் சுகவாழ்வு கொள்வோம்

பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்

மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்திக்க.....

முதலமைச்சரைச் சந்திப்பதற்குத் தமிழக மக்கள் அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவ்வாறு சந்திக்க இயலாத சூழ்நிலைகளில், பொதுமக்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவிக்க விரும்பினால், கடிதம் மூலம் எழுதி அனுப்பலாம். அவை முதலமைச்சர் அலுவலகத்திலும் மற்றும் முதலமைச்சர் சிறப்புப் பிரிவிலும் முறைப்படி பெறப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அந்த மனுக்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மனுவை அனுப்பியவர்களுக்கு உரிய துறைகள், மனு கிடைத்த முப்பது நாட்களுக்குள் முடியும் என்றோ, முடியாவிட்டால் எதனால் முடியாது என்றோ தெரிவிக்கும்.

முதலமைச்சரை நேரில் சந்திக்க விரும்பும் மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றக் கட்சிகளின் தலைவர்கள், தொழில் அதிபர்கள், அதிகாரிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் முதலமைச்சரின் உதவியாளர்களிடம் நேரம் குறித்துக்கொண்டு, அதன்படி முதலமைச்சரை தலைமைச் செயலகத்திலோ அல்லது வீட்டிலோ சந்திக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டி. முருகராஜ், இ.ஆ.ப.,
முதலமைச்சரின் செயலாளர்.

கவிதைப்போட்டி

கற்பனையும் சிந்தனையும் கைகோத்து நடனமிட அற்புதக் கவி படைக்கும் அனைவருக்கும் நல்வாய்ப்பு;

இதோ தமிழரசின் கவிதைப்போட்டிக்கு அழைப்பு
'இன்று புதிதாய்ப் பிறந்தோம்'

– இதுதான் கவித் தலைப்பு
உரிய பரிசுகள் காத்திருக்கின்றன!

உங்கள் கவிதை வந்து சேரவேண்டிய கடைசி நாள் - 15.7.96

உங்கள் படைப்பு, மரபுக்கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ இருக்கலாம்.

வரி வரையறை : 16

வெல்லும் கவிதைகள் வெளியாகும் இதழ்
– விடுதலைத் திருநாள் மலர் (16 .8.1996)

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம்,
சென்னை 600 002.

கவிதை மன்னன்

'கார்ல் வில்ஹெம்' (1767-1835) என்பவர் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர். அவர் அறிவும் ஆற்றலும் வாய்க்கப்பெற்ற 'க்ரோலின்' என்பவரைத் தன் இருபத்தி நான்காவது வயதில் மணம் செய்துகொண்டார். அவர் அன்றைய தினம் முதற்கொண்டு தம் மனைவியைப் பற்றி 100 வரிகள் கொண்ட பாடலைத் தினந்தோறும் இயற்றுவதாக உறுதி கொண்டார். இவ்வாறு கரோலின் அவருடன் வாழ்ந்த 38 ஆண்டுகள் நாள் தவறாமல் எழுதி முடித்திருக்கிறார். அவள் காலமானதற்குப் பின்னும் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் அவர் எழுதியிருக்கிறார். அவளைப்பற்றி அவர் எழுதிய மொத்த வரிகள் 16,06,000 ஆகும்.

ஆசிரியர் மடல்

தமிழரசு இப்போது உங்கள் கரங்களில் புதுப்பொலிவுடன்

இலக்கிய நயத்துடன்
நலத்திட்ட விளக்கங்கள்,
கருத்துக் கருவூலங்களுடன்,
அறிவியல் செய்திச் சிதறல்கள்.
அறிந்து கொள்ளும் ஆர்வம்
தெரிந்து கொள்ளும் ஊக்கம்
மயிலிறகால் வருடல்; மலர்க்கொத்தாய் மணம் வீசல்,
அரசுத் திட்டங்களில் புதிய முயற்சிகள்
புத்தம் புது நுட்பங்கள்
எல்லாத் துறைகளிலும் சாதனைகள் இனி இலக்கியமாகும்.
வாசித்தவர்கள் நேசித்தவற்றை எழுத
தமிழரசு வாசகர் பக்கங்களுக்கும் வழிவிடும்.
எனவே நெஞ்சில் பதிந்தவற்றைக் காகிதத்தில் நீங்கள் பதியம் போடலாம்
தமிழரசு களமாகும்.
மண்ணுக்கு மருதாணி பூசி அழகு பார்க்கும் உழவர்களும்
வயலில் வியர்வையை விதைக்கின்ற பெண்களும்
பயன்பெறும் வகையில் வளத்தைப் பெருக்க
உடல்நலத்தைப் பேண, புதிய நோக்கில் தமிழரசு
திட்டங்களில் தூய வளர்ச்சி இழையோட
பயனாளிகளின் நேர்காணல்கள்,
அனுபவப் பகிர்வுகள் தமிழரசில் இடம் பெறும்.
விழிப்புணர்வைத் தூண்டுகின்ற சிறுகதைகளைத்
தமிழரசு இடுப்பில் ஏற்றிக் கொண்டு இனிதே நடைபோடும்

அழகிய ஒரு கருத்தை இனிப்பு உருண்டைக்குள் விதைக்கும்
முயற்சி தொடரும்.
மொழிப்பயிற்சியையும், இலக்கிய முயற்சியையும் வளர்க்கும்
இலக்கை நோக்கி கவிதைப் போட்டிகளும், கட்டுரைப்
போட்டிகளுமாகத் தமிழரசு உங்கள் கைகளில்,
வடிவமைப்பில் நேர்த்தி
உள்ளடக்கத்தில் முதிர்ச்சி
பார்க்கிறபொழுதே மனது நிறைக்கும்.
தமிழரசின் மீது நீங்கள் வைக்கும் விமரிசனக் கனம்
ஆயிரமாயிரம் இதயங்கள் மகிழ அடிப்படை அமைக்கும்.
ஏனென்றால் மக்கள் அனைவரது இதயத்தையும் தாங்கி
பாராட்டப்படவும் சீராட்டப்படவும் மட்டுமன்றி
பயன்படவும் தமிழரசு உங்கள் கைகளில் இப்போது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927







தமிழரசு

இந்த இதழில்....

தூய்மையான நிர்வாகமே குறிக்கோள் 2

கலைஞரின் சொல்லாடல் 9

காயிதே மில்லத் கருத்து மணிகள் 11

படமும் செய்தியும் 12

வெயில் கால வேதனைகள் 14

திரைப்படத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவு 15

அறிவியல் துளிகள் 20

புழுதிக் கோயில் – தாகூர் கவிதை 21

காது குடையும் சிறகு – அப்துல் ரகுமான் 22

அறிவுமதி ஹைகூ கவிதைகள் 24

ஏழை மகளிர்க்கு ஒரு வரப்பிரசாதம் 26

சங்கத் தமிழ் 32

அரசு அறிவிப்புகளின் சாரம் – [illegible] [illegible]

காலாட்படை – வங்கமொழிச் சிறுகதை 38

சுவை மிகு தகவல் பக்கம் 46

உலகத்தை இன்னும் குளிர்ச்சியாக்குவோம் 48

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

ஆனித் திங்கள்: 2

மலர் :26 இதழ் : 24

16.6.1996

விலை ரூ. 3.

தூய்மையான ஒரு நிர்வாகத்தை அமைதியான ஒரு தமிழகத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்புத் தாரீர்

— மாண்புமிகு முதல்வர் கலைஞர்

இந்த் மாநாடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு. புதிய ஆட்சி அமைந்தவுடன் கூட்டப்படுகின்ற முதல் மாநாடு மட்டுமல்லாமல் இங்கே பங்கு பெறுபவர்கள் பலருக்கு அந்தத் துறையில் அவர்கள் எதிர்கொள்கின்ற பல பிரச்சினைகளை எப்படிச் சந்திப்பது என்று முடிவெடுக்க வேண்டிய மாநாடாகவும் இது அமைந் திருக்கின்றது.

முக்கியமாக நிர்வாக சீர்திருத்தத்தையும், தூய்மையான ஆட்சியையும் தருகின்ற சூளுரையை நாங்கள் மேற்கொண்டதன் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் தேவையான பணி மாற்றங்களைச் செய்து, அரசின் நிலைப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்ட பிறகு, அவற்றின் பயன் மக்களுக்கு முழுவதுமாய்ப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது.

தவறு நடந்தால் சகிக்கமாட்டேன்

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைந்தபோது நன்றி அறிவிக்கின்றகூட்டத்தில் ''எந்தத் தவறு நடந்தாலும் அதைச் சகித்துக் கொள்ள மாட்டேன்'' என்று நான் உறுதிபடக் கூறியது உங்களுக்கெல்லாம் நினைவில் இருக்கலாம். மக்கள் இந்த ஆட்சியிடம் நியாயமான, நேர்மையான, தூய்மையான ஊழலற்ற ஒரு நிர்வாகத்தை எதிர்பார்க்கிறார்கள். வாக்களித்தவர்களின் எதிர்பார்ப்புகளை

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 11-6-96 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை

நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை. அதனை ஆரம்பத்திலேயே உறுதிப்படுத்தி, களைகளை முளையிலேயே கிள்ளி எறியும் நோக்கத்தில் தான் இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. ''புல்லுக்குப் போய்ச் சேர வேண்டும்'' என்பதற்காகவே நெல்லுக்கு நீர் திறந்து விடப்பட்ட மாய்மால நிலை மாறி, ''நெல்லுக்கு மட்டும்தான் போய்ச் சேர வேண்டும்.'' என்பதுதான் இந்த மாநாட்டினுடைய குறிக்கோள்.

சிந்தித்துச் செயல்படத் தூண்டும் வெளிச்சக்கதிர்

இந்தப் பொதுத் தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணி முடிவு அறிவிக்கப்படாத நேரத்திலேயே மே திங்கள் மூன்றாம் நாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக்குழு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், ''ஒரு சில அதிகாரிகளின் செயலால் ஐ.ஏ.எஸ். பணியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது. எனவே அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியும், ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியும் உள்ள ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களுக்கு ஓய்வு கொடுக்கலாம், அல்லது அதிகாரமற்ற பதவி, வேலை இன்றி சம்பளம் அளிக்கலாம். நேர்மையும் கடமை உணர்வும் மிக்க அதிகாரிகளுக்கு காலத்துக்கு முந்தைய

இடமாற்றம் அளிக்கப்படுவது வருந்தத்தக்கது. அதேசமயம் வளைந்து கொடுக்கக் கூடிய நேர்மையற்ற அதிகாரிகள் பாராட்டப்படுகிறார்கள். இதனால் நியாயமான அதிகாரிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தார்மீக நெறிப்படி அரசியல் பாரபட்சம் இன்றி பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படை தேவைக்கு ஏற்ப பணியாற்ற வேண்டும் என்று இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது. அரசியல் நடுநிலை, உயர்ந்த மரபை பின்பற்றியே தேர்தல் முடிந்தபிறகு, ஆனால் தேர்தல் முடிவுக்கு முன்னர் இந்த அறிக்கைவெளியிடப்பட்டுள்ளது.''

என்று குறிப்பிட்டிருந்த தானது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மட்டுமல்ல, அரசில் பணியாற்றுகின்ற எல்லா அதிகாரிகளும் சிந்தித்துச் செயல்படுவதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்ற வெளிச்சக் கதிராகும்.

சகதிகளைத் தூர் எடுக்கவேண்டும்

எல்லா நிலைகளிலும் ஒரு தூய நிர்வாகத்தைத் தருவதற்கு இந்த அரசு விரும்புகிறது. ஊழலிலும், லஞ்சத்திலும் சிக்கி ஆட்சித் தேர் நகர முடியாதபடி செய்த சக்திகளையெல்லாம், நாம் முறியடிக்க வேண்டும்; சகதிகளையெல்லாம் தூர் எடுக்க வேண்டும். தனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெறுவதற்குக் கூட கணிசமான ஒரு தொகையை தந்தால் தான் முடியும் என்கிற நிலை மாற வேண்டும். அரசு நிர்வாகம் எல்லா தரத்திலும் மேம்பட்டதாக இருக்க வேண்டும். கால தாமதம்தான் ஊழலுக்கு வித்திடுகிறது என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். நிர்வாகத்தில் இருக்கின்ற எல்லா அதிகாரிகளும் விரைந்து பணியாற்ற வேண்டும்.

தூய்மையைப் பற்றி நான் ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். தூய்மை

> **''புல்லுக்கு போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவே நெல்லுக்கு நீர் திறந்து விடப்பட்ட மாய்மால நிலைமாறி நெல்லுக்கு மட்டும்தான் போய்ச் சேர வேண்டும்''**

என்பது மேலிருந்து கீழ் நோக்கி செல்லுகிறஅருவியைப்போன்றது. மேலிடத்தில் தூய்மை இருந்தால் தான் கீழ் இருக்கின்ற நிலைகளில் தூய்மையை எதிர்பார்க்க முடியும். முடிவுகளை பாரபட்சமின்றி சட்டத்தின் அடிப்படையில், விதிகளின் அடிப்படையில், தகுதியின் அடிப்படையில் அலுவலர் களும், அதிகாரிகளும் மேற்கொண்டால் நிர்வாகம் தூய்மையாகத் திகழும் என்பதில் எள்முனையளவும் ஐயமில்லை. கோப்புகள் சிகப்பு நாடாவில் கட்டப்பட்டு உறங்கிக் கொண்டிருக்கிற போது ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது. தூய்மையின் ஆணி வேரையே அடியோடு பறித்து விடுகிறது. பொதுமக்களுடைய விண்ணப்பங்களையும், மனுக்களையும், புகார்களையும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் உடனுக்குடன் பரிசீலனை செய்து பதில் தர வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்டு இருந்தால் பரிகாரம் செய்ய வேண்டும். அரசு இயந்திரத்தை துஷ்பிரயோகம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து தண்டனை தர வேண்டும்.

மாவட்டத்தைப் பொறுத்த வரை அரசின் பிரதிநிதிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திகழ்கிறார்கள். மாவட்டத்தில் எந்தத் துறையில் ஊழல் நிகழ்ந்தாலும் அதன் பொறுப்பு மாவட்ட ஆட்சியர் மீது விழுகிறது. எனவே எல்லா துறைகளிலும் தூய்மையையும் விதிகளையும் கடைப்பிடிக்கக் கூடிய அளவுக்கு ஆய்வுப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

உயிருக்குப் பாதுகாப்பு காவல்துறையே

பொதுமக்களைப் பொறுத்த வரை தங்களுடைய உயிருக்கு பாதுகாப்பு என்று காவல் துறையையே நம்பி இருக்கிறார்கள். சீருடை அணிந்த சிப்பாயாக நின்று பாமர மக்கள் சுதந்திரத்துடனும், நிம்மதியுடனும் வாழ்வதற்கு காவல் துறை தான் உத்திரவாதம் அளிக்க வேண்டும். கடைநிலையில் உள்ளவர்கள் நேர்மையாய் இருப்பதற்கு வழிகாட்டியாய் இருக்க வேண்டியவர்கள் உயர் மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் தான். அவர்களுடைய கண்காணிப்பும், கடுமையான உழைப்பும், எச்சரிக்கை உணர்வும், விழிப்புணர்வும் தான் தூய்மையான நிர்வாகத்தை உறுதி செய்ய முடியும்.

சட்டம் ஒழுங்கைப் பேணிக்காப்பதில் மாவட்ட நிர்வாகம் முழு முனைப்புடன் செயல்பட வேண்டும். ''சட்டம் மட்டும் இருக்கிறது; ஒழுங்கு இல்லை'' என்கிற நிலை இருக்கக்கூடாது. சட்டம், ஒழுங்கை முறையாகப் பேணி மாவட்ட நிர்வாகம் எப்பொழுதும் தயார் நிலையிலே இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் 12506 கிராம அலுவலர்கள் இருக்கிறார்கள். 84000 காவலர்கள் இருக்கிறார்கள். 1172 காவல் நிலையங்கள் இருக்கின்றன. 178 துணை காவல் கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள். 184 வட்டாட்சியர்கள் இருக்கிறார்கள். 66 கோட்டாட்சியர்கள் இருக்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. எல்லா நேர்விலும் நிர்வாகத் துறையும், காவல்துறையும் தயார் நிலையில் விழிப்புணர்வுடன் செயல்பட்டால் தான் சட்டம், ஒழுங்கு பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்''

என்பது வள்ளுவம். ஏற்கனவே பிரச்சினைகள் தோன்றிய பிறகு அவற்றை சரி செய்ய முனைவதைவிட வரும் முன் காப்பதே நிர்வாகத்தினுடைய அணுகுமுறையாக இருக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள் உடனுக்குடன் தகவல்களை மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிக்க வேண்டும். காவல் நிலையங்கள், தன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இருக்கும் சட்ட ஒழுங்கை துல்லியமாகக் கவனிக்க வேண்டும்.

மனிதாபிமானமிக்க அணுகுமுறை வேண்டும்

சட்டம் ஒழுங்கு பிரச்சினையைத் தூண்டுபவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி, காய்தல், உவத்தல் அகற்றி அவர்களை சட்டத்தின் கீழ் கொண்டு வந்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும். அலுவலர்கள் அடிக்கடி கிராமங்களுக்குச் செல்வதும், அந்த மக்களுடைய குறைகளைக் கேட்பதும் நிர்வாகத்திற்கும், பொது மக்களுக்கும் சுமூகமான ஒரு உறவை ஏற்படுத்த உதவும் கடந்த காலத்தில் சட்டம்,

ஒழுங்கு பாதிக்கப்பட்ட கிராமங்கள் எவ்வளவு என்ற தகவல்களைச் சேகரித்து அந்தக் கிராமங்களுக்கு அடிக்கடி கூட்டுப் பயணம் செய்து, அந்த மக்களோடு தங்கி அவர்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அந்தப் பகுதியில் சட்டம் ஒழுங்கு நிலைமை சரியாவதற்கு வழிவகை செய்ய வேண்டும். நிர்வாகம் தொலைவிலே இருக்கிற போது பிரச்சினைகள் நெருங்கி வந்துவிடுகின்றன. அலுவலர்கள் சிந்துகிற சிரிப்புகளுக்குக்கூட சிவப்பு நாடாக்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அது மக்களை நிர்வாகத்திடமிருந்து அன்னியப்படுத்திவிடுகிறது. அந்தச்சூழலை மாற்றியமைக்க மனிதாபிமானமிக்க அணுகுமுறை இருந்தால் பெருமளவு சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்புகள் இல்லை.



தமிழ் நாட்டில் கடந்த ஆட்சிக்காலத்தில் குற்றங்கள் பெரும் அளவில் அதிகரித்து மக்களுடைய உடமைகளுக்கும், உயிருக்கும் பாதுகாப்பு இல்லை என்கின்ற நிலைமை ஏற்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். நிர்வாகத்தைத் தட்டிக்கேட்பவர்கள் பலர் அச்சுறுத்தப்பட்டும், தண்டிக்கப்பட்டும் அவதிக்குள்ளானார்கள். இந்த நிலைமையை மாற்றி குற்றங்களைக் குறைப்பதையே தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு இந்த அரசு செயல்பட உறுதி பூண்டுள்ளது. குற்றம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் மேற்கொண்டு குற்றங்கள் நடைபெறுவது தடுக்கப்பட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நிலைப்பாடு தமிழகம் இனிவரும் காலத்தில் பொது மக்கள் மகிழ்ச்சியுடனும், அச்சமின்றியும் நடமாடுகின்ற ஒரு களமாக மாற வேண்டும். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இதிலே கணிசமான பங்கை வகிக்க வேண்டும்.

முதல் அட்டை சொல்லும் செய்தி

அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் சமூகவிரோதச் செயல்பாடுகளுக்குத் தடுப்புச்சுவர் எழுப்பி சமுதாயத்தில் முளைக்கும் கள்ளிக்காடுகளை அறவே ஒழித்திட வேண்டும். நிர்வாகம் தயார் நிலையில் இருக்கின்ற போது குற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்புகள் குறைவு. குற்றங்களைத் தடுப்பதற்கு நேர்மையான நிர்வாகம் அவசியமாகிறது. காவல்துறைக்

''கோப்புகள் சிகப்பு நாடாவில் கட்டப்பட்டு உறங்கிகொண்டிருக்கிற போது ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது. தூய்மையின் ஆணி வேரையே அடியோடு பறித்து விடுகிறது''

கண்காணிப்பாளர்கள் இந்தத் தகவல்களை இந்த அரசின் எல்லாத்தரப்பினர்க்கும் தெளிவு படுத்த வேண்டும். தங்கள் கீழ் உள்ள அதிகாரிகளை ஊக்குவித்தும், உத்வேகப்படுத்தியும் கடமை உணர்வுக்கான புதிய இரத்தத்தை பாய்ச்சியும் செயல்பட வேண்டும்.

கள்ளச்சாராயம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பெருக்கெடுத்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். யார்

அதைத் தடுக்க வேண்டுமோ அவர்களே அதை முடுக்க முயல்பவர்களாக மாறிப் போயிருக்கிறார்கள். என்னதான் அரசு மதுவிலக்கை அமல் படுத்தினாலும் கள்ளச்சாராயம் ஒரு பெருந்தொழிலாக நடை பெறுகிறகாரணத்தினால்போதைப் பழக்கம் ஒழியவில்லை. ஏழை களின் வாழ்வும், பெண்களின் வாழ்வும் மேம்படவில்லை. குடும்பத்தில் அமைதி மலர்ந் திடவில்லை. மாவட்ட நிர்வாகம், மதுவிலக்கில் முனைப்புடன் செயல்பட வேண்டும். கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக அகற்றுவதற்குப் பாடுபட வேண்டும். தீவிரமான ஆய்வு நடத்தி கள்ளச்சாராய ஊற்றுக் கண்களைக் கண்டுபிடித்து அவற்றை அடைக்க வேண்டும். இந்தப் பணியிலே வறுமையின் காரணமாக ஈடுபட்டிருக்கின்ற வர்களைக் கண்டுபிடித்து ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் வசதிகளைக் கொடுத்து அவர் கள் மீண்டும் இதில் ஈடுபடாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும். பயிற்சிகளைத்தந்து அவர்கள் தீய வழிமுறைகளில் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை நடத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது நோயுற்ற வர்களைக் கண்டு பிடிப்பது காவல்துறையின் பங்கு என்றால் அதற்கு சிகிச்சை அளிப்பது மாவட்ட நிர்வாகத்தின் பங்காக இருக்க வேண்டும்.

கல்வி

ஆணுக்குக் கல்வி புகட்டும் போது தனி ஒருவனுக்குக் கல்வி புகட்டுகிறாய்;
பெண் ஒருத்திக்குக் கல்வி புகட்டும் போது ஒரு குடும்பம் முழுவதற்கும் கல்வி புகட்டுகிறாய்.

– ராபர்ட் மாரிசன் மெக் ஈவர்

மதுவை ஒழிக்க மனமாற்றம் தேவை

மதுவை ஒழிப்பதற்கு தண்டனை மட்டும் போதாது. மனமாற்றமும் தேவையென்பதால் மதுவின் பிடியிலிருந்து மக்களில் ஒரு பகுதியினரை விடுவிப்பதற்காக மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடும் பொருட்டு 25000 மகளிரை நியமிக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. அவர்களை உரிய முறையில் பயன் படுத்தி, போதையின் பாதையில் விழுந்து குடும்பங்கள் சிதறி விடாமல் பாதுகாக்கும் கடமை உணர்வு நமக்கிருக்கிறது. அதற்கான ஆக்கப் பூர்வமான கருத்துக்களை இந்த மாநாட்டில் நீங்கள் எடுத்துரைக்கலாம்.

"தூய்மை என்பது மேலிருந்து கீழ்நோக்கி செல்லுகிற அருவியைப் போன்றது. மேலிடத்தில் தூய்மை இருந்தால் தான் கீழ் இருக்கின்ற நிலைகளில் தூய்மையை எதிர்பார்க்க முடியும்"

தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும். அவர்களுடைய குடியியல் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். வகுப்புக்கலவரங்கள் நடக்கும் போதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்கள் மீதுதான் வன்முறை வெறியாட்டங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

நான் வந்து உதவி செய்கிறேன்!

அமெரிக்காவில் ஒருமுறை ஒருவர் குதிரைமீது சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் வழியில் ஒரு காட்சியைக் கண்டார். சில நீக்ரோ அடிமைகள் ஒரு பெரிய மரத்தைத் தூக்கி வண்டியில் ஏற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை ஒரு வெள்ளைக்காரர் கடுஞ் சொற்களால் மிரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் எவ்வளவு முயன்றும் அந்த மரத்தை அவர்களால் தூக்கி வைக்க முடியாமல் இருந்தது. அப்போது குதிரைமீது சென்றவர் அந்த வெள்ளைக்காரரைப் பார்த்து, ''ஐயா நீங்களும் அவர்களுடன் சேர்ந்து உதவி செய்தால், அந்த மரத்தைத் தூக்கிவிடலாமே'' என்று கூறினார். அதற்கு அந்த வெள்ளைக்காரர் ''என்னைக் கேட்க நீ யார்? உனக்கு விருப்பம் இருந்தால், நீ கீழே இறங்கிவந்து அவர்களுக்கு உதவி செய்'' என்றார். உடனே அவர் குதிரையை விட்டு இறங்கி வந்து அந்த அடிமைகளுக்கு உதவி செய்தார். அந்த மரமும் வண்டியில் ஏற்றப் பட்டது. பிறகு குதிரைமீது வந்தவர் அந்த வெள்ளைக்காரரிடம், ''என் பெயர் ஜார்ஜ் வாஷிங்டன். நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றேன். மீண்டும் இப்படி உதவி தேவைப்பட்டால், எனக்குச் சொல்லியனுப்புங்கள். நான் வந்து உதவி செய்கிறேன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார். அதைக் கேட்ட அந்த வெள்ளைக்காரர் தனது செயலைக்கண்டு வெட்கமடைந்தார்.

அவர்களுடைய குடியியல் உரிமையைப் பாதுகாப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முழு உத்திரவாதம் அளிக்க வேண்டும். ஏற்கனவே கடந்த கால ரணங்கள், தழும்புகளாக மாறி நிற்கின்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைப் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட இடங்களில் வகுப்புக் கலவரங்கள் தொடராமல் இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அந்தப் புகுதியின் அருகிலேயே மென்மையான நரம்பு மண்டலமாய் பாதிப்புக்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ள சுற்றுப்புற கிராமங்களில் வகுப்புக்கலவரங்கள் நடைபெறாமல் இருக்க எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பணியில் நேர்மை பழகுவதில் இனிமை

காவல் நிலையங்கள் குற்றவாளிகளைக் கண்டிப்பதற்காகவே தவிர தண்டிப்பதற்காக அல்ல. காவல் நிலையங்களே குற்றக்கூடங்களாக மாறக் கூடாது. காவல்துறை இதில் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு முறை காவல் நிலைய மரணம் நிகழும் போதும் அது மாநிலத்தையே உலுக்கிவிடுகிறது. மேலும் காவல் நிலைய மரணம் பல வினாக் குறிகளையும், வியப்புக் குறிகளையும் எழுப்பி நிர்வாகத்தைச் சங்கடத்தில் ஆழ்த்துகிறது. இதைக் குறித்து கோட்டாட்சியர்களால் விசாரணைகள் செய்யப் பட்டாலும் மக்கள் மத்தியில் அவை அவநம்பிக்கையையே பெரும்பாலும் ஏற்படுத்துகின்றன. கற்பழிப்பு, கொலை போன்றவை காவல் நிலையத்தில் நடக்கும்போது காவல் துறையின் மீது மக்கள் வைத்திருக்கும் மதிப்பு அடியோடு சரிந்து விடுகிறது. இவை மாறுவதற்கு காவல்துறை முழுமையாக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்பவர்களைக் குறைந்தபட்ச மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும். அவர்களே சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளக் கூடாது. காவல் நிலையங்கள் மக்கள் எளிதில் செல்வதற்கும், புகார்களைக் கொடுப்பதற்கும் உகந்ததாய் இருக்க வேண்டும். ''பணியில் நேர்மை; பழகுவதில் இனிமை'' என்ற கோட்பாட்டுடன் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் செயல்பட வேண்டும். மக்களுக்கு இந்தத் துறையின் மீது இருந்த நம்பிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம் பி.எஸ்.ஒ 145 விசாரணைகளைத் துரிதப் படுத்தி தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அது மற்றவர்களை அந்தக் குற்றங்கள் செய்யாமல் தடுக்க ஒரு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

"நிர்வாகம் தொலைவிலே இருக்கிறபோது பிரச்சினைகள் நெருங்கி வந்துவிடுகின்றன. அலுவலர்கள் சிந்துகிற சிரிப்புகளுக்குக்கூட சிகப்பு நாடாக்கள் கட்டப்பட்டு இருக்கின்றன"

இந்த மாநாட்டில் இவற்றையெல்லாம் பற்றி தெளிவாகவும், விரிவாகவும் ஆராய்ந்திட இருக்கின்றோம். இதில் உங்கள் அனுபவங்களையும், கருத்துக்களையும், ஆலோசனை

களையும் கேட்டறிந்து முக்கியமான முடிவுகளை எடுப்பதற்காக அரசு தயாராக இருக்கின்றது. தமிழகம் புதுப் பொலிவு பெற வேண்டும். தமிழக அரசு, தூய்மையான ஒரு நிர்வாகத்தை, அமைதியான ஒரு தமிழகத்தை உருவாக்க நீங்கள் அனைவருமே உங்களுடைய முழுமையான ஒத்துழைப்பைத் தர வேண்டும். பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் எழுச்சியுடன் இருக்க புதிய வாழ்வை வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும், ஏன்; அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள் அனைவருமே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

■

‘சிங்கிள் டெண்டர்’ முறை அறவே கூடாது
தவறு செய்யும் அதிகாரிகளுக்கு
தமிழக அரசு கடும் எச்சரிக்கை

அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் எந்தவொரு பணிக்கும் முந்தைய ஆட்சியில் இருந்து வந்த ‘‘சிங்கிள் டெண்டர்’’ முறையிலே அனுமதி வழங்குவது கூடாது. பொது டெண்டர் முறையிலேதான் பணிகளுக்கான ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று ஆட்சிப் பொறுப்பேற்று கொண்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவெடுத்து அறிவித்திருந்தார்.

சில இடங்களில் சில அலுவலர்கள் இன்னமும் பொது டெண்டருக்கான விண்ணப்பப் படிவங்களைக் கோருகின்ற அனைவருக்கும் கொடுக்காமல், மறைமுகமாக பழைய சிங்கிள் டெண்டர் முறையையே கடைப்பிடிப்பதாக புகார்கள் வந்துள்ளன. முதலமைச்சருடைய அறிக்கையின்படி நடந்து கொள்ளாமல் இவ்வாறு முறைகேடாக நடந்து கொள்கின்ற அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ் நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நான் - முடிச்சோழன்

கவிஞர் வைரமுத்து எழுதிய ‘தண்ணீர் தேசம்’ என்ற நூல் வெளியீட்டு விழாவின் போது திருமதி பொன்மணி வைரமுத்து, நான்கு முறை முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்காக கலைஞர் அவர்களை ‘நான் முடிச்சோழன்’ என்று குறிப்பிட்டார்.

பிறகு பேசிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இதனைக் குறிப்பிட்டு, ‘நான்-விஜிடேரியன், நான்-பிராமின் என்று கூறுவார்கள். அது போல சகோதரி பொன்மணி வைரமுத்து என்னை ‘‘நான்-முடிச்சோழன்’’ என்று என் தலையில் முடியில்லை என்பதை மணிப்பிரவாளமாக - திறமையாகக் குறிப்பிட்டிருக்கிறார். என்று கூறிய போது அரங்கமே அதிர்ந்தது.

♦

கரித்துண்டு பற்றி ஒரு கவித்துண்டு

டாக்டர் மு.வ. அவர்களது கரித்துண்டு கதை திரு வளையாபதி முத்துக்கிருஷ்ணன் குழுவினரால் நாடகமாக டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் செம்பொன்னார் கோவிலில் நடப்பதாக இருந்தது. நாடகக் கலைஞர்கள் வந்த வேன் விபத்துக்குள்ளானதால் நாடகம் மறுநாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மறுநாள் நாடகத்திற்கு இடையில் பேசிய கலைஞர் அவர்கள் ‘‘நேற்று நான் மேடைக்கு வரும்போது விளநகர் கணேசன் (அமைப்பாளர்) கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவர் கண்ணில்தான் கரித்துண்டு விழுந்து விட்டதோ என்று எண்ணினேன்.

இன்று நாடகம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆனால், நேற்று இந்நேரம் வேன் மரத்தில் மோதியதா? மதகில் மோதியதா? வேனில் வந்தவர்களின் கறித்துண்டாவது நமக்குக் கிடைக்குமா என்று அஞ்சிக்கொண்டிருந்தோம்’’ என்றார்.

கலைஞர் அவர்களின் சொல், கரித்துண்டாக அல்ல, ஒளித்துண்டாக உள்ளத்தில் விழுந்ததால், அவை மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

கிங் மேக்கர்

காயிதே மில்லத் நூற்றாண்டு நிறைவு [illegible] இரு [illegible] சுல்லை மான்சேட் பேசும் போது மத்திய அரசு அமைய காரணமாக இருந்தது கருணாநிதியும் மூப்பனாரும் தான் என்று குறிப்பிட்டு இருவரையும் கிங் மேக்கர் (King Makers) என்று சொன்னார். அதற்கு ‘‘நாங்கள் கிங் மேக்கர் அல்லவா? அதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோமோ இல்லையோ? அதுவேறு; ஆனால், நாங்கள் இருவரும் டில்லிக்குச் சென்று மத்தியில் ஆட்சியமைய காரணகர்த்தாக்களாக இருந்தவர்களோடு நாங்களும் பங்கேற்றோம் என்பதும் உண்மை. கிங் மேக்கர் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் King இதில் முதல் எழுத்து K. Makers இதில் முதல் எழுத்து M. ஆக, இதில் K கருணாநிதியும், M என்பது மூப்பனாரையும் குறிக்கிறது அல்லவா?’’ என்றார் கலைஞர்.

படமும் செய்தியும்

1. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மாண்புமிகு மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (6.6.96)

2. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை, அவரது இல்லத்தில் முன்னாள் பாரத பிரதமர் திரு.ஏ.பி. வாஜ்பாயி அவர்கள் சந்தித்தார். அருகில் மாண்புமிகு மத்திய அரசின் தொழிலமைச்சர் திரு. முரசொலிமாறன் அவர்கள் உள்ளார். (8.6.96)

3. சென்னையில் நடைபெற்ற கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகிறார் (5.6.96).

4. தெலுங்கு-கங்கை குடிநீர்த்திட்டம் தொடர்பாக மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களை சந்தித்துப் பேசினார். (8.6.96)

இந்தியாவிலேயே மிக அதிக வேட்பாளர்கள் போட்டியிட்ட

மொடக்குறிச்சித் தேர்தல் முடிவு

1996 சட்டமன்ற தேர்தல் இரண்டு கட்டமாக தமிழ்நாட்டில் அனைத்துத் தொகுதிகளிலும் நடைபெற்றது. மொடக்குறிச்சித் தொகுதியில் மட்டும் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. அதிக எண்ணிக்கையில் வேட்பாளர்கள் போட்டியிட்டதே இதற்குக் காரணம்.

மே மாதம் இரண்டாம் நாள் நடைபெற வேண்டிய மொடக்குறிச்சித் தேர்தல், ஜூன் முதல் நாள் நடைபெற்றது. இந்தத் தொகுதியில் 3 பிரதான கட்சிகளோடு, 1027 சுயேச்சைகள் உட்பட 1030 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மொத்தம் 61.07 சதவீத வாக்குகள் பதிவாயின.

வாக்குப்பதிவில் ஒரே ஒரு வாக்காளர் மட்டும் கொஞ்சமும் சிரமப்படாமல் முதல் பக்கத்தி லிருந்து கடைசி பக்கம் வரை, ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனது வாக்கினை அளித்து வேடிக்கை நிகழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. சார்பில் போட்டியிட்ட திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், தனக்கு அடுத்து வந்த அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் திரு. ஆர். என். கிட்டுசாமியைவிட சுமார் 40,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்தார்.

மொத்த வாக்காளர்கள்	1,94,579
பதிவான வாக்குகள்......	1,18,286
செல்லாதவை....	1,071

திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் - தி.மு.க. வெற்றி

திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் - தி.மு.க. -	64,436
திரு. ஆர்.என். கிட்டுசாமி - அ.இ.அ.தி.மு.க. -	24,896
திரு. கே. இளஞ்செழியன் - ம.தி.மு.க. -	20,403
இதர வேட்பாளர்கள் -	7,480

காயிதே மில்லத் சிந்தனை மணிகள்

தாயகத்தின் மீது படையெடுத்துவருவோர் முஸ்லீம்களேயானாலும் அவர்களை முறியடித்துத் துரத்தும் உள்ள உறுதி நமக்கு வேண்டும்! முஸ்லீம் சமுதாயம் காட்டிக் கொடுத்ததால் எந்த நாடும் வீழ்ச்சியுற்றதாக வரலாறே கிடையாது.

நீங்கள் வாழும் நாட்டை முன்னேறச் செய்யுங்கள்; எல்லோருடனும் சமாதானமாக வாழுங்கள்; அதுவே நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது!

ஒன்றுபடாதவரை யாருக்கும் நல்வாழ்வு இல்லை; ஒன்றுபட்டுவிட்டால் நமக்கு இணை யாரும் இல்லை!

திட்டங்களிலெல்லாம் சிறந்த திட்டம் பொது வாழ்க்கையிலிருந்து லஞ்ச ஊழலை ஒழிப்பதுதான்; லஞ்ச ஒழிப்பே ஒரு திட்டமாகும்!

எல்லா மார்க்கங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; அதுதான் மதச்சார்பற்ற தன்மையின் உண்மையான அர்த்தம்.

உலகில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மூத்த மொழி நம்முடைய தமிழ் மொழிதான்! ஆகப்பழங்காலத்திலேயே தமிழின் பொற்காலம் தொடங்கிவிட்டது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் தேசிய ஒருமைப்பாடு; இதை ஏற்காத அரசியல்வாதிகள் ஒற்றுமைக்கு உலை வைப்போராவர்!

மருத்துவக் கட்டுரை

வெயில்கால வேதனைகள்

''போன வருஷத்தை விட இந்த வருஷம் வெயில் அதிகம்; ஒண்ணும் முடியலை''என்பார்கள், சிலர்; ஆனால் ஒன்று,போனவருஷத்தை விட இந்த வருஷம் அவருக்கு ஒரு வயது கூடியிருக்கும்; இதுதான் உண்மையே தவிர, வெயில் எப்போதும் போலத்தான் இருக்கும்'' என்று நகைச்சுவை ததும்பச் சொல்லுவார் திருமுருக கிருபானந்த வாரியார்.

என்ன இருந்தாலும் இந்த வருஷம் அதிகம் தான்! அக்கினி நட்சத்திரம் தாண்டியும் கூட, 108 டிகிரி வரை வெயில் உள்ளதை இளைஞரோ, கிழவரோ யாரால் மறுக்க முடியும்?

மழைக்காலம் வர இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் இருக்கிறது. இருந்தும் வெயில் குறையவில்லை.வெயில் அதிகம் இருந்தால் மழைக்காலத்தில் மழையும் அதிகம் இருக்கும் என்பார்கள். இப்பொழுது பெய்கிற மழையை எல்லாம் கணக்கில் சேர்க்கத் தேவையில்லை.

கல்விக் கூடங்களில், கோடை விடுமுறைக் காலத்தில் கூட இந்த வெயிலில் எங்கே தலைகாட்ட முடிந்தது? 'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி சொன்னதை எப்படிச் செயலாக்க முடிந்தது? பிள்ளைகளெல்லாம் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தார்கள்; மாலை நேரம் வந்தால் போயிற்று; பகலெல்லாம் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்து வியர்வையில் நனைந்து சோம்பிக் கிடந்த அவர்கள் - ''கடற்கரைக்கு அழைத்துப் போ''... ''பூங்காவுக்குப் போகலாம்'' ''ஏதாவது ஏர்கண்டிஷன் தியேட்டரில் படம் பார்க்கச் செல்லலாம்'' என்றெல்லாம் தமது பெற்றோரைத் தொல்லைப் படுத்தினர்.

தினசரி அப்படியெல்லாம் அழைத்துப் போகிற அளவுக்கா நம் நாட்டுக் குடும்பங்களின் பொருளாதாரம் வளம் பெற்றிருக்கிறது? இல்லையே!

மக்கள் நலமும் பொதுச் சுகாதாரமும் அவர்கள் வாழும் நாட்டின் தட்பவெப்ப நிலைகளையே பெரிதும் சார்ந்திருக்கும். அதிலும் பூமத்திய ரேகைக்கு அருகே உள்ள - கோடை காலத்தின் தாக்கம் அதிகமிருக்கும் (Tropical Countries) நம்முடைய நாட்டிலோ, வெயில் நெருப்பாய்த் தகிப்பதில் வியப்பிருக்க முடியாது. அதன் விளைவாக மக்களுக்கு ஏற்படுகிற நோய்நொடிகளுக்கும், குறைபாடுகளுக்கும் (Disorders) கணக்கு வழக்கிருக்காது. அதை விவரிப்பதே இந்தக் கட்டுரை.

கோடைக் கேடுகள் மூவகை:

கோடை காலத்தில் நமக்கு நேரும் சீர்கேடுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முதலாவது - கோடை வெப்பத்தின் நேர்முகத்தாக்குதலால் (Direct) உண்டாகக் கூடியது.

இரண்டாவது - மிகுதியான வெப்பத்தின் விளைவுகளால், அல்லது மறைமுகத் தாக்குதலால் (Indirect) ஏற்படக்கூடியது.

மூன்றாவது - வேனிற் காலத்தில் வரக்கூடிய பொதுவான நோய்கள்.

இந்த மூன்றிலும் கூட - வெப்ப அயர்ச்சி (Heat-Exhaustion), வெப்ப வாதம் (Heat-Stroke) ஆகியவைகளை, நாம் முதல் வகையைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

வெப்ப அயர்ச்சி:

கோடைக்காலத்தில், அதிக உஷ்ணமுள்ள நாட்களில், வெயிலின் நேரடித் தாக்குதலில் கடினமான வேலைகளில் ஈடுபடுவோருக்கு ஏற்படுவதுதான் வெப்ப அயர்ச்சி என்பது. இதன் காரணமாக உடலில் உள்ள முக்கியத் தாதுப்பொருட்களும் (Electrolytes) நீரும் நமது வியர்வை மூலமாக வெளியேறும்.

இதனால் அயர்ச்சி, தசை முறுக்கேறுதல் (Cramps) போன்றவை நம் உடலில் ஏற்படும். இதைத் தவிர்க்கப் பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; நிறையத் தண்ணீர் குடித்தாலே போதும். அம்மாதிரியான கோளாறுகளைத் தடுத்துவிடலாம்.

தாகம் என்றதும் இன்னொன்றும் இங்கே நம் நினைவுக்கு வருகிறது. தண்ணீர்ச்சத்து உடலில் குறைகிறபோது வயிற்றுப்போக்கு, வறட்டு இருமலெல்லாம் கூட ஏற்படும். இது போன்ற இன்னல்களிலிருந்து விடுபட, அடிக்கடி தண்ணீர் குடிக்கலாம். 'பச்சைத் தண்ணீரா?' என்று கேட்காதீர்கள்; எங்கும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பதால் எங்கெல்லாமோ இருந்து லாரிகளில் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது; என்னென்ன கிருமிகள் - எப்படிப்பட்ட நோய்கள் அவற்றால் பரவுமோ யார் கண்டது?

ஆகவே, குறைந்தது இருபது நிமிஷமாவது கொதிக்கவைத்து ஆறிய தண்ணீரைச் சாப்பிடுங்கள்; ஆபத்தில்லை, அதுதான் நல்லதும் கூட.

> எல்லையற்ற பொறுமை, நிறந்தவெளி இதமான உழைப்பு, குறைந்த கவலை - இவையே உடல் நலனுக்கும் நீண்ட வாழ்வுக்கும் ஏற்ற பண்புகள்
>
> - ஸர். ஃபிலிப் ஸிட்னி

> நோய் வரும்வரை உண்பவன், உடல் நலமாகும் வரை உண்ணா நோன்பு மேற்கொள்ள வேண்டும்.
>
> - தாமஸ் புல்லர்

வெப்ப வாதம்:

கோடைக்காலக் கொடுமையிலே (Heat Stroke) எனப்படும் வெப்ப வாதம் - அதாவது மயக்கத்தோடு கூடிய உறுப்பியக்கத்தடை உண்டாகும்.

வெப்ப அயர்ச்சி மேலும் முற்றி, நம் நரம்பு மண்டலத்தைத் தாக்கி, நம்மை அடியோடு நினைவிழக்கச் செய்துவிடும் (Coma) விபரீதமும் வெப்ப வாதத்தால் உண்டாகும். இன்னும் சொல்லப்போனால் இதனால் சிலருக்கு - மயங்கி விழுதல், மரணமடைதல் போன்ற ஆபத்துக்களெல்லாம்கூட ஏற்படும். நேரத்தோடு சிகிச்சை அளித்தால் சிலரைப் பிழைக்கவைக்க முடியும்; இல்லையேல் இரண்டொருவருக்குக் கைகால் விழுந்துவிடுவதை நிவர்த்திபண்ண முடியாமலே போய்விடும்.

கடுமையான வெப்பத்தின் தாக்கத்தால் வெளியேறும் வியர்வையின் மூலம் உடல் வெப்பம் குறையக்கூடும்; ஆகவே, காற்று உள்ளே புகாத சில்க், பட்டு, நைலான், நைலக்ஸ், சிந்தடிக், பாலியஸ்டர், டெர்லின், டெரிகாட்டன் போன்ற துணிகளால் ஆன ஆடைகள் அணிவதைக் கோடைக்காலத்தில் குறைக்கலாம் - அல்லது தவிர்க்கலாம்; கதர், கைத்தறி ஆடைகளே கோடைக்கு ஏற்ற ஆடை; அதுவும் தடித்ததுணியாக இல்லாதிருந்தால் நல்லது; காற்று உள்ளே செல்ல வேண்டுமல்லவா?

மேலே நாம் குறிப்பிட்ட இடலாமைகள் நீங்க வேண்டுமானால் இன்னும் சில வழி

முறைகளும் இருக்கின்றன. நிறையக் காய்கறி, பழம் ஆகியவற்றைத் தினந்தோறும் நாம் நம் உணவோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் நமது உடலின் சக்தி இழப்பை நாம் ஈடுசெய்துவிட முடியும். கோடைக் காலத்தில் முடிந்தவரை நாம் நம் உழைப்பைக் குறைத்துக் கொள்வது நல்லது. உடலைச்சுத்தமாகவைத்துக் கொள்ளுவதும், சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதும், வீட்டைக்காற்றோட்டமாக வைத்துக் கொள்ளுவதும் அதைவிட நல்லது.

மறைமுக பாதிப்புகள் :

வெப்பத்தின் மறைமுகத் தாக்குதலால் சிலவகைபாதிப்புகள் ஏற்படக்கூடும் என்று

மேலே தெரிவித்தோமே! அதுபற்றி இங்கே விளக்கலாம்.

அ. அதிகமாக வியர்வை ஏற்படும். இதனால் உடலில் தண்ணீர்ச் சத்து குறைவடையும் (Simple Dehydration).

ஆ. வேர்க்குரு (Miliaria Rubra) வேனல் கட்டி (Furuncles / Abscesses) போன்றவைகள் ஏற்படும்.

இ. வியர்வையால், மென்மையான நம் சரும நோய்களின் வேகம் அதிகரிக்கும்.

ஈ. அதிகமாக வெளிப்படும் வியர்வை காரணமாக மலச்சிக்கல், சிறுநீர் கழிப்பதில் பொறுக்க முடியாத எரிச்சல் போன்ற துன்பம் ஆகியவை உண்டாகும்.

உ. குறிப்பாகக் கோடைக் காலத்தில் சில நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் (Epidemics). குறிப்பாக சின்னம்மை, பெரியம்மை, தட்டம்மைஆகியவைகள் பரவும். இதனால் பாதிக்கப்படும் நபரை மருத்துவர்களிடம் அழைத்துப்போய்க் காட்டத் தவறக்கூடாது.

ஊ. நச்சு உயிரி தொடர்பான வியாதிகள் (Viral Fevers) ஏற்படும்.

எ. வயிற்றுப்போக்கு போன்ற வியாதிகள் (Acute Diarrohoeal Disorders) வந்து அவதிக்கு ஆளாக்கும்.

இவைகளெல்லாம் பொதுச் சுகாதாரக் கண்ணோட்டத்தில் முக்கியமாகக் கருதப்படக்கூடியவைகளாகும்.

காக்கும் வழிமுறைகள்:

எந்த ஒரு நோயோ, கோளாறோ ஆனாலும் சரி; அது வந்தபின் துன்பப்படுவதை விட, வருமுன் காப்பதே சாலச் சிறந்தது ஆகும். அந்த வகையில் கோடை வெய்யில் கொடுமைகளிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக்

கொள்ளச் சில வழிமுறைகளைக் கூறுவதும் என் கடமையாகும். அதாவது Do's and Dont's என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே... அப்படி.

★ வெயிலின் நேரடித் தாக்குதலுக்கு முடிந்தவரை ஆளாகாதிருங்கள். அதாவது குடை பிடித்துக் கொள்ளவோ, தொப்பி அணிந்து கொள்ளவோ வெட்கப்படாதீர்கள். தரமான கறுப்புக் கண்ணாடி (Cooling Glass) போட்டுக் கொள்ளவும் செய்யலாம்.

★ சிறியவர்களோ, பெரியவர்களோ, பருத்தித் துணியிலான உடைகளையே அணியுங்கள்; அவைகளே வியர்வையை உறிஞ்சும். காற்றை உள்ளே புகவிடாத வகையைச் சேர்ந்த துணிமணிகளால் தைக்கப்பட்ட ஆடைகள் ஆரோக்கியக் குறைவையே உண்டாக்கும்.

★ உடலில், அல்லது, நமது தோலில் எவ்விதக் கெடுதலும் நேராமல் இருக்க வேண்டுமானால், தினசரி காலையில் ஒருமுறை - மாலையில் ஒருமுறை சுத்தமான குளிர்ந்த நீரில் குளிக்கலாம்.

> மனம் திறந்து கலகலவெனச் சிரியுங்கள். மனம் போராட்டங்களோடு போராட இன்று ஆற்றல் பெறுவீர்கள்.
>
> – ஷெல்லி

வெந்நீரில் குளித்துத்தான் பழக்கமா? சரி, அதையாவது செய்யுங்கள்.

★ நீர்மோர், நீராகாரம், பழச்சாறு, இளைநீர் நிறைய அருந்துவது நல்லது. குறைந்தது ஒரு நாளைக்கு இரண்டு லிட்டர் அல்லது இரண்டரை லிட்டர் தண்ணீர் ஒவ்வொருவரும் குடித்தே ஆகவேண்டும்.

இந்த முறைகளையெல்லாம் கடைப்பிடித்தீர்களேயானால், கோடை கால நோய்கள் அல்லது வெய்யில் காலச் சீர்கேடுகளிலிருந்து நிச்சயம் நீங்கள் தப்பலாம்.

கோடையிலே இளைப்பாறிக்கொள்ள வகை கிடைத்த குளிர்தருவாய், தரு நிழலாய் நிழல் கனிந்த கனியாய், என்னுடைய ஆலோசனைகள் நிச்சயம் எல்லோருக்கும் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது.

மிதக்கும் நகரங்கள்

உலகத்தில் மிதக்கும் நகரம் என்று வெனிஸ் நகரைக் குறிப்பிடுவார்கள். இதற்குக் காரணம் வெனிஸ் நகரில் சாலைகளே கிடையாது. அதற்குப் பதிலாகக் கால்வாய்கள்தான் உள்ளன. கார்களுக்குப் பதிலாக இங்கே படகு போக்குவரத்தே நடைபெறுகிறது.

இனி 21-ஆம் நூற்றாண்டில் உலகின் பல நகரங்கள் வெனிஸ் நகரத்தைப் போலவே மிதக்கும் நகரங்களாக இருக்கும் என்று ஜப்பானியக் கட்டிடக்கலை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

வருங்காலத்தின் மனிதர்களே செயற்கையாக கடலில் மிதக்கும் நகரங்களைக்கட்டி விடுவார்கள் என்று இவர் குறிப் பிட்டுள்ளார். ஜப்பானில் ஏற்கெனவே மிதக்கும் விமான நிலையம் உள்ளது.

சென்னை நகரத்தின் வரலாற்றில் இதுவரையில் கோடையில் இவ்வளவு மழை பெய்ததேயில்லை என்று சொல்லும் அளவுக்கு ஒரு பெரும் மழையை கண்டது அப்போது நகரின் பெரும்பாலான சாலைகளில் மழை வெள்ளம் பெருக் கெடுத்து ஓடி சென்னை நகரமா இல்லை வெனிஸ் நகரமா என்ற தோற்றத்தை வெளிப்படுத்தியது.

> நோய், குதிரையின் வேகத்தோடு நம்மை வந்தடைகிறது. ஆனால், போகும் போதோ பேன் போல் மெதுவாக குணமடைகிறது.
>
> – சிந்திப் பழமொழி

திரைப்படத்தொழிலாளர்:

முதல்வரின் முயற்சி வெற்றி!

வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது

தமிழ்த் திரைப்படத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை 4.6.96 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்தப் பேச்சு வார்த்தையின்போது தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகளும், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கத்தின் (FEFSI) பிரதிநிதி களும் கலந்து கொண்டார்கள்.

முதலமைச்சர் அவர்கள்தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகளின்இதுகாறும்கடைபிடிக்கப்பட்டு வந்தவேலைநேரத்தில் எந்த மாறுதலும் செய்யக் கூடாது என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்ட முதல்வர் அவர்கள், சண்டைப் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் வேலைநேரத்தில் மட்டும் மாறுதல் செய்யக் கோரியிருந்ததை சுட்டிக்காட்டி அந்தப்பணியிலும்ஏற்கெனவேகடைப்பிடிக்கப் பட்டு வந்த வேலைநேரத்தை மேற்கொள்ளு மாறு வலியுறுத்தினார். அப்பொழுது சண்டைப் பயிற்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் பணிபுரிந்தால் உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது, சண்டைப் பயிற்சியின்போது யாரேனும் உயிரிழக்க நேரிட்டால் தமிழக அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் அன்னாரது குடும்பத்தாருக்கு அளிக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் சண்டைப் பயிற்சியின் வேலை நேரத்தில் மாறுதல் செய்வதில்லை என்ற உறுதிமொழியைத் தென்னிந்தியத்திரைப்படத்தொழிலாளர்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஊதிய உயர்வு மற்றும் பணிகள் குறித்த ஒப்பந்தத்தில் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கம் மற்றும் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கம் ஆகியவற்றோடு தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தெலுங்குத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், கன்னடத்திரைப்படத்தயாரிப்பாளர்கள் சங்கம், மலையாளத் திரைப்படத் தயாரிப் பாளர்கள் சங்கம் ஆகியவற்றைச் சார்ந்த பிரதிநிதிகளும் தமிழ்நாடு அரசு முன்னிலையில்

கையெழுத்திடுவது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கம், சம்பந்தப்பட்ட மொழித் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்துடன் கலந்துபேசி தீர்த்துக் கொள்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஊதிய உயர்வு குறித்த பிரச்சினை சம்பந்தமாக இன்னும் சில நாட்களில் இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சங்கத்தினர் தங்கள் வேலைநிறுத்தத்தை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு 5.6.96 அன்று பணியில் ஈடுபடுவதற்கு ஒத்துக் கொண்டார்கள். திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருடைய பிரச்சினை களையும் சுமார் 4 மணிநேரம் பொறுமையாகக் கேட்டறிந்து பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைத்ததற்கு அனைத்துத் தரப்பினரும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத்தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை அமைச்சர் திரு.ப. முல்லை வேந்தன், செய்தி, சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. நா. ஆதிமூலம், செய்தி மக்கள்தொடர்பு இயக்குனர் திரு.வி. இறையன்பு ஆகியோர் பங்கேற்றனர்.



வால்நட்சத்திரம் என்பது சின்னஞ்சிறு கற்களும், பனிக்கட்டிகளும், தூசிகளும் கொண்டு உருவான வைகளேயாகும். கற்கள் நிறைந்த இதன் தலைப் பகுதியே 'நியூக்ளியஸ்' எனப்படுவது. பூமியும் கிரகணங்களும் போல இவைகளும் சூரியனைச் சுற்றுகின்றன. சிறிய வால் நட்சத்திரங்கள் 3 ஆண்டுகளில் சூரியனைச் சுற்றும்; ஹேலி வால் நட்சத்திரம் 70 ஆண்டுகளில் சூரியனைச் சுற்றும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் இப்படி பூமியைச்சுற்றும் வால் நட்சத்திரங்களும் உண்டு.

● ● ●

ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் வந்த பிறகுதான் நம் இந்திய நாட்டில் அச்சடிக்கும் முறை ஏற்பட்டது. 1556ல் கோவாவில் அச்சடிக்கும் முதல் இயந்திரம் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் அச்சிடப் பட்ட 'டாக்டரினா கிரிஸ்டம்' என்ற பிரஞ்சுப் புத்தகம் அதற்கு அடுத்த ஆண்டே வெளியிடப் பட்டது. 1558ல் அதையே 'தம்பிரான் வணக்கம்' என்ற பெயரில் வெளியிட்டார்கள்; இதுவே இந்திய மொழியான தமிழில் வெளிவந்த முதல் நூலாகும். 1780ல் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்ற ஆங்கிலேயர், கல்கத்தாவிலிருந்து, 'பெங்கால் கெசட்' என்ற செய்தித்தாளை வெளியிட்டார். இதனாலேயே அவரை 'இந்திய இதழியலின் தந்தை' என்று குறிப்பிடுவார்கள்.

● ● ●

கம்ப்யூட்டர் தயாரிப்பில் முன்னணியில் உள்ள ஐ.பி.எம். நிறுவனத்தார், எழுத்து மூலம் மட்டுமல்ல; பேச்சு மூலமும் கம்ப்யூட்டர் உதவியால் தொடர்பு கொள்ளலாம் என்கிறார்கள். பேசும் வசதியோடு 'ஆப்டிவா' வகை சிறப்புக் கம்ப்யூட்டர்களில் இவ்வாறு பேசும் வசதியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அவர்கள்.

● ● ●

லண்டனில் உள்ள சர்பெஞ்சமின் ஹாலில் உள்ள 'பிக்பென் கடிகாரக் கோபுரத்தின் உயரம்காண 374 படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். ரோமானிய எண்களோடு உள்ள இதன் பெண்டுலம் மட்டும் 13 அடி உயரம். அதில் உள்ள ஒவ்வொரு ரோமானிய எழுத்தும் 2 அடி நீளம். ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒலி எழுப்பும் இந்தக் கடிகாரத்தை 131/2 எடை கொண்டதாக உருவாக்கியவரே சர் பெஞ்சமின் தான். அவர் பெயராலேயே உள்ள இக் கடிகாரத்திற்கு வாரம் இரண்டுமுறை சாவி கொடுக்க வேண்டும். இதன் மணியோசை இங்கிலாந்தின் பி.பி.சி. மூலம் ஒலி பரப்பாகிறதாம்.

● ● ●

அறிவியலில் உலகம் முழுவதற்குமாக ஓர் அளவை முறை தேவை எனக் கருதப்பட்டு, அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர்கள் கூறிய ஆலோசனைப்படி 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச அளவை 'SI Units' முறை என்பதாகும்; அதன் விரிவாக்கம் Systeme International d' Units.

அறிவியல் துளிகள்



புழுதிக் கோயில்

பஜனை, பூஜனை, சாதனை, ஆராதனை
யாவையும் விட்டொழி:

கதவடைத்த கோயிலுள்ளே
யாரைத் தேடி நீ அலைகின்றாய்?

இருளில் புகுந்து உன் மனத்துள்ளே
யாரைக் குறித்து வழிபடுகின்றாய்

கண்ணைத் திறந்து நன்றாகப் பார்:
கடவுள் உன் இல்லத்திலும் இல்லை;

உழவர் உழுதிடும் [illegible] எனும்
வயல் வெளியில் வாழ்கின்றார் அவர்.

உடல் வருந்தக் கல்லை உடைத்தே
பாதை அமைப்போரிடமே பார் அவரை:

வெயில் மழையிலும் இந்த எளியவருடன்
புழுதியில் அவர் பணிசெய்வதைக் காண்:

உனது தூய ஆடையைக் களைந்து எழுந்து வா!
அவரைப் போல், புழுதியில் நீயும் உழைப்பாய்!
விடுதலை! எங்குளது விடுதலை?
விடுதலை என்பது எது?
இறைவன் தன் படைப்பில்
கட்டுண்டு இருப்பதைப் பார்:
தியானத்தைக் கட்டி வை;
பூக்குடலையை ஒதுக்கிடு!
கிழிந்து கந்தலாகட்டும் உனது ஆடை!
தூசு படிந்து அது அழுக்கு ஏறட்டும்.

தொழில் புரியும் அவருடனே நீயும்
ஒன்றியே உழைத்திடுவாய்;
நெற்றி வியர்வை
நிலத்தில் சொட்டப் பாடுபடு.

– இரவீந்திரநாத் தாகூரின்
[illegible]
(11 [illegible])

காது குடையும் சிறகு



தமிழுக்கு ஜப்பானிய ஹைகூ வடிவத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக நான் பிரச்சாரம் செய்தேன்.

அந்தப் பிரச்சாரம் பயனைத் தந்தது. இருபதுக்கும் மேற்பட்ட ஹைகூ தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. எந்த இதழைப் பிரித்தாலும் அதில் ஹைகூ இருக்கிறது.

இது ஒரு புறம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் வேறொரு வகையில் வருத்தத்தையும் தருகிறது.

ஹைகூ என்ற பெயரில் வருவதெல்லாம் ஹைகூவாக இல்லை என்பதுதான் என் வருத்தத்திற்குக் காரணம்.

பெரும்பாலோர் ஹைகூ என்பதை வெறும் மூன்றடி விவகாரமாக நினைத்துக் கொண்டார்கள்.

மூன்றடி யாப்பு வடிவத்திற்காக நாம் ஹைகூவிற்குப் போக வேண்டியதில்லை.

தமிழிலேயே சிந்தியல் வெண்பா, வெண்பாழிசை, ஆசிரியத் தாழிசை என்ற மூன்றடி யாப்பு வடிவங்கள் உள்ளன. ஏன், இவற்றை விடச் சிறிய குறள் என்ற இரண்டடி வடிவமே இருக்கிறது.

பிறகு எதற்கு ஹைகூ?

மூன்றடி என்பது ஹைகூவின் ஒரு பண்பு தான். ஹைகூவின் சிறப்புக்கு அது மட்டுமே காரணம் அல்ல. அதற்குள்ள மற்றப் பண்புகளே உலக யாப்பு வடிவங்களுள் ஹைகூவை உயர்த்திப் பிடிக்கின்றன.

மூன்றடி என்பது ஹைகூவின் புற வடிவம். ஒரு நல்ல கவிதைக்குப் புற வடிவம் மட்டும் போதாது. அக வடிவமும் (Inner form) வேண்டும்.

ஹைகூவிற்கு அக வடிவமும் உண்டு. அரூபமான கருத்துகளையோ, உணர்வுகளையோ வருணிக்காமல் எதையும் படிமமாகக் காட்சி வடிவப்படுத்திக் காட்டுதல், கவிஞன் தான் அடைந்த உணர்ச்சிகளைத் தானே விவரித்துக் கொண்டிராமல், அந்த உணர்ச்சிகளை வாசகன் உள்ளத்தில் ஏற்படுத்தக் கூடிய காட்சிகளை, நிகழ்வுகளை மட்டும் சொற்களில் படம் பிடித்துக் காட்டுதல், வேகத்திற்காகவும் செறிவுக்காகவும் தொடர்புச் சொற்களை நீக்கிவிட்டு உயிர் நாடியான சொற்களை மட்டும் கையாளும் அவாய்நிலை (ellipsis) நடையைப் பயன்படுத்தல் போன்றவை ஹைகூவின் அக வடிவத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் ஹைகூவின் உள்ளடக்கத்திற்கும் கூட மரபு வழிப்பட்ட இலக்கணம் உண்டு. (சங்க கால அகப் பொருள் கவிதைகளுக்கு உள்ளடக்க இலக்கணம் இருந்ததை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம்).

ஹைகூ பெரும்பாலும் ஸென் (ZEN) புத்த மதத் தத்துவத்தின் அடிப்படையில் உதிக்கிறது.

இருத்தல் (existence) என்பது நிரந்தரமான, எல்லையற்ற மகா சமுத்திரம், பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு பிராணியும் இந்த மகா சமுத்திரத்திலிருந்து எழுகின்ற தற்காலிக வெளிப்பாடுகளே.

படைக்கப்பட்ட அனைத்தும் - சிகரம் உயர்த்தி நிற்கும் மலையிலிருந்து சிறிய மலர் வரை, அழகான பெண்ணிலிருந்து அற்பப் புழுவரை - ஒன்றோடு ஒன்று உறவுடையவை; சரிசமமான அந்தஸ்துடையவை என்பது ஸென்னின் அடிப்படைத் தத்துவமாகும்.

காணும் ஒவ்வொரு காட்சியும், நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இருத்தலைப் பற்றிய உண்மையை உணர்த்தும் குறியீடுகளாகவே இருக்கின்றன.

உள்நோக்குடைய கவிஞன் பார்வையில் இந்தக் காட்சியும், நிகழ்ச்சியும் மின்னல் வெட்டுவதுபோல் மின்னி ஒளியை உண்டாக்குகின்றன.

இந்த ஒளியைத்தான் ஹைகூக் கவிஞன் வாசகனுக்கும் பரிமாற விரும்புகிறான்.

உதாரணத்துக்கு சோஷு எழுதிய ஹைகூவைப் பார்ப்போம்.

நீரில் நிலா
மீண்டும் மீண்டும் உடைகிறது
ஆனாலும் அங்கேயே இருக்கிறது.

சலனமில்லாத நீரில் நிலாவின் பிம்பம் பிரகாசிக்கிறது. காற்றடிக்கும் போதெல்லாம் அலையெழுந்து பிம்பம் சுக்கல் சுக்கலாக உடைகிறது. அலை ஓய்ந்ததும் துண்டுகள் இணைந்து மீண்டும் நிலா பிரகாசிக்கிறது.

படைப்பு இப்படித்தான் நிகழ்கிறது. ஆயிரம் மலர்கள் மலர்கின்றன. வாடி உதிர்கின்றன. மீண்டும் மலர்கின்றன.

ஆயிரக் கணக்கான மனிதர்கள் பிறக்கிறார்கள். மடிகிறார்கள். மீண்டும் பிறக்கிறார்கள்.

உடைவது நிலாவின் பிம்பம்தான். நிலா அல்ல. அது எப்போதும் உடையாமல் அப்படியே இருக்கிறது.

மலர்களும், மனிதர்களும் நிலாவின் பிம்பங்களே.

மலர்கள் மலரலாம்; உதிரலாம். மலரின் மூலம் அப்படியே இருக்கும்.

மனிதர்கள் பிறக்கலாம். இறக்கலாம். மனிதனின் மூலம் அப்படியே இருக்கும்



இன்னொரு வகையிலும் இது அர்த்தப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சத்தியத்தின் பிம்பம் பிரகாசிக்கிறது. அவன் மனம் சலனப்படும்போது அந்த பிம்பம் உடைந்து சிதறுகிறது. மனம் நிச்சலனமடைகிறபோது மீண்டும் சத்தியம் பிரகாசிக்கிறது.

ஒரு 'சாதாரண'க் காட்சி இவ்வளவு அர்த்த அலைகளை எழுப்புகிறது. இதுதான் ஹைகூவின் மகத்துவம்.

ஸென் பார்வையில்தான் நாமும் ஹைகூ எழுத வேண்டுமா? என்று கேட்கலாம். தேவை இல்லை.

ஆனால் நாம் காட்டும் காட்சி அல்லது நிகழ்ச்சி இயற்கையைப் பற்றி, மனிதனைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி ஓர் அரிய உண்மையை உணர்த்துவதாக, வாசகன் உள்ளத்தில் ஒளியேற்றுவதாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் ஹைகூ எழுத வேண்டிய அவசியமில்லை.

உள்ளொளி ஏற்படுத்தும் படிமக் காட்சி திட்பம், நுட்பம் போன்ற புதுக்கவிதைப் பண்புகள் ஹைகூவில் இருப்பதைப் பார்த்து வியந்தே உலக மொழிகளெல்லாம் அதை வரவேற்று ஆசனம் தந்திருக்கின்றன.

மேலை நாட்டுப் புதுக்கவிஞர்கள் ஹைகூவிடமிருந்து நிறையக் கற்றுக்கொண்டார்கள். நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஹைகூ ஒரு சிறகு. அதைக் காது குடைவதற்குப் பயன்படுத்தக் கூடாது.

- அப்துல் ரகுமான்

கடைசி மழைத்துளி

அறிவுமதி

- உடையும் அணைகள்
மனிதர்கள் இல்லை
காட்டின் வேர்கள்

- வறண்ட ஆறு
காலடித் தடங்களில்
சிலந்தி வலை

- பெருகத்தான் செய்யும் வன்முறை
கேட்கிறதே
மரம் வெட்டும் சப்தம்

- வயலிலுமா விளையாடின மீன்கள்
வயலலையே விளையாடுகின்றன
இறால்கள்

- ஈரமற்ற நிலம்
வெடிப்பில் கிடக்கிறது
கொக்கின் பிணம்

- கிளை கிடைக்காத சோகம்
அமந்தது புறா
கல்லறைச் சிலுவை

- இறந்த இராணுவ வீரன்
மனைவியிடம்
ஒப்படைக்கப்பட்டது
பாதி எழுதிய கடிதம்

- மேகம் விலக்கிப் பார்த்தது
பௌர்ணமி
புகைக்குள் தாஜ்மகல்

- எங்கும் புகை
குழந்தைக் கனவுகளிலும்
கறுப்புத் தேவதைகள்.

- மரம் வெட்டிய கோடரி
பார்த்துக் கொள்
கடைசி மழைத்துளி

- வீட்டிற்குள் குரோட்டன்சுகள்
தொட்டிக்குள் மீன்கள்
வானம் தொலைத்த நகரம்

- தோல் தொழிற்சாலை
அழுகல் நீர்
மூச்சுத் திணறும் நிலா

- ஆழம் குறையும் கடல்
அகலம் சுருங்கும் வானம்
எப்படிப் பிழைக்கும் வாழ்க்கை

- கொதிக்கிறது உலை
சாணிக்குள் தேடுகிறான்
செறிக்காத சோளம்

- மரக் கிளையில் குழந்தை
வரப்பில் பண்ணையார்
பயிரில் சிந்துகிறது பால்

- மரவியாபாரி பார்க்கிறான்
வேர்முதல் கிளைவரை
குருவிக்கூடு நீங்கலாக

நகர்ப்புற ஏழைகள் அடிப்படை வசதிகள் திட்டம்

பயன்களை மக்களே பெற்றிட பயிற்சி கொள்ளும் களம்!

ஆர். வேலு, இ.ஆ.ப.

நகராட்சி இயக்குநர் – நகராட்சி நிர்வாகம்

மழை பெய்கிறது!
அது

அன்று பிறந்த' பறவைக்குஞ்சின் வாய் போல்
நீருக்காக வாய் பிளந்து நிற்கும்
விதைக்காக விழ வேண்டும்.



காற்று வீசுகிறது!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சூரியனுக்கு முதுகு காட்டி
உழவுகட்டிகளில் அல்லாடி, உழைத்துக் களைத்து
முற்றத்தில் முழங்கால் கட்டி இளைப்பாறும்
உழவனுக்காய் வீச வேண்டும்.

எண்ணற்ற நலத்திட்டங்கள்,
ஏழை எளியவர்க்கான அறிவிப்புகள்
இந்தக் காற்றுப் போல், மழை போல்
வீசினால்,
அது மக்களுக்கு வரப் பிரசாதம்.

நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்,
கல்வி, சுகாதாரம், சுற்றுச் சூழலை மேம்படுத்துதல்,
மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல்
இவை போன்ற இலக்குகளைக் கொண்ட
''நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித்திட்டம்''
ஒரு வரப்பிரசாதம்தான்.

இத்திட்டம் ஒரு வரப்பிரசாதம் மட்டுமல்ல,
இதைச் செயல்படுத்துகிறவர்கள் மக்களாக இருக்கிறார்கள்.
அதிகாரம் மேலிருந்து கீழே பாய்கிற போது.
அது மக்களை எரிச்சலடையச் செய்கிறது.
இங்கே,
அடிமட்டத்தில் வாழும் மக்கள் கையிலேயே
அதிகாரம் தரப்படுகிறது.

என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை
மக்கள் அறியச் செய்வது,
எங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிந்து,
மக்களை எடுத்துக் கொள்ளச் செய்வது
இத்திட்டத்தில் உரத்து ஒலிக்கும் நாதம்.

செயல், சாதனை என்பவை
தனிமனித முன்முயற்சியால் தூண்டப்படலாம்.
ஆனால் அவை
கூட்டாக இயங்கும் மக்கள் ஆற்றலின் வெளிப்பாடுகள்.
தனி மனிதனால் அல்ல;
அமைப்பாக இயங்குகிறபோது மட்டுமே,
சாதனை விளைகிறது.

மக்கள் தங்களையே
ஒரு அமைப்பாக்கிக் கொண்டு
பயன்கள் தங்களையே வந்தடைய
பயிற்சி கொள்ளும் களமாக
இத்திட்டம் விளங்குகிறது

நகர்ப்புற ஏழை மக்களை ஓர் அமைப்பாக்கி,
அந்நியப்பட்டு நிற்கும் அரசமைப்புகளிலிருந்து
அவர்களுக்குரியதை [illegible]
அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை
அவர்கள் வாழும் இடங்களிலேயே வழங்கவும்
உருவானதுதான் இந்தத் திட்டம்.

உலகமெல்லாம் நாடுகள், நாடுகளிலெல்லாம் நகரங்கள்;
நகரங்கள், [illegible]லெல்லாம் வீதிகள்
வீதிகளெங்கும் [illegible]
[illegible]டுகளின் ஒரு மூலையில் ச[illegible]

உலகத்தில் சரிபாதியாய்,
உலக உருண்[illegible] முழு[illegible]
தன் பங்களிப்பினால் இய[illegible]ருக்கிற
பெண்
உலகத்திலிருந்து, சமையலறை மூலைக்கு
விரட்டப்பட்டிருக்கிறாள்.

சமையலறை சுதந்திரக் காற்றை சுவாசித்ததுண்டோ?
இரவிலே வாங்கினோம் சுதந்திரம்
விடிந்தது முதல் இரவு வரை,
சுதந்திரக் காற்று என்ன சுத்தக் காற்றே
தவழாத மூலைச் சமையலறை

இத்திட்டத்தை,
மக்களுக்காகக் கொண்டு சென்று
மக்களால் நடத்த வழி செய்த,
மக்களுடையதாக்கி வெற்றி கண்ட
அலுவலர் சொல்கிறார் :

இது இன்னொரு சோதனைக் கூடமே''

ுவர் சொல்வதைக் கேளுங்கள்:
எண்ணற்ற நலத்திட்டங்கள், ஏழை மக்களுடைய
ாழ்வை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு
ருகின்றன. இத்திட்டங்கள் உரியவர்களை முழுமையாகச்
சன்றடைந்து, தேவையான மாற்றத்தை விளைவிக்க
ிழிப்புணர்ச்சியும் சிறப்பாக செயல்படுகின்ற திறனும்
தவைப்படுகின்றன. தங்களை ஒரு அமைப்பாக
ாற்றிக் கொண்டு அரசு திட்டங்களுடைய முழுமையான
நாக்கத்தைக் கருத்தில் கொண்டு என்னென்ன
சய்ய வேண்டுமென்பதை வேண்டிய விகிதத்தில் விதைக்க
வண்டுவது திட்டத்தை செயல்படுத்துபவருடைய
ுக்கிய நோக்கமாகும்.

சதாரமின்றி அத்தனைப் பயன்களையும்
பற்றுக் கொள்வதற்கு, அவர்களை சுயமாகத்
யார்படுத்திக் கொள்வதற்கு நிறைய
ுன்னேற்பாடுகள் தேவைப்படுகின்றன. தங்கள்
ரிமைகளைத்தாங்களாக வென்றெடுக்க
டிப்படைப் பயிற்சி அத்தியாவசியமாகின்றது.''

ும்!

த்திட்டத்தில் தங்களுடைய உரிமைகளைத் தாங்களாக
வன்றெடுக்கும் பயிற்சி தரப்படுகின்றது.

க்களை ஈடுபடுத்தி, திட்டப் பணிகளை
றைவேற்ற முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

றிப்பாக பெண்களை, முன்னேற்றத்
ிட்டப் பணிகளில் ஈடுபடுத்தி, இத்திட்டத்தை
க்களின் திட்டமாக ஆக்கப் பயிற்சி தருகிறது.

கர்ப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத்
ரத்தையும் வசதிகளையும் சுற்றுச் சூழலையும்
பிவிருத்தி செய்வதற்காகவே, இந்தச் சிறந்த
ிட்டம் செயல்படுத்தப்படுகிறது.
க்களை ஈடுபடுத்துதல் அத்துடன்
அவர்களை ஒருமுகப்படுத்துதல்,
மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு
அதிகாரம் வழங்குதல்,
முடிவெடுக்கும் திறமையை வளர்த்தல்,
பணிகளை ஒருமுகப்படுத்துதல்
ஆகியவைகளின் மூலம் பல்வேறு அரசாங்கத்திட்டங்களை
திறம்பட செயல்படுத்தி, ஆங்காங்கே நகர்ப்புறச்
சேரிகளிலும் மற்ற இடங்களிலும் வசிக்கும்
ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே
இத்திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளாகும்.

செயல்படுத்தும் அமைப்பு முறை பாருங்கள்;
அது மக்களிலிருந்து தொடங்குகிறது.

உள்ளூர்க் குழுக்கள், உள்ளூர் முன்னேற்ற குழுக்கள்
உள்ளூர் கமிட்டிகள், சமுதாய முன்னேற்ற சங்கம் - என
ஊர்ப் படிக்கட்டுகளில் தொடங்கி
சமுதாய மையம்வரை செல்கிறது.



உள்ளூர்க் குழு என்பது எது?

குடிசைப் பகுதிகளில் 20-25 குடும்பங்கள்
அடங்கிய சிறு சிறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு
குழுவிலும் அந்தந்த குடும்பத் தலைவிகள் உறுப்பினர்களாக
இருப்பார்கள். இவர்கள் அடிக்கடி சந்தித்து, தங்கள்
பகுதியிலுள்ள (20-25) குடும்பங்கள் தேவைகள் மற்றும்
பிரச்சனைகளைப் பற்றி விவாதித்து தீர்மானம்
எடுப்பார்கள். ஒவ்வொரு 20-25 குடும்பங்கள்
அடங்கிய உள்ளூர்க்குழுவில் எல்லோரிடம் பழகக்கூடிய
தலைமைப் பண்புகளையுடைய, சமூகத் தொண்டில் ஈடுபடும்
ஆர்வமும் உள்ள ஒருவரைத் தங்கள் தலைவியாகத்
தேர்ந்தெடுப்பார்கள். இவர் உள்ளூர் சமுதாயத்
தொண்டர் என்றோ அமைப்பாளர் எனவோ அழைக்கப்படுவார்.

உள்ளூர் சமுதாயத் தொண்டரின் பொறுப்புகள் என்னென்ன?

1. உள்ளூர்க் குழுவிலுள்ள குடும்பங்களுக்கு
செய்திகளை அளித்தல்

2. குழுவிலுள்ள குடும்பத் தலைவிகளின்
அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும்
உள்ளூர் கமிட்டி மற்றும் சமுதாய முன்னேற்றச்
சங்கத்தில் தெரிவித்தல்

3. உள்ளூர்க் குழுக்களில் உறுப்பினர்களே திட்டப்
பணிகளைத் திட்டமிட செயல்படுத்த மற்றும்
மதிப்பீடு செய்ய ஆவன செய்தல்

4. சமுதாயத்தை முன்னேற்ற மக்கள் ஈடுபாட்டை
ஊக்குவித்தல்

உள்ளூர் கமிட்டி என்பது என்ன?

சுமார் 10 உள்ளூர்க் குழுக்களை அதாவது 10 உள்ளூர்
சமுதாயத் தொண்டர்களை (200 வீடுகள்) ஒருங்கிணைந்து,
உள்ளூர்க் கமிட்டி அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு உள்ளூர்க்
கமிட்டியிலும் இருக்கக்கூடிய ஒரு தலைவியைத்
தேர்ந்தெடுக்கிறார்கள்.
இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர் அமைப்பாளர் என
அழைக்கப்படுகிறார். இவர் உள்ளூர்க் கமிட்டியின்
அலுவல்களை கவனிப்பார்.

உள்ளூர்க் கமிட்டியானது, தேவைகளுக்கு ஏற்ப, சிறு குழுக்களை அமைத்து ஒவ்வொரு சிறு குழுவும் ஆரம்பக் கல்வி, மருத்துவ வசதி சத்துணவு விளையாட்டு கலாச்சாரம் போன்ற பொறுப்புகளை நல்ல முறையில் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் செய்யும்.

உள்ளூர் கமிட்டியின் பொறுப்புகள் எவையெவை?

1. உள்ளூர் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றை முக்கியப்படுத்துதல்

2. மக்கள் ஈடுபாட்டுடன் சமுதாயத் தேவைகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்

3. குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண பொறுப்பான நிறுவனங்களின் மூலம் உள்ளூர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தல்

4. திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு ஆலோசனை வழங்குதல்

5. சமுதாயத்தின் திறமையை வளர்க்கவும் மேம்படுத்தவும் சமுதாய அமைப்பாளர்கள் தனியார் சேவை நிறுவனங்கள் மற்றும் இதர துறைகளின் மூலம் பயிற்சி அளித்தல்

6. சமுதாய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை நடத்துதல்

சமுதாய மேம்பாட்டுச் சங்கம் என்பது யாது?

சமுதாய மேம்பாட்டுச் சங்கமானது, பொதுவான
நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுடன்
வார்டு அல்லது நகரங்களில்
உள்ளூர்க் கமிட்டிகளை ஒருங்கிணைத்து
செயல்படுத்த முனைகிறது.
இந்தச் சங்கத்தில், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட
உள்ளூர்க்குழு மற்றும் உள்ளூர் கமிட்டியின்
அமைப்பாளர் மற்றும் சமுதாய அமைப்பாளர்களும்
தனியார் சேவை நிறுவன பிரதிநிதிகள்,
பல்வேறு துறை அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள்
தேர்தலில் வெற்றி பெற்ற பிரதிநிதிகள் ஆகியோர்
உறுப்பினர்களாக இருப்பார்கள்.

சமுதாய மேம்பாட்டுச் சங்கத்தின் கடமைகள் யாவை?

1. சமுதாயம் மற்றும் பல்வேறு துறைகளின் மனிதவளம் வசதிகள், திறமைகளை உபயோகித்து சமுதாய அளவிலான திட்டங்களைத் தீட்டுதல்

2. சமுதாய மேம்பாட்டு சங்கத்தின் அங்கத்தினர்களுக்குத் தேவையான பயிற்சித்தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நடத்துதல்

3. அனைத்து நிறுவனங்களையும் துறைகளையும் ஈடுபடுத்தி சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்தல்

4. அனைத்து சமுதாயத்தினருக்கும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுதல்.
சிறிது, சிறிதாகப் பெண்களை சுயமாகத்
தொழில் செய்ய வைப்பதற்கும்
தங்களின் தேவைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்வதற்கும்
அவர்களையே செயற்படுவர்களாக ஆக்குவது,
இத்திட்டத்தின்
உள்ளோடும் மையத் தண்டு ஆகும்.

பொருளாதாரத்தைத் தன்கையில் எடுத்துக் கொள்ளும் பெண்,
சமுதாய வளர்ச்சியோடு தன் காலடிகளைப் பதிக்கிற பெண்,
கொஞ்சம் கொஞ்சமாய் சமையலறையை மீறி வரலாம்,
சுதந்திரக் காற்றை நுரையீரல் விரிய
சுவாசிக்கலாம்.

ஆகையினால்,
''நகர்ப்புற ஏழைமக்களுக்கான
அடிப்படை வசதிகள் திட்டம்''
பெண்களுக்கும் ஒரு வரப் பிரசாதம் !

இத்திட்டத்தை
கடலூர், மயிலாடுதுறை, திண்டுக்கல்,
பழனி, ராஜபாளையம், போடி, விழுப்புரம்
போன்ற நகராட்சிகளில் செம்மையாகச் செயலாற்றி
வெற்றிபெற்றிருக்கிறார்கள்.
பெண்கள்
தங்கள் உரிமைகளைத் தாங்களே வென்றெடுத்திருக்கிறார்கள்.
தங்கள் பகுதிகளில் குடிநீர்க் குழாய்களைத்
தாங்களே அமைத்துக் கொள்கிறார்கள்.
ஒப்பந்தக்காரர்களைக் காட்டிலும் குறைவான மதிப்பீட்டில்
இங்கே சிறுசிறு திட்டங்களெல்லாம் நிறைவேறுகின்றன.

கன்னியாகுமரியில்
12000 சுய உதவிப் குழுக்கள்

'நல ஒளி திட்டம்'

மூலமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

**பெண்கள் விழிப்புணர்வு பெற்றால்
முன்னேறுவது குடும்பங்கள் மட்டுமல்ல
மொத்த சமுதாயமும்தான் !**

முதல்வரின் சங்கத் தமிழ்

அன்பைச் சுமக்கும் அன்னச் சேவல்!

பேசுமொழி தமிழ்மொழி என்றதாலும் ; பேசியவர்
பிசிராந்தைப் பெருமகனார் என்றதாலும்
மாசு மருவின்றி இனி ஆட்சி நடக்குமென
மன்னன் உறுதிமொழி தந்ததோடு
தந்திட்ட மொழி தவறாது காத்திடவும் செய்தான்,
தரணியிலே தன்புகழ் பூத்திடவும் செய்தான்.

அறிவுடைநம்பிக்கோர் அறிவு விளக்காக அமைந்திட்ட
தெளிவுடைச் செந்தமிழ்ப் பேரொளியாம் பிசிராந்தை;



சோழநாட்டு வேந்தன் கோப்பெருஞ்சோழன்பால்
சொல்லாலே நெய்வதற்கு இயலாத அன்புதனைக் கொண்டிருந்தார்

கவிபுனையும் ஆற்றல், கற்றாரைப் போற்றுகின்ற பாங்கு,
புவியெங்கும் மெச்சுகின்ற கொடைத் திறம்,
கண்ணிமை போல் நாட்டுக்குக் காவல்,
தண்ணிலவை மிஞ்சுகின்ற தகையால் உள்ளம்;
கோப்பெருஞ்சோழனிடம் குடிகொண்ட இக்குணங்கள்
குளிர்புனல் இதயக் கவிஞரை ஈர்த்தது மிகவே!

பிறந்த இடமாம் பிசிர் எனும் ஊரில் – நிழல்
அடர்ந்த தோப்பில் நெறியுடைச் கவிஞர் ஒருநாள்;
ஆய்வுக்குரிய பல்பொருள் குறித்து – சிந்தனை
அசைபோட்டவாறு, ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார்.
அப்போது அன்னச் சேவல் ஒன்று இறக்கைகள் விரித்து
ஆகாயவெளியிற் பறந்து செல்வதைக் கண்டார் புலவர்!
ஆருயிர் நண்பன் சோழனைக்குறித்துப் பாடலொன்று;
யாத்திடும் ஆசை நிறைவேற வேண்டுமென்று,
அன்னச்சேவலை மையமாய் வைத்து – அழகுறப்பாடல்
கன்னல் தமிழில் கற்பனையூற்றாய் எழுதினார் புலவர்!

''அன்னச் சேவலே! அன்னச் சேவலே!'' என அழைத்து
இன்னலுற்றுள்ள தன் நெஞ்சைத் திறந்து காட்டி.
மன்னவன் பெருங்கோ கிள்ளியெனும் கோப்பெருஞ்சோழனை
இன்னமும் காணும் வாய்ப்பினைப் பெறவில்லையே யென்ற
மனப்புயல் ஒருபுறம், இடக்கிக்கொண்டு – அவன்
மாப்புகழ்ப் பற்றி எடுத்துரைத்தார்!

கோக்காமல் முத்துக்கள் மாலையாவதில்லை – ஆனால்
பார்க்காமலே சோழனும் புலவரும் நட்பின் ஆரமாய்த் திகழ
தமிழே மணியாய் – தமிழ் உணர்வே இழையாய் ஆனதுவாம்!
தடந்தோள் சோழனின் கொடையும் அன்பும்
பாட்டின் கருவாய் அமைந்ததுவாம்!

''அன்னச்சேவலே! அன்னச்சேவலே! நீயோ
கன்னிக் குமரியின் மூலையிலேயிருந்து

பாடநூல்கள் யாவும் பழைய விலையிலேயே விற்பனை

1996-97 ஆம் கல்வி ஆண்டிற்கு 344 தலைப்புகளில் 4.86 கோடி நூல்கள் அச்சிட்டு விநியோகம் செய்யப்பட வேண்டியிருந்தது. இந்நூல்களை அச்சிட்டு வழங்குவதற்குத் தேவையான தாள்/மேலட்டை மற்றும் அச்சுக் கூலி போன்றவற்றில் கடுமையான விலையேற்றம் இருந்தது. ஆயினும் பொதுமக்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி நலன் கருதி, புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசு இவ்வாண்டில் வெளியிடப்படும் பாடநூல்கள் யாவும் அவற்றுள் ஒரு சில அதிக பக்கம் கொண்டவையாயினும், எந்தவித விலையேற்றமுமின்றி பழைய விலையிலேயே விற்பனை செய்ய ஆணை வழங்கியுள்ளது.

தமிழக அரசின் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் சுமார் 63 இலட்சம் குழந்தைகளுக்கு 10-6-96 முதல் 20-6-96 தேதிக்குள்ளாக மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக இலவசப் பாடநூல்கள் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரண பணிகளுக்கு ரூ. 3.17 கோடி நிதி ஒதுக்கீடு

இருபத்தி மூன்று மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளில் கை பம்பு சுத்தப்படுத்துதல், குழாய்க் கிணறுகள் தொடர்களை நீட்டித்தல், குடிநீர் வழங்கும் குழாய் கிணறுகளை அமைத்தல், திறந்த வெளிக் கிணறுகள் அமைத்தல், அதோடு பழுதடைந்த குழாய் தொடர்களை மாற்றியமைத்தல், செயல்படாத மேல் நிலைத் தொட்டிகளை இயங்க வைத்தல் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள், வட்டக் கிணறுகள் அமைத்தல் மற்றும் 'மோட்டார் இயந்திரங்கள் வாங்குதல், அதோடு திறந்த வெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல் முதலிய பணிகளுக்காக 2.14 கோடி ரூபாயும்.

வறட்சிப் பகுதியான புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சுமார் 23 இலட்சம் ரூபாயும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்திற்குக் குழாய்களை நீட்டிக்க 80 இலட்சம் ரூபாயும் ஒதுக்கி ஆக மொத்தம் ரூ. 3.17 கோடி தொகையை வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்து ஆணையிட்டு, பணிகளை துரிதமாகச் செயல படுத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்.

செய்திச்சரம்

பொள்ளாச்சியில் ரூ. 39 கோடி முதலீட்டில் தேங்காய் பதனிடும் தொழிற்சாலை

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சிக்கருகில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கூட்டுத் துறையில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கும் ஒருங்கிணைந்த தேங்காய் பதனப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கல்கத்தாவிலுள்ள ராய் சுரானா நிறுவனங்கள் டிட்கோவுடன் இணைந்து இத்திட்டத்தில் பங்கீடு செய்ய உள்ளனர். சுவீடனைச் சேர்ந்த பங்குதாரர்கள் இத்திட்டத்திற்குத் தேவையான தொழில் நுட்பத்தை அளிப்பர். இத்திட்டத்தினால் 300 நபர்களுக்கு நேரடியாகவும், 1000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டம் வெகு விரைவில் செயல்படத் தொடங்கும்.

சாதிச்சான்றிதழ் பெறுவதில் இன்னல், இனி இல்லை

மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொட்டிய நாயக்கர் வகுப்பினரும் மற்றும் அதன் உட்பிரிவுகளான இராசகம்பளம், கொல்லவார், சில்லவார், தொக்கலவர், தொழுவ நாய்க்கர் வகுப்பினர்களும் சாதிச்சான்றிதழ்களை வட்டாட்சியர்களிடமிருந்து பெறவேண்டும் என்ற ஆணை தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விரிவாக ஆய்வு செய்து மேற்குறிப்பிட்ட வகுப்பினர் சாதிச்சான்றிதழ் பெறுவதில் தற்போது அனுபவித்து வரும் இன்னல்களை நீக்கும்பொருட்டு இவ்வகுப்பினர் களுக்கு வட்டாட்சியர்களுக்குப் பதிலாக துணை வட்டாட்சியர்களே சாதிச் சான்றிதழ் வழங்கலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

செய்திச்சரம்

திரைப்பட பணியாளர்களுக்கு உதவி

திரைப்படங்களில் சண்டைக் காட்சிகளில் பணியாற்றும் பணியாளர்கள் படப்பிடிப்பின் போது உயிர் இழக்க நேர்ந்தால் அவர்களின் குடும்பத்திற்கு தமிழக அரசு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் உதவித் தொகையாக வழங்கும் எனவும் மற்றும் மேற்படி பணியின்போது காயம்பட்டவர்களுக்கு, மருத்துவச் சிகிச்சைக்கான செலவை அரசே ஏற்றுக் காள்ளவதோடு அக்காயத்தின் காரணமாக ஊனமுற்றாலோ, தொடர்ந்து தொழிலில் ஈடுபட முடியாவிட்டாலோ அவர்களுக்கு உதவி நிதியாக தமிழக அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 50,000 வழங்கும் எனவும் தமிழக முதலமைச்சர் டாக்டர் "கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மதுவிற்பனை: வரிவிதிப்பு

இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுக்கு உற்பத்தியாளர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் வரி (Vend Fee) பெட்டி ஒன்றுக்கு ரூபாய் 45/- (நாற்பத்தைந்து ரூபாய்) என்பதை ரூபாய் 95/- (தொன்னூற்றைந்து ரூபாய்) என்று உயர்த்தப்படுகிறது. 'பீர்' எனப்படும் மதுவகைக்குத் தற்போதுள்ள வரி பெட்டி (Vend Fee) ஒன்றுக்கு ரூபாய் 4.50 என்றிருப்பதை ரூபாய் 10/- ஆக உயர்த்தியும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த உயர்வு காரணமாகச் சில்லறை விற்பனைவிலை உயர்த்தப்படமாட்டாது. தற்போதுள்ள சில்லறை விலையே தொடர்ந்து நீடிக்கும். இந்த உயர்வின் மூலம் நுகர்வோர்க்கு வாங்கும் விலை உயராமலே ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 65 கோடி ரூபாய், மேலும் அதிக வருமானம் அரசுக்கே கிடைப்பதற்கு தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

அயிரைமீனைக் கொத்திய அலகுடன் – வெகு
உயரம் விண்ணில் பறந்தவாறு,

பனிமலை நிறைந்த வடக்கு திசைக்குப்
பயணம் செய்கிறாய்; நின் பயணம் வெல்க!

கடக்கும் வழியில் என் கண்மணிச் சேவலே! – பகை
அடக்கும் சோழன் தலைநகர் உளது!

கோழியூர் எனப்படும் உறையூர் நகரே – எனது
கோப்பெருஞ்சோழனுக்குரிய தலைநகர்!

மேழிச்செல்வம் கோழைபடாது எனும் கொள்கையுடனே
மேன்மையாய் நாட்டைக் காக்கும் மன்னவன்!

வலக்கரம் வழங்குவது இடக்கரம் அறியாமல்
வழங்கிடும் தென்னவன்!

வழியில் நீயும் நின் பெடையுடன் சென்றால் – சோழன்
விழியில் அன்பின் ஒளியினைக் காண்பாய்!

இடையில் எவரும் தடுத்து நிறுத்தினால்
பெடையுடன் நீயும் திரும்பிடல் வேண்டாம்!

இறைவனாம் சோழன் செவியில் விழுமாறு
உறையூர்க் காவலர்பால் உரக்கக் கூறிடு!

ஆந்தையார் எனும் புலவர் வாழ் பிசிர் எனும் ஊரைச்
சார்ந்தோர் நாங்கள் எனச் சாற்றுவாயாகில்;

அரசனே ஓடிவந்துமை வரவேற்று வாழ்த்தி
அணிமணி பலவும் நின் பேடைக் களிப்பான்!

ஏனெனில் அத்துணை நட்பு அவனுக்கென்னிடம் உண்டு
தேன் எனில் தெவிட்டிவிடும்;
இதுவோ
எம் இருவரிடை என்றுமே தெவிட்டாத நட்பு''

''அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலை யாம் கையறுபு இனையக்,
குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது
சோழநன் னாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக், குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்கு, எம்
பெருங்கோக்கிள்ளி கேட்க, 'இரும்பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்ட நின்
இன்புறு பேடை அணியத், தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.''

தளிர்கள்... சில தகவல்கள்!



- உலகில் ஒவ்வொரு 10 பேரில் 3 பேர் 16 வயதிற்குட்பட்டவர்
- வளரும் நாடுகளில் 3-ல் ஒரு குழந்தை ஊட்டச் சத்துக் குறைவுடன் உள்ளது.
- உலகில் 20 குழந்தைகளுக்கு ஒரு குழந்தை கண்ணி வெடி உயிரிழப்பிற்குக் காரணமாகிறது.
- முன்னேறும் நாடுகளில் 1.3 பில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீருக்கு வழிவகையின்றி உள்ளனர். 1.9 மில்லியன் மக்கள் போதுமான கழிப்பிட வசதியற்றுள்ளார்கள்.
- முன்னேறும் நாடுகளில் 90% குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்தாலும் 4 ஆண்டுகளில் இது 68% ஆகிவிடுகிறது.
- ஆயிரத்தில் 97 குழந்தைகள் ஐந்தாவது பிறந்தநாளைக் காணாது இறக்க நேரிடுகிறது.
- 10-ல் ஒன்பது குழந்தைகள் தேசியச் செயல் திட்டம் நடைமுறையில் உள்ள நாடுகளின் கிழ்வருகின்றனர்.
- முன்னேறிவரும் உலக நாடுகளில் 13 மில்லியன் குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் இறந்து விடுகின்றன. இதில் 3 மில்லியன் குழந்தைகள் டயோரியா, நிமோனியா போன்ற வியாதிகளால் இறக்கின்றனர்.
- 2000-ம் ஆண்டில் எய்ட்ஸ் நோயால் 10 மில்லியன் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கும். இதில் 9 மில்லியன் குழந்தைகள் ஆப்ரிக்காவில் மட்டும் இருக்கும்.
- இந்தியாவில் 1990ம் ஆண்டுவாக்கில் ஆண் பெண் விகிதாச்சாரம் 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் என்ற அளவில் இருந்தது பின்பு 935 என்ற அளவில் குறைந்துவிட்டது. மணமான தம்பதியர் பெண் குழந்தைகளுக்கு பதில் ஆண் குழந்தைகளே வேண்டுமென விரும்பத் தொடங்கியதே இதற்குக் காரணம்.

காலாட்படை

ஆஷா பூர்ணாதேவி

பொறுக்கமுடியவில்லை!

மறுபடி தொடங்கி விட்டது சாவித்திரியின் புலம்பல். களைப்பு கலந்த உச்சஸ்தாயிக்குரல். இனித் தாங்க முடியாதுப்பா! இந்தப் பாவி யமன் என்னைக் கொண்டு போக மாட்டேங்கறானே!...

எப்போது பார்த்தாலும் இந்தப் புலம்பல்தான்!

எப்போதும் யமனைச் சபித்துக் கொண்டு இருக்கிறாள் சாவித்திரி. தன்னால் சம்சாரச் சுமையைத் தாங்க முடியவில்லை என்பதை உரத்த குரலில் எல்லோருக்கும் தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும் அவளுக்கு!

அம்மாவின் இந்தப் புலம்பலைப் பொறுக்க முடியவில்லை ஜயந்தியால். அருவருப்பாயிருக்கிறது அவளுக்கு. சாவித்திரியை ''அம்மா'' என்று அழைக்கக் கூடப் பிடிக்கவில்லை. இரண்டு வேளை உணவும் இரவில் படுக்க இடமும் தவிர வீட்டுடன் வேறு தொடர்பே இல்லாமல் போய்க் கொண்டு இருக்கிறது அவளுக்கு. கூடிய மட்டில் வீட்டில் தங்கும் நேரத்தைக் குறைத்துக் கொண்டு இருக்கிறாள் அவள்.

ஆனால் எப்படியும் நாள் முடிவில்வீட்டுக்கு வரத்தானே வேண்டும்! நாள் முழுதும் உழைத்துக் களைத்த உடலைத் தூக்கிக் கொண்டு படுக்கையில் வந்து விழுவாள்.

அப்போதே ஆரம்பமாகி விடும் சாவித்திரியின் புலம்பல்.

இல்லையில்லை, புலம்பல் நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. ஜயந்தி இதுவரையில் வீட்டில் இல்லாத தால் அவள் காதில் விழவில்லை. அவ்வளவுதான். நல்ல வேளை ஜயந்தி பெரும்பாலான நேரம் வீட்டில் இருப்பதில்லை. இருந்தால் அவளுக்கும் பைத்தியம் பிடித்திருக்கும்.

ஒரு சிறிய குடும்பத்தை சமாளிப்பது, அதிலுள்ளவர்களுக்குச் சாப்பாடு தயாரித்துப் போடுவது அவ்வளவு கஷ்டமான விஷயமா? எதற்கு இவ்வளவு எரிச்சல் படுகிறாள் அம்மா? வெளியே போய் வேலை செய்து சம்பாதிக்கப் போனால், அப்போது அதன்கஷ்டம் புரியும்.



எவ்வளவு கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது ஜயந்திக்கு! அம்மா என்ற முறையில் கூட வேண்டாம், ஒரு மனிதப் பிறவி என்ற முறையிலாவது சாவித்திரி ஜயந்திபடும் கஷ்டத்துக்காக அனுதாபப்படக் கூடாதா? நாள் முழுவதும் உழைத்துச் சோர்ந்து போய் வரும் பெண்ணின் காது களைத் தாக்கும்படி இடை விடாமல் புலம்பாமல் இருக்கக் கூடாதா?

ஜயந்தி ஏதாவது சொல்லப் போனால் அம்மா ஓவென்று அழத்தொடங்கி விடுவாள். ஆகையினால் பேசாமலிருப்பதே மேல்.

மௌனமாகஇருந்து இருந்தே குடும்பத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக அன்னியப்பட்டுக் கொண்டு இருந்தாள் ஜயந்தி. திடீரென்று மழைவந்து விட்டால் வெளியே கொடியில் உலர்த்தி உள்ள துணிகளை எடுத்து வராமல் அவை மழையில் நனைவதைக் கவலையின்றிப் பார்த்துக் கொண்டிருக்கத் தொடங்கி விட்டாள் நன்றாக நனையட்டும். ஜயந்திக்கு அவ்வளவு ஆத்திரம் அவளுடைய அம்மா மேல்.

அவளுடைய தம்பி, தங்கைகளின்நிலைமிகவும் பரிதாபம். அவர்களுக்கு உடுக்கத் தகுந்த துணிகள் இல்லை. தலைமுடி ஒழுங்காக சீவப்படுவதில்லை. சாப்பாடு சரியான நேரத்துக்குக் கிடைப்பதில்லை. நோய் நொடி என்றால் சரியானபடி சிகிச்சை இல்லை. சேரிக் குழந்தைகள் போல் சரியான கவனிப்பின்றி, அழுக்கும் புழுதியுமாகத் திரிந்து கொண்டு இருப்பார்கள்.

அப்பாவும் பெண்ணும் ஏதோ குற்றம் செய்தவர்கள் போல் சாப்பிட உட்காருவார்கள், அவர்களுக்கு ஆபீஸ் போக வேண்டுமே, அந்தச் சாப்பாட்டின் விமரிசையைக் கேட்கவே வேண்டாம். சோறும் பருப்பும் கிடைத்து விட்டால் அதுவே பெரிய காரியம். பாதி வெந்த சோற்றையும் பருப்பையும் பரிமாறும் போது சற்றும் சங்கடப் படமாட்டாள் சாவித்திரி. மாறாக, இவ்வளவு சீக்கிரம் சமைத்துப் போடுவது எவ்வளவு சிரமம் என்பதை விலாவாரியாக விவரித்துத் தீர்ப்பாள். இவர்கள் இன்னும் கொஞ்சம் பொறுத்தால் கறி, கூட்டு, தயாரித்து இருப்பாளாம். ''நீங்கதான் இறக்கை கட்டிக்கிட்டு பறக்கிறீர்களே!'' என்று குற்றஞ் சாட்டுவாள்.

அதிகாலையிலேயே எழுந்து விடுகிறாள் சாவித்திரி. அதிகாலை முதல் ஒன்பது மணி வரை நேரம் கொஞ்சமா? அதற்குள் கூட்டும் கறியும் சமைக்க முடியாதா? என்னதான் செய்கிறாள் இவ்வளவு நேரம்?

அம்மா எழுந்த வெகு நேரத்துக்கு பின் எழுந்தாலும் ஜயந்தி ஆபீஸ் போகுமுன் இரண்டு இடங்களில் டியூசன் சொல்லிக் கொடுத்து விட்டு வருகிறாள். அப்பா பிஜன் பாபுவுக்கும் டியூஷன் உண்டு. அத்துடன் கடைக்குப் போவது, ரேஷன்வாங்குவது அடுப்புக்கரி வாங்கி வருவது போன்ற வேலைகளையும் செய்து விடுகிறார்.

அப்பாவும் பெண்ணும் இவ்வளவு வேலை செய்தாலும், அம்மா மாதிரி யமனை அழைத்துக் கொண்டு இருக்கவில்லை!

அன்று வீட்டில் சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை ஜயந்திக்கு.

அவள் வீட்டில் நுழைந்த போது சாவித்திரி கைக்குழந்தையைக் கண்மண் தெரியாமல்

அடித்துக் கொண்டு இருந்தாள். கூடவே தனக்கும் அந்தக் குழந்தைக்கும் சாவு வராதா என்று புலம்பிக் கொண்டு இருந்தாள்.

அந்தக் குழந்தை செய்த குற்றம் என்னவென்று ஜயந்திக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. பேச்சு இன்னும் வரவில்லை குழந்தைக்கு.

விவரம் தெரியாத ஒரு குழந்தையை ஒரு மனுஷி இப்படி ஈவிரக்கமின்றி அடிப்பாளா என்று வியந்து கொண்டே ஜயந்தி தன் படுக்கையில் போய் விழுந்தாள்.

சற்று நேரத்துக்குப் பின் அவளுடைய தங்கை மீனு ஒரு கோப்பை டீயை ஜாக்கிரதையாக அவளிடம் எடுத்து வந்தபோது ஜயந்தி, ''டீயை எடுத்துக்கிட்டு போயிடு! எனக்கு வேண்டாம்!'' என்று சொன்னாள்.

வேறு நாளாயிருந்தால் சாவித்திரி அவளிடம் வந்து ''டீ கொஞ்சம் குடியேன்!'' என்று கெஞ்சி இருப்பாள். அது இன்னும் எரிச்சல் மூட்டி இருக்கும் ஜயந்திக்கு. ஆனால் இன்று அப்படி ஏதும் நிகழவில்லை.

இன்று சாவித்திரி பயங்கர மூடில் இருந்தாள்.

படுத்திருந்தாலே தூக்கம் வந்து விடுமா? படுக்கையில் இருந்தவாறே ஜயந்திக்குக் கேட்கிறது சாவித்திரியின் கூக்குரல். குழந்தைகளின் அழுகை, சமையலறைக்குரிய ''சொய், சொய்'', ஒலிகள், சாவித்திரியின் உரத்த புகார்கள். யமனுக்கு எதிராக, கடவுளுக்கு எதிராக, கையால் ஆகாத கணவனுக்கு எதிராக,

இக்கதையில் வெளிப்படும் வெளிச்சக் கீற்று...

''விடுதலைப் போரில், போரிட்டு, உணவுப் பொருட்களை, தளவாடங்களை போர் முனைக்குக் கொண்டு வந்து சேர்த்து, போரில் வெற்றி ஈட்டித் தந்த காலாட்படை வீரர்களின் துக்கம் தீர்ந்ததா? அவர்களுக்கு விடிவு ஏற்பட்டதா? வரலாற்றில் படைத் தலைவர்களின் பெயர்கள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் பட்டிருக்கும்; அவர்களது வீரத்தையும், நாட்டுப் பற்றையும் தியாகத்தையும் போற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்படும். ஆனால் போரில் பங்கு பெற்ற காலாட்படைக்கு வாழ்க்கைப் போரில் பங்கு பெற்ற காலாட்படைக்கு வாழ்க்கைப் போரில் தோல்விதான் மிச்சம்!''

இப்படிக் கூறுகிறார் ஆஷாபூரண தேவி, வங்க எழுத்தாளர்.

வரலாற்றில் மறைக்கப்படும், மறக்கப்படும் இந்தக் காலாட்படை வீரர்கள் யார்? தொழிலாளர்கள் மட்டும் தானா? கிராமப்புறங்களில் அவர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். விவசாய வீடுகளில் அவர்கள் பெண்களாக இருக்கிறார்கள். கணவனும் மனைவியும் வேலைக்குப் போகிற வீட்டில் மனைவி காலாட்படையாக இருக்கிறாள். கணவன், மகன் மகள் அனைவரும் வேலைக்குப் போகிற வீட்டில், தாய் காலாட்படையாக இருக்கிறாள்.

எப்படி யுத்தத்திற்குப் பின்னணியான, ஆதாரமான காலட்படைகளின் பங்களிப்பு மறைக்கப்படுகிறதோ, அப்படி இந்த மகத்தான சமூக இயக்கத்திற்குப் பெண்கள் என்ற காலாட்படை பங்கு இருட்டடிப்புச் செய்யப்படுகிறது என்பது இக்கதையில் வெளிப்படும் வெளிச்சக் கீற்று.

படித்த பெண்ணுக்கெதிராக மொத்தத்தில் உலகம் முழுமைக்கும் எதிராக...

''இந்தக் குடும்பத்திலே இவ்வளவு செலவு ஆகுது. எனக்கு ஒரு அஞ்சு பைசாவுக்குச் கயிறு ஒண்ணு வாங்கிக் கொடுக்கக் கூடாதா? நான் தூக்குப் போட்டுக் கிட்டு இந்த நரகத்திலேயிலிருந்து தப்பிச்சுக்குவேனே!... வாங்கிக் கொடுக்க மாட்டாங்க, ஏன்னா கடைசியிலே அவங்களையும் கயத்திலே கட்டி இழுத்துக் கிட்டுப் போயிடுவாங்களே!... அதுக்காகத்தான் இப்படி என்னை அணு அணுவாகக் கொல்றாங்க!...'' ''என்ன, அதுக்குள்ளே சோறு வேணுமா? போ, தொலைஞ்சு போ எங்கேயாவது!... அவ்வளவு ராட்சசப் பசியா இருந்தா என்

தலையையே கடிச்சு தின்னுடு! அவ்வளவு பசியுள்ளவ ஏன் இந்த ஓட்டாண்டிக் குடும்பத்திலே வந்து பொறந்தே?...

ஜயந்தியால் பொறுக்க முடியவில்லை.

அவள் எழுந்திருந்து தந்தையிடம் வந்தாள். ''அப்பா, என்னாலே பொறுக்க முடியல்லே இந்த நரக வேதனை! மனுஷன் இருக்க முடியுமா? இந்த வீட்டிலே?''

பிஜன்பாபு திகைத்துப் போய் மகளை நிமிர்ந்து பார்த்தார்.

''உங்க காது அடைச்சுப் போயிருக்குன்னு தோணுது.. ஆனா என்னாலே இந்த அனத்தலைக் கேட்டுக்கிட்டு இருக்க முடியல்லே. நான் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டியது தான்!...''

''பிஜன்பாபு வருத்தத்தோடு சொன்னார்.'' ஆமாம்மா, அம்மாவோட குணம் நாளுக்கு நாள் மோசமாகிக்கிட்டு இருக்கு, ஆனா அவளையும் குத்தஞ் சொல்ல முடியாது. வீட்டு வேலைப் பளு ரொம்ப ஜாஸ்தி, வேலைக்காரி போனதிலேயிருந்து...''

''குடும்பத்துக்கு ரெண்டு வேளை சோறும் பருப்பும்.வேக வைச்சுப் போடறது என்ன அவ்வளவு சிரமமா? உழைக்காம யாரு சோறு திங்கறாங்க? அனத்தலுக்கும் புலம்பலுக்கும் எல்லை கிடையாதா? அம்மா என்ன பைத்தியமா?''.

''வாஸ்தவந்தான் அம்மா. எல்லை மீறித்தான் போகுது இவ நடத்தை... ஆன நான் என்ன பண்ணுவேன்? இவகிட்டே ஏதாவது சொல்லப் போனா குருஷேத்திரம் தொடங்கிடும்..''

''நானும் அதுக்காகத்தான் சும்மா இருக்கேன் அப்பா. இதுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யத்தான் வேணும்!''

''என்ன ஏற்பாடு செய்ய முடியும் இந்த மூதேவி சாகலேன்னா? அவர்களுக்குப் பின்னால் வந்து நின்ற சாவித்திரி சொன்னாள், நான் என்ன செய்வேன்? அந்தப் பாழும் யமனைக் கூப்பிட்டுக்கிட்டுத் தான் இருக்கேன் வரமாட்டேங்கறானே பாவி!''

...சாவித்திரியின் உரத்த புகார்கள், யமனுக்கு எதிராக, கடவுளுக்கு எதிராக கையாலாகாத கணவனுக்கு எதிராக, படித்த பெண்ணுக்கு எதிராக, மொத்தத்தில் உலகம் முழுமைக்கும் எதிராக.

தாயின் இந்த சண்டைக் குணத்தை பார்த்து எரிச்சலும் அருவருப்பும் ஏற்பட்டது ஜயந்திக்கு. அவள் அம்மாவை முறைத்துப் பார்த்து விட்டு பேசாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

எதிலும் அக்கறைகொண்டு முயற்சிக்காதவரை, உங்களால் என்ன செய்ய முடியும் என்பது உங்களுக்கே தெரியாது.
– இங்கிலாந்துப் பழமொழி

தூங்குகிற வரிக்காரனை எழுப்பிவிட்டால், போன வருடத் தீர்வையையும் கொடுத்துவிட்டுப்போ என்பான்
–தமிழ்நாட்டுப் பழமொழி

சாவித்திரி அவளைப் பார்த்துக் கேட்டாள், ''ஏன் சாப்பிட மாட்டேங்கறே?''

''இந்த வீட்டுச் சோத்தை திங்கப் பிடிக்கல்லே!''

''என்ன, திங்கப் பிடிக் கல்லியா? நான் சமைச்ச சோத்தைப் திங்க அருவருப் பாயிருக்கா? ஏன்? நான் படிப் பில்லாத முட்டாள்னா? உன் மாதிரி சாக்ஸ், ஷு போட்டுக்கிட்டு திரிய எனக்கு தெரியாதுன்னா?''

''அதெல்லாமல் ஒண்ணும் இல்லேம்மா! என்னைக் கொஞ்சம் அமைதியா இருக்க விடு இன்னிக்கு மட்டும்!... நானே போயிடறேன் இங்கேயிருந்து!''

வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக இவ்வாறு சொல்லி விட்டுத்தான் அறைக்குப் போய் விட்டாள் ஜயந்தி, தாயிடமிருந்து சூடாக ஏதாவது பதில் வருமென்று அவள் எதிர் பார்த்தாள். ஆனால், என்ன ஆச்சரியம்! சாவித்திரியிடமிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. ஏதோ மந்திர சக்தியால் அவளது வாய் ஊமையாகிவிட்டது போல் அல்லது பேசிக் கொண்டு இருந்த ஓர் இயந்திரம் திடீரென்று பழுதாகி விட்டாற் போல்...

ஜயந்தியின் ஆபீசில் மறுநாள் யூனியன் கூட்டம் ஒன்று நடைபெறவிருந்தது.

வற்றாது வளம் கொழிக்கும் ஆறுகளைக் கொண்டு வானோங்கிய மலைகளைக் கொண்டு ஒரு நாட்டை மதிப்பிட முடியாது. மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.

- அறிஞர் அண்ணா

எல்லோரும் அவளை அதில் சற்றுப் பேசச் சொல்லி இருந்தார்கள். பேசத் தெரியா விட்டால், ஏதாவது எழுதிப் படிக்கச் சொன்னார்கள். அதற்கான குறிப்புகளை இந்த இரவிலேயே அவள் தயார் செய்ய வேண்டும். இந்த இரைச்சலிலும் குழப்பத்திலும் அது எப்படி முடியும்?

நாளை சனிக்கிழமை என்பதால் ஒரு வசதி, மாலை ஐந்து மணிக்குத்தான் கூட்டம். ஆபீஸ் முடிந்ததும் நேரே யூனியன் செயலாளர் வீட்டுக்குப் போய் உரையைத் தயார் செய்து விடலாம்.

உரையின் விஷயம் பழசு தான். முதலாளி, தொழிலாளி உறவு. விஷயத்தை விளக்கும் முறையில்தான் புதுமை இருக்க முடியும். ''விடுதலைப் போராட்டத்தில் போரிட்டு உணவுப் பொருட்கள், தளவாடங்களை போர் முனைக்குக் கொண்டு வந்து சேர்த்து போரில் வெற்றி ஈட்டித் தந்த காலாட்படை வீரர்களின் துக்கம் தீர்ந்ததா? அவர்களுக்கு விடிவு ஏற்பட்டதா? வரலாற்றின் பக்கங்களில் தானைத் தலைவர்களின் பெயர்கள் பொன் எழுத்துக்களில் எழுதப்பட்டு ஜொலிக்கும். அவர்களது வீரத்தையும் நாட்டுப்பற்றையும் தியாகத்தையும் போற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்படும். ஆனால் போரில் பங்கு பெற்ற காலாட்படைக்கு வாழ்க்கைப் போரில் தோல்விதான் மிச்சம்!...

இப்படி எல்லாம் அவள் பேச வேண்டும்.

ஜயந்தி எவ்வளவு நேரம் தூங்கி இருப்பாள் - ஒரு மணி, பத்துமணி, ஒரு யுகம்?...

அப்பா ஏன் இவ்வளவு பரிதாபமான குரலில் அவளை எழுப்புகிறார்?

''ஜயந்தி, எழுந்திரு, எழுந்திரு!.. உன் அம்மாவுக்கு

உரையின் விஷயம் பழசு தான். முதலாளி, தொழிலாளி உறவு. விஷயத்தை விளக்கும் முறையில்தான் புதுமை இருக்க முடியும்.

என்னவோ ஆயிடுச்சு!... நீ அவளைக் கொஞ்சம் பார்த்துக்க... நான் டாக்டரைக் கூட்டிக் கிட்டுவர்றேன்!...

அம்மாவுக்கு என்னவோ ஆயிடுச்சா? அப்படீன்னா?

திடுக்கிட்டு பனியனைக் கழுத்தில் மாட்டிக் கொண்டே உடைந்த குரலில் சொன்னார், ''கண்ணை முழிக்காமே படுத்துக் கிடக்கா.. நாடியும் தெரியல்லே. நீ கொஞ்சம் தைரியமா உக்காந்திரு அவகிட்டே... டாக்டர் வருவாரோ மாட்டாரோ தெரியல்லே... தண்ணி குடிக்க எழுந்திருந்தவ கீழே விழுந்து மயக்கமாயிட்டாளா, இல்லே மயக்கமாயிக் கீழே விழுந்துட்டாளா? தெரியல்லே''

செருப்புக் கூட மாட்டிக் கொள்ள மறந்து வெறுங்காலோடு வெளியே ஓடினார் அவர். நல்ல வேளை டாக்டர் வந்தார்.

ஆனால் கல்லுக்கு என்ன மருத்துவம் செய்வார் அவர்? கல் மாதிரி தானே பேச்சு மூச்சின்றிக் கிடக்கிறாள் சாவித்திரி!

டாக்டர் அவளைச் சோதித்துப் பார்த்தார். ரத்த அழுத்தம் திடீரென்று அதிகமாகி மண்டையிலுள்ள ரத்தக் குழாய் வெடித்து விட்டதாம். இனி சாவுக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அதிசய நோய்தான்!

பரபரத்து அலைந்து திரிந்து ஏதாவது சிகிச்சை செய்து பார்க்கக் கூட வழியில்லை.

வசதியான குடும்பமென்றால் அதுவும் முயற்சி செய்து பார்த்திருப்பார்கள். ஆனால் ஏழைக் குடும்பத்தில் அதெல்லாம் அனாவசிய ஆர்ப்பாட்டந்தான்.

பிஜன் பாபு மனைவிக்கருகில் உட்கார்ந்து இருந்தார். விடிந்த பிறகு மறுபடி ஒரு முறை டாக்டரைக் கூப்பிடலாம். அதற்கு மேல் செய்யக் கூடியது ஒன்றுமில்லை...

ஏழைகள் உணவை தேடுகின்றனர்; செல்வர்கள் பசியைத் தேடுகின்றனர்.

- கிரீஸ் பழமொழி

ஒரு நண்பன் என்ன பெறுகிறானோ அது நமக்கு ஒருபோதும் நட்டம் அல்ல

- ஐரிஷ் பழமொழி

சாவித்திரி உணர்ச்சியற்றுக் கிடந்தாலும் வீட்டில் உள்ள மற்ற ஜீவன்களுக்கு உணர்ச்சி இருக்கிறதே, பசி தாகம் இருக்கிறதே!

இரவு முழுவதும் கண் விழித்த சோர்வில் பிஜன் பாபுவுக்கு மற்ற நாட்களை விட அதிகமாகவே விருப்ப மேற்பட்டது டீ குடிக்க. ஜயந்திக்கும் அதே நிலைமைதான். குழந்தைகளோ வழக்கத்தைவிட அதிகமாகவே அலறத் தொடங்கி விட்டார்கள். காரணம், வீட்டுச் சூழ்நிலை அவர்களைக் கலங்கச் செய்து விட்டது.

வெகு நேரத் தயக்கத்துக்குப் பின் அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு பிஜன் பாபு ஜயந்தியிடம் சொன்னார்: ''அடுப்பை மூட்டி ஏதாவது செய்யும்மா... குழந்தை குட்டிகள் பட்டினியா இருக்கு... எனக்குக்கூட ஒரு கப் டீ குடிச்சா...''

ஜயந்திக்கு ஆபீஸ் உண்டு என்ற விஷயம் அவருக்குத் தோன்றவேயில்லை.

அப்போதுதான் ஜயந்திக்கும் உணர்வு வந்தது, வீட்டு வேலையை அவள்தான் கவனிக்க வேண்டும் என்று.

*அவள் சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி..

அடுப்புக்குள் குவிந்து கிடந்தது சாம்பல். அறையெங்கும் முதல் நாள் சமையல் செய்த பாத்திரங்கள் இறைந்து கிடந்தன. தண்ணீர் டம்ளர்கள் விழுந்து கிடந்தன. முதல் நள்ளிரவு மீனுவும் சானுவும் சண்டை போட்டுக்கொண்டதன் அடையாளம்.

தினம் இரவில் மற்றவர்கள் தூங்கிவிட்ட பிறகும் வெகு நேரம் வரை சமையலறையில் வேலை செய்து கொண்டு இருப்பாள் சாவித்திரி. அடுப்பை சுத்தம் செய்வது, பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி எடுத்து, வைப்பது, சமைய

...பொறுமை இழந்துவிட்ட பிஜன் பாபுவின் மனது சாவித்திரிக்காகத் துடித்தாலும் டீயை மறந்து இருக்க முடியவில்லை...

லறையைக் கழுவுவது என்று ஆயிரம் வேலைகள். மண்ணெண்ணெய் அதிகம் செலவாகாமல் இருக்க விளக்கைச் சிறிதாக எரிய விட்டுக்கொண்டு, பிறர் தூக்கம் கெடாமல் இருப்பதற்காகக் கூடிய மட்டில் சத்தம் செய்யாமல் மறுநாள் சமையலுக்காகக் காய்கறி நறுக்குவது, மசாலா அரைப்பது..

அம்மா படுக்கப் போவதை ஒரு நாளும் பார்த்ததில்லை ஜயந்தி.

இப்போது அம்மாவைப் பற்றி நினைத்துப் பிரயோசனமில்லை. அவள் குடும்பத்திலிருந்து முகத்தை திருப்பிக் கொண்டு படுத்துக்கிடக்கிறாள்..

ஜயந்தியை இக்கட்டில் மாட்டி வைக்கத்தான் இப்படிச் செய்கிறாளா சாவித்திரி?

இப்போது ஜயந்தி என்னென்ன செய்ய வேண்டும்? பத்துப்பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி வைக்க வேண்டும். சமையலறையை தண்ணீர் ஊற்றிக் கழுவ் வேண்டும். அடுப்பில் இருந்து சாம்பலை அள்ளி எறிந்து விட்டு அதில் கரியும் வறட்டித் துண்டுகளும் நிரப்பி நெருப்புப் பற்ற வைக்க வேண்டும். அடுப்பு பற்றிக் கொண்ட பின் டீ தயாரிக்க வேண்டும். பிறகு சாதம், பருப்பு, கறி, கூட்டு... பால் காய்ச்ச வேண்டும்... பார்லிக் கஞ்சி வைக்க வேண்டும்.... இதே மாதிரி காலையில், பகலில், இரவில்..

டீக்காகக் காத்திருந்து பொறுமையிழந்து விட்ட பிஜன் பாபு குழந்தைகளுக்கு ஏதாவது பலகாரம் வாங்கி வருவதாகச்

மலர்களைச் சுற்றி மனதைத் தொடும் நறுமணம் கமழும்; அதுபோலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும்.

- சாக்ரடீஸ்

தனக்கு என்று அடுப்பு மூட்டி, தான் வாழும் காலத்தில் வயிறும் சிறுக்கும், மதியும் பெருகும்.

– தமிழ்நாட்டுப் பழமொழி

சொல்லிவிட்டு வெளியே போய் டீக்கடையில் டீ குடித்து விட்டு வந்தார். சாவித்திரிக்காக மனது துடித்தாலும் டீயை மறந்து இருக்க முடியவில்லை.. இனி மேல் தினம் காலையில் கண்ணாடி டம்ளர் நிறைய ஆவி பறக்கும் டீயுடன் சாவித்திரி வந்து அவரை எழுப்ப மாட்டாள் என்ற நினைவில் அவர் தன்னை மறந்து காலி டீக்கோப்பையைவாயில்வைத்துக் கொண்டதைப் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தவர் கவனித்து, ''இன்னொரு கப் டீ குடியுங்களேன்.. மழை காலத்துக்குக் கதகதப்பாக இருக்கும்... ஏய், இவருக்கு இன்னொரு கப் டீ கொண்டு வா!'' என்றார்.

''இல்லே, வேண்டாம்'' என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக எழுந்தார் பிஜன் பாபு...

முட்டைப் பொறியலும் வெல்லப் பொறியலும் எவ்வளவு நேரம் வயிற்றில் உட்கார்ந்து இருக்கும்? கைக்குழந்தையும் சாந்துவும் சோற்றுக்காக அழத் தொடங்கி விட்டார்கள். பிஜன் பாபு தயக்கத்தோடு ஜயந்தியிடம் போய்ச் சொன்னார், ''ஜயாசமையலாச்சா? குழந்தைகளுக்குக் கொஞ்சம் சாதம் போடறியா? இனிமேல் அதுகளாலே பொறுக்க முடியாது போலிருக்கே...''

சாதமா?

இப்போதுதான் ஜயந்தி பற்றுப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி முடித்திருந்தாள். அழுக்குத் துணி ஒரு மூட்டை கிடக்கிறது. தோய்க்க வேண்டும். குழாயில் தண்ணீர் நின்று போய்விட்டது.

மீனு தன் அக்காவுக்காக பரிதாபப்பட்டு எப்படியோ அடுப்புப்பற்றவைக்க முயற்சித்தாள். அடுப்பிலிருந்து வந்த புகைக்கு அளவில்லை. ஆனால் அடுப்பு பற்றிக்கொள்ள வில்லை.

குளித்துவிட்டு வந்தஜயந்தி விசிறியால் விசிறி அடுப்பைப் பற்ற வைக்க முயற்சித்தாள்.

... அம்மா இதே மயக்க நிலையில் ஒருநாளோ, இரண்டு நாளோ இருந்து விட்டுப் பிறர் தோள் மேல் ஏறிப் போய் விடப் போகிறாள்...

அடுப்புப் பற்றிக் கொண்டால் போதும்? சமையலுக்குத் தண்ணீர்?

இதற்குள் மறுபடி பிஜன் பாபுவின்குரல், ''சாதம்ஆயிடுத்தாம்மா?''

அப்பாவின் அவசரத்தைப் பார்த்து எரிச்சல் வந்தது ஜயந்திக்கு. ஆனால் அவள் பதிலெதுவும் சொல்லவில்லை. காரணம், பிஜன் பாபுவைச் சொல்லிக் குற்றமில்லை. மணி பத்தரையாகி விட்டது.

நல்லவேளை, கல்கத்தாவில் குளம் இல்லா விட்டாலும் குழாய்க்கிணறு இருக்கிறது. சர்க்காரின் தயவில்.

மீனா ஒரு சிறு வாளியை எடுத்துக் கொண்டு போய்க் குழாய்க் கிணற்றில் பத்துப் பதினைந்து தடவை தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்தாள்...

அப்படியும்ஜயந்தி வெறும் சோறும் பருப்பும் தட்டில் பரிமாறும்போது மணி இரண்டு ஆகிவிட்டது.

ஜயந்தி சாப்பிட்டு விட்டு எழுந்திருப்பதற்குள் மணி மூன்று அடித்து விடும். அதன் பிறகு சமையலறையைக் கழுவ வேண்டும். வீட்டைக் கூட்ட வேண்டும்... பற்றுப் பாத்திரங்களைத் தேய்க்க வேண்டும்.

காலையிலிருந்து குவிந்து கிடக்கும் துணி மணிகளைத் தோய்க்க வேண்டும்... பிறகு

''விருப்பம்போல் ரெயில் பிரயாணம்''

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு, ரெயில் பயணம் செய்ய ஆட்களில்லாமல், மலிவுக் கட்டணப் பயணச் சலுகையை அன்றிருந்த தென் இந்திய ரெயில்வே (S.I.R.) அறிமுகம் செய்திருந்தது. 30 நாட்களில் S.I.R. ரெயில்வேயில் எங்கு வேண்டுமாயினும் எத்தனைதடவைகளாயினும் பயணம் செய்ய என்று ''விருப்பம்போல் பிரயாணம்'' என்ற சலுகையை அறிவித்திருந்தது. தென்னிந்திய ரெயில்வேயிலுள்ள அனைத்து நிலையங்களுக்கும் பயணிக்கலாம். கட்டணம் ரூ. 12.50 மட்டும்தான்.

– 'தமிழகச் சுற்றுலா சில சுவையான தகவல்கள் நூலிலிருந்து'.

தமிழ்த்துறைத்தலைவராக அமெரிக்கர்

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ் கல்வித்துறைத் தலைவராக பேராசிரியர் ஜயார்ஜ் எல். ஹார்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கலிபோனிய பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் பண்னாட்டு கல்வி வளர்ச்சிக்காக பல திட்டங்களைத் கொண்டு வந்திருக்கிறார். இவர் தமிழ் மற்றும் சமஸ்கிருதத்தில் பல நூல்கள் எழுதியுள்ளார். சங்க இலக்கியம், இராமாயணம் போன்றவற்றை மொழிபெயர்த்திருக்கிறார்.

மறுபடியும் அடுப்பு வேலை.. சாதம், பருப்பு... பிறகு மறுநாளைக்கான வேலைகளை முன்னமே செய்து வைத்தக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இன்றைக்கு நேர்ந்த தாமதமும் குழப்பமும் நாளையும் தொடரும். இன்னும் என்னென்ன வேலைசெய்ய வேண்டும்என்று அவளுக்குத் தெரியாது...

நாளையும் இதே மாதிரி வேலை... அப்புறம் நாளை மறுநாள்... பிறகு அதற்கும் மறுநாள்... இந்த வேலைகளை இனி அம்மா செய்யப்போவதில்லை. இதேமயக்கநிலையில் ஒருநாளோ, இரண்டு நாளோ இருந்து விட்டுப் பிறர் தோள் மேல் ஏறிப் போய் விடப் போகிறாள்.

ஒருநாள் இல்லை, ஒரு வேளைபாட்டைச்சமாளிக்கவே திண்டாடிப் போய் விட்டாளே ஜயந்தி!

எங்காவது ஓடிப் போய் விடத்தோன்றியது அவளுக்கு.

அவளது நிலையைப் பார்த்து இரக்கமாயிருந்தது பிஜன் பாபுக்கு. அவர் சொன்னார், ''ஜயா, ராத்திரி மறுபடி சமைக்க வேண்டாம். நான் கடையிலேயிருந்து பிரெட் வாங்கிட்டு வரேன். நீ கொங்ச நேரம் அம்மாக்கிட்டே உட்கார்ந்துக்க. நான் டீ போடறேன்...''

''உன்னாலேமுடியுமாப்பா?'' சந்தேகமாகக் கேட்டாள்ஜயந்தி. ''முடியுமான்னுதான் பார்க்கிறேனே... மீனு என்னோட வந்து சாமான்கள் எங்கேயிருக்குன்னு காட்டு...

அப்பா அடுப்பு மூட்டச் சிரமப்படுவதைப் பார்த்தும் அவரது உதவிக்குப் போகத்

... அவளுடைய எழுபது ரூபாய்ச்சம்பளத்துக்குஅவ்வளவு மதிப்பா? அந்தப் பணத்தின் பளபளப்பில் அவள் தன்னை மறந்திருந்தாளா?...

திராணியில்லை ஜயந்திக்கு, அவள் பேசாமல்அம்மாபடுத்திருக்கும் இடத்துக்கு வந்தாள்.

எலும்புந்தோலுமான உடம்புடன் உணர்ச்சியற்றுக் கிடந்த தாயைப் பார்த்துக் கொண்டு நின்றாள் ஜெயந்தி.

இந்த உடம்பை வைத்துக் கொண்டு வருடக் கணக்காக இரவும் பகலும் வீட்டுச் சுமையைத் தாங்கி வந்திருக்கிறாள் அம்மா. இவ்வளவு வருடங்களில் ஒருநாள் கூட அவர்கள் ரொட்டி சாப்பிட்டு இரவை கழிக்க நேர்ந்ததில்லை... மீனுவுக்குக் குழாய்க் கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வர நேர்ந்ததில்லை... அப்பாவுக்கு சமையலறைப் பக்கம் போக நேர்ந்ததில்லை...!

ஜயந்தி இதுவரை வீட்டில் ஒரு வேலைகூட செய்ததில்லை. வெற்றிலைக் கூட மடித்துக் கொடுத்ததில்லை.

அவளுடைய எழுபது ரூபாய்ச் சம்பளத்துக்கு அவ்வளவு மதிப்பா? அந்தப் பணத்தின் பளபளப்பில் அவள் தன்னை மறந்திருந்தாளா?

மணி ஐந்து அடித்தது...

ஐந்தா...? ஐந்து மணிக்கு அவளுக்கு ஒரு வேலை இருந்ததே! ஓ, யூனியன் கூட்டம்! மறந்தே போய்விட்டாள் அதை! அவள் கூட்டத்தில் என்ன பேச எண்ணியிருந்தாள்? ஓ காலாட் படை வீரர்களின் அவலநிலை... அவர்கள் அலட்சியப்படுத்தப்படுவது.

காலாட்படை வீரர்கள் யார்? தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் மட்டுந்தானா?...

(கருப்பு சூரியன் நூலிலிருந்து. வங்க மூலம் : ஆஷாபூர்ணா தேவி.தமிழில் : க. கிருஷ்ணமூர்த்தி, புவனா நடராஜன். நன்றி: சிந்து பதிப்பக அரக்கட்டளை, இராயப்பேட்டை, சென்னை - 14)

நன்றி உள்ள மனிதனுக்கு கேட்பதைவிட அதிகமாகக் கொடு

– போர்ச்சுக்கல் பழமொழி

ஆசிரியர் மடல்

உலகத்தை இன்னும் குளிர்ச்சியாக்குவோம்

மரங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம்
மனதுக்குச் சிறகு முளைக்கிறது
ஒவ்வொரு மரமும் தோகை விரித்து நிற்கும்
ஒற்றை மயிலாய்த் தெரிகிறது.
காற்றை வழித்து விடும் துடுப்பாய்
பூமிக்குள்ளே கால்களைப் புதைத்து
வாயுமண்டலத்தில் மூச்சுவிடும்
அதிசயங்களாய் அவை பரிமளிக்கின்றன.
மரங்கள்
பறவைகளுக்குச் சரணாலயங்கள்
பாதசாரிகளுக்கு பாதுகைகள்
பயணிகளுக்கு நிழற்குடைகள்.
கால்நடைகளுக்குப் புழுதிக்கட்டில்கள்
மலர்களுக்குப் பிரசவவிடுதிகள்
வண்டுகளுக்கு வாசக சாலைகள்
பனித்துளிகளின் படுக்கையறைகள்
மரங்களில் சின்ன உலகங்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன.

மரங்களுக்கு விலை நிர்ணயிக்கும் பொழுதெல்லாம்
தன்னுடைய மதிப்பையும் மனிதன்
நிர்ணயித்துக் கொள்கிறான்
முழம் போடும் பொழுது கைகளின் நீளமும்
கணக்கிடப்படுவது போல.

பழங்களை ருசிக்கும் பொழுதெல்லாம்
மரங்களை, நட்டவர்களை நினைத்துக் கொள்ள வேண்டும்
வேர்களை நோக்கி விழுதுகள் குனிந்து
வணங்குவதைப் போல.

நாமும் நிறைய மரங்களை நடுவோம்;
வந்தபொழுது இருந்ததை விட
உலகத்தை இன்னும் குளிர்ச்சியாக்குவோம்.

2143



சுவை மிகு தகவல் பக்கம்

கல்கத்தாவின் விலை ரூ. 1, 200

உண்மை! ஆனால் இன்றைய விலை அல்ல! 11.9.1698 அன்று ரூ. 1,200க்கு விற்கப்பட்டது கல்கத்தா! வாங்கியது கிழக்கிந்தியக் கம்பெனி! விற்றவர் சபர்ணா ராய் சவுத்ரி என்னும் நிலக் கிழார்! 300 ஆண்டுகளுக்கு முன் நாம் பிறந்திருந்து, கையில் ரூ. 1,200யும் இருந்திருந் தால் கல்கத்தாவை விலைக்கு வாங்கியிருக்கலாம். அதுமட்டுமா? அப்படிச் செய்திருந்தால் இந்த நாட்டின் சரித்திரமே திசை மாறிப் போயிருக்கும்.

செல்வங்கள் பதினாறு!

மணமக்களை மனமார வாழ்த்தும் போது "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!" என்று வாழ்த்துவது மரபு. பதினாறு என்பதற்கு பதினாறு குழந்தைகள் என்று இடைக்காலத்தில் பொருள் கொள்ளப்பட்டதும், அதே பொருள் கொண்டு பதினாறு வேண்டாம், ஒன்றே ஒன்று போதும், என்று இன்று மணமேடையில் வாழ்த்துவதும் நாம் அறிந்த செய்திகள் தாம். உண்மையில் பதினாறு என்பது பதினாறு குழந்தைகளை அல்ல; பதினாறு செல்வங்களைக் குறிக்கிறது.

அந்தப் பதினாறு செல்வங்கள்: மனை, மனைவி, மக்கள், காய், நெல், நீர், நிலம், கால் நடை, கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, பொன், போகம், புகழ்.

அறிவியல் சொற்கள் 2 இலட்சம்

தமிழில் பொறியி யல், மருத்துவம், மற்றும் அறிவியல் பாடங்களைக் கற்பிக்கத் தேவையான ஏறத்தாழ 2 இலட்சம் அறிவியல் கலைச் சொற்களை தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது. 15 ஆயிரம் சொற்களைக் கொண்ட புதிய தமிழ் ஆங்கில அகராதியையும் உருவாக்க உள்ளது.

குரல்வளம் தரும் அன்னாசி

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்தான் அன்னாசி பழத்தையும் கண்டுபிடித்தார். மேற்கு இந்திய தீவுகளில் கவனிப்பாரற்று காட்டுச்செடியாக ஏராளமாக அடர்ந்து வளர்ந்து இருந்த அன்னாசிதான் இவருக்கும் இவரது சக பிரயாணிகளுக்கும் அவர்களின் பயணக் காலத்தில் தாகம், பசி இரண்டையும் தணிக்கப் பெரிதும் பயன்பட்டதாகத் தெரிய வருகிறது.

ஆங்கிலத்தில் அன்னாசியைப் பைன் ஆப்பிள் (Pine Apple) என்று கூறினாலும், அன்னாசி பைன் மரத்தையோ ஆப்பிள் இனத்தையோ சார்ந்தது அல்ல. சிட்ரிக் அமில வகைப் பழங்களான ஆரஞ்சு, எலுமிச்சை, நாரத்தை இரகத்தைச் சேர்ந்ததுதான் அன்னாசி. நாம் பயன்படுத்தும் அன்னாசிப் பழம் பழமே அல்ல, திரண்ட அன்னாசிப் பூக்களையே நாம் பழமாக சுவைக்கிறோம் என்கின்றனர் தாவரவியலார். ஆரஞ்சுப்பழம், நெல்லிக்கனியைப் போலவே அன்னாசியிலும் 'சி' வைட்டமின் நிறையவே இருக்கிறது.

உடலைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள உதவும் பழங்களில் அன்னாசிப் பழத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. இருதய நோய், தொண்டைப்புண், உடல்வலிபோன்றவற்றைக் குணப்படுத்த அன்னாசிப் பழம் உதவும். நல்ல குரல் வளத்தைப் பெற விரும்புகிறவர்கள் அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிடலாம். சிறுநீரகத்தில் உருவாகும் கல்லைக் கரைக்கவும், வயிற்றுப் பூச்சிகளை ஒழிக்கவும் அன்னாசிப் பழச்சாறு அருமருந்து ஆகும். எனவே அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு நோயற்ற வாழ்வைப் பெறலாமே!



மீன் சண்டை

நம் கிராமங்களில் சேவல் சண்டை என்ற ஒரு விளையாட்டு கிராமத்திருவிழாக்களில் நடைபெறுவது போல் சயாம் நாட்டில் சண்டை போடுவதற்காகவே 'பெட்டா' என்ற வகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

காஞ்சிப் பட்டின் கதை

பட்டு பிறந்த கதை உங்களுக்குத் தெரியுமா? சுமார் 4,500 ஆண்டுகளுக்கு முன்பு சீன அரசர் ஒருவர் தன மனைவி யுடன் ஒருநாள் தோட்டத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்பொழுது முசுக்கொட்டைச் செடியில் புழுவொன்று அழகிய இழைகளால் கூடு இழைப்பதை அரசி கண்டாள்; அதை எடுத்துத் தேநீரில் போட்டாள். கூட்டின் ஒரு முனையிலிருந்து இழை யைப் பிரித்து எடுத்தபோது, அது பளபளப்பாகவும் மென்மை யாகவும் இருந்தது. அரசி அதனாலான ஆடையை அணிய விரும்பினாள். இதைத் தொடர்ந்தே பட்டுப் புழுக்களை வளர்த்து, இழைகளை எடுத்துப் பட்டுத்துணி உற்பத்திச் செய்யத் தொடங்கினார்கள்.

2,000 ஆண்டுகளாகச் சீனர்கள் பட்டு உற்பத்தியை இரகசிய மாகப் பாதுகாத்து வந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்குப் பின் பட்டுத்தொழில் கொரியா வழி யாக ஜப்பானிலும், பின்னர் இந்தியாவிலும் பரவியது.

இவர் அல்லவோ டாக்டர்!

டாக்டர் ரங்காச்சாரி ஒரு முறை உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் நோயாளி ஒருவரைக் காப்பாற்ற ரயிலில் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. அங்குச் சென்றபோதோ அந்த நோயாளி இறந்துவிட்டார். அதைக் கண்ட டாக்டர் ரங்காச்சாரி தன்னுடைய காலதாமதத்தினாலேயே அந்த நோயாளியைக் காப்பாற்ற முடியவில்லை என்று மிகவும் மனம் வருந்தினார். உடனே மருத்துவம் செய்வதற்கு வெளியூர்ப் பயணத்திற்கென ஒரு விமானத்தையே சொந்தமாக வாங்கிக் கொண்டார்.

நட்பிற்குப் பரிசு

ஒருமுறை செல்வந்தர் ஒருவர் திடீரென மரணமடைந்தார். அவர் மரணமடைவதற்கு முன் இரண்டு உயில்களை எழுதித் தனது வழக்கறிஞரிடம் ஒப்படைத்து அவற்றில் ஒன்றை, தான் மரண மடைந்தவுடனே பிரித்துப் பார்க்க வேண்டுமென்றும் மற்றொன்றைத் தன்னை அடக்கம் செய்த பிறகு பிரித்துப்பார்க்க வேண்டு மென்றும் கூறியிருந்தார்.

அவ்வாறே அவர் மரணமடைந்த வுடன், அவருடைய முதலாவது உயில் பிரித்துப் பார்க்கப்பட்டது. அதில், தன்னை காலை 4.00 மணிக்கு அடக்கம் செய்ய வேண்டுமென்று எழுதப் பட்டிருந்தது. அதன்படி அவரது உடல் காலை 4.00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. அப்போது கடும் குளிராக இருந்த காரணத்தால், அவருடைய நெருங்கிய நண்பர்கள் நால்வர் மட்டுமே அவருடைய அடக்கத்திற்குச் சென்று வந்தனர். அவர் அடக்கம் செய்யப்பட்ட பிறகு இரண்டாவது உயிலும் பிரித்துப் பார்க்கப்பட்டது. அதில் என் அடக்கத்திற்கு வந்திருந்தவர்களுக்கு என் சொத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவும் என்று எழுதப் பட்டிருந்தது. அதன்படி ஒவ்வொரு வருக்கும் சுமார் 1.5 கோடி ரூபாய் கிடைத்தது.

மும்மணிகளில் நான் எம்மணி?

ஒருகூட்டத்தில் ரசிகமணி டி.கே.சி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, ம.பொ.சி ஆகியோர் கலந்து கொண்டனர். வரவேற்புரை ஆற்றியவர் "இங்கு மும்மணிகள் வந்துள்ளனர்" என்று கூறினர்.

கல்கி அவர்கள் பேசும்போது அதனைக் குறிப்பிட்டு இங்கு மும்மணிகள் வந்துள்ளதாகக் கூறினார். ஒருவர் ரசிகமணி (டி.கே.சி) மற்றொருவர் கிராமணி (ம.பொ.சிவஞானகிராமணி) மூன்றாவது மணியாக இருக்க நான் ஒரு பெண்மணியாகக்கூட இல்லையே" என்றார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002, தொலைபேசி எண் : [illegible]

Licence No.TN/MS(C)/P